
புரட்சித்தலைவியின்
முழக்கம்
தொகுதி - 5



தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
'கலைமாமணி' விருது வழங்கும் விழா
22-11-95
வெள்ளி விழா
கோடிக்கான தொழிற்பேட்டைகள்
துவக்கவிழா
மாநில திரைப்பட விருது
வழங்கும் விழா 24.11.95

# புரட்சித்தலைவியின்
# முழக்கம்

தொகுதி-5

18 NOV 2003
சென்னை-2
அரசினர்

மாண்புமிகு முதலமைச்சர்
புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்
ஆற்றிய உரைகளின் தொகுப்பு

செய்தி-மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு

# புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி - 5

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித்தலைவி*
*டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு*


சிறப்பு வெளியீடு

*முதல் பதிப்பு*
*மார்ச் - 1996*

விலை: ரூபாய் முப்பது

வெளியீடு:

**இயக்குநர்**
செய்தி-மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு
சென்னை - 600 009.

***அச்சிட்டது:***

தமிழரசு அச்சகம்
அரசினர் தோட்டம்
சென்னை - 600 002

# பதிப்புரை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர், சமூக நீதிகாத்த வீராங்கனை புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 24.6.1991-ஆம் நாள், தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அந்நாளிலிருந்து அவர்கள் பல்வேறு நிகழ்ச்சி களில் ஆற்றிய உரைகளைத் தொகுத்து, 'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்ற பெயரில் ஒவ்வொரு ஆண்டும் நூல் வெளியிடப்பட்டு வருகின்றது.

ஜூலை 1995 முதல் மார்ச் 1996 வரை (ஐந்தாவது ஆண்டு) மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து, **'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி - 5** வெளியிடப்படுகிறது. முன்னவை போலவே, இந்தத் தொகுதியும் அரசின் ஆக்கப் பணிகளையும், பல்வேறு சிறப்பு நிகழ்ச்சி களையும் பற்றி அறிந்துகொள்ளப் பெரிதும் பயனுடையதாய் இருக்குமென நம்புகிறோம்.

**தி. சண்முக ராஜேஸ்வரன்,** இ.ஆ.ப.,
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சென்னை-600 009

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | சமூகப் பொறுப்பு மற்ற துறையினரைவிட திரைப்படத் துறையினருக்கே அதிகம் வேண்டும் | 1 |
| 2. | மனிதகுல மேம்பாட்டிற்காகத் தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் | 12 |
| 3. | எங்கே அமைதி கொலுவீற்றிருக்கிறதோ அங்கேதான் வளர்ச்சி அரங்கேறும் | 16 |
| 4. | உற்ற நண்பராக, பாதுகாவலராக, காவல்துறையினர் நடந்து கொள்ள வேண்டும் | 27 |
| 5. | போக்குவரத்துத் துறையில் விழிப்புணர்ச்சி பெற்ற மாநிலம், தமிழகம் | 39 |
| 6. | மனவளம் நிறைந்த மக்களிடம் கலைவளம் நிறைந்து காணப்படும் | 46 |
| 7. | திரைப்படங்கள் மக்களின் மனங்களைப் பண்படுத்தும் கலைப் பொக்கிஷங்களாகத் திகழ வேண்டும். | 51 |
| 8. | அடித்தளத்து மக்களின் உயர்வுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அரசே எங்கள் அரசு | 55 |

9. குடிசைப்பகுதி மாற்று வாரிய வெள்ளிவிழா
புதிய சகாப்தத்தின் தொடக்க விழா ஆகட்டும் 60

10. வளர்ந்துவரும் நாடுகளின் வளர்ச்சியில்
சிறுதொழில்களின் பங்கு சிறப்பானது 66

11. சத்துணவுப் பணி ஒரு சமுதாய நற்பணி 73

12. கொடிநாள் நிதி திரட்டுவதில்
தமிழகம் என்றென்றும் முன்னணியில் நிற்கும் 81

13. சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற
தீங்குகளையும் குற்றங்களையும் தடுக்க வேண்டும் 86

14. கலையம்சங்களுடன் கூடிய கட்டடச் சிறப்புக்கு
எடுத்துக்காட்டாய் விளங்கும் விளையாட்டு நகரம் 92

15. தமிழகத்தின் ஜீவாதார உரிமைகளைக் காக்க
ஓரணியில் ஒன்று சேர்வோம்! 98

16. ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை
உயர்த்துவதே எனது குறிக்கோள் 106

17. செயல்திறன்மிக்க திட்டங்களால் புதுப்பொலிவு
பெற்றுள்ளது தர்மபுரி மாவட்டம் 116

18. காவிரி நதி நீர்த் தாவாவில் புதிய வழிகாட்டி
விதிகளை ஏற்க இயலாது. 123

19. தமிழக மக்களுக்குப் பல வகைகளில் சேவை
புரிந்தோரைத் தமிழகம் என்றும் மறக்காது 129

20 ரமலான் நோன்புக் காலம்;
ஆன்மீகப் பயிற்சிக் காலம் 135

21. தந்தை பெரியாரின் பெயரிலமைந்த சமூகநீதி விருதைப் பெற
முழுத்தகுதி படைத்தவர் திரு கி. வீரமணி 138

22. மனித வளத்தை உயர்த்த நாம் மேற்கொள்ளும் செலவினம்
வளரும் தலைமுறையினரின் உயர்வுக்கான மூலதனம் 143

23. கிராமக் கோயில் பூஜாரிகளின் நல்வாழ்வுக்கு அரசு,
அரணாக விளங்கும் 150

24. இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட அனைவருக்கும்
முன்னோடி வீரன் அழகு முத்துக்கோன் 158

☆ ☆ ☆

# சமூகப் பொறுப்பு மற்ற துறையினரைவிட திரைப்படத் துறையினருக்கே அதிகம் வேண்டும்

தமிழ்த் திரைப்பட உலகம், ஒரு சிறப்பான பாரம்பரியத்தையும், சாதனைகள் நிறைந்த சரித்திரத்தையும் கொண்டதாகும். இந்தியத் திரைப்பட வரலாற்றில், தென்னிந்தியத் திரைப்பட உலகம், குறிப்பாக, தமிழ்த் திரைப்படங்கள் ஆற்றி வந்துள்ள, மாபெரும் சமுதாய மற்றும் கலைச் சேவையை, எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

திரைப்படத்தின் பல்வேறு அங்கங்களான நடிப்பு, கதை அமைப்பு, இசை அமைத்தல், பாடல்கள், படத் தொகுப்பு, சண்டைப் பயிற்சி, தந்திரக் காட்சிகள் ஆகியவற்றில், பல வகையான முறைகளில், மாபெரும் சாதனைகளைப் படைத்து, மற்றவர்களுக்கு முன்னோடியாக, ஒரு வழிகாட்டியாக, தமிழ்த் திரைப்பட உலகம், இன்றும் விளங்கிக் கொண்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது. ஜாம்பவான்கள் பலர், திரைப்படத் துறையின் பல்வேறு பிரிவுகளில், தங்களது பல்கலைத் திறமைகளை வெளிப்படுத்தி, வியத்தகு சாதனைகளைப் புரிந்து, தங்கள் தனி முத்திரையைப் பதித்துள்ளார்கள். அத்தகைய trend setters என வர்ணிக்கத்தக்க படங்களில் ஒன்றான, "நாட்டாமை" படத்தின் வெள்ளி விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எனது பல்வேறு அலுவல்கள் காரணமாக, "நாட்டாமை" தமிழ்த் திரைப்படத்தை, முன்னதாகவே பார்க்க, எனக்கு நேரம் கிடைக்கவில்லை. சகோதரர் சரத்குமார் அவர்களின் கோரிக்கையை ஏற்று, இப்படத்தின் வெள்ளி விழாவிற்குத் தலைமையேற்க, நான் ஒப்புக் கொண்ட பின்னர்தான், சில நாட்களுக்கு முன்பு, இதற்கென நேரத்தை ஒதுக்கி, இந்தப் படத்தைப் பார்த்தேன்.

அண்மைக் காலத்தில் நான் பார்த்த தமிழ்ப் படங்களில், நாட்டாமை திரைப்படம்தான், எனக்கு உண்மையான மன நிறைவையும், அக மகிழ்ச்சியையும் அளித்தது. ஏதோ இந்தப் படத்தின் வெற்றி விழாவில் நான் கலந்து கொள்வதால், இதை நான் சொல்லவில்லை. உண்மையாகச் சொல்கிறேன்.

பொதுவாக, எனக்குப் பழைய படங்கள் தான் மிகவும் பிடிக்கும். Late Forties, குறிப்பாக, Fifties and Sixties period-இல் தயாரிக்கப்பட்ட திரைப்படங்கள் என்றால், நான் மிகவும் விரும்பிப் பார்ப்பேன். காரணம் அந்தக் காலங்களில் தயாராகி, வெளி வந்த படங்களில், சண்டைக் காட்சிகள் இருந்தாலும், வயிற்றைக் கலக்கும் பயங்கரமான, கற்பனைக்கு எட்டாத வன்முறைச் சம்பவங்கள் இருக்காது. அதே போல ஆபாசமும், விரசமும் இருக்காது. சமுதாயத்தில், மரபு வழியே, நாம் மதிக்கின்ற நல்ல பண்புகள், அதாவது, Moral Values என்பார்களே அந்த அடிப்படையில்தான், கதை அமைந்திருக்கும். அது மட்டுமின்றி, ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும், ஒட்டுமொத்தமாக உட்கார்ந்து ரசிக்கின்ற Wholesome family entertainment தருகின்ற படங்களாகவும் அவை இருந்ததை, எவரும் மறுக்க முடியாது.

ஆனால், சமீப காலமாக, தமிழ்த் திரைப்பட உலகின், தனித் தன்மைகள் மறைந்து, இளைய தலைமுறையினரின் மனங்களைக் கெடுக்கும் வண்ணம், மிக பயங்கரமான, அருவெறுப்பான வன்முறைக் காட்சிகள், அதிகரித்து விட்டன. ரசிகர்களின் எதிர்பார்ப்பு என்கின்ற போர்வையில், மிதமிஞ்சிய வன்முறைக் காட்சிகள் பெருகி வருகின்றன. இத்தகைய மிதமிஞ்சிய வன்முறைக் காட்சிகளைத்தான், இந்தக் காலத்து ரசிகர்கள் விரும்புகிறார்கள், என்ற ஒரு தவறான கருத்து, பரப்பப்படுகிறது. ஒரு வேளை வன்முறைக் காட்சிகள் நிறைந்த, படங்களைத் தயாரித்து வழங்கும், சமுதாய உணர்வு அற்ற சில வியாபாரிகள், தங்களது செய்கைகளை நியாயப்படுத்துவதற்காக, இது போன்ற பொய்ப் பிரசாரத்தில், ஈடுபட்டு வருகிறார்களோ என்று, நான் சந்தேகப்படுவது உண்டு.

வன்முறைக் காட்சிகளும், விரசமான காட்சிகளும் இல்லாமலே, ரசிகர்களின் மனங்களைக் கவர்ந்து, வசூலில் ஒரு புதிய சரித்திரத்தைப் படைத்த, "நாட்டாமை" திரைப்படத்தை நான் பார்த்தபோதுதான், எனது சந்தேகம் நிரூபணமானது. ஒரு புறம், மிதமிஞ்சிய வன்முறைக் காட்சிகள் நிறைந்த சில படங்கள், நன்றாக ஓடி, வசூலில் சாதனை படைத்துள்ளன. உண்மைதான். ஆனால், அதே காலக்கட்டத்தில், "நாட்டாமை" போன்ற ஒரு நல்ல படமும், ஒரு clean family entertainer-, மக்கள் மத்தியில் பேராதரவைப் பெற்று, வசூலிலும் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது என்பதிலிருந்து, "தவறு ரசிகர்களிடம் இல்லை", என்ற உண்மை வெளிபட்டுள்ளது. கருத்தாழமிக்க கதையுடன், நியாயமான

கற்பனையுடன் இணைந்த, நிகழ்ச்சிகளைக் கொண்ட திரைப்படமாக இருந்தால், தமிழக ரசிகப் பெருமக்கள், விரும்பி ஏற்றுக் கொள்ள, எப்போதும் தயாராக இருக்கிறார்கள் என்ற உண்மையையும்; திரைப்பட வெற்றிக்கு, வன்முறைக் காட்சிகள்தான் அடிப்படை என்ற எண்ணம், அர்த்தமற்றது என்பதையும்; "நாட்டாமை" படத்தின் மாபெரும் வெற்றி, நிருபித்துக் காட்டியிருக்கின்றது.

எனது அரசியல் ஆசான், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோர், தமிழ்த் திரைப்பட உலகில் கொடி கட்டிப் பறந்த காலத்தில்; அதாவது 1950ம் ஆண்டுகளிலும், 1960ம் ஆண்டுகளிலும் வெளிவந்த படங்கள் குடும்பத்துடனும், உற்றார் உறவினர்களுடனும், ஒன்றாக சேர்ந்து ரசித்துப் பார்க்கும் வண்ணம், அமைந்திருந்தன. அவை clean and wholesome family entertainment-ஐ வழங்கின. நாடோடி மன்னன், எங்க வீட்டு பிள்ளை, அன்பே வா, ஆயிரத்தில் ஒருவன், பாச மலர், பாகப் பிரிவினை, பாலும் பழமும் என்று, எண்ணற்ற திரைப்படங்களை அந்த வரிசையிலே, என்னால் கூற முடியும். அந்தக் காலகட்டத்தில், மக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்று, வெற்றி அடைந்த படங்களில், சண்டைக் காட்சிகள் இருக்கும். ஆனால் மிதமிஞ்சிய வன்முறைக் காட்சிகள் அறவே இருக்காது. அந்தப் படங்களில் ஆபாசமும் இருக்காது; விரசமும் இருக்காது. எனவே, ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும், ஒன்றாக உட்கார்ந்து பார்க்க முடிந்தது.

ஆனால், இன்று வரும் சண்டைக் காட்சிகள் எல்லாம், மனதைச் சிதைக்கின்றன. பயங்கரமான வன்முறைக் காட்சிகளாக அமைக்கப்படுகின்றன. அத்துடன் விரசமான காட்சிகளும், சம்பவங்களும், தமிழ்த் திரைப்படங்களை family entertainers என்ற பெருமையை இழக்கச் செய்து விட்டன. இப்போதெல்லாம், தங்களது குழந்தைகளை, நல்ல பிள்ளைகளாக வளர்க்க வேண்டும், என்ற அக்கறை உள்ள பெற்றோர்கள், முதலில் இந்தத் திரைப்படங்களை, தாங்கள் சென்று பார்த்து விட்டு, தங்களது குழந்தைகளும் இப்படங்களைப் பார்ப்பதற்கு, தகுதியுடையவை தானா, என்று பார்த்து முடிவு செய்த பின்னர்தான், குழந்தைகளை அழைத்துச் சென்று, படம் பார்க்கின்ற ஒரு சூழ்நிலை, இன்று ஏற்பட்டுள்ளது என்பதை, எவரும் மறுக்க முடியாது. இத்தகைய ஒரு சூழ்நிலை தொடர்ந்தால், இந்தச் சமுதாயத்தின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு, இது உகந்ததாக இருக்குமா என்ற அச்சம், என் மனதில் ஏற்பட்டது.

அண்மைக் காலத்தில் வெளி வந்த சில படங்களை, என்னால் மனம் விட்டு ரசிக்க முடியவில்லை; ஏன்? சில படங்களில் வருகின்ற வன்முறைக் காட்சிகளை, சகித்துக் கொள்ள முடியவில்லை. மனிதாபிமானம் அற்ற வன்முறைச் சம்பவங்கள், காட்சிக்குக் காட்சி வருவதோடு கத்தியை எடுத்துக் குத்துவதும்; வாளை எடுத்து வெட்டுவதும்; ரத்தம் ஆறாக ஓடுவதும்; பல விதமான துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு, சரமாரியாகச் சுடுவதும்; வெடிகுண்டுகளை எடுத்து வீசுவதும்; மோசமான முறையிலும், கேவலமான முறையிலும், மனிதர்களைச் சித்தரிப்பதும்; ஈவிரக்கம் இல்லாத முறையில், சித்தரவதை செய்வதைக் காட்டுவதும்; தமிழ்த் திரைப்படங்களில் சாதாரணமாகி விட்டன.

தமிழ்ச் சமுதாயத்தின் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும், ஊறு விளைவிக்கும் இத்தகைய படங்கள், எப்படி வெற்றி பெறுகின்றன என்று, நான் ஆராய்ந்து பார்த்தேன். இத்தகைய வெற்றிக்கு யார் காரணம்? நிச்சயமாக, தாய்மார்கள் அல்ல; அறிவு முதிர்ச்சி பெற்றுள்ள ஆண் மக்களும் அல்ல; வயது முதிர்ந்த ஆண் மக்களும் அல்ல. இளைய தலைமுறையினர், குறிப்பாக, ஆண் பிள்ளைகள்தான், இத்தகைய படங்களை, மிக அதிகமான அளவில் கண்டு களிக்கிறார்கள் என்பதும்; அவர்கள்தான் அத்தகைய படங்களை, வெற்றி பெறச் செய்கிறார்கள் என்பதும்; தெளிவாகிறது.

சினிமா என்பது ஒரு சக்தி வாய்ந்த, மக்கள் மனதில் ஆழமாக ஆதிக்கம் செலுத்தக் கூடிய, ஒரு மாபெரும் மக்கள் தொடர்புச் சாதனம் என்பதை, எவரும் மறுக்க முடியாது. சமுதாயத்தில் நிலவி வந்த, சில கொடுமைகளை மாற்றி அமைத்து, நல்ல மாறுதல்களுக்கு வழி காட்டிய, திரைப்படங்களைத் தயாரித்து வழங்கியதும், இதே திரைப்பட உலகம்தான் என்பதை, எவரும் மறந்து விட முடியாது! இசையிலும், பாடல்களிலும் மக்கள் மனதை மாற்றி, திருப்பி, நல்வழிப்படுத்திய பெருமையும், நம் திரைப்படங்களுக்கு உண்டு. நல்ல கருத்துக்களை மக்களுக்கு வழங்கி, மாபெரும் சமுதாய மாற்றங்களுக்கு, வழி வகுத்த பெருமை படைத்த சாதனம், திரைப்படம். வெறும் பணம் சம்பாதிக்கும் சாதனமாகப் பயன்படுத்தி, எத்தகைய மோசமான வன்முறைக் காட்சிகளாக இருந்தாலும், அவற்றைக் காட்டி, அதன் மூலம் லாபம் சம்பாதிக்கச் சிலர் முயலுவது, விரும்பத் தக்க முன்னேற்றம் அல்ல. இதில் நான் இவ்வளவு கவலை கொள்வதற்கு, இன்னொரு முக்கியமான காரணமும் உண்டு. திரைப்படங்களைக்

காண்போர்களின் எண்ணிக்கையும், காணுகின்ற வாய்ப்புகளும், இன்றைய சூழ்நிலையில் அதிகரித்துள்ளது என்பதே, எனது கவலைக்குக் காரணம் ஆகும்.

நான் பள்ளியில் படிக்கும் குழந்தையாக இருந்த காலகட்டத்தில், இன்றைய அறிவியலின் அற்புதங்களான, **television, video, cable TV, satellite TV** போன்றவை கிடையாது. திரைப்படம் பார்க்க வேண்டும் என்றால், திரை அரங்குகளுக்குத்தான் சென்று பார்த்தாக வேண்டும். அண்மைக் கால அறிவியல், மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றங்களான, **Television-, Satellite TV-,** உலகத்தின் ஒரு மூலையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை, மற்றொரு மூலையில் உடனுக்குடன் காணுகின்ற வாய்ப்பையும், வசதியையும், ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. அதோடு, இத்திரைப்படங்களை மிக அதிகமானோர் பார்க்கக் கூடிய வாய்ப்புகளும், **Satellite TV-Cable TV-** யினாலும் பெருகி உள்ளன. எனவேதான், இத்திரைப்படங்கள், இளைய தலைமுறையினரின் மனதில், விரும்பத் தகாத பாதிப்புகளை, உண்டாக்குகின்ற, சக்தி படைத்தவைகளாக இருப்பதை, நாம் மறந்து விடக் கூடாது. இத்தகைய ஒரு சூழ்நிலையில், தமிழ் திரைப்படங்களில், மனதைக் கெடுக்கும் வன்முறைக் காட்சிகள் தோன்றுவது, தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன் அளிக்குமா என்பதை, நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வளர்ந்து வரும் ஒரு சமுதாயம், இத்தகைய ஒரு போக்கை அனுமதிக்கலாமா? இந்தியாவின் எதிர்காலச் சிற்பிகளாகவும், சமுதாயத்தின் தூண்களாகவும் விளங்கி, நாட்டை வழி நடத்திச் செல்ல வேண்டிய இளைய தலைமுறை, இப்படி ஒரு தவறான ரசனைக்கு அடிமையாகலாமா என்ற சிந்தனை, என் மனதில் பலமாக எழுந்தது.

சமீப காலத்தில் நான் பார்த்த ஒரு தமிழ் படத்தில், **title**-லில் இருந்து தொடங்கி, முடிவு வரை, மிகவும் மோசமான வன்முறைக் காட்சிகளே, முழுக்க முழுக்க இடம் பெற்றிருந்தன. அந்தப் படத்தைப் பார்த்ததும், மகிழ்ச்சிக்குப் பதிலாக, எனக்கு அருவெறுப்பும், மனச் சோர்வும்தான் ஏற்பட்டது! அன்று என்னோடு படம் பார்க்க வந்திருந்த, சில குடும்பத் தலைவிகளும், இளம் பெண்களும், அந்த வன்முறைக் காட்சிகள், தங்கள் வயிற்றையே கலக்கியது என்று, என்னிடம் தங்கள் உணர்வை வெளிப்படுத்தினார்கள். படத்தில் கண்ட வன்முறைக் காட்சிகளின் பாதிப்பினால், என்னால் அன்று

இரவு, உணவைக் கூட சாப்பிட முடியவில்லை. என்னுடன் வந்த பெண்களும், அன்று இரவு உணவு உட்கொள்ளவில்லை.

அன்று எங்களோடு படம் பார்க்க, ஒரு 6 வயதுச் சிறுவனும் வந்திருந்தான். அவனிடம், படம் எப்படி இருந்தது என்று கேட்டேன். அந்தப் படம் மிகவும் நன்றாக இருப்பதாக, அந்தச் சிறுவன் என்னிடம் கூறினான். எங்கள் மனதில் ஆழமானப் பாதிப்பை ஏற்படுத்திய அதே படம், அந்தச் சிறுவனை மிகவும் கவர்ந்துவிட்டது. அத்தகைய சிறு வயதில், உள்ளத்தை உறைய வைக்கும் வன்முறை சம்பவங்களை, அவன் விரும்பி ரசிக்கின்ற மனபான்மையைக் கண்டு, உண்மையில் நான் வருத்தம் அடைந்தேன்.

அந்த பிஞ்சு மனதில், அன்று ஏற்பட்ட பாதிப்பு, ஒரு குடம் பாலில் கலக்கின்ற, ஒரு துளி விஷத்திற்குச் சமம் என்பதை உணர்ந்து, அவனை தனியே அழைத்து, புத்திமதிகளைச் சொன்னேன்! இது வெறும் கற்பனைக் கதைதான்; அதில் வருகின்ற கதா பாத்திரங்கள் கற்பனையானவை! திரைப்படம் வேறு; நிஜ வாழ்க்கை வேறு. நிஜ வாழ்க்கையில் இது போன்று நடக்கக் கூடாது! திரையில் வருவது போல், மனிதாபிமானமற்ற முறையில், மற்றவர்களைத் துன்புறுத்துவதும், கொலை செய்வதும், வன்முறையில் இறங்குவதும் தவறு, அது பாவம், என்று எடுத்துரைத்தேன்.

திரைப்படங்களில் தோன்றும் வன்முறைக் காட்சிகள், குழந்தைகளின் மனதை, எந்த அளவிற்குப் பாதித்துள்ளன என்பதை, இப்போதெல்லாம் அவர்கள் விரும்பும் விளையாட்டுப் பொருட்களில் இருந்தே, நம்மால் எளிதில் கண்டு கொள்ள முடியும்.

ஒரு காலகட்டத்தில் ஜீப் பொம்மையும், ரயில் பொம்மையும், ஏரோபிளேன் பொம்மையும் வேண்டும் என்று கேட்டு, அவற்றுடன் மகிழ்ச்சியுடன் விளையாடிய ஆண் குழந்தைகள்; இன்று விளையாடுவதற்குத் துப்பாக்கிப் பொம்மை, அதுவும் **AK.47** துப்பாக்கி பொம்மைதான் வேண்டும், என்று கேட்கிறார்கள்.

இப்படி வன்முறையை **glamorize** செய்து, அதை இன்றைய இளைய தலைமுறையினரை ரசிக்கச் செய்து, அது நிஜ வாழ்க்கையின் உண்மையான பிரதிபலிப்பு, என்ற தவறான எண்ணத்தை, அவர்கள் மனதில் ஏற்படுத்துவது நியாயமா, என்ற ஒரு கவலை, எனக்குள் ஏற்பட்டது.

திரைப்படங்களினால், குழந்தைகளின் மனதில் ஏற்படக்கூடிய பாதிப்பை, நான் மிகைப்படுத்தி பேசுகிறேன் என்று யாரும் கருதிவிடக் கூடாது. அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவம், இங்கிலாந்து நாட்டையே கலக்கியது. இரண்டு 10 வயது சிறுவர்கள், ஒரு 2 வயது ஆண் குழந்தையைத் தனியே அழைத்துச் சென்று, கொலை செய்துவிட்டார்கள். போலீசார் இதனைக் கண்டு பிடித்து, இவர்கள்தான் கொலைக் குற்றவாளிகள் என்று, அந்த 2 சிறுவர்களை கோர்ட் முன் நிறுத்திய போது, நீதிபதிக்கே என்ன சொல்வது என்று தெரியவில்லை திகைத்துப் போனார். அந்தப் பிஞ்சு மனங்களில், இத்தகைய கோரமான குற்றம் புரிய வேண்டும் என்ற எண்ணம் எப்படித் தோன்றியது? அதற்கு விடை அவர்கள் பார்த்த வன்முறை நிறைந்த படங்கள்தான். அங்கே 24 மணி நேரமும் **Television**-இல் காண்பிக்கப்படும், வன்முறை நிறைந்த படங்களைப் பார்த்து, மற்றவரை அடிப்பதும், துன்புறுத்துவதும், கொலை செய்வதும் கூட தவறில்லை; இதெல்லாம் சகஜமான வாழ்க்கை நடைமுறை என்று, அந்தப் பிள்ளைகள் எண்ணி விட்டார்கள். கொலை செய்வதைத் தினசரி, சர்வ சாதாரணமாக, **T.V.**யில் பார்த்துக் கொண்டே இருந்ததால், அதெல்லாம் தவறு என்று கூட அவர்களுக்குப் புரியவில்லை. திரையில் கண்டதை, நிஜ வாழ்க்கையில் செய்து பார்த்து விட்டார்கள்.

அந்தக் **case**, இங்கிலாந்து நாட்டையே கலக்கி விட்டது. அதன் பின்னர், திரையில், TV-யில் காண்பிக்கப்படும் படங்களை, மிகவும் கண்டிப்பாக, **strict**-ஆக **censor** செய்ய ஆரம்பித்தார்கள். அது மட்டுமின்றி, நாடு முழுவதிலும், ஆங்காங்கே தாய்மார்கள் ஒன்று கூடி, பள்ளி முடிந்ததும் மாலை வேளையில், அந்தந்தப் பகுதிகளில் வாழும் குழந்தைகளை ஒன்றாக உட்கார வைத்து; ஒருவருக்கு ஒருவர் அன்பு காட்ட வேண்டும்; இனிமையாக பேசிப் பழக வேண்டும்; மற்றவர்களை எந்த வகையிலும் துன்புறுத்த கூடாது; என்பன போன்ற அறிவுரைகளை வழங்கி, குழந்தைகள் மற்ற குழந்தைகளைக் கட்டித் தழுவி, முத்தமிடச் செய்கிறார்கள். மனித நேயத்தோடு பழக வேண்டும் என்பதையே, பாடமாக சொல்லித் தர வேண்டிய அளவிற்கு அங்கே சமுதாயம் சீரழிந்து போய்விட்டது. அத்தகைய சூழ்நிலை, அத்தகைய அவல நிலை, இங்கே நமது நாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில், உருவாகிவிடக் கூடாதே என்பது தான், எனது கவலை. அண்மைக் காலத்தில் நான் பார்த்த சில தமிழ்ப் படங்கள், அந்தக் கவலையை அதிகரிக்கச் செய்தன. இப்படிப்பட்ட படங்கள், நல்ல வசூலை ஈட்டுகின்றனவே?

அப்படியானால், நமது சமுதாயம் எங்கே சென்று கொண்டிருக்கிறது? தமிழ்ச் சமுதாயம், சீரழிந்து போக வேண்டியது தானா, என்று மிகவும் கவலைப்பட்டேன், வேதனைப்பட்டேன்.

ஆனால் "நாட்டாமை" படம் பார்த்த பின்பு, எனது மனதில் ஒரு புதிய நம்பிக்கை, துளிர் விட ஆரம்பித்தது. நேர்மை, நாணயம், ஒழுக்கம், குடும்ப பாசம், சமுதாயத் தொண்டு, வீரம் போன்ற நற்பண்புகள், பழைய value நிறைந்த இந்தப் படம், இன்றைய சூழ்நிலையில், ரசிகர்களின் பேராதரவைப் பெற்று; மகத்தான வெற்றியை அடைந்திருப்பது; தமிழ்த் திரைப்பட உலகின் போக்கிற்கு, ஒரு திருப்பு முனையாக விளங்கும் என்று, நான் நம்புகிறேன். இப்படத்தில், அளவுக்கு அதிகமான வன்முறை இல்லை; ஆனால், தேவையான இடங்களில், ரசிக்கக் கூடிய அளவுக்கு, சண்டைக் காட்சிகள் இருக்கின்றன; படத்தில் விரசமும் இல்லை; ஆபாசமும் இல்லை; காதல் காட்சிகள் கதையோடு, இயற்கையாக ஒட்டி வருகின்றன. முன்பு வெளி வந்த, clean family entertainer-வரிசையில் வைத்து, போற்றுகிற சிறப்பை, "நாட்டாமை" படம் பெற்று விட்டது என்பதை, நிச்சயமாக என்னால் கூற முடியும்.

இது போன்ற value based படங்களை, இன்றும் மக்கள் தொடர்ந்து ரசிக்கிறார்கள்; ஆதரவு தருகிறார்கள் என்பதை உணரும் போது, என் மனம் ஆறுதல் அடைகிறது. "ஆக, ரசிகர்களிடம் எந்த தவறும் இல்லை". நாட்டாமை போன்ற கருத்தாழம் மிக்க, கண்ணியமான படத்தை எடுத்து வெளியிட்டால், அதை மக்கள் விரும்பிப் பார்க்க, இப்பொழுதும் தயாராக இருக்கிறார்கள் என்பது, நிரூபிக்கப்பட்டு விட்டது. நல்ல கருத்துக்களை ஜனரஞ்சகமான முறையில் சொன்னால், மக்கள் அதை எப்போதும், ஏற்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து; தங்கள் கலைப் பணியை, ஒரு உறுதியான சமுதாய உணர்வுடன், ஆற்ற வேண்டும் என்று; திரைப்பட தயாரிப்பாளர்களையும், இயக்குநர்களையும், இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வன்முறைக் காட்சிகள்தான் வசூலுக்கும், வெற்றிக்கும் அடிப்படை, என்கின்ற கருத்து, உண்மையானதல்ல; வியாபார ரீதியில் சிலரால் பரப்பிவிடப்பட்ட, தவறான கருத்து என்பதை, அனைவரும் உணர வேண்டும் என்பதே, எனது அவா! இளைய தலைமுறையினர் நல்வழியைப் பின்பற்றவும், உயர்ந்த ரசனைகளை வளர்த்துக் கொள்ளவும், தமிழ்த் திரைப்படங்கள், ஒரு

உறுதுணையாக, சாதனமாக விளங்க வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்து, வெளி வந்த படங்கள், பெரும்பாலும் வெற்றிப் படங்களாக அமைந்திருந்தன. எல்லாப் படங்களிலும், அவர் ஒழுக்கமான பாத்திரங்களை ஏற்று நடித்து, அதன் மூலம் மக்களுக்கு, நல்ல பல கருத்துக்களை வழங்கினார். அவரது படங்களில், சண்டைக் காட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும், அவற்றில் நெஞ்சை உறைய வைக்கும், வன்முறைக் காட்சிகள் இருக்காது. அந்தப் படங்கள் எல்லாம் வெற்றி அடையவில்லையா? எனவே, திரைப்படத்தில் வருகின்ற கதாபாத்திரங்களை, நல்லவர்களாக, ஒழுக்கம் மிக்கவர்களாகக் காட்டினால், படம் ஓடாது; மாறாக வன்முறைக் காட்சிகளைத்தான், ரசிகர்கள் விரும்புகிறார்கள் என்பதெல்லாம், நியாயமற்ற வாதம் ஆகும். நாட்டாமை படத்தில் வருகின்ற கதாபாத்திரங்கள், ஒழுக்கம் மிகுந்தவை தானே? இந்தப் படம் மகத்தான வெற்றி அடையவில்லையா?

திரைப்படங்களில் இரட்டை வேடங்கள் ஏற்று நடிப்பது என்பது, புதுமையானது அல்ல என்றாலும்; திரு. சரத்குமார் அவர்கள், இப்படத்தில் ஏற்றுள்ள இரட்டை வேடம், மிகவும் பாராட்டுக்குரியதாகும். பெரும்பாலும், இரட்டை கதாபாத்திரங்கள் தோன்றும் படங்களில், ஒருவரை நல்லவராகவும், மற்றவரைத் தீயவராகவும் காட்டுவார்கள். அப்போதுதான், இரண்டு பாத்திரங்களுக்கும் இடையே, நடிப்பில் அதிகமான வித்தியாசத்தைக் காட்ட முடியும், என்ற நம்பிக்கைதான் அதற்குக் காரணம். ஆனால் இந்தப் படத்தில், திரு. சரத்குமார் ஏற்றுள்ள வேடங்கள் இரண்டுமே, நேர்மையும், ஒழுக்கமும் நிறைந்த கதாபாத்திரங்கள் ஆகும். அப்படிபட்ட கதாபாத்திரங்களில், வித்தியாசம் காட்டி நடிப்பது என்பது, மிகவும் கடினமான காரியம் ஆகும். ஆனால் திரு. சரத்குமார் அவர்கள், இந்தச் சோதனையில் வெற்றி பெற்றுவிட்டார். அவருடைய சிறப்பான இரட்டை வேட நடிப்புதான், இந்த திரைப்படத்தின் ஜீவநாடி; இப்படத்தின் வெற்றிக்கு அஸ்திவாரம். படத்திற்குப் படம் மாறுபட்ட வேடங்களை ஏற்று வரும், திரு. சரத்குமார் அவர்களுக்கு, எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் படத்தில் பெரிய நாட்டாமைக்காரராகத் தோன்றி, கண்ணியமான ஒரு பாத்திரத்தை, நம் கண் முன்னே படைத்துக்

காட்டிய குணச்சித்திர நடிகர், திரு. விஜயகுமார் அவர்களுக்கு, எனது தனிப்பட்ட பாராட்டுக்கள். குணச்சித்திர நடிப்பில், இன்று அவருக்கு நிகர், அவர்தான் என்பதை, இத்திரைப்படத்தின் மூலம், திரு. விஜயகுமார், மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டார். இந்தத் திரைப்படத்தில் நடித்துள்ள மற்ற நடிகர், நடிகையர்கள் அனைவருமே, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரங்களை நன்கு உணர்ந்து, இயல்பாக நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு இனிமையாக இசை அமைத்து, நமது மனங்களைக் கவர்ந்த, இளம் இசை அமைப்பாளர் திரு. சிற்பி, re-recording-லும், பின்னணி இசையிலும், பல புதுமைகளைப் புகுத்தி உள்ளார். அவருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். நல்ல பாடல்களை வழங்கிய கவியரசு வைரமுத்து அவர்களை நெஞ்சார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். அவருக்கு என்னுடையப் பாராட்டு தேவையா என்ன? இந்த நாடே அவரைப் பாராட்டுகிறது; மத்திய அரசே கவியரசு வைரமுத்துவை, மூன்று முறை பாராட்டி கவுரவித்துள்ளது.

இப்படத்தின் இயக்குநர் திரு. K.S. ரவிகுமார், மற்றும் தயாரிப்பாளர் திரு. R.B. சௌத்ரி ஆகியோருக்கு, எனது பாராட்டுக்களோடு, நன்றியையும் உரித்தாக்கிக் கொள்கிறேன். ஏனென்றால், மிதமிஞ்சிய வன்முறைதான், இந்தக் காலத்தில் ரசிக்கப்படுகிறது, என்ற தவறான கண்ணோட்டத்தையும், போக்கையும் மாற்றிக் காட்டி; நல்ல கருத்தாழமிக்க படங்களுக்கு, என்றும் தமிழக ரசிகர்கள் மத்தியில், வரவேற்பு உண்டு என்பதை, பரிட்சார்த்தமாக நிரூபித்துக் காட்டியதற்காகத்தான்; அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். நாட்டாமை போன்ற ஒரு நல்ல படத்தைத் தந்தது, ஒரு வகையில், இந்தச் சமுதாயத்திற்கு அவர்கள் ஆற்றிய, ஒரு தொண்டு என்று கூட, என்னால் கூற முடியும்.

அத்தகைய ஒரு 'திருப்பு முனைத் திரைப்படத்தின்' உருவாக்கத்திற்கும், மகத்தான வெற்றிக்கும், தங்களது உழைப்பை நல்கி, பாடுபட்ட தொழில் நுட்ப கலைஞர்களுக்கும், மற்றும் இதன் தயாரிப்பில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும், இதே விழா மேடையில், எனது கையால் பரிசுகளை வழங்கியதில், நான் பெருமிதம் அடைகின்றேன்.

எந்தவொரு தொழிலில் யார் ஈடுபட்டாலும், இந்தச் சமுதாயத்தை அடிப்படையாக வைத்துத் தான், அந்தத் தொழிலை மேற்கொண்டு, அதன் மூலம் பொருளையும், புகழையும் ஈட்டுகிறார்கள். எந்தச் சமுதாயத்தை அடிப்படையாக வைத்து, பொருளையும், புகழையும் ஈட்டுகிறார்களோ; அந்தச் சமுதாயத்தின் நலனைக் கருத்தில் கொண்டு, கடமையாற்ற வேண்டிய ஒரு தார்மீகப் பொறுப்பு, அவர்களுக்குக் கண்டிப்பாக உண்டு. திரைப்படத் துறை நிச்சயமாக, இதற்கு விதிவிலக்கல்ல. இன்னும் சொல்லப் போனால், Social Responsibility என்பது, மற்ற துறையினரை விட, திரைப்படத் துறையினருக்குத் தான் அதிகம் உண்டு என்பதை, நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ஏனென்றால், திரைப்படத் துறையினர்தான், மற்ற துறையினரை விட, சமுதாயத்திலும், மக்கள் மத்தியிலும், ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும், ஆற்றலும் திறமையும் பெற்றவர்கள்.

எதிர்காலச் சமுதாயத் தூண்களான, இளைய தலைமுறையினரை, நல்வழிப்படுத்துவதே, நமது சமுதாயக் கடமையாகும். எனவே வன்முறையைத் தவிர்த்து, நமது கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்ற நல்ல திரைப்படங்களை, தமிழ்த் திரைப்பட உலகம், தயாரித்து வழங்க வேண்டும் என்றும்; அதுவே உங்கள் அனைவரின் தார்மீக பொறுப்பு; சமுதாயக் கடமை என்பதையும்; எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன். நீங்கள் அனைவரும் வாழ்க்கையில், எல்லா நலனும், வளமும் பெற வேண்டும் என்று, எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொண்டு விடை பெறுகிறேன்.

***(27.7.1995 அன்று நடைபெற்ற "நாட்டாமை" திரைப்படத்தின் வெள்ளி விழாவில் ஆற்றிய உரை)***

# மனிதகுல மேம்பாட்டிற்காகத் தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார்

காஞ்சிப் பெரியவர் என்றும், மகா சுவாமிகள் என்றும், உலகெங்கும் வாழ்கின்ற இறையன்பர்களால், அன்போடும் பக்தியோடும் வணங்கப்படுபவரும்; இந்தியாவின் தலை சிறந்த ஆன்மீகவாதிகளில் முக்கியமானவராக, அனைவராலும் போற்றப் படுபவருமாகிய; ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, மகாஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள் அவர்களுடைய, 60 வது பிறந்த நாள், சஷ்டியப்தபூர்த்தி மணி விழாவில் பங்கேற்று, இங்கே பெருந்திரளாகக் குழுமியிருக்கின்ற, உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

இந்தச் சீரிய விழாவில் கலந்து கொள்வதாக இருந்த, பாரதப் பிரதமர் திரு P.V. நரசிம்ம ராவ் அவர்கள், நேற்று என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்கள். காஞ்சிப் பெரியவர் அவர்களின் மணி விழா நிகழ்ச்சியில் எப்படியாவது கலந்து கொள்ள வேண்டும் என்று, தான் மிகவும் விரும்பியதாகவும், இருப்பினும் திடீரென்று ஏற்பட்ட உடல்நலக் குறைவினால், இந்த விழாவில் பங்கேற்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்பதையும், என்னிடம் தெரிவித்தார்கள். காஞ்சி மாநகருக்கு வருகை தந்து, இந்த விழாவில் கலந்து கொள்ள முடியாததற்கு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், மிகுந்த வருத்தத்தை என்னிடம் தெரிவித்தார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக வரலாற்றின் ஆன்மீக வளர்ச்சியில், இந்தியாவுக்கு எப்போதுமே, ஒரு தனி இடம் உண்டு. ஏனென்றால், புதிய சிந்தனைகள், புதிய தத்துவங்கள், மதங்கள் வடிவிலே வளர்ந்த பூமி இது. பல புண்ணிய சீலர்கள், அவதரித்த இடம் இது. காஞ்சியைப் போல, பல ஆன்மீக திருத்தலங்களைக் கொண்ட தமிழகம், இந்திய நாட்டு ஆன்மீக வளர்ச்சிக்கு, ஆற்றிய பெரும் சேவை, சரித்திரத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தியத் திருநாட்டின் இறைத் தன்மைக்கு எடுத்துக் காட்டுகளாக, தனது நீண்ட வரலாற்றுப் பின்னணியுடன், பண்பாட்டுப் பலகணிகளாக விளங்கும், தலை சிறந்த

திருக்கோயில்கள் அமைந்துள்ள, மாபெரும் திருத்தலம்தான், காஞ்சி மாநகர் என்ற இந்தப் புனித பூமி. இந்தியாவின் ஆன்மீக ஊற்றாக, விளங்கிக் கொண்டு இருக்கும் இத்திருத்தலத்தில், இறை பணியையும், சமுதாய முன்னேற்றத்தையும் இணையச் செய்து; மனித குல மேம்பாட்டிற்காக, தனது வாழ்நாள் முழுவதையும், அர்ப்பணித்துக் கொண்டு இருக்கும் பெரியவர், ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகளின் மணி விழா, சீரோடும், சிறப்போடும் நடைபெறுவது, மிகவும் ஏற்புடையதாகும். இன்று காஞ்சி மாநகர், விழாக் கோலம் பூண்டு இருப்பதைக் கண்டு, நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இறைப்பணி என்பது, ஆலயப் பணி என்பதோடல்லாமல், வாழும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும்; நலிவடைந்தோரின் நல்வாழ்விற்கும்; அன்னைத் தமிழின் ஏற்றத்திற்கும்; வேத ஆகம கல்வியின் வளர்ச்சிக்கும்; வழி வகுக்கும் ஒரு மாபெரும் பணி, என்ற புதிய தத்துவத்தை, இன்று உலகிற்கு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், உணர்த்திக் கொண்டு வருகின்றது.

ஒரு நூற்றாண்டுக்கு மேல், இவ்வுலகில் நம்மிடையே வாழ்ந்து, எண்ணற்றோருக்கு வாழ்க்கையின் உண்மைப் பொருளையும், நம்பிக்கையையும், உன்னத அருளையும் வழங்கிக் கொண்டு இருந்த, காஞ்சி மாமுனிவர், பரமாச்சாரியார், மகா சுவாமி அவர்களின் பூவுடல் மறைந்தாலும், இன்றும் அவர் புகழுடல் மறையவில்லை.

அவர் வழி நின்று, அவர் போதித்த தத்துவங்களையும், அவர் எடுத்துரைத்த ஏற்றமிகு கருத்துக்களையும், மக்கள் மத்தியில் பரப்ப, சீரிய முறையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், செயலாற்றி வருவதை எண்ணி, நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உலகத்தில் நல்லவை பெருகி, அல்லவை அழிய வேண்டும், என்ற மனித குலத்தின் எதிர்பார்ப்புகளுக்கு; ஆன்மீகம், ஒரு புதிய வழியைக் காட்டி வருவதை எண்ணி, நான் பெருமிதம் அடைகிறேன்.

இறை உணர்வு என்பது, திருக்கோயில்களில் மட்டுமின்றி, மனித உள்ளங்களிலேயும்; மனித சமுதாயத்தை மேம்படுத்து வதிலேயும்; தூய உணர்வுடன் சமுதாயப் பணி ஆற்றுவதிலும்; அடங்கி இருக்கின்றது என்பதை, தமது எண்ணற்ற ஆன்மீக, சமூக, மற்றும் சமுதாய நலப் பணிகள் மூலம், எடுத்துக் காட்டி வருபவர், காஞ்சிப் பெரியவர் அவர்கள். புதிய திருக்கோயில்களைக் கட்டுவித்து, தொன்மையும் சரித்திர சிறப்பும் மிக்க, ஆன்மீக பாரம்பரியத்தைப் பாதுகாத்து வருவதோடு; சமுதாய நலனைக்

கருத்தில் கொண்டு, கல்விச் சாலைகள், மருத்துவ மனைகள், மற்றும் நூலகங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளை, ஆங்காங்கே ஏற்படுத்தி; அனைத்துத் தரப்பு மக்களுக்கும், சேவை செய்து வரும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்கு, எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், பல்வேறு அறநிலையங்களையும்; பசு பாதுகாப்பு நிலையங்களையும்; மருத்துவ மனைகளையும்; கல்விச் சாலைகளையும், நடத்தி வருகின்றது. முதியோர், மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லங்களும், வேத பாட கல்விச் சாலைகளும், நடைபெற்று வருகின்றன. நம்முடைய வேத சாஸ்திரங்களையும், தொன்மையான கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் காப்பாற்றி; அதன் பெருமைகளை உலகறியச் செய்வதிலும்; அதன் மூலம் மக்களுக்கு, அமைதியான வாழ்க்கையைப் பெறச் செய்வதுமே; தனது தலையாய கடமையாகக் கொண்டு, இந்த ஸ்ரீமடம் இயங்கி வருகின்றது. எனவே, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், மேற்கொண்டு வருகின்ற அனைத்து அறப் பணிகளும், மென்மேலும் வளர்ந்து, செழித்தோங்க வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொண்டு; ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் மேற்கொள்ளும் நற்பணிகளுக்கு, தமிழக அரசு உறுதுணையாக விளங்கும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் உள்ள, தொன்மையும், சரித்திர சிறப்பும் வாய்ந்த, நமது கலாச்சாரத்தின் பலகணிகளாக விளங்கும், தமிழகத்தின் திருக்கோயில்களைப் பராமரிப்பதில், எங்கள் அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகளைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். தமிழகத்தின் பட்டிதொட்டிகளில் அமைந்துள்ள, எல்லாத் திருக்கோயில்களிலும், குறைந்த பட்சம், ஒரு கால பூஜையாவது நடைபெற வேண்டும் என்பதற்காக, எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்ற திட்டம், மக்கள் மத்தியில் பெற்றுள்ள வரவேற்பை, அனைவரும் நன்கு அறிவீர்கள். சிதிலமடைந்த பல திருக்கோயில்களுக்கு, எங்கள் ஆட்சியில், சம்புரோக்ஷணமும், திருப்பணிகளும், முழுமையாக நடைபெற்றுள்ளன. இந்தப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழகத்தின் பாரம்பரியம் மிக்க திருக்கோயில்களின் பராமரிப்பில், தமிழக அரசு என்றென்றும் முன்னணியில் நிற்கும், என்பதில் சந்தேகம் இல்லை. மக்கள் மனங்களில் புதிய நம்பிக்கையையும், நல்ல ஆன்மீக உணர்வையும் ஏற்படுத்தி, அதன் மூலம் இந்தச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும், வழி வகுக்கின்ற

திருக்கோயில்களின் பராமரிப்பு, மேலும் செம்மையாகவும், சிறப்பாகவும் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிப் பெரியவர் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளுடனும் பல்லாண்டு வாழ்ந்து, மென்மேலும் இறைப் பணியையும், சமூகப் பணியையும் மேற்கொண்டு, சீரிய புகழையும், எல்லா சிறப்புகளையும் அடைய வேண்டும் என்று, உங்கள் அனைவரின் சார்பிலும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் பெருமை, உலகெங்கும் பரவ வேண்டும், என்ற எனது பேரவாவினையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீரோடும் சிறப்போடும் நடைபெறும் காஞ்சிப் பெரியவர் மணி விழாவில் கலந்து கொள்ள, எனக்கு அழைப்பு விடுத்த, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்கும், காஞ்சிப் பெரியவர் அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொண்டு விடை பெறுகிறேன்.

***(11.8.1995 அன்று நடைபெற்ற காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள் அவர்களின் சஷ்டியப்தபூர்த்தி விழாவில் ஆற்றிய உரை)***

# எங்கே அமைதி கொலுவீற்றிருக்கிறதோ அங்கேதான் வளர்ச்சி அரங்கேறும்

நமது தாய்த் திருநாடு, பாரத மணித் திருநாடு, அன்னியரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு, சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க தொடங்கிய நன்னாள் இந்நாள். இந்திய தேசிய வரலாற்றில், தேசிய நீரோட்டத்துடன் கலந்து, நாம் அனைவரும் இந்தியர் -- ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள், என்கின்ற உணர்வை ஊட்டி வளர்த்து, தேசிய நீரோட்டத்துடன் இணைந்து, இந்திய விடுதலை வரலாற்றில், தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்ற, தியாக பூமி தமிழகம் ஆகும்.

அன்று கிளர்ந்தெழுந்த விடுதலை உணர்வும், ஒருமைப்பாட்டு உணர்வும், இன்றும் தமிழக மக்கள் மனங்களிலே, பொங்கி எழுகின்றது என்றால், அது மிகையாகாது. "வேற்றுமையில் ஒற்றுமை காண்கின்ற", ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் தான், இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும், நாம் அனைவரும் என்பதை, எண்ணி மகிழ்கின்ற இனிய திருநாள் இந்நன்னாள்.

சுதந்திரக் காற்றை, நாம் சுவாசிக்க வேண்டும் என்பதற்காக, தங்கள் உயிர் மூச்சை அர்ப்பணித்த, தியாக சீலர்களின் அருந்தியாகங்களை, நினைவு கூர்ந்து, நமது நன்றிக் கடனை, அவர்களுக்கு உரித்தாக்கும் நல்ல நாள் இந்நாள்.

இந்த நாட்டின் விடுதலைக்காக, தங்களது உயிரையும், உடைமைகளையும் அர்ப்பணித்த, தியாக சீலர்களின் ஆன்மா, சாந்தி அடைய வேண்டுமென்றால், இந்தப் பரந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும், அடிப்படை வசதிகளான, உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை, நாம் பெற்றுத் தந்தாக வேண்டும். அந்த உணர்வுடன்தான், உங்கள் அன்பு அன்னையின் ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக, ஏழை எளிய மக்கள், வாழ்வில் வளம் பெறுவதற்கும், ஏற்றம் பெறுவதற்கும், நல்ல பல திட்டங்கள், செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எங்கே அமைதி கொலு வீற்றிருக்கிறதோ, அங்கேதான் வளர்ச்சி அரங்கேறும். இது சரித்திரம் காட்டுகின்ற உண்மை.

எனவேதான், ஒரு காலத்தில், இருள் போல சூழ்ந்திருந்த ஆயுத கலாச்சாராத்திலிருந்து, தமிழகத்தை மீட்டு, மீண்டும் அமைதிப் பூங்காவாக மாற்றி, நிலைத்த வளர்ச்சிக்கு வித்திட்டோம். மக்கள் நலனை மட்டுமே மனதில் முன்நிறுத்தி, தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள பல பிரச்சனைகளை, துணிவுடன் எதிர்கொண்டதால்தான், இன்று பல பிரச்சனைகளுக்கு, தீர்வு ஏற்பட்டுள்ளது என்பதை, எவரும் மறுக்க முடியாது.

சமூக நலத் திட்டங்கள், நம் மாநிலத்தில், ஒரு உறுதியான ஈடுபாட்டுடன் செயல்படுத்தப்பட்டதால், குழந்தைகளின் இறப்பு விகிதம், வெகுவாகக் குறைந்துள்ளது; குழந்தைகளின் ஊட்டச் சத்து, கூடியுள்ளது; கருவுற்ற தாய்மார்கள், மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் நலம், பொதுவாக பெருகியுள்ளது; பள்ளியில் பயிலும், மாணவ மாணவியர்களின் ஆரோக்கியம், பாதுகாக்கப்படுகிறது.

அரசு தொட்டிலில் இடப்பட்ட குழந்தைகள், அன்போடும், ஆதரவோடும் வளர்க்கப்பட்டு, மற்றவர்களைப் போல் சீராட்டி, பாராட்டி, கான்வென்ட் பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற சூழ்நிலை, ஏற்பட்டுள்ளது. எங்கள் அரசு, இதயமுள்ள ஒரு அரசு என்பதை, இது எடுத்துக் காட்டும் என்று நம்புகிறேன். பெண் சிசு வதை, வரதட்சணைப் பிரச்சனை போன்ற, புரையோடிப் போன சமுதாயக் கொடுமைகளுக்கு, ஒரு நிரந்தர தீர்வு காண, நாம் மேற்கொண்ட முயற்சிகள், இன்று நல்ல பலன்களை அளித்து வருகின்றன. தொட்டில் குழந்தைகள் திட்டம்; பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்; 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டம்; பள்ளிக் குழந்தைகள் மருத்துவ நல முகாம்கள் ஆகியவை, சமுதாயத்தில் ஒரு மாபெரும், மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளன. இவற்றுடன், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்தின் சிறப்பான செயல்பாடு, துணைக் கண்டத்தின் மற்ற மாநிலங்களின் கவனத்தை, ஏன், உலக நாடுகள் பலவற்றின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சமூக நலத் திட்டங்களில், நாம் செய்கின்ற முதலீடுகளை, விழலுக்கு இரைத்த நீர் என்று, ஒரு காலத்தில் வர்ணித்தவர்கள், இன்று, "அதுதான் விடியலுக்கு வழி" என்று, நம் திட்டங்களை அப்படியே கடைபிடிக்க, முன் வந்துள்ளார்கள். நாம் நடந்து வந்த பாதை, எத்தனை சரியானது என்பதை, நாம் பெற்ற வெற்றிகள், விளக்கிக் கொண்டிருக்கின்றன என்றால், அது மிகையாகாது.

சமூக நலத் திட்டங்களையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும், தனி மனித முன்னேற்றத் திட்டங்களையும், செயல்படுத்தி வரும் அதே நேரத்தில்; தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, சீரிய தொழில் துறை முன்னேற்றத்திற்கும், எங்கள் ஆட்சியில், ஒரு புதிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, 'புதிய தொழில் கொள்கையை', ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் அறிவித்ததோடு; தாராளமயமாக்கும், மற்றும் தனியார் மயமாக்கும் கொள்கையை, முழுமையாகப் பயன்படுத்தி; பெரிய முதலீடுகளில் அமைந்த, பெரிய தொழில்களைத் துவங்கி; அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்கு, நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். குறிப்பாக, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டம்; வட சென்னை அனல் மின் நிலையத்தின், இரண்டாம் கட்ட திட்டம்; **Sterlite** நிறுவனத்தாரின் தாமிர உருக்குத் தொழிற்சாலை; மற்றும் **Thapar Dupont** நிறுவனத்தாரின், **Nylon** 6.6, செயற்கை இழை தயாரிக்கும் தொழிற்சாலை போன்றவை, தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விரைவில் **Ford** கம்பெனியின் கூட்டோடு, தனியார் துறையில், **car** தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினையும், தமிழகத்தில் ஏற்படுத்த, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. **TIDCO** நிறுவனம், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், 25 பெரிய தொழிற்சாலைகளை, 20,000 கோடி முதலீட்டில் தொடங்கி உள்ளது, ஒரு மகத்தான சாதனையாகும். இவ்வாறு, கடந்த நான்கு ஆண்டுகளில், 76,628 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டில், பல பெரிய தொழில் முயற்சிகள், மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை, மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரதட்சணை போன்ற, பல்வேறு சமுதாயக் கொடுமைகளில் இருந்து, பெண்களைக் காப்பாற்றுவதற்கும்; சட்டப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய, நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கும்; தமிழகத்தில், 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தொடங்கி உள்ளோம்; மகளிர் உரிமைகளைப் பெற்றுத் தரும் மகத்தான பணியில், இந்திய நாட்டிற்கே, ஏன், உலகம் முழுமைக்குமே, தமிழகம் முன்னோடியாக விளங்கி வருகின்றது என்பதை, மிக்க பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்!

நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கும், நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கும், கடந்த நான்கு ஆண்டுகளாக, ஒவ்வொரு ஆண்டும், பொங்கல் திருநாளை முன்னிட்டு, சுமார் 65 கோடி ரூபாய் செலவில், 1 கோடியே 20 லட்சம் பேருக்கு, இலவசமாக வேட்டி சேலை வழங்கி வருவது, உங்கள் அன்பு அன்னையின் ஆட்சியில் தான், என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆண்டொன்றுக்கு, 1000 கோடி ரூபாய்க்கு மானியச் சுமையை, கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு இடையேயும் ஏற்றுக்கொண்டு, விவசாயிகளுக்கு தொடர்ந்து, இலவச மின்சாரம் வழங்கி வருகின்றோம். இந்த உன்னத திட்டம், இந்த ஆண்டும், தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது அரசின் முயற்சியால், உலக வங்கியின் நிதி உதவியோடு, சென்னை நகருக்குக் குடிநீர் வழங்க, புதிய வீராணம் திட்டத்திற்கான பணிகள், தொடங்கப்பட்டுள்ளன.

அதே போல், கிருஷ்ணா நதி நீர் திட்டம், இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு, கிருஷ்ணா நீர், சென்னைக்குக் கொண்டு வரப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையில், தமிழகம் பின்தங்கி இருந்த நிலையை மாற்றி, இன்று விளையாட்டுத் துறைக்கு, புதிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுத்ததோடு; வரும் டிசம்பர் மாதத்தில், தெற்கு ஆசிய நாடுகளுக்கு இடையேயான, விளையாட்டுப் போட்டிகளை, மிகப் பிரம்மாண்டமான முறையில் சென்னையில் நடத்த, எங்கள் அரசு சீரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இதற்காக, புதிய விளையாட்டு அரங்கங்களும்; விளையாட்டு மைதானங்களும்; நீச்சல் குளங்களும்; விளையாட்டு வீரர்கள் தங்க, விளையாட்டுக் கிராமம் ஒன்றும்; 240 கோடி ரூபாய் செலவில், எங்கள் அரசு உருவாக்கி வருகின்றது, என்பதை எண்ணிப் பார்க்கும் போது; நான் உண்மையிலேயே, மிக்க மன நிறைவு அடைகிறேன்.

தொன்மையும், புராதனச் சிறப்பும் வாய்ந்த, தமிழகத் திருக்கோயில்களைப் பராமரிப்பதில், எங்கள் ஆட்சி காட்டி வருகின்ற ஈடுபாட்டை, தமிழக மக்கள் மறக்க மாட்டார்கள் என்று, நான் உறுதியாக நம்புகிறேன்.

ஆயிரக்கணக்கான திருக்கோயில்களுக்கு, திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு விழா நடைபெற்று வரும் அதே நேரத்தில்; எல்லாக் கோயில்களிலும், அனுதினமும் விளக்கு எரிகின்ற, ஒரு திட்டத்தையும் தீட்டி; ஒரு கால பூஜையாவது, அவற்றில் நடைபெற வழி வகுத்தது, உங்கள் அன்பு அன்னையின் அரசுதான் என்பதை, பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு, இதே கோட்டைக் கொத்தளத்தில் இருந்து, நான் உரையாற்றும் போது, தமிழகத்தில் உள்ள ஆதி திராவிடர், மற்றும் பழங்குடி இன குடியிருப்புகளுக்கு, எல்லா அடிப்படை வசதிகளும், 125 கோடி ரூபாய் செலவில், 1995-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்திற்குள் செய்து தரப்படும், என்று குறிப்பிட்டிருந்தேன். பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெரு விளக்கு, இணைப்புச் சாலைகள், மயான வசதி, மற்றும் மயானப் பாதை வசதி, ஆகிய ஐந்து அடிப்படை வசதிகளை, எல்லா ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கும், ஏற்பாடு செய்து தருவதோடு; ஆதிதிராவிட மக்களுக்கு, இலவச வீட்டு மனைப் பட்டாக்களும், போர்க்கால அடிப்படையில் வழங்கப்படும் என்றும், உறுதி கூறியிருந்தேன்.

சென்ற ஆண்டு அறிவித்த திட்டத்தின்படி, இதுவரை கிட்டத்தட்ட, 1 லட்சத்து 8 ஆயிரம் ஆதிதிராவிட மக்களுக்கு, வீட்டுமனை பட்டாக்கள், இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 2,807 ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு, மயானப் பாதை வசதியும்; 2,422 குடியிருப்புகளுக்கு, இணைப்புச் சாலை வசதியும், செய்து தரப்பட்டுள்ளது.

1,730 குடியிருப்புகள், தெரு விளக்கு வசதியைப் பெற்றுள்ளன. 1 லட்சத்து 8 ஆயிரம் குடிசைகளுக்கு, இலவச மின் விளக்கு வசதியும், செய்து தரப்பட்டுள்ளது.

1996-ஆம் ஆண்டு, மார்ச் மாதத்திற்குள், எல்லா ஆதி திராவிட குடியிருப்புகளுக்கும், எல்லா அடிப்படை வசதிகளும்; 5 லட்சம் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு, வீட்டு மனைப் பட்டாக்களும்

வழங்கப்படும் விதத்தில், அரசு இயந்திரம் முடுக்கி விடப்பட்டுள்ளது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்டை நாட்டிலே ஏற்பட்டுள்ள, உள்நாட்டுப் பிரச்சினையால் எழுந்துள்ள, பாதகமான சூழ்நிலையினால், நமது தமிழகத்து மீனவர்களின் வாழ்க்கையில், ஒரு தேவையற்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக, தமிழக மீனவர்களின் பிரச்சினைகளை, அணுகி ஆராய்ந்து; அவர்தம் துயர் துடைக்க, நல்ல பல திட்டங்களை, தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. ஆனால் நமது அப்பாவி மீனவர்கள், இலங்கைக் கப்பற்படையின் அத்துமீறல்களுக்கு, அடிக்கடி பலியாகி வருகிறார்கள்.

சமீபத்தில், ஹெலிகாப்டர் விமானத்திலிருந்து, ஒன்றுமறியாத தமிழக மீனவர்கள் மீது, குண்டு வீசி, தாக்குதல் நடத்தி இருக்கிறார்கள். அன்றொரு நாள், கச்சத் தீவைத் தாரை வார்க்காமல் இருந்திருந்தால், இன்று தமிழக மீனவர்களுக்கு, இத்தகைய அவல நிலை நிச்சயம் ஏற்பட்டிருக்காது. பல முறை மத்திய அரசையும், பாரதப் பிரதமரையும், கடிதம் மூலமாகவும், நேரிலும், இந்தக் கொடுமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்று கேட்டும்; இதுவரை நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை.

மீனவப் பெருங்குடி மக்களின், வாழ்க்கைப் பிரச்சினையாக மாறிவிட்ட, இந்தப் பிரச்சினைக்கு, ஒரு நிரந்தர தீர்வு காண, மத்திய அரசு, உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று, மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

60 வயதைக் கடந்த, மீனவப் பெருங்குடி மக்களின் நலன் காக்க, மாதம் ஒன்றுக்கு, 160 ரூபாய் ஓய்வூதியம் வழங்கும், புதிய திட்டம் ஒன்றைத், தமிழக அரசு, விரைவில் செயல்படுத்தும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும்; இத்திட்டத்தின் மூலம், 15,000-க்கும் மேற்பட்ட, நலிவடைந்த மீனவப் பெருங்குடி மக்கள், தொடக்க நிலையிலேயே, பயன் அடைவார்கள் என்பதையும்;

இத்திட்டம் விரைவில், விரிவுபடுத்தப்படும் என்பதையும்; மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த நான்காண்டு காலத்தில், பொது விநியோகத் திட்டத்தை சீரமைத்து, ஏழை எளிய மக்கள் அனைவரும், குறைந்த விலையில், அத்தியாவசியப் பண்டங்களை பெறுகிற, நல்லதொரு சூழ்நிலையை, ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, வருமான வரம்பு எதுவும் இன்றி, எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும், சாதாரண ரக அரிசி, கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம், வழங்கப்பட்டு வருகின்றது.

கிராமப் புறங்களில் வசிக்கும், எனது அன்பிற்குரிய தாய்மார்கள், மற்றும் சகோதரிகள், எல்லா அத்தியாவசியப் பண்டங்களையும் பெற, பல மைல் தூரம், நடந்து செல்ல வேண்டிய, சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு; 500 குடும்ப அட்டைகளுக்கும், அதிகமாக உள்ள கடைகளை, பிரிக்க ஆணையிட்டுள்ளேன். இந்தப் புதிய கிளைக் கடைகள், அந்தந்த கிராமங்களிலே வசிக்கும் மகளிரைக் கொண்டே, நடத்தப்படுகின்ற புதிய திட்டம் ஒன்று, எனது ஆணையின் பேரில், தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புறங்களில் வாழும் தாய்மார்கள், மற்றும் சகோதரிகள், இத்திட்டத்தினால் பயன் பெறுவார்கள், என்று உறுதியாக நம்புகிறேன்.

வளர்ந்து வரும் அறிவியல், மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகளும், நாட்டு நடப்புகளும், கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு, சென்றடைய வேண்டும் என்கின்ற எண்ணத்துடனும்; ஏழை, எளிய மக்களும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை, கண்டு களிப்பதற்காகவும்; ஒவ்வொரு ஊராட்சிக்கும், ஒரு தொலைக்காட்சிப் பெட்டி, வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு மட்டும், கிட்டத்தட்ட, 6 கோடி ரூபாய் செலவில், 4000 வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள், வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள, 12,500 ஊராட்சிகளில் அமைந்துள்ள, 65,500 குடியிருப்புகளில், இதுவரை 23,500 குடியிருப்புகளுக்கு, தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள எல்லாக் குடியிருப்புகளுக்கும், குறைந்தது ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியாவது, வழங்க வேண்டும்

என்பதே, எனது பேரவா. எனவே, தற்போதுள்ள விதிமுறைகளைத் தளர்த்தி, 50 குடும்பங்கள் வசிக்கும் ஒவ்வொரு குடியிருப்புக்கும், ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க வேண்டும், என ஆணை வழங்கியுள்ளேன் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் படி, 75 கோடி ரூபாய் செலவில், 50,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், எல்லா குடியிருப்புகளுக்கும், 1996-ஆம் ஆண்டு, மார்ச் மாதத்திற்குள் வழங்கப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது ஊராட்சிகளில், மாட்டு வண்டிகள், மூன்று சக்கர வண்டிகள், மிதி வண்டிகள், மற்றும் சைக்கிள் ரிக்ஷாக்கள் போன்றவற்றிற்கு, வாகன வரி விதிக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய வாகனங்களை வைத்து இருப்பவர்கள், பெரும்பாலும் ஏழை எளிய மக்கள் என்பதால், அத்தகைய மக்களின் நலனில், எங்கள் அரசு கொண்டுள்ள, ஆத்மார்ந்த ஈடுபாட்டை, வெளிப்படுத்தும் வண்ணம்; இனி ஊராட்சிகளில், அத்தகைய வாகனங்களுக்கான வாகன வரி விதிப்பு, முழுமையாக ரத்து செய்யப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனை அமல்படுத்த, தேவையான சட்ட திருத்தம், விரைவில் கொண்டுவரப்படும்.

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் தொகுப்பு வீடுகள், கிராமப் புறங்களில் உள்ள, ஏழை எளிய மக்களின், வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, பயன்படுகின்றன. குறிப்பாக, ஆதி திராவிட பெருங்குடி மக்கள், மிக அதிகமாகப் பயன் அடைகிறார்கள். தமிழகத்தில், இதுவரை கட்டி முடித்து, இலவசமாக வழங்கப்பட்ட, 2,23,000 வீடுகளில், 1,35,000 வீடுகள், உங்கள் அன்பு அன்னை, ஆட்சிக்கு வந்த நான்காண்டு காலத்தில், கட்டி வழங்கப்பட்டவை என்பதையும்; இந்த ஆண்டு மட்டும், 70,150 கான்கிரீட் தொகுப்பு வீடுகள், கட்டப்பட உள்ளன என்பதையும், பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமின்றி, தொகுப்பு வீடுகளை, 14,000 ரூபாய்க்குள், கட்டி முடிக்க வேண்டும், என்ற விதிமுறையை ஒதுக்கிவிட்டு; RCC தளத்துடன் கூடிய, கான்கிரீட் வீடுகளை மட்டுமே, தமிழக அரசு, இலவசமாகக் கட்டிக் கொடுக்கின்றது. இதனால் ஒவ்வொரு வீட்டிற்கும் ஏற்படும், கூடுதல் செலவினமான 7,000 ரூபாயை, எங்கள் அரசு, முழுமையாக ஏற்று வருகிறது, என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல நேரங்களில், தொகுப்பு வீடுகள் கட்டப்படும் இடங்களுக்கு, உடனுக்குடன் அடிப்படை வசதிகள், செய்து தரப்படுவதில்லை. இந்தக் குறையை நீக்கி, இனி தொகுப்பு வீடுகள் கட்டப்படும் போது; குடிநீர், இணைப்புச் சாலை வசதி, தெரு விளக்குகள், போன்ற அடிப்படை வசதிகளுடன், ஒருங்கிணைந்த முறையில், அமைத்துத் தர ஆணையிட்டுள்ளேன், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒருங்கிணைந்த முயற்சி, ஊரக வளர்ச்சிக்கு, ஒரு புதிய வேகத்தை வழங்கும், என்று நம்புகிறேன்.

அறிவியல் வளர்ச்சியின் ஒரு அங்கமான, மின் வசதி, பொருளாதார வசதியில்லாத, ஏழை எளிய மக்களுக்கும், சென்றடைய வேண்டும் என்பதற்காக, எங்கள் அரசு, "ஒரு குடிசைக்கு, ஒரு இலவச மின் விளக்கு" திட்டத்தை, முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

200 சதுர அடிக்கு மிகாத, களிமண் சுவர்களை மட்டுமே கொண்ட, கூரை வேய்ந்த குடிசைகளுக்கு மட்டும், இந்த இலவச மின் வசதி வழங்க, விதிமுறைகளில் இடம் இருக்கிறது. இதனால், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், தமிழக அரசால், இலவசமாக கட்டி வழங்கப்படும், கான்கிரீட் வீடுகளுக்கும், இந்த இலவச ஒரு விளக்கு மின் வசதியை வழங்க, தற்போதுள்ள விதிமுறைகள் தளர்த்தப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெரும்பாலும், சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழுகின்ற மக்கள், மற்றும் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் ஆகியோர், பயன் பெறும் வண்ணம், இத்திட்டம் மேலும் விரிவாக்கப்படுவதால்; தமிழக அரசின் நிதிச்சுமை, ஆண்டொன்றுக்கு, 15 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்தாலும்; இதனால் பயன்பெறுவோரின் எண்ணிக்கை, அதிகமாகும் என்பதை மனதில் கொண்டு, உங்கள் அன்பு அன்னையின் அரசு, அந்தச் சுமையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள், விபத்தில் உயிர் இழந்தாலோ, அல்லது ஊனமுற்றாலோ, 25,000 ரூபாய், நிவாரண உதவித் தொகை வழங்கும், "விவசாயிகள் இலவச ஈட்டுறுதித் திட்டம்" ஒன்று, இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலம், ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது, ஒரு மெட்ரிக் டன் விவசாய விளைபொருளை, விற்பனை செய்யும் விவசாயிகள், மற்றும் குத்தகைதாரர்கள், இந்த இலவச ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்வதற்கு, தகுதி உடையவர்கள் ஆவார்கள். இத்திட்டம், சிறிது சிறிதாக விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட, விவசாயப் பெருங்குடி மக்கள், 65 வயதை அடைந்த உடன், 25,000 ரூபாய், மானிய உதவித் தொகையாக, பெறுகின்ற நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த, எங்கள் அரசு திட்டமிட்டுள்ளது, என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வேளாண் பெருங்குடி மக்களுக்கு, உதவும் இத்திட்டம், இந்தியத் துணைக் கண்டத்தில், ஒரு முன்னோடித் திட்டமாக அமையும், என்பதில் சந்தேகம் இல்லை.

இந்திய விடுதலைப் போராட்டத்தில், பங்கு கொண்ட வீரர்களுக்கு, வழங்கப்பட்டு வந்த, மாதாந்திர ஓய்வூதியத் தொகை, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அதாவது 1992 ஆம் ஆண்டு, 400 ரூபாயிலிருந்து, 1000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. சுதந்திரத் திருநாளை முன்னிட்டு, செப்டம்பர் மாதம் முதல், இந்த ஓய்வூதியத் தொகை, மாதம் ஒன்றுக்கு, 1000 ரூபாயிலிருந்து, 1500 ரூபாயாகவும்; விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு, கொடுக்கப்பட்டு வரும், மாதாந்திர ஓய்வூதியத் தொகை, 500 ரூபாயிலிருந்து, 750 ரூபாயாகவும், உயர்த்தி வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ஆண்டொன்றுக்கு, 6 கோடி ரூபாய், கூடுதல் நிதிப் பளுவை ஏற்படுத்தும், இத்திட்டத்தின் மூலம், 11,000 குடும்பங்கள் பயன் பெறுவார்கள்.

தமிழக அரசின் MAHAM நிறுவனம், செயல்படுத்தி வருகின்ற, மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களில் இதுவரை 80,000-க்கும் மேற்பட்ட மகளிர், பயன் பெற்று வருகின்றனர். இவர்கள் சுய தொழில் வளர்ச்சிக்கு, தேவையான நிதியை வழங்குவதற்கும்; ஆயுள் காப்பீட்டு வசதியை, செய்து தருவதற்கும்; "Risk-cum-Development Fund", என்ற ஒரு நிதி, விரைவில் ஏற்படுத்தப்படும். சுய வேலைவாய்ப்பில், ஈடுபட்டு வரும் மகளிரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் போது, அவர்களது குடும்பத்திற்கு, 10,000 ரூபாய், நிவாரண உதவித் தொகை இந்த நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நன்னாளில், ஏழை எளிய மக்களின் நலன் காக்க, சமூக நல, மற்றும் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை, ஒரு புதிய முனைப்புடன், முழு வேகத்துடன் செயல்படுத்த, உங்கள் அன்பு அன்னையின் அரசு, உறுதி பூண்டுள்ளது, என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், ஆகியோர் காட்டிய லட்சியப் பாதையில், மக்கள் பணி ஆற்றி வரும், உங்கள் அன்பு அன்னையின் ஆட்சி, ஏழை எளிய மக்களுக்கு, வளமான வாழ்க்கையைப் பெற்றுத் தருவதையே, தனது தாரக மந்திரமாகக் கொண்டு, செயல்படும் என்று உறுதி அளித்து, விடை பெறுகிறேன்.

***(15.8.1995-இல் சென்னை கோட்டையில் ஆற்றிய சுதந்திரத் திருநாள் உரை)***

# உற்ற நண்பராக, பாதுகாவலராக, காவல்துறையினர் நடந்து கொள்ள வேண்டும்

தமிழகத்தின் தனிப் பெரும் நகரங்களில் ஒன்றாகவும்; தொழில் துறையில் தென்னிந்தியாவின் `Manchester' என்ற சிறப்பினையும், புகழினையும் பெற்ற மாநகரமாகவும்; எளிமை, அடக்கம், வீரம் போன்ற, பழந்தமிழர் பண்பாட்டுச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு; விருந்தோம்பலுக்குத் தன்னிகரற்று விளங்கும், கொங்கு தமிழ் கொஞ்சி விளையாடும், கோவை மாநகருக்கு வருகை தந்துள்ள பெருமக்களை; என் மீது அளவிலா அன்பும், எல்லையில்லா பாசமும் கொண்ட, இப்பகுதி வாழ் பெருமக்களை, இங்கே ஒருங்கே காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன். தமிழகக் காவல் துறை, சிறைத் துறை, தீ அணைப்புத் துறை, மற்றும் ஊர்க்காவல் படை, ஆகியவற்றைச் சேர்ந்தவர்களின் சீரிய சேவைக்காகவும், சிறப்பு மிக்க செயல்களுக்காகவும், முதலமைச்சரின் பதக்கங்களை, தமிழக மக்களின் சார்பில் வழங்கியதில், எனது மகிழ்ச்சி இரட்டிப்பாகி உள்ளது.

தங்களது சீரிய பணியாலும், கடமை உணர்ச்சி மிக்க செயலாற்றலாலும், இன்று பதக்கங்களைப் பெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்களையும், இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நாட்டு மக்களின் உயிரையும், உடைமைகளையும் பாதுகாத்து; சட்டம் ஒழுங்கை அன்றாடம் நிலைநாட்டி; நல்லோரைக் கொடியோரின் பிடியிலிருந்து காப்பாற்றி; கொடியவர்களைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைத்து; அதன் மூலம் மக்கள் அனைவரும், அவரவருக்கு உரிய பணிகளை மேற்கொள்ள, தகுந்த அமைதியான சூழ்நிலையை, உருவாக்கித் தருகின்ற மாபெரும் கடமை, காவல் துறைக்கு உண்டு. அதே போன்று, தமிழக மக்களை, பல்வேறு இன்னல்களிலிருந்து காத்து, அரும்பணி ஆற்றும் கடமை, சிறைத் துறை, தீயணைப்புத் துறை, மற்றும் ஊர்க்காவல் படைக்கும் உண்டு.

காவல் துறை என்றாலே, நமது மனதில் முதலில் தோன்றுவது, அவர்களது மிடுக்கான தோற்றமும், சட்டத்தை நிலைநாட்டும் கடமை உணர்வும்தான். அரசுத் துறையில், மற்ற பிரிவுகளில் பணியாற்றுவோர், சில பிரச்சினைகளையும், இடையூறுகளையும் சந்திக்க நேர்ந்தாலும், காவல் துறையில் பணிபுரிபவர்கள், எதிர்கொள்ள வேண்டிய அளவிற்கு, சவால்களையும், சங்கடங்களையும், ஆபத்துக்களையும், அசாதாரண சூழ்நிலைகளையும், அனுதினமும் சந்திப்பது இல்லை. மற்ற பணிகளில் இருப்போர், இன்னல்களையும், சவால்களையும், ஒரு சில நேரங்களில் மட்டுமே, எதிர்கொள்ள வேண்டி இருக்கும். ஆனால் காவல் துறை வீரர்களும் வீராங்கனைகளும், எந்நேரமும் அபாயத்தை எதிர்நோக்கியே, பணி புரிய வேண்டி உள்ளது. இன்றைய சூழ்நிலையில், காவல் துறையினருடைய பொறுப்பும், கடமையும், கூடியுள்ளன. அதே நேரத்தில், அவர்களது பணியின் கடினமும், ஆபத்தும், அதிகரித்துள்ளது.

மக்களின் உயிரையும், உடமைகளையும், பாதுகாக்கும் பணியில் ஈடுபடுபவர்களுக்கு, மக்கள் பாராட்டு அளிப்பது இயல்பு தானே? அந்த வகையில் தான், 6 கோடி தமிழகப் பெருமக்களின் பிரதிநிதியாக, இன்று நான், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்கின்ற முறையில், காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை, மற்றும் ஊர்க்காவல் படையைச் சேர்ந்த வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், பதக்கங்களை வழங்கி, கௌரவித்துள்ளேன். காவல் துறையினர், மேலும் சிறந்த பணியை, தமிழக மக்களுக்கு அளிக்க, தங்களை அர்ப்பணித்துக் கொள்ள, இந்தப் பதக்கங்களும் பாராட்டுக்களும், ஊக்கம் அளிக்கும் என்பது உறுதி.

ஒரு காலத்தில், **Scotland Yard**-க்கு நிகரான பெயரையும், புகழையும் பெற்றிருந்த, தமிழகக் காவல் துறை, இடைப்பட்ட காலத்தில், சில தடங்கல்களுக்கும், சங்கடங்களுக்கும் ஆளாக வேண்டி வந்தது. அத்தகைய காவல் துறை, மீண்டும் புதிய பொலிவினையும், ஏற்றத்தையும் பெற வேண்டும் என்று, பதவி ஏற்ற முதல் நாளே, நான் ஒரு சூளுரையை மேற்கொண்டேன்.

காவல் துறை, நலிந்தவர்களுக்கும், சட்டத்தை மதிப்போருக்கும், அன்புக் கரம் நீட்ட வேண்டும்; கொடியவர்களுக்கும், சட்டத்தை உடைப்போருக்கும், இரும்புக்கரம் காட்ட வேண்டும், என்பதே எனது எதிர்பார்ப்பு. அந்த

எண்ணங்களை செயல்படுத்த, காவல் துறையின், இந்த காலத்திற்கு ஒவ்வாத பழைய ஆயுதங்களையும், சாதனங்களையும், கடைப்பிடிக்கும் பழைய நடைமுறைகளையும், முறைப்படுத்தப்படாத திறமைகளையும், பழங்கால பயிற்சி முறைகளையும், மாற்றி அமைக்க வேண்டும் என்பதை அறிந்து, காவல் துறையை நவீனப்படுத்தத் திட்டமிட்டேன். அதே நேரத்தில், காவல் துறையின் சேவைகள், மக்களுக்குச் சென்றடைய, நல்ல மனப்பான்மையையும், மக்கள் நல எண்ணத்தையும், காவலர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும் என்றும் விரும்பினேன்.

எனவேதான், காவல் துறையை நவீனமயமாக்கும் அதே நேரத்தில், அதை மனிதாபிமானமிக்க ஒரு இயக்கமாகவும் மாற்ற, எங்கள் அரசு மிகுந்த ஈடுபாட்டுடன், திட்டங்களைச் செயல்படுத்த தொடங்கியது. கடந்த 4 ஆண்டு காலத்திற்கு மேலாக, காவல் துறையை நவீனமயமாக்க, தமிழக அரசு, நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவு செய்துள்ளது. புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல்; புதிய பணியாளர்கள் நியமனம்; காவல் நிலையங்களுக்கு வாகனங்கள் வழங்குதல்; நவீன ரகத் துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள்; அவற்றை இயக்க முறையான பயிற்சி; நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள்; அலுவலகக் கட்டிடங்கள்; காவலர்களுக்கு வீட்டு வசதி; மற்றும் பல்வேறு அவசியச் சலுகைகள் என்று, காவல் துறையின் வளர்ச்சிக்கு, ஒன்றன் பின் ஒன்றாக, பல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியது, உங்கள் அன்பு சகோதரியின் அரசுதான் என்பதை, பெருமிதத்துடன் சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

ஓர் அரசு, வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்தி, மாநிலத்தை முன்னேற்றப் பாதையில், கொண்டு செல்ல வேண்டும் என்றால், அங்கே பொது அமைதி நிலவ வேண்டும். அத்தகைய நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதில் காவல் துறையினுடைய பங்கு, மிக முக்கியமானதாகும். சீர்கெட்டுக் கிடந்த தமிழகத்தின் சட்ட ஒழுங்கை, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, சீராக்கினோம். தமிழகத்தில் ஏற்பட்ட, ஓர் அமைதிப் புரட்சியின் விளைவாக, பல்வேறு துறைகளில் தமிழகம், இன்று தன்னிறைவைப் பெற்று வருகின்றது. எனது எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுத்து, செயலாற்றி வரும் காவல் துறையினருக்கு, எனது இதயம் கனிந்த பாராட்டுதல்களை, உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நவீன அறிவியல், மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்தினாலும்; தொடர்ந்து நிகழ்ந்து வரும் அரசியல், பொருளாதார, மற்றும் சமுதாய மாற்றங்களினாலும்; இன்றைய அளவில் மனித சமுதாயம், இதுவரை எந்த கால கட்டத்திலும் எதிர்கொள்ளாத அளவிற்கு, புதிய பிரச்சினைகளையும், சவால்களையும், எதிர்கொள்ள வேண்டி உள்ளது. இத்தகைய சமுதாய மாறுதல்கள் நிகழ்கின்ற போது, முதலில் பாதிப்புகளுக்கு உள்ளாகும் அரசுத் துறை, காவல்துறைதான். பல்வேறு பிரச்சினைகளை, உள்ளடக்கிய ஒரு சமுதாயத்தில், பொது அமைதியும், சட்டம் ஒழுங்கும், காவல் துறை மூலம், நிலை நாட்டப்பட்டால்தான், சமுதாயமும் அதிலே வாழ்கின்ற மக்களும், புதிய மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து, இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள இயலும். ஆகவே, காவல் துறையில் பணியாற்றுவோர், தாங்கள் வாழ்கின்ற சமுதாயத்திற்கு, ஆற்ற வேண்டிய சேவையின் தன்மையை அறிந்து, பொது மக்கள் போற்றுகின்ற வண்ணம், பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான அனைத்து முயற்சிகளையும், நீங்கள் எடுக்க வேண்டும் என்று, உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, சீரிய முறையில் மக்கள் பணியாற்ற, தமிழக காவல் துறையை நவீனமயமாக்கவும்; இந்தியாவிலேயே, ஏன் உலக நாடுகளிலேயே, ஒரு சிறந்த காவல் துறையாக, தமிழக காவல் துறை பரிணமிக்க, நாங்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றோம்.

காவல்துறையினர் மேற்கொள்ள வேண்டிய, ஆபத்தான பணிகளையும், அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய சங்கடமான சூழ்நிலைகளையும், கருத்தில் கொள்ளாமலே, காவல் துறையின் மீது, ஒட்டுமொத்தமாக, பழி போட்டு வந்த சூழ்நிலை, இன்று மறைந்து விட்டது. காவல் துறையினரின் பணி ஆர்வத்தை உயர்த்தவும், அவர்களது நல்வாழ்விற்கு வழி வகுக்கவும், காவலர்களுக்கு அரசாங்கம், ஒரு பாதுகாப்புக் கேடயமாக விளங்குகிறது என்பதையும், எங்கள் செயல்பாடுகள் சந்தேகமற நிருபித்துள்ளன.

காவல் துறையினரின் பொது நலனைக் கருத்தில் கொண்டு, நாங்கள் செயல்படுத்தி வரும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், இன்று இந்தியத் துணைக் கண்டத்திற்கு, முன்னோடியாக, வழிகாட்டியாக விளங்கி வருகின்றன. காவலர்களின் மனச் சோர்வை

நீக்கி, பணி உற்காசம் ஏற்படுத்திடவும்; அவர்களுக்குச் சமூக பாதுகாப்பை அளித்திடவும்; நாங்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, இன்று காவலர்கள் நிம்மதியான மனதுடன், சஞ்சலம் ஏதுமின்றிப் பணியாற்றுகின்ற, நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காவல் துறையின் முழு சேவையும், இன்று பொதுமக்களுக்குக் கிடைக்க, இந்தத் திட்டங்கள் வழி வகுத்துள்ளன என்பதை, பலரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

காவலர்களை வெறும் கருவிகளாக, இயந்திரங்களாக நினைத்து, காவல் துறை இயக்கப்பட்ட நிலை, இன்று அடியோடு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. காவலர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், பணி உயர்வுக்கும், சமூக பாதுகாப்பிற்கும், சமூகத்தில் ஒரு அந்தஸ்த்திற்கும், கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எண்ணில் அடங்கா!

இருப்பினும், அவற்றில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுவது, எனது கடமை என்று கருதுகிறேன்.

காவல் பணியின் தன்மை காரணமாக, உடல்நலம் பாதிக்கப்பட்ட, 93 காவல் துறை அலுவலர்கள், மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு, ஒரே நேரத்தில், 33.5 லட்சம் ரூபாய் நிதி உதவி, என்னால் வழங்கப்பட்டது. இந்திய துணைக் கண்டத்திலே, இது போன்ற ஒரு நிகழ்ச்சி, நிச்சயமாக இதற்கு முன்பு, நடந்திராது என்பது உறுதி. கடமை ஆற்றும் போது, பல்வேறு சூழ்நிலைகளில், உயிர் இழந்த காவலர்களின் குடும்பங்களுக்கு, நடைமுறைப்படி வழங்கப்பட வேண்டிய நிதி உதவிகளோடு, மேலும் ஒரு லட்சம் ரூபாய், "முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து", வழங்கப்பட்டு வருகின்றது. குறைந்த பட்சம், இரண்டரை லட்சம் ரூபாய்க்கான நிதியை, அந்தக் குடும்பங்கள் விரைவில் பெறுகின்ற ஒரு சூழ்நிலை, எனது நேரடி ஆணையின் கீழ், ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமீபத்தில், காவல் துறையினருக்கான, சிறப்பு மருத்துவ சிகிச்சைத் திட்டம் ஒன்று, 50 லட்சம் ரூபாய் மூல நிதியுடன், தமிழக அரசால் துவக்கப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து, பெறப்படுகின்ற வருவாயிலிருந்து, காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு, தனியார் மருத்துவமனைகளில், செலவினம்

அதிகமிக்க, உயர்தர மருத்துவ சிகிச்சையை மேற்கொள்ள, நிதி உதவி வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணியின் தன்மையைக் கருதி, காவல் துறையில் பணியாற்றும், 40 வயதைக் கடந்த காவலர்களுக்கு, கட்டாய மருத்துவப் பரிசோதனையை மேற்கொண்டு, அவர்கள் உடல் நலத்தை, மேலும் பேணிப் பாதுகாப்பதற்கான திட்டத்தின் முதல் கட்ட பணி, என்னால் ஏற்கனவே, சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டபடி, சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

4.8.1995 அன்று பிறப்பிக்கப்பட்ட, ஒரு ஆணையின் மூலமாக, 1700 "Naik" நிலை பதவிகளில் உள்ளவர்களுக்கு, முதல் நிலை காவலர்களுக்குரிய பதவி உயர்வும், ஊதிய விகிதமும் வழங்கப்பட்டுள்ளன. இது போன்று, காவல் துறையினரின் நலம் காக்க, வேறு எந்த அரசும், செய்திராத பல்வேறு பணிகளை, முனைப்புடன் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, செயல்படுத்தி வருகிறது.

1990-91-ஆம் ஆண்டு, காவல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, 236 கோடி ரூபாய் மட்டுமே. அந்த ஒதுக்கீடு, 1995-96-ஆம் ஆண்டு, 420 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. காவல் துறையின் முன்னேற்றத்தில், இந்த அரசு உங்கள் அரசு கொண்டுள்ள, உறுதியையும் ஈடுபாட்டையும், இது தெளிவாக்கும் என்று கருதுகிறேன். முன்பிருந்த ஆட்சியில் கலைக்கப்பட்ட, காவலர் வீட்டு வசதிக் கழகம், மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, அதன்மூலம் ஆண்டொன்றிற்கு, 1,000 வீடுகள் கட்டப்படுகின்றன. சென்னை நகரத்தில், அனைத்து அடிப்படை வசதிகளுடன், 3,000 காவலர் குடியிருப்புகள் கொண்ட, ஒரு காவல் நகரம் Police City-ஐ விரைவில் உருவாக்கிட, ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு, காவல் துறையினருக்குத் தேவைப்படும், ஆயுதங்களைப் பெற்றுத் தருவதிலாகட்டும், தொலைத்தொடர்பு சாதனங்களைப் பெற்றுத் தருவதிலாகட்டும், எங்கள் ஆட்சியைப் போல், வேறு எந்த ஆட்சிக் காலத்திலும், செய்யப்படவில்லை என்பதை, உறுதியாகக் கூற முடியும். Digital Trunk Radio System, மூன்று கோடி ரூபாய் செலவில், அமைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக்குப் பயன்படாத நிலையில் இருந்த, 384 வாகனங்களை, ஒரே நேரத்தில் மாற்றம் செய்து, அவற்றிற்குப்

பதிலாக புதிய வாகனங்கள் வாங்க, ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஒரு துறையில் உள்ள, 384 வாகனங்களைக் கழித்து, புதிய வாகனங்களைப் பெறுவதற்கு, சாதாரணமாக, பல ஆண்டுகள் ஆகும்.

தமிழ் நாட்டில் அமைக்கப்பட்ட "அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்", இன்று சமுதாயத்தில், ஒரு புதிய விழிப் புணர்ச்சியையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கின்றன. இந்த சாதனையை இன்று, இதர மாநில அரசுகள் பாராட்டுவதோடு, தங்களது மாநிலத்திலும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, அமைத்து வருகின்றன. ஏன், சில அண்டை நாடுகளும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, தொடங்கி வைத்துள்ளன என்றால், அது நமது முயற்சிக்குக் கிடைத்த, மாபெரும் பாராட்டு என்றே நான் கருதுகிறேன்.

57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், தமிழகத்தில் செயல்படும் நல்லதொரு சூழ்நிலையை எண்ணி, நான் மன மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவில் முதன் முறையாக, Victims Assistance Fund பாதிப்புக்குள்ளானோர் உதவி நிதி ஒன்று, ஒரு கோடி ரூபாய் செலவில், தமிழக அரசால் சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கொலை, கற்பழிப்பு, போன்ற பெரும் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இத்திட்டத்தின் மூலம், மறுவாழ்வு அளிக்கவும், நிதி உதவி வழங்கவும், முனைந்துள்ள ஒரே அரசு, தமிழக அரசுதான் என்பதை, பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகர் காவல் பிரிவில் பணியாற்றும், 1,969 பணியாளர்களில், 773 பேர் மட்டுமே, அரசுக் குடியிருப்புகளில் வசித்து வருகிறார்கள் என்பதையும்; மற்றவர்கள் அரசு வழங்குகின்ற, வீட்டு வாடகைப் படியைப் பெற்றுக்கொண்டு, தனியார் வீடுகளிலும், குடியிருப்புகளிலும், அதிக வாடகை கொடுத்து, தங்கி வருகிறார்கள் என்பதையும், நான் அறிவேன். கோவை மாநகர் பகுதிகளில், தனியார் வீடுகளின் வாடகை அதிகரித்து வருவதால், காவலர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தையும், நன்கு புரிந்துக் கொண்டுள்ளதால், அவர்களது குறைகளை நீக்க, கோவை மாவட்டத்தில் விரைவில், கூடுதலாகக் காவலர் குடியிருப்புகள்,

கட்டித் தரப்படும் என்பதையும்; கோவை மாநகரில் படிப்படியாக, எல்லாக் காவல் துறைப் பணியாளர்களுக்கும், குடியிருப்புகள், கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் செலவில், கட்டித் தரப்படும் என்பதையும்; மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகரத்தின், பல்முனை வளர்ச்சியின் விளைவாக, இந்த மாநகரத்தில், புழக்கத்தில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை, அதிகரித்துள்ளது. வாகனங்களின் போக்குவரத்தை முறைப்படுத்தவும், போக்குவரத்தைச் சீர்படுத்தவும், குற்றத் தடுப்பு பணியை, சீரிய முறையில் மேற்கொள்ளவும்; கோவை மாநகரத்தில், சுற்று காவல் பணியை மேற்கொள்ள, கூடுதலாக வாகனங்கள், விரைவில் வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையினர் மேற்கொள்ளும், கடுமையான பணிகளின் போது, காவல் துறையினர் பல சமயங்களில், தங்கள் இன்னுயிரையும், தியாகம் செய்கின்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. மக்கள் நலம் காக்க, தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்த, நல்லவர்களின் தியாகம், என்றென்றைக்கும் சரித்திரமாக நிலைத்து நிற்க, இனி நினைவிடங்கள், அதாவது Memorial-கள் கட்டுவது, என்ற கொள்கை முடிவை எடுத்துள்ளோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென, தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்படும். இந்தக் கொள்கை முடிவின்படி, முதல் கட்டமாக, மறைந்த பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடன், வீர மரணம் அடைந்த 9 காவலர்களின் நினைவாக, ஸ்ரீபெரும்புதூரில், ஒரு லட்சம் ரூபாய் செலவில், ஒரு நினைவிடம் Memorial கட்டப்படும் என்பதையும்; 9.4.1993 அன்று, சந்தனக் கடத்தல் வீரப்பன் வைத்த கண்ணிவெடி விபத்தில், வீரமரணம் அடைந்த 5 காவலர்கள், மற்றும் 2 வனக் காவலர்களின் தியாகத்தை, நினைவு கூரும் வண்ணம், 50,000 ரூபாய் செலவில், ஒரு நினைவிடம் கட்டப்படும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பொது நன்மைக்காக, தங்களது விலைமதிக்க இயலாத உயிரை அர்ப்பணித்தவர்களுக்கு, தமிழக மக்கள் என்றென்றும், நன்றி பாராட்டுவார்கள் என்பதை, இந்த நினைவிடங்கள், எதிர்கால சந்ததியினருக்கு எடுத்து காட்டும், என்று உறுதியாக நம்புகிறேன்.

1990-ஆம் ஆண்டு, காவல் துறையில், பணியிலிருந்த பணியாளர்களின் எண்ணிக்கையை, 1995 ஆம் ஆண்டில் பணிபுரியும், பணியாளர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டு நோக்கும் போது, எந்த அளவிற்கு, இன்று காவல் துறை வளர்ந்துள்ளது, என்பது புலனாகும்.

1990-ஆம் ஆண்டு, 73 காவல் துறை கண்காணிப்பாளர்கள் மட்டுமே, செயல்பட்டு வந்தனர். அந்த எண்ணிக்கை இன்று, 94 ஆக உயர்ந்துள்ளது.

அதே போல், 1990-ஆம் ஆண்டு, 44 என்ற நிலையில் இருந்த, கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை, இன்று 72 ஆக உயர்ந்துள்ளது. காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை, 357லிருந்து 519 ஆகவும்; காவல்துறை ஆய்வாளர்களின் எண்ணிக்கை, 1,441 லிருந்து 1,855 ஆகவும்; உதவி ஆய்வாளர்களின் எண்ணிக்கை, 4,587 லிருந்து, 5,139 ஆகவும்; தலைமைக் காவலர்களின் எண்ணிக்கை, 6,750 லிருந்து, 9,772 ஆகவும், முதல் நிலை காவலர்களின் எண்ணிக்கை, 5,878 லிருந்து, 23,411 ஆகவும் உயர்ந்துள்ளன, என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது; இந்த நான்கு ஆண்டுகளில், காவல்துறை அடைந்துள்ள பரிணாம வளர்ச்சியின் பரிமாணங்கள், எளிதில் புரியும் என்று நம்புகிறேன்.

மிகச் சிறிய வயதிலேயே, மாற்றாரின் உயிரைக் காப்பாற்றுகின்ற, வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு, அரிய சாதனைகளைப் புரிந்தவர்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும் "அண்ணா விருது", தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. சில நேரங்களில் அத்தகையவர்கள், அடுத்தவர்களின் உயிரைக் காப்பாற்றுகின்ற முயற்சிகளில், நிரந்தரமாக ஊனமாகி விடுகின்ற சூழ்நிலைகள் கூட, ஏற்படுவது உண்டு. அவர்களுக்கு வெறும் பதக்கங்களும், நிதி உதவியும் கொடுப்பதோடு மட்டும் நின்று விடாமல், அவர்களின் எதிர்காலத்திற்குப் பயன் உண்டாகும் வண்ணம், மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, விவசாயக் கல்வி, போன்ற எல்லா தொழில் நுட்பக் கல்விகளைப் பயில, வருகின்ற கல்வி ஆண்டு முதல், தனியே இட ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை, இந்த நல்ல நேரத்தில் அறிவிப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வீர தீரச் செயல்களுக்குப் பெயர் பெற்ற, காவல் துறையின் திருவிழாவான, இந்த இனிய நாளில், அண்ணா விருது பெற்றவர்களுக்கு, இந்தப் புதிய சலுகையை நான் அறிவிப்பது, பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தமிழ் நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால், கோயம்புத்தூர் கணபதியில் கட்டி வழங்கப்பட்ட குடியிருப்புகளை வாங்கி, அதில் வசித்து வரும் ஓய்வு பெற்ற காவலர்கள், ஒரு கோரிக்கையை இன்று என்னிடம் கொடுத்துள்ளார்கள். 1986-ஆம் ஆண்டு, கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வீட்டின் மதிப்பை, தாங்கள் கட்டி முடித்த பின்பு, கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் கழித்து, பத்திரப் பதிவு செய்யும் போது, இன்றைய மார்க்கெட் நிலவரப்படி, பத்திர பதிவுக் கட்டணம் **Stamp duty** செலுத்த, கட்டாயப் படுத்தப்படுவதாகவும், எனவே, பழைய மதிப்பின் அடிப்படையில், பத்திரப் பதிவு செய்ய வேண்டும் என்றும், கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

ஓய்வு பெற்ற காவலர்களின் இந்தக் கோரிக்கையை, முழுமையாக ஏற்றுக் கொண்டு, கணபதி கிராமத்தில், காவலர் வீட்டு வசதி கழகத்தால் கட்டப்பட்ட, 432 வீடுகளுக்கு, 1986 ஆம் ஆண்டு நிர்ணயித்த, வீட்டு மதிப்புப் படி, ஏற்கனவே பணம் செலுத்தியவர்கள், கூடுதலாகப் பத்திரப் பதிவு கட்டணம் எதுவும், கட்ட வேண்டியதில்லை என்பதை அறிவிப்பதில், மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்த வீட்டிற்கான பழைய மதிப்பையே, பத்திரப் பதிவின் போது, கணக்கில் கொள்ள வேண்டும் என்று, விரைவில் ஆணை வழங்கப்படும். இதனால் ஒவ்வொரு குடும்பத்திற்கும், 20,000 ரூபாய் வரை கட்ட வேண்டிய, கூடுதல் பத்திரப் பதிவு கட்டணத்திலிருந்து, விலக்கு கிடைக்கும். ஓய்வு பெற்ற பின்பு கூட, காவலர்களுக்கு உதவிக்கரம் நீட்ட, எங்கள் அரசு என்றைக்கும் தயாராக உள்ளது என்பதை, இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டும் என்று நம்புகிறேன்.

காவல் துறையிடம், அதிகமான சேவையையும், நல்ல பணியையும், பொதுமக்கள் எதிர்பார்ப்பதால்தான், தாங்கள் எதிர்பார்த்த சேவை, கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம், அவர்கள் மனதில் எழுகின்றது.

மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கும், நம்பிக்கைக்கும் ஈடுகொடுத்து, நீங்கள் குற்றக் கண்டு பிடிப்பு பணியிலும்; குற்றத் தடுப்புப் பணியிலும்; பொதுமக்களின் உடைமைகளையும், உரிமைகளையும், பாதுகாக்கும் பணியிலும்; உங்களுக்கே உரித்தான, ஒரு புதிய உத்வேகத்துடன், செயல்பட வேண்டும் என்று, இந்த நல்ல நேரத்தில், அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வாய்ப்பும், வசதியும் அற்ற, ஏழை எளிய மக்களுக்கு அது கிராமங்கள் ஆனாலும் சரி, நகரங்கள் ஆனாலும் சரி தாங்கள் எதிர்கொள்ளுகின்ற பல்வேறு சட்டம் ஒழுங்கு, உரிமை மீறல், உடைமை பறிப்பு, போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, நம்பிக்கையுடன் அவர்கள் நாடுகின்ற ஒரே புகலிடம், காவல் நிலையம்தான். சட்டத்தின் கீழ், தங்களுக்குப் பாதுகாப்பும், நிவாரணமும் வேண்டி, இந்தச் சமுதாயத்தின் அடிமட்டத்து மக்கள் ஏழை, எளிய மக்கள், ஆதரவற்றோர், மகளிர், முதியோர் ஆகியோர், காவல் துறையை அனுதினமும் நாடுகிறார்கள். தங்களுடைய குறைகளை முறையிட்டு, தீர்வு காண, காவலர்களை நாடி வருகின்ற, எண்ணற்ற ஏழை மக்களிடம், உற்றதொரு நண்பராக, பாதுகாவலராக, காவல் துறையினர் நடந்துகொள்ள வேண்டும். அதன் மூலம், தற்போது காவல் துறை ஆற்றி வரும் சேவை, மேலும் பன்மடங்கு சிறப்படையும் என்பது உறுதி.

காவல் துறையைப் போலவே, சிறைத் துறையினரும், தீ அணைப்புத் துறையினரும், பல்வேறு கடினமான சூழ்நிலைகளில் செயலாற்றி வருகின்றார்கள். இத்துறைகளைச் சேர்ந்தவர்கள், தங்கள் கடமைகளை, சீரிய முறையில் செயலாற்றும் போது, இயல்பாகவே, பொது மக்களின் மனமார்ந்த பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக் களையும், எளிதில் பெற்று விடுவார்கள். இந்த உண்மையை மனதில் நிறுத்தி, இத்துறையைச் சேர்ந்தவர்கள் செயலாற்ற வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

வண்ணமயமான இந்த விழாவினை, எல்லாச் சிறப்புகளுடன், மிகவும் சீரிய முறையிலே அமைத்து, இங்கே பெருந்திரளாகக் குழுமியுள்ள பொது மக்கள், அனைவரின் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்த, காவல் துறை இயக்குநர், திரு வால்டர் தேவாரம் அவர்களுக்கும்; அவர் உடனிருந்து பணியாற்றிய, அனைத்து மட்ட காவல் துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும், என்னுடைய

மனமார்ந்த பாராட்டுக்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கம், வழங்குகின்ற இந்த விழா, தமிழகக் காவல் துறையின் அனைத்துப் பிரிவினரும், ஒன்று சேர்ந்து எடுக்கிற, ஒரு இனிய திருவிழாவாக உருவாக்கிக் காட்டியதற்காக, காவல் துறை இயக்குநர் திரு.வால்டர் தேவாரம் அவர்களுக்கு, தனிப்பட்ட முறையில், எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகெங்கும் பெண்களின் சம உரிமைத் தத்துவம், புதிய பரிமாணத்தைப் பெற்று வருகின்ற சூழ்நிலையில், தமிழகக் காவல் துறையின், மிக முக்கியமான அங்கமாக விளங்கும், பெண் காவலர்கள் பிரிவினைச் சேர்ந்த, பெண் காவலர்களும், விளையாட்டுக்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு, "நாங்கள் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல" என்பதை, இங்கே நிருபித்துக் காட்ட உள்ளார்கள். வீர விளையாட்டுக்களிலும், மற்ற நிகழ்ச்சிகளிலும், பங்கு கொள்ள உள்ள அனைவருக்கும், மீண்டும் எனது உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள். வண்ணமிகு இந்த விழாவிற்குப் பெருந்திரளாக வந்து, சிறப்புச் சேர்த்த, எனது அன்பிற்குரிய தமிழகத்துப் பெருமக்கள் அனைவரும், எல்லா நலனும், வளமும் பெற்று, வாழ்வாங்கு வாழ்க என்று நெஞ்சார வாழ்த்தி, விடை பெறுகிறேன்.

***(8.9.1995 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)***

# போக்குவரத்துத்துறையில் விழிப்புணர்ச்சி பெற்ற மாநிலம் தமிழகம்

தொன்மையான வரலாற்றையும், பல்வேறு சிறப்பியல்புகளையும் தன்னகத்தே கொண்ட, சென்னை மாநகரின் எழிலுக்கு, மேலும் எழில் சேர்க்க, 'எழில்மிகு சென்னை 2000' என்கின்ற சீரிய திட்டத்தை 1,250 கோடி ரூபாய் செலவில், எங்கள் அரசு, முனைப்புடன் செயல்படுத்தி வருகின்ற இந்த வேளையில்; சென்னை மாநகரின் சிறப்பிற்கு, அணி சேர்க்கும் வகையில், இந்தியத் துணைக் கண்டத்தின், முதல் துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தினை, இன்று தமிழக மக்களுக்கு அர்ப்பணித்து வைப்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகிறேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்த போது, 7 லட்சம் மக்கள் மட்டுமே, வசித்த இந்த நகரம், அரை நூற்றாண்டு கால கட்டத்தில், 50 லட்சம் மக்கள் வசிக்கும், ஒரு மாபெரும் மாநகரமாக விரிவடைந்துள்ளது. பெருகி வரும் மக்கள் தொகை, போக்குவரத்துத் தேவை, சுற்றுப்புற சூழல் மேம்பாடு, சுகாதாரமான வாழ்க்கை போன்ற பிரச்சினைகள், தலை தூக்கத் தொடங்கியதால்தான், அவற்றைச் சமாளிக்க, சென்னை நகருக்கு மேலும் அழகு சேர்க்க, "எழில்மிகு சென்னை 2000" என்ற திட்டத்தை, எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்றது. கடந்த நான்காண்டுகளாக சென்னை நகரம், ஒரு புதிய பொலிவைப் பெற்று வருவதை, ஈடு செய்யும் வண்ணம், சென்னை கடற்கரை ரயில் நிலையத்திலிருந்து, Luz முனை வரையில், 8.55 கிலோ மீட்டர் தூரத்திற்கு, துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் முதல் கட்டம், இன்று தொடங்கி வைக்கப்பட்டிருப்பது, ஏற்புடையதொன்றாகும்.

1983-84-ஆம் ஆண்டில், மத்திய திட்டக் குழுவின் அங்கீகாரமும், ரயில்வே வாரியத்தின் ஒப்புதலும், எப்போது இத்திட்டத்திற்குக் கிடைத்ததோ, அன்றிலிருந்து தமிழக அரசு, இத்திட்டச் செயலாக்கத்தின் ஒருங்கிணைப்பிற்கு, எல்லா உதவிகளையும், ஆர்வத்துடன் வழங்கி வந்துள்ளது என்பதை, சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான நிலத்தை, இலவசமாக வழங்க, மாநில அரசு தொடக்கத்திலேயே, தனது

ஒப்புதலை அளித்திருந்தது. அதன்படி முதல்கட்ட பணிக்கு, அரசு நிலமும், தனியார் நிலமும் சேர்த்து, 20.22 Hectare நிலம், தேவைப்படுவதாக கணக்கெடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் மதிப்புள்ள, இந்த நிலப்பரப்பில், இதுவரை 19.68 Hectare நிலம், முழுமையாக இத்திட்டத்திற்கு என, வழங்கப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று 4.68 கிலோ மீட்டர் நீளத்திற்கு, சேப்பாக்கம் ரயில் நிலையம் வரை, துரித ரயில் போக்குவரத்து, தொடங்கி வைக்கப்படும் நிகழ்ச்சி, நிச்சயமாக ஒரு சரித்திரச் சிறப்பு மிக்க வைபவம், என்பதில் சந்தேகம் இல்லை.

பல்முனை விரிவாக்கத்தினால், சென்னை போன்ற பெருநகரங்களில், நகர்ப்புற நிலங்களின் மதிப்பு, நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில், இது போன்ற திட்டங்களைச் செயல்படுத்த, நிலம் கிடைப்பது, அரிதாகி வருகின்றது. எனவேதான், இந்தத் துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தைச் செயல்படுத்த, தேவையான அரசு நிலத்தை அளித்ததோடு; தனியார் நிலத்திற்கும், நஷ்ட ஈடு வழங்கி, கையகப்படுத்தி, இலவசமாகத் தமிழக அரசு அளித்துள்ளது.

அரசு நிலங்களில் குடியிருந்த மக்களுக்கு, மாற்றுக் குடியிருப்புகளுக்கு ஏற்பாடு செய்யும், சமுதாயப் பிரச்சினைகள் நிறைந்த, மாபெரும் பொறுப்பையும், தமிழக அரசு, மனமுவந்து ஏற்றுக் கொண்டதைச் சுட்டிக் காட்ட, நான் கடமைப்பட்டுள்ளேன்.

Madras Metropolitan Development Authority அதாவது, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், இத்திட்டத்தைச் செயல்படுத்தும் ஒருங்கிணைப்புப் பணிகளை, இதுவரை மேற்கொண்டு வந்துள்ளது. துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் கீழ், ரயில்வே நிலையங்களை வடிவமைப்பதற்கு, கட்டடக் கலை நிபுணர்கள், மற்றும் ஆலோசகர்களின் சேவையையும், இந்தக் குழுமம், ரயில்வே நிர்வாகத்திற்கு வழங்கியதையும், நினைவுகூர விரும்புகிறேன்.

ஆகவே என்னால் தான் இந்தத் திட்டம் நிறைவேறியது என்று ஒருவர் கூறுவது ஏற்புடையது அல்ல. ஒருவருடைய சொந்த முயற்சியினால் இந்தத் திட்டம் நிறைவேறவில்லை. அப்படி உரிமை கொண்டாடுவது சற்றும் ஏற்புடையதாகாது. தமிழக அரசு வழங்கிய

ஒத்துழைப்பினால்தான் இந்தத் திட்டம் இன்று நிறைவேறியுள்ளது என்பதை நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி இந்தத் திட்டத்திற்குத் தேவை என்று கணக்கிடப்பட்ட 20.22 Hectare அரசு நிலத்தில் 50 கோடி ருபாய் மதிப்புள்ள 19.68 Hectare நிலம் ரயில்வே துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே மீதமிருப்பது 0.54 Hectare நிலம் தான். 0.54 Hectare என்பது மிகச் சிறிய அளவிளான நிலப்பரப்பு. அதற்குத் தேவையான நிதியும் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே நிலத்தினால் இந்தத் திட்டத்திற்கு எந்த விதத்திலும் கால தாமதம் ஏற்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். At no point of time the progress of project was affected for not handing over the land in time.

மேலும் இந்த விழாவிற்கு வரலாமா, வேண்டாமா, வந்திருக்க வேண்டுமா என்று சிலர் நினைக்கிறார்கள். சிலர் இந்த விழாவிற்கு வரவேண்டாம் என்று முடிவு செய்து விட்டார்கள். ஆனால் யார் வந்தாலும், வராவிட்டாலும் இத்திட்டம் நின்று விடப் போவதில்லை. இந்தத் திட்டம் மக்களுக்காக, பொதுமக்களின் உபயோகத்திற்கு உருவாக்கப்பட்ட ஒரு மாபெரும் திட்டம். இம்மாபெரும் திட்டம் நிறைவேற்றப்பட்டு தொடங்கி வைக்கப்படும்போது, அதில் மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்டவர்கள் நிச்சயமாகக் கலந்து கொள்ள வேண்டும். இத்தகைய விழாக்களில் கலந்து கொள்வதில் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகள் பாராட்டுவது என்பது தேசிய உணர்வு அற்றவர்களுக்குத்தான் பொருந்தும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது தேசிய உணர்வு இருந்தால், உண்மையான தேசியவாதியாக இருந்தால், மிகப் பெரிய செலவில் ஒரு மகத்தான திட்டம், அதிலும் இந்தியாவிற்கே முன்னோடியான ஒரு திட்டம் முதல் முறையாக இந்தியாவில் நிறைவேற்றப்படும் போது அவசியம் இதில் பொது நன்மையில் அக்கறை உள்ளவர்கள் கலந்து கொள்ள வேண்டும். அப்படி கலந்து கொள்ளவில்லை என்றால், உண்மையான அக்கறை மக்கள் மீது இல்லை என்றுதான் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தத் துரித ரயில் போக்குவரத்தை, உபயோகப்படுத்தும் மக்கள், இந்த ரயில் நிலையங்களிலிருந்து, பேருந்துகளுக்கு மாறி, மாநகருக்குள் செல்வதற்கு, தேவையான போக்குவரத்து வசதியையும், எங்கள் அரசு, ஒரு ஒருங்கிணைப்புப் பணியாகத் திட்டமிட்டு, தனது செலவில் நிறைவேற்றி வருகின்றது, என்பதைத்

தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமன்றி, இந்த ரயில்வே நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளின், சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுத் திட்டங்களையும், எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்றது, என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரப் போக்குவரத்துத் தேவையை, பூர்த்தி செய்யும் இந்தத் திட்டத்தை, இன்று எனதருமைத் தமிழக மக்களுக்கு, அர்ப்பணித்து வைப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் துரித ரயில், போக்குவரத்துத் திட்டத்தின் பயன்கள், சென்னை மாநகர மக்களுக்கு, முழுமையாக சென்றடைய வேண்டும் என்றால்; இத்திட்டத்தை, Luz முனையிலிருந்து தரமணி வரை, மேலும் 8.5 கிலோ மீட்டர் நீளத்திற்கும், விரிவாக்கம் செய்தாக வேண்டும். எனவே இந்த விரிவாக்கத்தை, விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று, மத்திய அரசையும், ரயில்வே நிர்வாகத்தையும் கேட்டுக் கொள்கிறேன்.

உலகிலேயே மிகப் பெரிய ரயில்வே நிறுவனமான, இந்திய ரயில்வே துறைக்குப் பொறுப்பேற்று, சீரிய முறையில் செயலாற்றி வரும், மாண்புமிகு மத்திய ரயில்வே இணை அமைச்சர், திரு.Suresh Kalmadi அவர்கள், தமிழக மக்கள் சார்பாக, நான் முன் வைத்த கோரிக்கையை ஏற்று, இத்திட்டத்தின் அடுத்தடுத்த கட்டங்களை, மிக விரைவில் செயல்படுத்துவார் என்று நம்புகிறேன்.

**As Mr.Suresh Kalmadi himself said during his address we were colleagues in the Rajya Sabha together and I am indeed very happy that Mr.Suresh Kalmadi has assumed charge as Minister of State for Railways. I congratulate him, felicitate him and wish him a very successful career and I express the hope that he will accede the requests I made on behalf of the people of Tamil Nadu.**

அவ்வாறு, இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட விரிவாக்கம், மேற்கொள்ளப்பட்டு, வில்லிவாக்கம் வரை இத்திட்டத்தை விரிவுபடுத்த, தேவையான நிலத்தை, தமிழக அரசு இலவசமாக வழங்கும் என்பதையும்; அதற்கான ஒருங்கிணைப்புப் பணிகளை, தமிழக அரசு, முனைப்புடன் மேற்கொள்ளும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமன்றி, இந்த விரிவாக்கத்தைக் கருத்தில் கொண்டு, "Rail India Technical and Economic Services", அதாவது, RITES என்ற நிறுவனத்தின் மூலம்,

பூர்வாங்க ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு; துரித ரயில் பாதைக்கான நிலத்தை, அடையாளம் கண்டு; அவற்றை இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து, சென்னை பெருநகரத்தின் Master Planகள், தயார் செய்யப்பட்டுள்ளன என்பதையும், இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவது, ஏற்புடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். இத்திட்டத்திற்குத் தேவையான, அரசு நிலம் மட்டுமின்றி, தனியார் நிலத்தையும் கையகப்படுத்தி, ரயில்வே துறைக்கு வழங்க, எங்கள் அரசு தயாராக உள்ளது. இத்திட்டப் பகுதிகளில், அரசு நிலங்களில் வாழும் மக்களுக்கு, மாற்றிடம் வழங்கிடவும்; இடப் பெயர்ச்சியால் எழும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும்; திட்டம் தயாராக உள்ளது, என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதன் முதலாக, மாநகரங்களில் உயர்வான பகுதிகளில், செல்லும்படி அமைக்கப்பட்ட, இந்தத் துரித ரயில் திட்டம், சென்னையின் எழிலுக்கு, மேலும் எழிலைச் சேர்க்கும் என்பதிலும்; சென்னை மாநகரத்தின், மிக முக்கிய Land Mark-களில், ஒன்றாகத் திகழும் என்பதிலும்; ஐயமில்லை. இத்திட்டத்தைச் செயல்படுத்த, தங்களது உழைப்பை நல்கிய, தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், பொறியாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், தொழிலாள பெருமக்களுக்கும், எனது மனமார்ந்த பாராட்டுக்களை, உரித்தாக்கிக் கொள்கிறேன்.

உயர்வான பகுதிகளில், ரயில் நிலையங்கள் அமைக்கப்படும் போது, அப்பகுதியின் கீழ்ப்பகுதிகள், ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாகும் அபாயம் உண்டு. எனவே, இந்தப் பகுதிகளின், சுற்றுப்புற சூழல் கெடாமல், ஒரு அழகுணர்வுடன், பாதுகாத்து, பராமரிக்கும் திட்டத்தை, Madras Metropolitan Development Authority - அதாவது, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், வகுத்துச் செயல்படுத்த வேண்டும் என்று, ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

I wish to point out to the Hon'ble Minister of State for Railways that the Tamil Nadu Government has taken all the necessary steps to clear the remaining land that is necessary for the completion of this project for the final expansion. And the Hon'ble Minister of State for Railways has expressed concern about the encroachments in the lower areas of this project. We have drawn up a Master Plan for clearing the encroachments also and orders have been issued.

போக்குவரத்துத் துறையில், ஒரு விழிப்புணர்ச்சி பெற்ற மாநிலம், தமிழகம் என்பதையும்; மற்ற மாநிலங்களை விட, தமிழகத்தில் உள்ள பேருந்துகளும், சாலை வசதிகளும், சிறப்பாக அமைந்துள்ளதையும்; எவரும் மறுக்க முடியாது. 1991-ஆம் ஆண்டு, சென்னை மாநகரத்தில் 2,296 பேருந்துகளும்; மாநிலத்தின் இதரப் பகுதிகளில் 11,190 பேருந்துகளும்; இயங்கிக் கொண்டு இருந்தன. ஆனால், இன்றைய அளவில், சென்னை மாநகரத்தில் மட்டும் 2,580 பேருந்துகளும்; மாநிலத்தின் இதர பகுதிகளில் 13,278 பேருந்துகளும்; ஆக மொத்தம் 15,858 பேருந்துகள் இயங்கி வருகின்றன. போக்குவரத்து மேம்பாட்டில், தமிழக அரசு மேற்கொண்டுள்ள ஈடுபாட்டை, இந்தப் புள்ளி விவரங்கள் விளக்கும், என்று நம்புகிறேன்.

சாலைப் போக்குவரத்தைப் பொருத்தவரையில், டீசல் விலை உயர்வு, பொருட்களின் விலை உயர்வு, ஊழியர்களின் சம்பள உயர்வு, லாபம் ஈட்டாத பகுதிகளில், பேருந்துகள் இயக்கம் என்று, பல்வேறு பிரச்சனைகளை, எதிர் கொள்ள வேண்டி இருந்த போதிலும்; பேருந்துகளை ஏழை எளிய மக்கள், மிக அதிகமாக உபயோகப்படுத்துவதை, கருத்தில் கொண்டு, அவர்கள் பாதிக்கப்படாத வகையில், கட்டண உயர்வைத் தவிர்த்து வருகின்றோம். எனவே, இந்தப் புதிய துரித ரயில் போக்குவரத்தினை, ஏழை எளிய மக்கள், கூடுதலாகப் பயன்படுத்தும் சூழ்நிலைகள், இருப்பதைக் கருத்தில் கொண்டு, குறைந்த கட்டணத்தில் இயக்க வேண்டும் என்று, தென்னிந்திய ரயில்வே நிர்வாகத்தை, கேட்டுக் கொள்கிறேன். பொதுவாகவே, ரயில் கட்டண உயர்வை, தவிர்க்க வேண்டும் என்று, மத்திய அரசையும், ரயில்வே நிர்வாகத்தையும், கேட்டுக் கொள்கிறேன்.

I would like to point out to the Hon'ble Minister of State for Railways that though we have faced many constraints in the operation of our Public transport system due to frequent hike in the price rise of diesel, rise in salaries and several other factors, we have not raised the rates of bus fare, so that the common man can make full use of the transport system. In the same way, I would like to point out that this Mass Rapid Transit System will be used by the common man. Therefore, I request the Railway Minister to keep the rates low. And generally I would like to make a general request to the Railway Minister to see that all passenger train fares may be reduced.

சென்னை மாநகர் வாழ் மக்களின், எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, இந்தத் துரித ரயில் போக்குவரத்து, சீரிய முறையில் செயலாற்றும் என்ற, எனது நம்பிக்கையை வெளிப்படுத்தி; விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொண்டு விடை பெறுகிறேன்.

***(16.11.1995 - அன்று துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை)***

# மனவளம் நிறைந்த மக்களிடம் கலைவளம் நிறைந்து காணப்படும்

முத்தமிழ்க் கலைகளையும், அவற்றை முனைப்புடன் வளர்த்த, முதன்மைக் கலை வித்தகர்களையும், பாராட்டிச் சிறப்பிக்கும் வண்ணம், ஆண்டு தோறும் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்தும், "கலைமாமணி விருது" வழங்கும் விழாவில் பங்கு கொண்டு, உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

மன வளம் நிறைந்த மக்கள், எங்கே வாழ்கிறார்களோ; அங்கே தான் கலை வளம், மிகுந்து காணப்படும் என்பது, சரித்திரம் காட்டும் உண்மை ஆகும். தமிழகம், என்றும், அருங்கலைகளின் இருப்பிடமாக இருந்து வந்துள்ளது. கலைகளை வளர்ப்பதிலும், கலை வித்தகர்களை ஊக்குவிப்பதிலும், தமிழ் நாட்டிற்கு என்றும், ஒரு தனி இடம் உண்டு! அத்தகைய மாபெரும் கலை உணர்வுக்குச், சொந்தக்காரர்கள் நாம் என்பதையும்; நமது முன்னோர்கள், கலைகளோடு இயைந்த வாழ்க்கையை, நடத்தி வந்தார்கள் என்பதையும்; எண்ணிப் பார்க்கும் போது, மனம் மகிழ்ச்சி அடைகிறது.

கவிதை, பாட்டு, காவியம், கதை, நுண் கலைகள், ஓவியம், சிற்பம் என்று, கலையின் பல்வேறு வெளிப்பாடுகளை, தங்கள் வாழ்வின் ஒரு அங்கமாகவே கொண்டு, தமிழக மக்கள் உயரியதோர் வாழ்க்கையை, வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதைப், பழந்தமிழ் இலக்கியங்கள், பாங்குற எடுத்துக் காட்டுகின்றன. கலையையே கடவுளாகக் கண்டவர்கள், நம் முன்னோர்கள். காதலாகிக் கசிந்து உருகி, கண்ணீர் மல்கிப் பாடி, இறைவனையே இசை வடிவமாகக் கண்டவர்கள், நம் மூதாதையர்கள்.

பன்னெடுங்காலமாக, நமது முன்னோர்களால் போற்றப்படும், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் மேன்மையை மென்மேலும் கட்டிக் காக்கும் வகையில்; தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், செயல்பட்டு வருகிறது. இந்த மன்றம், பழம் பெரும் கலைகளைப் பாதுகாக்கும், ஒரு பண்பாட்டு மையமாகவும்; கலை வித்தகர்களின் வாழ்வில், ஒளியை ஏற்றி வைக்கும், ஒரு தூண்டுகோலாகவும்; விளங்கி வருகிறது.

உலகத்தின் மிகத் தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்று - தமிழ் மொழி ஆகும். லத்தீன் மொழியை, "சட்ட மொழி" என்றும்; கிரேக்க மொழியை, "இசை மொழி" என்றும்; ஜெர்மன் மொழியை, "தத்துவ மொழி" என்றும்; ஆங்கில மொழியை, "வணிக மொழி" என்றும்; மொழி வல்லுநர்கள் வகைப்படுத்தி, புகழ்வதைப் போல, தமிழ் மொழியை "இலக்கிய மொழி" என்று, பாராட்டி மகிழ்கின்றனர்.

கலை வளர்க்கும் முயற்சியில் இதுவரை, 884 கலைஞர்களுக்கு, கலைமாமணி விருதுகள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம், வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் கலைஞர்களுக்கு மட்டுமே, வழங்கப்பட்டு வந்த இந்த விருது, தமிழகத்தில் வாழும், மற்ற மாநிலங்களைச் சேர்ந்த, சாதனை புரியும் கலைஞர்களுக்கும், வழங்குகின்ற முறையைக் கொண்டு வந்து, கலைக்கு எல்லையில்லை என்பதை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு நிரூபித்துள்ளது.

இதுவரை 228 கலை மேதைகளின் திருவுருவப் படங்கள், திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதை அறியும் போது, எனது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

நலிவுற்ற கலைஞர்களுக்கு, தமிழக அரசால் வழங்கப்பட்டு வந்த, மாதாந்திர ஓய்வூதியத் தொகையை, 250 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக நாங்கள் உயர்த்தினோம். மேலும் ஆண்டொன்றுக்கு, 135 கலை வித்தகர்கள் மட்டுமே, ஓய்வூதியம் பெற்று வந்த நிலையை மாற்றி; இன்று ஆண்டொன்றுக்கு, 300 நலிந்த கலைஞர்கள், ஓய்வூதியத்தைப் பெறுகின்ற வகையில், பயனாளிகளின் எண்ணிக்கையை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, உயர்த்தியுள்ளது. நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, கடந்த 20 ஆண்டுகளில், 2,800 நலிந்த கலைஞர்கள் மட்டுமே, ஓய்வூதியம் பெற்றுப் பயனடைந்துள்ளனர். ஆனால், 1991 ஆம் ஆண்டு தொடங்கி, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் மட்டும், மொத்தம் 1,500 நலிந்த கலைஞர்கள், ஓய்வூதியம் பெற்று பயனடைந்துள்ளார்கள் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அசுர வேகத்தில், மாறுதல்களைக் கண்டு வருகின்ற விஞ்ஞான உலகில், பல அரிய கலைகள், பாதுகாக்கப்படவில்லை என்றால், முழுவதுமாக மறைந்து விடும் அபாயம் இருந்து

வருகின்றது. குறிப்பாக, சில அபூர்வமான கிராமியக் கலை வடிவங்கள், இத்தகைய அபாயத்தை, எப்போதும் எதிர்நோக்கி உள்ளதால்; அத்தகைய கலைகளை, நாம் பேணிப் பராமரிப்பதோடு; அந்தக் கலை வடிவங்களை, எதிர்காலத்தின் தேவைக்காக பாதுகாத்து; நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இயல் இசை நாடக மன்றத்தை, நான் கேட்டுக் கொண்டதன் பேரில்; அந்தக் கலை வடிவங்களை, ஆவணங்களாக்கி, பாதுகாக்கும் பணி, தற்போது நடைபெற்று வருகின்றது. எதிர்கால கலை வளர்ச்சிக்கு உதவும், இந்த சீரியப் பணியை, இயல் இசை நாடக மன்றம், ஒரு கலை வேள்வியாக மேற்கொள்ள வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை போன்ற பெரு நகரங்களில் மட்டுமே, கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க முடியும், என்றிருந்த நிலையை, எங்கள் அரசு மாற்றி அமைத்துள்ளது.

தமிழகத்தின் கிராமப் புறப் பகுதிகள் சூழ்ந்த, சிறு நகரங்களிலும், இன்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலை நிகழ்ச்சிகளை நடத்தி; அங்கு வாழ்கின்ற மக்களும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டு களிப்பதற்கு, வழி வகுத்துள்ளது. சலங்கை விழா, ஐம்பெரும் விழா, போன்ற பெரிய விழாக்கள், இன்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், சீரிய முறையில் நடைபெற்று; தமிழக மக்கள் மத்தியில், கலை, கலாச்சாரம் ஆகியவற்றை, பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வை, ஏற்படுத்தியுள்ளதை எண்ணி, மன மகிழ்ச்சி அடைகிறேன்.

அருங்கலைகளை வளர்க்க, தங்கள் தனித் திறமைகளை வெளிப்படுத்தி, கலைமாமணி விருது பெறுகின்ற, கலை வித்தகர்கள் அனைவருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கலைச் சேவையில் மேற்கொள்ளும், எல்லா முயற்சிகளிலும் வெற்றி பெற்று, மேலும் பெயரோடும், புகழோடும், நீண்ட ஆயுளுடனும், வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று, நிறைந்த மனதுடன் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர், 'நாடகச் செம்மல்' திரு R.S. மனோகர் அவர்கள், சற்று முன்பு பேசும் போது, இரண்டு கோரிக்கைகளை, என் முன் வைத்தார்கள். மன்றத்தால், ஆண்டு தோறும் திறந்து வைக்கப்படுகின்ற, கலை வித்தகர்களின்

திருவுருவப் படங்களை, நன்முறையில் பராமரிப்பதற்கும்; பார்வையாளர்கள் அனைவரும் அவற்றை, ஒரே இடத்தில் கண்டு மகிழ்வதற்கு, வழி வகுக்கவும்; அரிய இசைக் கருவிகளை, பாதுகாத்து வைக்கவும்; 'கலைக் கூடம்' Art Gallery ஒன்றை, அமைத்துத் தர வேண்டும், என்று கேட்டுக் கொண்டார்கள். தமிழகத்தின் பாரம்பரியமிக்க கலைகளை வளர்ப்பதிலும், கலை வித்தகர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதிலும்; ஆழ்ந்த ஈடுபாட்டையும், அக்கறையையும், செலுத்தி வருகின்ற அரசு, எங்கள் அரசு. அந்த உணர்வை, பிரதிபலிக்கின்ற வண்ணம், மன்றத்திற்கென தனியே, 'கலைக் கூடம்' Art Gallery ஒன்று, தமிழக அரசின் சார்பில், கட்டித் தரப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான ஆயத்தப் பணிகள், விரைவில் மேற்கொள்ளப்படும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடகக் கலையை, நலிந்து விடாமல் பாதுகாக்க, பல நடவடிக்கைகளை மேற்கொண்ட எங்கள் அரசு, நாடகக் கலைக் குழுவினர், அரசு பேருந்துகளில் பயணம் செய்யும் போது, 50 சதவீதக் கட்டணச் சலுகையையும், வழங்கி வருகின்றது. இந்தச் சலுகையை, இசைக் கலைஞர்களுக்கும், நாட்டிய மற்றும் கிராமியத் துறை கலைஞர்களுக்கும், வழங்க வேண்டும் என்று, திரு R.S.மனோகர் அவர்கள், வைத்த இரண்டாவது கோரிக்கையையும், ஏற்று கொண்டு; இனி, இசைக் கலைக் குழுவினர்களும், நாட்டிய மற்றும் கிராமியக் கலைக் குழுவினர்களும், அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் போது, கட்டணத்தில் 50 சதவீத சலுகை, வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் அரசைப் பொறுத்த வரையில், கேட்டால் தான் கிடைக்கும் என்பதையும் மீறி, தேவை என்பதை அறிந்தால், விரைந்து செயல்பட, எப்போதும் தயாராக உள்ளது. நலிந்த கலை வித்தகர்களுக்கு, பொற்கிழித் தொகையாக, 5,000 ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. இனி அந்த பொற்கிழித் தொகை, 5,000 ரூபாயிலிருந்து, 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். அந்த உயர்வு, இந்த ஆண்டு முதலே, அமல்படுத்தப்படும் என்பதையும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின், காப்பாளர் என்ற முறையில், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருங்கலைகளை வளர்ப்பதிலும், நலிந்த கலை வித்தகர்களின் நலம் காப்பதிலும், எங்கள் அரசு எப்போதும் முனைப்புடன் செயல்படும், என்பதைத் தெரிவித்துக் கொண்டு; கலைமாமணி விருது பெற்ற "கலைமாமணிகள்" அனைவருக்கும், மீண்டும் எனது நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொண்டு விடை பெறுகிறேன்.

***(22.11.1995 அன்று நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)***

# திரைப்படங்கள் மக்களின் மனங்களைப் பண்படுத்தும் கலைப் பொக்கிஷங்களாகத் திகழவேண்டும்

1993-ஆம் ஆண்டிற்கான, மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும், வண்ணமிகு விழாவில் கலந்துக் கொண்டு, பெருந்திரளாகக் குழுமி இருக்கும், உங்கள் அனைவரையும் ஒருங்கே காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

கலைத் துறையின் மாபெரும் அங்கமான, திரைப்படத் துறை, குறிப்பாகத் தென்னிந்திய திரைப்படத் துறை, தனக்கே உரித்தான பாரம்பரியமிக்க, பெயரையும் புகழையும் கொண்ட, ஒரு மாபெரும் துறையாகும். கலைகளையும், கலைகளின் பல்வேறு அழகிய வெளிப்பாடுகளையும், தங்கள் வாழ்க்கையின் அங்கமாக்கி, மகிழ்ச்சியானதொரு வாழ்க்கையை வாழும், மன வளம் படைத்த மக்கள், தமிழக மக்கள். கலைகளை ரசித்து மகிழும் மனப் பக்குவமும்; கலை வடிவங்களுக்கும், கலை வித்தகர்களுக்கும் ஆதரவளித்து, மகிழ்ச்சி அடையும் மனப்பாங்கும், தமிழ்நாட்டிற்கே உரித்தான, பாரம்பரியமிக்க குணமாகும். இயல்பாகவே எதையும், கலைக் கண்ணோட்டத்துடன் கண்டு மகிழும், தன்மை படைத்த தமிழக மக்களிடையே, திரைப்படத் துறையின் ஆதிக்கம் அதிகரித்து வருவது, எந்த வகையிலும் ஆச்சரியமில்லை!

தமிழக மக்களின் உள் உணர்வுகளை, நன்முறையில் புரிந்து, அவற்றைப் பிரதிபலிக்கின்ற வகையில், நடைபெற்று வருகின்ற, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில்; திரைப்படத் துறை உட்பட, கலைத் துறையின் எல்லாப் பிரிவுகளும், சீரான வளர்ச்சியை அடைந்து, சிறப்பெய்தி வருகின்றன. கலைத்துறையின் முன்னேற்றத்தை, அரசே முன்னின்று கண்காணித்து வருகின்ற, நல்லதொரு சூழ்நிலையில், கலை வித்தகர்களின் கலைத் திறமையை பாராட்டி, அவர்களது தனித்தன்மையை அங்கீகரித்து, வழங்கப்படும் இந்த விருதுகள், மேலும் பல புதிய சாதனைகளைப் படைக்க, கலைத் துறையினருக்கு, ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே, 6 கோடி தமிழக மக்களின், ஏகோபித்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும், தன்னகத்தே பெற்றுள்ள

இந்த விருதுகளை, கலையுலக நட்சத்திரங்களுக்கும், கலை வித்தகர்களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழக மக்களின் சார்பில் வழங்குவதில், நான் ஆனந்தம் அடைகின்றேன்.

இன்று விருதுகளைப் பெறுகின்ற, கலை வித்தகர்களும், தொழில் நுட்பக் கலைஞர்களும், தாங்கள் மேற்கொண்டுள்ள கலைத் துறையில், புதிய பரிமாணங்களைக் கண்டு, மென்மேலும் பெயரும் புகழும் பெற்று, நீண்ட ஆயுளுடன், கலைச் சேவை புரிய வேண்டும் என்று, நிறைந்த மனதுடன் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

அசுர வேகத்தில் வளர்ந்து வரும், தொழில் நுட்பமும், அறிவியலும், இன்று திரைப்பட உலகத்தின் மீது ஏற்படுத்தி உள்ள, தவிர்க்க முடியாத தாக்கத்தையும்; அதே நேரத்தில் திரைப்பட உலகம், புதிய கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி, அவர்களின் மனங்களிலும், உணர்வுகளிலும், உண்டாக்கி வரும் தாக்கத்தையும்; நாம் குறைத்து மதிப்பிட முடியாது. ஒரு புறம் மக்கள் மத்தியிலே, கலை உணர்வையும், விஞ்ஞான உணர்வையும், சமுதாய சீர்திருத்த கருத்துக்களையும் வழங்கி; புதிய சிந்தனைகள் தோன்ற, வழி வகுத்து வரும் அதே திரைப்படங்கள்; சில நேரங்களில், மக்கள் மனதிலே வன்முறை உணர்வையும், மத இன வேறுபாட்டுப் பகை உணர்வையும், தங்களை அறியாமலேயே தூண்டி விடுகின்ற ஒரு போக்கையும், சமீப காலமாகத் திரைப்படங்களில் காண முடிகிறது.

அதி நவீன தொழில் நுட்பத்தைக் கையாள்வதன் மூலம், நமது திரைப்படங்கள், சர்வதேச தரத்தை அடைய வேண்டும், என்கின்ற ஒரு நியாயமான உந்துதல், நம்மிடம் இருந்தாலும்; தமிழ்த் திரைப்படங்கள் மூலம், சமுதாய நன்மைகள்தான், அதிகமாகக் கிடைக்கின்றன, என்ற ஒரு பாராட்டும், தொடர்ந்து நமக்கு கிடைத்தாக வேண்டும் என்பதையும், நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

பொழுது போக்குச் சாதனமாக மட்டும் இல்லாமல், தமிழகத்தின் உயரிய கலாச்சாரம், குடும்பப் பாச உணர்வு, நியாய தர்ம நல் உணர்வு ஆகியவற்றிற்கு, குந்தகம் ஏற்படாத வண்ணம் பாதுகாக்கவும் நமது திரைப்படங்கள் பயன்பட வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன். பொழுது போக்குச் சாதனமாகவும், கலைகளை வளர்க்கும் சாதனமாகவும், விளங்கும் திரைப்படத்துறை,

ஆயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்க்கையை அளிக்கும், ஒரு மாபெரும் தொழிலாகவும் இருந்து வருகின்றது.

எனவேதான், திரைப்படத் துறையினுடைய வளர்ச்சிக்கு, முட்டுக்கட்டைகள் ஏற்பட்டபோதெல்லாம்; அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு, நான் ஒரு ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன், முயற்சிகளை மேற்கொண்டேன். அதே உணர்வுடன், திரைப்படத் துறையின் வளர்ச்சியை நிலைப்படுத்த, பல்வேறு திட்டங்களையும் அறிவித்தேன்.

திரைப்படத் துறையில் பணியாற்றி வருகின்ற, பல்லாயிரக் கணக்கான தொழில் நுட்ப கலைஞர்களும், தொழிலாளர்களும், கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களின் மூலம், தங்களுக்கு என்று சொந்தமாக, வீடுகளைக் கட்டிக் கொள்வதற்காக; சென்னைக்கு அருகில், 10 கோடி ரூபாய் மதிப்பில், 85 ஏக்கர் நிலம், தமிழக அரசின் சார்பில், இலவசமாக வழங்கப்பட்டது. திரைப்படத் தயாரிப்புகளுக்கு, தேவையான எல்லா வசதிகளையும், ஒரே இடத்தில் தயாரிப்பாளர்களுக்கு, ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற எண்ணத்தில்; எங்கள் ஆட்சிக் காலத்தில், 26 கோடி ரூபாய் செலவில், திரைப்பட நகர், Film City ஒன்று, தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டு, இன்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே, வேறு எந்த ஒரு இடத்திலும், இத்தனை நவீன வசதிகளுடன், ஒரு திரைப்பட நகரம் இல்லை என்று, பலரும் பாராட்டி வருகின்றனர். குறைந்த செலவில் தயாரிக்கப்படும், தரமான தமிழ்ப் படங்களுக்கு, மானியத் தொகை வழங்கும் திட்டத்தை, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, விரிவுபடுத்தி; இன்று அத்தகைய படங்களுக்கு, தலா 3 லட்சம் ரூபாய் வீதம், 75 திரைப்படங்கள் வரை, மானியத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

திரைப்படத் தயாரிப்பில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, எல்லா இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த, ஒரே இடத்தில் அனுமதி வழங்கும், Single Window Clearance முறையும், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் தொடங்கப்பட்டு, சீரிய முறையில், நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. வளர்ந்து வரும், விண்கோள் தொலைக் காட்சிகளின் ஆதிக்கத்தினால், திரைப்படத்துறை நசிந்து விடாமல் இருப்பதற்காக, திரையரங்கு கட்டணத்தை மாற்றி அமைத்துக் கொள்ள, ஒரு புதிய முறைக்கு, தமிழக அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல், திரைப்படத் தொழிலாளர்களுக்கும், ஆயுள் காப்புறுதித் திட்டத்தை விரிவுபடுத்தி, விபத்தில் மரணமடைய நேரும், தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு, தலா 50,000 ரூபாய், நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டமும், திரைப்படத் தொழிலாளர்கள், நல்வாழ்வு நல நிதித் திட்டமும், செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திரைப்படத் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பிற்காக, நலிந்த திரைப்படத் தொழிலாளர்கள், 1000 பேருக்கு, மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஒன்றையும், இந்த ஆண்டு முதல், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, செயல்படுத்தி வருகிறது.

22.11.1995 அன்று, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின், கலைமாமணி விருது வழங்கும் விழாவில், கலந்து கொண்ட போது; வயது முதிர்ந்த, நலிந்த நிலையில் உள்ள, கலைமாமணி விருது பெற்ற, கலை வித்தகர்களில் சிலர், தங்களுக்கு அரசுப் பேருந்துகளில், இலவசமாகப் பயணம் செய்ய, சிறப்புச் சலுகையை வழங்க வேண்டும், என்ற கோரிக்கையை, என் முன் வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை நான் ஏற்றுக் கொண்டு, 45 வயதைக் கடந்த, கலைமாமணி விருது பெற்ற, நலிந்த கலை வித்தகர்கள் அனைவரும், தமிழக அரசின், போக்குவரத்து கழகப் பேருந்துகளில், இலவசமாக பயணம் செய்ய, ஆணை வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணை, மிக விரைவில் வழங்கப்படும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொழுதுபோக்கு என்ற குறுகிய வட்டத்தை விட்டு, திரைப்படங்கள், மக்களின் எண்ணங்களையும், மனங்களையும் பண்படுத்துகின்ற, கலைப் பொக்கிஷங்களாகத் திகழ்ந்திட வேண்டும், என்பதைத் தெரிவித்துக் கொண்டு; விருது பெற்ற அனைவருக்கும், மீண்டும் எனது நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொண்டு விடை பெறுகிறேன்.

***(24.11.1995 அன்று நடைபெற்ற மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)***

# அடித்தளத்து மக்களின் உயர்வுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அரசே எங்கள் அரசு

மாநில ஆதிதிராவிடர் நல ஆலோசனைக் குழுவின், முதல் கூட்டத்தில் கலந்து கொள்ள, வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும், எனது கனிவான வணக்கத்தை, முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள், பாட்டாளிகள், உழைத்து வாழ்வோர், நலிவுற்ற பிரிவினர், ஆகியோரின் நலம் காக்க, எங்கள் அரசு, கடந்த நான்கரை ஆண்டு காலமாக, ஓர் ஆத்மார்த்த ஈடுபாட்டுடன், செயல்பட்டு வருகிறது. ஆதிதிராவிடர் மற்றும் மலை ஜாதியினர், ஆகியோரின் ஒட்டுமொத்த சமூக, மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும், எங்கள் அரசு, ஒரு புதிய உத்வேகத்துடன், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

1991-ஆம் ஆண்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடித் துறைக்கு என ஒதுக்கப்பட்ட தொகை, 103 கோடி ரூபாய் மட்டுமே. ஆதிதிராவிடர் நலன் காக்க, நாங்கள் மேற்கொண்ட, தொடர் நலத் திட்டங்களின் காரணமாக, இந்த நிதி ஒதுக்கீடு, இன்றைய அளவில் இரண்டு மடங்காகியுள்ளது. 1995-96-ஆம் நிதியாண்டில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக, 204 கோடி ரூபாயை, எங்கள் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. ஏட்டளவில் திட்டங்களைத் தீட்டி வைக்காமல், விரைவாக அவற்றை நடைமுறைப்படுத்தி, அத்திட்டங்களின் பலன்கள் மக்களுக்குச் சென்றடைய, எங்கள் அரசு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

**"Thus, ours is a Government firmly committed to the upliftment of the downtrodden and the suppressed."**

எங்கள் அரசு ஆட்சிக்கு வந்த பின்பு, தாழ்த்தப்பட்ட மக்கள், எல்லா அடிப்படை வசதிகளைப் பெறுவதற்கும், பொருளாதாரச் சுதந்திரம் அடைவதற்கும், சமூக உரிமைகளைப் பெறுவதற்கும், 10 அம்ச திட்டம் ஒன்றைத் தீட்டி, சிறப்புற செயல்படுத்தி

வருகின்றோம். பொருளாதார மேம்பாட்டு உதவிகள், விவசாய குடும்பங்களுக்குப் பாசனக் கிணறுகள், தொழில் தொடங்க நிதி உதவி, தொழில் கல்வி பெற்றோருக்கு வேலைவாய்ப்பு, இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், இலவசமாக Concrete தள வீடுகள், குடிநீர் வசதி, குடியிருப்புகளுக்குப் பாதை வசதி, தெரு விளக்கு வசதி, ஒரு வீட்டுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ், மின் விளக்கு வசதி ஆகிய திட்டங்கள், ஆதிதிராவிடர்களின் நலன் காக்க, முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர்களுக்கு என பிரத்யேகமாக, இரண்டு பின்னலாடைத் தொழிற் பேட்டைகளை அமைத்துத் தருதல்; இறால் பண்ணைகள் அமைத்தல்; பட்டுப் புழு வளர்க்கும் தொழிலுக்கு, உதவிகள் வழங்குதல்; ஆகிய முப்பெரும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள், ஆதிதிராவிடர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில், திருப்பூருக்கு அருகில், முதலிப்பாளையத்திலும்; பெரியார் மாவட்டத்தில், நல்லக்கவுண்டன் பாளையத்திலும்; இரண்டு பின்னலாடைத் தொழிற் பேட்டைகள், 200 தொழிற் கூடங்களுடன், உருவாக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, தொழிலாளர்களாக மட்டுமே இருந்த நிலை மாறி, தொழில் முனைவோர்களாகவும், தொழிற்சாலைகளை நடத்துகின்ற அதிபர்களாகவும், ஆதிதிராவிட மக்கள் வளர வேண்டும், என்கின்ற எங்களது ஆழ்ந்த, ஈடுபாட்டின் அடையாளம்தான், இந்த இரண்டு தொழிற் பேட்டைகள்.

ஆதிதிராவிட பெருங்குடி மக்களின் உணர்வுகளுக்கு, மதிப்பு அளிக்கும் வண்ணம், ஆதிதிராவிட மக்களின் வழிகாட்டியாக திகழ்ந்த, சட்ட மேதை, அண்ணல் டாக்டர் B.R.அம்பேத்கர் அவர்களின், நினைவைப் போற்றும் வண்ணம், எங்கள் அரசின் சார்பில், சென்னை கோயம்பேட்டில், அவரது திருவுருவ வெண்கலச் சிலை ஒன்று, என்னால் திறந்து வைக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட, ஏழை எளிய மக்களின் நலன் காக்கவும், இந்திய அரசியலமைப்பு சட்டத்தை, சீரிய முறையில் உருவாக்கவும், டாக்டர் B.R.அம்பேத்கர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளை, நினைவு கூறும் வண்ணம், சென்னையின் மத்தியப் பகுதியில், 5 கோடி ரூபாய் செலவில், மணி மண்டபம் ஒன்றை, தமிழக அரசு அமைத்து வருகின்றது.

டாக்டர் B.R.அம்பேத்கர் அவர்களின் அடியொற்றி, ஆதிதிராவிட மக்களின் நலன் காக்க, பாடுபட்ட சட்ட மேதை, பெரியவர் சிவராஜ்

அவர்களின், சமுதாயப் பணியினை நினைவு கூறும் வண்ணம், அவரது திருவுருவச் சிலை ஒன்றை, தமிழக அரசின் சார்பில், வடசென்னை பகுதியில், நான் திறந்து வைத்தேன். மேலும், சட்டக் கல்வி பயிலும், ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்கு, உதவித் தொகை வழங்க, 10 லட்சம் ரூபாய் செலவில், அவரது பெயரில், அறக்கட்டளை ஒன்றையும், எங்கள் அரசு ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமின்றி, அவரது திருவுருவச் சிலையை, திறந்து வைத்த போது, ஆதிதிராவிட பெருமக்களின் சமுதாய, மற்றும் பொருளதார உயர்வுக்கு, புரட்சிகரமான பல திட்டங்களையும், நான் அறிவித்தேன்.

ஆதிதிராவிட மக்களின், ஒட்டுமொத்த வாழ்க்கை முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, எங்கள் அரசு செயலாற்றி வரும், திட்டங்களின் செயல்பாடுகளையும், சாதனைகளையும், ஏற்கனவே உங்களுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகத் தொகுப்பில், விரிவாக விளக்கப்பட்டுள்ளதால், நேரத்தின் அருமையைக் கருதி, இந்த அரசு எடுத்து வருகின்ற, சில முக்கியமான நடவடிக்கைகளை மட்டுமே, இங்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமென்றால், பொருளாதாரத்தில் மட்டுமின்றி, சமூக அந்தஸ்திலும், அம் மக்கள் உயர்வு பெற வேண்டும் என்பதை, நாங்கள் அறிந்துள்ள காரணத்தால்; வேத ஆகமக் கல்லூரியில், வேத ஆகமங்களை கற்பதற்கு, ஆதிதிராவிட பெருமக்களுக்கு, இட ஒதுக்கீடு செய்தும்; அவர்கள் ஆலயங்களில், அர்ச்சகர்களாக பணி புரிவதற்கும், வழி வகுத்து வருகின்றோம்.

ஆதிதிராவிட கிருத்தவர்களையும், தாழ்த்தப் பட்டோராக கருதி, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில், சலுகைகளை வழங்க வேண்டுமென்றும்; அதற்கு தேவையான, அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தை, கொண்டு வர வேண்டுமென்றும்; நான் சமீபத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, கடிதம் எழுதியுள்ளேன். மத வேறுபாடின்றி, ஆதிதிராவிட கிருத்தவ மக்களுக்கும், எல்லாச் சலுகைகளையும் பெற்றுத் தருவதில், எங்கள் அரசு முழு மூச்சுடன் செயல்படும்.

கடந்த நான்கரை ஆண்டு காலமாக, சமுதாய நல முன்னேற்றத் திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்தி வந்ததால் தான், சமூகத் திட்டங்களைசச் செயல்படுத்துவதில், இந்தியத்

துணைக் கண்டத்தில், தமிழ்நாடு முன்னணியில் இருக்கின்ற, ஓர் உன்னதமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நாம் செயல்படுத்தி வரும் திட்டங்களின் பலன்கள், மக்களுக்குச் சென்று அடைகின்றனவா, என்பதைக் கண்காணிக்கவும்; மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்பவும்; சில குறிப்பிட்ட பகுதிகளில் வாழும், மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தேவைப்படும் புதிய திட்டங்கள் குறித்து, ஆலோசனைகளை வழங்கவும்; இந்த உயர்மட்ட ஆலோசனைக் குழு, ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இந்த உயர்மட்டக் குழுவின் உறுப்பினர்களாக, பணிபுரிபவர்கள் அனைவரும், தாங்கள் வசிக்கின்ற பகுதிகளில் வாழ்கின்ற, ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மட்டுமல்லாமல்; இந்த சமுதாய மக்கள், விழிப்புணர்ச்சியை பெறுவதற்கும்; ஒட்டுமொத்த முன்னேற்றத்தை அடைவதற்கும்; அரசு மேற்கொள்ள வேண்டிய நலத் திட்டங்களை, கோடிட்டுக் காட்ட வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன். எங்களைப் பொறுத்த வரையில், தமிழக மக்களின், குறிப்பாக, ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின், வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தேவையான, எந்தத் திட்டத்தையும், எவ்வளவு செலவானாலும், அதைச் செயல்படுத்த, எப்போதும் தயாராக உள்ளோம் என்பதை, உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஆதிதிராவிடர் களுக்கான, தனிப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்து உள்ளோம்; விடுதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது; கற்றுத் தரப்படும் கல்வியின் தரமும் உயர்ந்துள்ளது. குறிப்பாக, ஆதிதிராவிட பெண்களின், கல்வி மேம்பாட்டிற்கு வழி வகுக்க; சில மாவட்டங்களில், மூன்றாம் வகுப்பு முதல், ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு, ஆண்டொன்றுக்கு, தலா 500 ரூபாய் நிதி உதவியும்; ஆறாம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு, மாதம் ஒன்றுக்கு, தலா 100 ரூபாய் வழங்கும் திட்டமும்; செயல்படுத்தப்பட்டு வருகிறது. 60,000 பெண் குழந்தைகள், பயன்பெறும் இத்திட்டம், அவர்கள் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை, ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

மத நல்லிணக்கத்திற்கும், ஒன்றாய் கூடி வாழும், சகோதர மனப்பான்மைக்கும் பெயர் பெற்ற, அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டில், சில நேரங்களில், தேவையற்ற சமுதாய வேறுபாட்டு

உணர்வுகள், தூண்டி விடப்படுகின்றன. அத்தகைய சூழ்நிலைகளை மாற்றி அமைக்க, அரசு மேற்கொள்ளும் நல்ல முயற்சிகளுக்கு, உங்கள் ஆலோசனைகளை வழங்க வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின், சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலைகளை ஆராய்ந்து, விரிவான அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பிக்க, 9 பேர் கொண்ட, 'மாநில ஆதி திராவிட நல கமிஷன்' ஒன்றும், அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கமிஷன், விரைவில் தனது பணியை மேற்கொண்டு, தனது அறிக்கையை அரசுக்கு வழங்க வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், அனைத்து நிலைகளிலும், விரைந்த முன்னேற்றம் அடையச் செய்ய, மேலும் சீரிய திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்த, ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு, மாநில ஆதிதிராவிடர் நல உயர்மட்ட, ஆலோசனைக் குழு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

***(1.12.1995 அன்று நடைபெற்ற மாநில ஆதிதிராவிடர் நல உயர் மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை)***

# குடிசைப்பகுதி மாற்றுவாரிய வெள்ளிவிழா புதிய சகாப்தத்தின் தொடக்கவிழா ஆகட்டும்

தமிழக நகர்ப்புற வளர்ச்சியின், ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்ற, 'தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்', வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பெருந்திரளாகக் குழுமி இருக்கும், உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெரு மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், வெள்ளி விழா ஆண்டில், வெற்றி நடை போட்டு வருகின்ற, நல்லதொரு சூழ்நிலையில்; இந்த அமைப்பின் அங்கங்களாகப் பணியாற்றி வரும், இயக்குநர்கள், பொறியாளர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்கள், நலிந்த பிரிவினர் ஆகியோருக்கு, அடுக்கு மாடி குடியிருப்புக் கட்டிடங் களையும்; அப்பகுதி வாழ் மக்களுக்குத், தேவையான அடிப்படை வசதிகளையும், வழங்கி வரும் இந்த வாரியம்; உங்கள் அன்பு சகோதரியின் ஆட்சியில், பல புதிய எல்லைகளைத் தொட்டு, அரிய சாதனைகளைப் படைத்து வருவது, ஒரு மகிழ்ச்சியான விஷயமாகும்.

குடிசைப் பகுதி வாழ் மக்களுக்கு, அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டித் தருதல்; அரசு நிலங்களில் ஆக்கிரமிப்புச் செய்து, அடிப்படை வசதிகள் இன்றி தவிக்கும் மக்களுக்கு, அடிப்படை வசதிகளை உருவாக்கித் தருதல்; மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கி, நில உரிமைகளை வழங்குதல்; ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும், குடிசைப் பகுதி வாழ் மக்களை, பாதுகாப்பான மாற்று இடங்களில், குடியமர்த்துதல்; இளைய தலைமுறையினருக்கு, தொழில் பயிற்சி வழங்குதல்; போன்ற சமுதாய வளர்ச்சிப் பணிகளை, சீரிய முறையில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், செயலாற்றி வருகின்றது.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், இந்த வாரியம், இதுவரை 40 கோடி ரூபாய் செலவில், 15,445 அடுக்கு மாடி குடியிருப்புகளைக் கட்டி, குடிசை வாழ் மக்களுக்கு வழங்கியுள்ளது. குடிசைப் பகுதிகளின், சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவதற்காக, பொதுக் குடிநீர் குழாய், தெரு

விளக்குகள், கழிப்பறை வசதி ஆகியவை, 8.5 கோடி ரூபாய் செலவில், அமைத்துத் தரப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 54,000 குடும்பங்கள், இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், அதாவது- **Tamil Nadu Urban Development Project**-ன் கீழ், குடிசைப் பகுதிகளில் சாலைகள், குடிநீர், கழிவு நீர் வடிகால், மற்றும் தெரு விளக்குகள், போன்ற அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டு; மனை உரிமைகளும், ஆக்கிரமிப்புதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி, ஆகிய நகரங்களில், 12.5 கோடி ரூபாய் செலவில், 36,000 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், இத்திட்டத்தின் கீழ், இதுவரை பயன் அடைந்துள்ளனர்.

நடை பாதை வாசிகளுக்கான, வீட்டு வசதித் திட்டத்தை, முதன் முதலாகச் செயல்படுத்திய பெருமை, தமிழ்நாட்டையே சாரும். தமிழ் நாட்டில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தில், இதுவரை 45,000 குடும்பங்கள், பயன் அடைந்துள்ளன. இந்த ஆண்டு, மேலும் 1,000 குடும்பங்கள், பயன் பெறும் வண்ணம், 50 லட்சம் ரூபாய் செலவில், திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, 20 ஆண்டுகளாக, தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், கட்டி முடித்த, பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள், மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்க முடியவில்லை. சென்னை மாநகராட்சி நிர்ணயம் செய்த அளவிலும், தகுதியிலும், இணைப்புச் சாலைகள் அமைக்கப்படாததால், மாநகராட்சி, அந்த சாலைகளை ஏற்றுக் கொண்டு, நிர்வகிக்க முன்வரவில்லை. இந்த நிர்வாகப் பிரச்சனையினால், பல அடுக்கு மாடி குடியிருப்புத் திட்டப் பகுதிகளில், அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க, இயலாத ஒரு சூழ்நிலை நிலவி வந்தது. ஆனால் உங்கள் அன்பு சகோதரியின் ஆட்சியில், கிட்டத்தட்ட 1000 தனியார் சாலைகளை, மாநகராட்சி தனது நிர்வாகத்தில் ஏற்றுக் கொண்டு; அவற்றைச் சீர்படுத்தும் பணியிலும், மேம்படுத்தும் பணியிலும், ஈடுபட்டு வருகின்றது.

அரசு இயந்திரம் என்பது, மக்கள் நலன் காக்கத்தான், என்பதை உணர்த்தும் வண்ணம், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில்,

நடைமுறைப்படுத்தப்பட்டு வரும், இந்தப் புதிய திட்டம், நல்ல விளைவுகளைத் தரும் என்பதில் ஐயமில்லை.

20 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின், 12 புதிய திட்டங்களுக்கு, இன்று அடிக்கல் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சென்னை பெருநகரில் மட்டுமின்றி, திருச்சி, ஈரோடு, கோயம்புத்தூர், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளிலும், இக்குடியிருப்புத் திட்டங்கள், செயல்படுத்தப்பட உள்ளதை அறிந்து, நான் மனமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பணிகளை விரைவில் மேற்கொண்டு, அடிப்படை வசதி இன்றி வாழும் மக்களுக்கு, நிரந்தரக் குடியிருப்புகளைக் கட்டித் தருவதோடு; அனைத்து அடிப்படை வசதிகளையும், இத்திட்டப் பகுதிகளில், முறைப்படி செய்து தர வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில், இன்று, 4,338 பேருக்கு, குடியிருப்பு நில உரிமைப் பட்டாக்கள், வழங்கப்பட உள்ளன. சென்னை மாநகர், மற்றும் புறநகர்ப் பகுதிகளைச் சேர்ந்த, 11 இடங்களில் வாழ்கின்ற மக்களுக்கு, இந்த குடியிருப்பு நில உரிமைகள், வழங்கப்படுகின்றன. அனைவருக்கும் நானே நேரில், நில உரிமைப் பத்திரங்களை, வழங்க வேண்டுமென்று விரும்பினாலும்; நேரத்தின் அருமையைக் கருதி, அவர்களில் சிலருக்கு மட்டும், இந்த விழா மேடையில், வழங்க உள்ளேன் என்பதையும்; மற்றவர்களுக்கு இன்றே, இந்த இலவசப் பட்டாக்கள், வாரியத்தால் வழங்கப்படும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ளி விழாவை ஒட்டி, வாரியத்தின் துப்புரவுப் பணியாளர்கள் 275 பேருக்கு, மழைக் கோட்டுகளும், வாரியத்தில் பணிபுரியும் 1632 ஊழியர்களுக்கு, வெள்ளி விழா நினைவுப் பரிசும், இன்று வழங்கப்பட உள்ளன என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின், 58,804, அடுக்கு மாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களிடம், உரிமைத் தொகையாக, மாதம் 22 ரூபாய் மட்டுமே, வசூலிக்கப்படுகிறது. தவணை முறைத் திட்டத்தின் கீழ், குடியிருப்புகளின் உரிமையை, பதிவு செய்து கொள்ள, சிலர் மட்டுமே முன் வந்துள்ள காரணத்தால்; எல்லா அடுக்கு மாடி குடியிருப்புக் கட்டிடங்களையும், வாரியமே தொடர்ந்து, பராமரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்புக் கட்டிடங்களில் ஏற்பட்டுள்ள, பழுதுகளை சீர் செய்யவும்; பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும்; குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு,

அரசின் உதவி தேவை என்பதை, நான் நன்கு அறிவேன். எனவே, சென்னையில் உள்ள, அடுக்கு மாடிக் குடியிருப்புகளைச், சீர் செய்வதற்கும்; பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும்; 5 கோடி ரூபாய், தமிழக அரசின் சார்பில், மானியமாக, குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு, வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில், சென்னை மாநகரத்தில் மேற்கொள்ளப்பட்ட, கணக்கெடுப்பின்படி, 131 இடங்களில், சுமார் 24,000 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், நடை பாதைகளிலும், ஆட்சேபகரமான பகுதிகளிலும், வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும், பாதுகாப்பான மாற்றிடம் வழங்க, சென்னைக்கு அருகில், 100 ஏக்கர் அரசு நிலம், குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு, விரைவில் வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த 100 ஏக்கர் நிலத்தில், இந்த வாரியம், மேம்படுத்தப்பட்ட மனைகளை அமைத்து; அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து; நடை பாதை வாழ் மக்களை, பாதுகாப்பான பகுதியில் குடி அமர்த்தும், என்பதைத் தெரிவிப்பதில், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தப் பணியை, ஒரு சமுதாய உணர்வுடன், இந்த வாரியம் மேற்கொள்ள வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன் .

தனியார் நிலங்களை, நில ஆர்ஜிதம் செய்து, கையகப் படுத்துவதில் ஏற்படுகின்ற, சிரமமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு; தனியார் நிலங்களை, பேச்சு வார்த்தையின் மூலம், நில மதிப்பை நிர்ணயம் செய்து, கையகப்படுத்துவதற்கு, இந்த வாரியத்திற்கு அனுமதி வழங்க வேண்டும், என்ற கோரிக்கை, அரசின் பரிசீலனையில், சில காலமாக இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கையை, இன்று ஏற்றுக் கொண்டு, இனி தனியார் நிலங் களையும், பேச்சு வார்த்தை மூலம், நில மதிப்பு நிர்ணயம் செய்து, கையகப்படுத்த, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு, அனுமதி வழங்கப்படும் என்பதையும், அதற்குரிய அரசாணை, மிக விரைவில் வெளியிடப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பெரு நகர வளர்ச்சி திட்டத்தின் கீழ்; அதாவது Madras Urban Development Project-ன் கீழ்; குடிசைப் பகுதிகளில், மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு; நில மதிப்பை நிர்ணயம் செய்து; அங்கு வாழ்கிற மக்களுக்கே, நில உரிமம் வழங்கும் திட்டம்,

செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு, வாரியம் நிர்ணயம் செய்த, நில மதிப்பைச் செலுத்தி, நிலத்தைப் பெற்று, பத்திரப் பதிவு செய்யப்படும் போது; முத்திரைத் தாளும் (Stamp Duty), பத்திரக் கட்டணமும் (Registration Fees), அந்த நிலத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில், கட்ட வேண்டிய சூழ்நிலை இருப்பதால்; பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், நிர்ணயம் செய்த, நில மதிப்பின் அடிப்படையிலேயே; முத்திரைத் தாளும், பத்திரப் பதிவுக் கட்டணமும் அதாவது **Stamp Duty, Registration Fee**-யும் கட்ட, ஆணை வழங்க வேண்டும் என்று, பாதிக்கப்பட்ட மக்கள், பல காலமாகக் கோரி வருகின்றார்கள். இந்தச் சலுகை வழங்கப்பட்டால், அரசுக்குக் கிட்டத்தட்ட, 50 கோடி ரூபாய் வரை, இழப்பு ஏற்படும் என, கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களது கோரிக்கை, கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, விரைவில் ஒரு நல்ல முடிவை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அறிவிக்கும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரவேற்புரை ஆற்றிய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தலைவர் திரு KRV ரமணி அவர்கள், என் முன் வைக்காத கோரிக்கைகளுக்கு எல்லாம் அங்கீகாரம் அளித்துப் பல சலுகைகளை அறிவித்துள்ளேன். மேலும், வாரியம் மேற்கொள்ள உள்ள குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டத்திற்கு அனுமதி வழங்கி, நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இப்பொழுது என் முன் வைத்தார். அவரது அந்த கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டு, அத்திட்டத்தைச் செயல்படுத்த ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவொற்றியூர் கடற்கரைப் பகுதியில், கடல் அரிப்பு ஏற்பட்டு, கடற்கரை ஒட்டிய பகுதிகளில், வாழ்ந்து வரும் மக்களுக்கு, பாதிப்பு ஏற்பட்டதை அறிந்து; கடல் அரிப்பு, தடுப்புத் திட்டப் பணிகளை மேற்கொள்ள, ஏற்பாடுகள் செய்தேன். இருப்பினும், தொடர்ந்து அப்பகுதி வாழ் மக்கள், புயல், வெள்ளம் மற்றும் பெருமழை ஏற்படும் போது, துயரத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, அப்பகுதி வாழ் மக்கள், பாதுகாப்பான இடத்தில், நிரந்தரமாக வீடு கட்டிக் கொண்டு, அமைதியாக வாழ்வதற்காக, 'சடையான்குப்பம்' கிராமத்தில், நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு குடும்பத்திற்கும், 2 சென்ட் வீதம், வீட்டு மனை பட்டா இன்று, இலவசமாக வழங்கப்படுகிறது

என்பதையும்; இதற்காக 50 லட்சம் ரூபாய் மதிப்புள்ள, 30 ஏக்கர் அரசு நிலம், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும்; மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே நான் அறிவித்தபடி, இன்று, திருவொற்றியூர் கடற்கரைப் பகுதியைச் சார்ந்த, 1,400 குடும்பங்களுக்கு, வீட்டு மனைப் பட்டா, இலவசமாக வழங்கப்படுகின்றது. அனைவருக்கும் எனது கையாலேயே, வீட்டு மனைப் பட்டாக்களை, வழங்க வேண்டும் என்று, நான் விரும்பினாலும்; காலத்தின் அருமையைக் கருதி, 27 நபர்களுக்கு மட்டும், இதே விழா மேடையில், வழங்க உள்ளேன் என்பதையும்; மற்றவர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும், இன்றே வழங்குவார்கள் என்பதையும்; மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுக் குடியிருப்பு இடத்திற்குத் தேவையான, இணைப்புச் சாலை வசதி, கழிவு நீர் அகற்று வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு, மின் வசதி, போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும், அரசின் செலவில், விரைவில் செய்து தரப்படும் என்பதையும்; அது மட்டுமன்றி, அப்பகுதி வாழ் மக்கள், அங்கே தங்களுக்கென்று சொந்தமாக, வீடுகளைக் கட்டிக் கொள்வதற்குத், தேவையான கடன் உதவி வழங்க, சிறப்புத் திட்டம் ஒன்றும், விரைவில் செயல்படுத்தப்படும் என்பதையும்; மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசைப் பகுதி மாற்று வாரிய வெள்ளி விழா, இந்த வாரியத்தின் புதிய சகாப்தத்தின், தொடக்க விழாவாக அமைய வேண்டும், என்று நெஞ்சார வாழ்த்துகிறேன். இந்த வாரியம், மக்கள் பணியில் தன்னை மேலும், முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, புதிய சாதனைகளைப் படைக்கும் என்று, நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த வாரியத்தின் வளர்ச்சிக்கும், இந்த வாரியத்தில் பணி புரிகின்ற, ஊழியர்களின் வளர்ச்சிக்கும், தமிழக அரசு, ஆக்கமும் ஊக்கமும் வழங்கும், என்பதை தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

***(2.12.1995 அன்று நடைபெற்ற குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வெள்ளி விழாவில் ஆற்றிய உரை)***

# வளர்ந்துவரும் நாடுகளின் வளர்ச்சியில் சிறுதொழில்களின் பங்கு சிறப்பானது

தமிழகத்தின் சிறுதொழில்கள் வளர்ச்சிக்கு, பல முன்னோடித் திட்டங்களை, முனைப்போடு செயல்படுத்தி வருகின்ற, SIDCO நிறுவனத்தின், புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்து, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளின், பொருளாதார வளர்ச்சிக்கு, சிறு தொழில்கள் ஆற்றி வருகின்ற முக்கியமான பங்கை; நாங்கள் நன்கு உணர்ந்திருந்த காரணத்தினால்தான், பெருந்தொழில்கள் மற்றும், அதிக மூலதனங்கள் கொண்ட, தொழில்களின் வளர்ச்சிக்கு ஒரு புறமும்; சிறு தொழில்கள் மற்றும், அதிக தொழிலாளர்கள் பணி புரியும், தொழில்களின் வளர்ச்சிக்கு மற்றொரு புறமும்; நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். எங்கள் அரசு அறிவித்த, புதிய தொழில் கொள்கையின் காரணமாக, இன்று விரைந்த தொழில் முன்னேற்றம், தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமின்றி, வளர்ந்து வரும் புதிய தலைமுறையின், உணர்வுகளைப் புரிந்து கொண்டு, 21-ம் நூற்றாண்டில், இந்தியத் துணைக் கண்டத்தில், எத்தகைய ஒரு சூழ்நிலை, அமைய வேண்டும் என்று, நாம் விரும்புகிறோமோ; எத்தகைய ஒரு சூழ்நிலை அமைய வேண்டும் என்று, நம்மை நடத்திச் சென்ற, லட்சியத் தலைவர்கள் எதிர்பார்த்தார்களோ; அந்த உன்னதமான சூழ்நிலையை உருவாக்கிட; நாங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். எங்கள் ஆட்சியில், மகளிர் தொழில் முனைவோர்களுக்கு, அதாவது Women Entrepreneur-களுக்கு, உதவிக் கரம் நீட்டி, அவர்களை உற்சாகப்படுத்தி, பாரதி கண்ட புதுமைப் பெண்களைத், தொழில் துறையிலும் உருவாக்கி வருகின்றோம்.

"பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்,
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என்று, புரட்சிக் கவிஞர் பாரதியார் கண்ட கனவை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன், நனவாக்கி வருவதைச் சுட்டிக்காட்டுவதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

முடங்கிக் கிடந்த பல துறைகளுக்கு, எங்கள் ஆட்சியில், நாங்கள் புத்துயிர் கொடுத்துள்ளோம். இயல்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வளர்ச்சிப் பணிகளுக்கு, ஒரு புதிய முனைப்பையும், உத்வேகத்தையும் அளித்துள்ளோம். இன்று, தமிழக அரசு செயல்படுத்தி வரும், சமூக நலத் திட்டங்களும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும், மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளதையும்; நமது திட்டச் செயல்பாடுகளுக்கு, சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து, பாராட்டுதல்கள் கிடைத்துள்ளதையும்; பெருமிதத்துடன் சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன். போக்கு வரத்து, சமூக நலம், வேளாண்மை, வீட்டு வசதி, தொழில், கூட்டுறவு என்று, எல்லா துறைகளிலும் இன்று, அனைத்திந்திய அளவில் விருதுகளை, தமிழகம் தொடர்ந்து பெற்று வருவதும், இந்தப் புதிய உற்சாகத்திற்கு, உண்மையான சான்று என்பதையும், குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன்.

தமிழக அரசின் பல நிறுவனங்கள், தொடங்கப்பட்ட நாளிலிருந்து, நாங்கள் ஆட்சி பொறுப்பேற்றது வரை, செய்துள்ள சாதனைகளையும், செயல்பாட்டையும்; எனது தலைமையில் அமைந்த, இந்த மக்கள் நல அரசு, கடந்த நான்கரை ஆண்டு கால கட்டத்தில், ஆற்றிய பணிகளையும், சாதித்துக் காட்டிய புதிய சாதனைகளையும், ஒப்பிட்டுப் பார்க்கும் போது; உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில், அந்த நிறுவனங்களின் செயல்பாடு, எவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளது, என்பது தெளிவாகும். இந்த குறுகிய கால கட்டத்தில், கடந்த 20 ஆண்டுகளின் செயல்பாட்டையே, மிஞ்சியுள்ள நிறுவனங்கள் இன்று, தமிழ்நாட்டில் பல உள்ளன என்பதை, மகிழ்ச்சியுடன் சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

வெள்ளி விழாவைக் கொண்டாடிய, இந்த SIDCO நிறுவனம், தொடக்கப்பட்ட நாளிலிருந்து, கடந்த 20 ஆண்டுகளில் 19 தொழில் பேட்டைகளை அமைத்து; 2297 தொழில் கூடங்களைக் கட்டி; தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால் கடந்த நான்கரை ஆண்டு கால கட்டத்தில், உங்கள் அன்பு சகோதரியின் ஆட்சியில் மட்டுமே, 11 தொழிற் பேட்டைகளையும், 1080 தொழிற் கூடங்களையும் உருவாக்கி, ஒதுக்கீடும் செய்துள்ளது என்பதை, ஒப்பிட்டு நோக்கும் போது; இந்த நான்கரை ஆண்டு கால சாதனை, மக்கள் நலனை மட்டுமே, மனதில் நிறுத்தி செயல்பட்ட, ஒரு துடிப்புள்ள அரசுக்கு மட்டுமே, சொந்தமாக இருக்க முடியும் என்பது, நன்கு தெளிவாகும்.

அதே போல, இந்த இரண்டு வேறுபட்ட கால கட்டங்களில், குறுந்தொழில்கள் எனப்படும் Tiny Sector-ன் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, SIDCO நிர்மாணித்து ஒதுக்கீடு செய்த, தொழிற் கூடங்களின் புள்ளி விவரங்களையும், ஒப்பிட்டு நோக்கும் போது; எங்கள் ஆட்சிக் காலத்தில், SIDCO நிறுவனத்தின் செயல்பாடு, சிறப்பாக அமைந்திருப்பது, எளிதில் புலனாகும். எங்கள் அரசு, சோதனைகளையும் சவால்களையும், அடிக்கடி சந்தித்து, பழகிப் போன அரசு. எனவேதான், நாங்கள் சங்கடங்களைத் துணிவோடு சந்தித்து, சாமர்த்தியமாகச் சமாளித்து, அவற்றையே சாதனை களாக்கியும் வருகின்றோம்.

எங்கள் ஆட்சியில் தான், முதன் முதலாக, பெண்களுக்கென பிரத்தியேகமாக, இரண்டு தொழிற் பேட்டைகள் தஞ்சாவூரில் ஒன்றும், பர்கூரில் ஒன்றும், அமைக்கப்பட்டு வருகின்றன.

1991-ஆம் ஆண்டுக்கு முன்பு, SIDCO மூலமாக, தொழிற் கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயன் பெற்ற பெண்களின் எண்ணிக்கை 26 மட்டுமே. ஆனால், கடந்த நான்கரை ஆண்டு, மகளிர் முன்னேற்ற ஆட்சியில், 292 தொழிற் கூடங்கள் மகளிர் தொழில் முனைவோர்களுக்கு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

SIDCO அமைத்து, ஒதுக்கீடு செய்யும் தொழிற் கூடங்களில், 30 சதவீத தொழிற் கூடங்களை, மகளிருக்கு, முன்னுரிமையின் அடிப்படையில், வழங்க வேண்டும் என்கின்ற, புரட்சிகரமான ஆணையை, இந்த மக்கள் நல அரசு தான், வழங்கியது என்பதையும், இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். அது மட்டுமின்றி, 1994-ஆம் ஆண்டு, சிறு தொழில் முனைவோர்களுக்கு, தவணை முறையில் இயந்திரங்கள் வழங்கும், புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு; மூலப் பொருட்கள் உதவித் திட்டத்திலும்; விற்பனை உதவி திட்டத்திலும்; இன்று பழைய குறியீட்டு அளவுகளைத் தாண்டி, புதிய இலக்குகளை அடைந்துள்ளோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

SIDCO நிறுவனம், தொழிற்பேட்டைகளை அமைத்து ஒதுக்கீடு செய்கின்ற, தொழிற் கூடங்களின் விலையைக் குறைப்பதற்காக, உங்கள் அன்பு சகோதரியின் அரசு, அதிக விலை கொடுத்து, தனியார் நிலங்களை, கையகப்படுத்தும் முறையை மாற்றி; குறைந்த விலையில்,

அரசு நிலங்களைப் பெற்று, தொழிற்பேட்டைகளை உருவாக்கி வருகின்றது.

இதன் காரணமாக, தொழிற்கூடங்களின் விலையும், கணிசமான அளவு குறைவதால், சிறுதொழில் முனைவோர்களுக்கு, இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

SIDCO தொழிற் பேட்டைகளில், தொழில் தொடங்குவோர், அனைத்து உதவிகளையும், உரிமங்களையும், ஒரே அமைப்பின் மூலம் பெறுவதற்கான, "Single Window Agency" முறையும், சமீபத்தில் என்னால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை எல்லாம், விரைந்த சிறுதொழில் வளர்ச்சிக்காக, உங்கள் அன்பு சகோதரியின் ஆட்சி மேற்கொண்டுள்ள, ஆத்மார்த்த ஈடுபாட்டின் அடையாளங்கள் என்றால், அது மிகையாகாது.

இன்று 18 கோடி ரூபாய் மதிப்பில், தொழிற்பேட்டைகள் விரிவாக்கத் திட்டங்களை, தொடக்கி வைத்ததிலும்; பல தொழில் முனைவோர்களுக்கு, தொழிற்கூட ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்குவதிலும்; நலிந்த பிரிவினர்களுக்கு, நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும்; நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 13.35 கோடி ரூபாய் மதிப்பில், 270 தொழிற்கூடங்களும்; கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில், மூன்றேகால் கோடி ரூபாய் செலவில், 48 தொழிற் கூடங்கள் கொண்ட, மற்றுமொரு ஆயத்த ஆடை வளாகமும்; அமைய உள்ளதை எண்ணி, நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

SIDCO நிறுவனத்தின் கடைநிலை ஊழியர்கள், 73 பேர்களுக்கு, 60 லட்சம் ரூபாய் மதிப்பில், வீட்டு மனைகளும், குடியிருப்புகளும்; திரு.வி.க. தொழிற்பேட்டையில், உரிக்கார நாயக்கர் இனத்தை சேர்ந்த, 58 குடும்பங்களுக்கு, 14 லட்சம் ரூபாய் மதிப்பில், வீட்டுமனைப் பட்டாக்களும்; இன்று வழங்கப்படுவதை அறிந்து, நான் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

1000 ஏக்கர் நிலப் பரப்பில், ஆவடியில், ஒரு தொழில் நகரம் உட்பட, திருமுடிவாக்கம், மணலி விச்சூர், போச்சம்பள்ளி, ஊத்தங்கரை, பெருந்துறை, ஆசனூர் வெண்மணி ஆத்தூர், நாட்றாம்பள்ளி மண்டலவாடி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தின் திருப்பத்தூர், கோவையை அடுத்த மலுமிச்சம்பட்டி ஆகிய இடங்களில்; 2655 ஏக்கர் நிலப்பரப்பில், புதிய தொழிற் பேட்டைகள்

அமைக்க, இன்று அடிக்கல் நாட்டியதில்; நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 2655 ஏக்கர் நிலப் பரப்பில், ஒரே நேரத்தில் தொழிற்பேட்டைகள் அமைக்க, எங்கள் அரசு மேற்கொள்ளும் முயற்சி, இதுவரை எந்த அரசாலும், மேற்கொண்டிருக்க இயலாது என்பதைத், திட்டவட்டமாக, என்னால் எடுத்துக் கூற முடியும். நிச்சயமாக இன்றைய விழா, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக மாறும், என்பதில் ஐயமில்லை. இந்தப் புதிய தொழிற்பேட்டைகள், செயல்படத் துவங்கும் போது, 2 லட்சம் பேருக்கு, நேரடி வேலை வாய்ப்பும்; 6 லட்சம் பேருக்கு, மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும், என்பதை எண்ணும் போது; என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

சென்னை மாநகர் மற்றும், புறநகர்ப் பகுதிகளில் வாழும் மகளிர், சிறு மற்றும் குறுந்தொழில்களைத் தொடங்குவதில், சமீப காலமாக, அதிக ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர்.

எனவே, சென்னைக்கு அருகில், மகளிருக்கு என பிரத்தியேகமாக, ஒரு புதிய தொழிற் பேட்டையை அமைக்க, எங்கள் அரசு முடிவு செய்துள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தொழிற்பேட்டையை அமைக்க, வேளச்சேரியை அடுத்துள்ள பகுதியில், 134 ஏக்கர் நிலப் பரப்பு, தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

SIDCO தொழிற் பேட்டைகளில், தவணை முறையில் தொழிற்கூடங்கள் பெற்று, தொழில் தொடங்குவோருக்கும்; தவணை முறையில் இயந்திரங்களைப் பெற்று, தொழில் தொடங்குவோருக்கும்; ஊக்கத் தொகையாக அரசுத் தரப்பில், மானியம் வழங்கும் முறை, 1988-ஆம் ஆண்டு வரை, கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. பின்னர், இந்த மானியம் வழங்கும் திட்டம், கைவிடப்பட்டது. சமீப காலமாக, மிக அதிக அளவில், மகளிர், சிறுதொழில்கள் வளர்ச்சியில் அக்கறை காட்டி வருவதால்; அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு; அரசுத் தரப்பில் அவர்களுக்கு, மானியம் வழங்கும் திட்டம், மீண்டும் அறிமுகப்படுத்தப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணையும், நிதி ஒதுக்கீடும், விரைவில் வழங்கப்படும்.

SIDCO தொழிற் பேட்டைகளில், மேம்படுத்தப்பட்ட மனைகள், மற்றும் தொழிற் கூடங்களுக்கு, முத்திரை தீர்வையிலிருந்து, அதாவது

Stamp Duty-லிருந்து, ஏற்கனவே முழுமையாக, விலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. அவற்றின் சந்தை மதிப்பில், ஒரு சதவீதம் மட்டுமே, பதிவுக் கட்டணமாக, Registration Charge-ஆக, பதிவுத் துறையால், தற்போது வசூலிக்கப்பட்டு வருகிறது. நிலத்தின் வெளிச் சந்தை மதிப்பில், இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுவதால், இந்த பதிவுக் கட்டணம், அதிக அளவில் செலுத்த வேண்டி உள்ளதாகவும்; SIDCO நிர்ணயித்த, நில மதிப்பின் அடிப்படையில், இந்த ஒரு சதவீத, பதிவுக் கட்டணத்தைச் செலுத்துகிற சலுகையை, வழங்க வேண்டும் என்று, பல தொழில் முனைவோர்கள், கோரி வருவதையும்; நான் நன்கு அறிவேன். அவர்களின் அந்தக் கோரிக்கையை, இன்று ஏற்றுக் கொண்டு, இனி SIDCO நிர்ணயம் செய்த, நில மதிப்பின் அடிப்படையிலேயே, பதிவுக் கட்டணம் நிர்ணயிக்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தை விரைவில், நடைமுறைக்குக் கொண்டு வர, தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

SIDCO-வின் 17 தொழிற் பேட்டைகளில், குறைந்த வருவாய் பெறுகின்ற, SIDCO தொழிலாளர்களுக்காக, 1099 குடியிருப்புகள், கருணையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புகளை, அவர்களுக்கே சொந்தமாக்கிக் கொள்ள, 1993-ஆம் ஆண்டில், ஆணை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையில், இத்தகைய நிலங்களின் மதிப்பை, ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுமைக்கும், சதுர மீட்டர் ஒன்றுக்கு, 500 ரூபாய் என, நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என்று, வித்தியாசமின்றி நிர்ணயிக்கப்பட்ட நில மதிப்பீட்டை, இடத்தின் தன்மைக்கேற்ப, குறைக்க வேண்டும் என்ற SIDCO ஊழியர்களது கோரிக்கை, எனது கவனத்திற்குத் கொண்டு வரப்பட்டுள்ளது. அவர்களது குறைகளைத் தீர்க்க, எங்கள் அரசு, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்தின் சிறுதொழில் வளர்ச்சிக்கு வித்திட்டு, சிறு, குறு தொழில்களின் வளர்ச்சிக்கு, தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயல்பட்டு வருகின்ற SIDCO நிறுவனம்; மேலும் பல புதிய சாதனைகளைப் படைத்து, விரைந்த தொழில் முன்னேற்றத்திற்கு, ஒரு தூண்டுகோலாகவும்; தொழில் முனைவோருக்கும் அரசாங்கத்திற்கும் இடையே, ஒரு இணைப்புப் பாலமாகவும் விளங்க வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தொழில்களின் முன்னேற்றமே, SIDCOவின் முன்னேற்றம் என்பதை உணர்ந்து; இந்நிறுவனத்தின் அலுவலர்களும், பணியாளர்களும், ஊழியர்களும் செயல்படுவார்கள் என்று, நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த எழுச்சியான விழாவில் கலந்து கொண்ட, உங்கள் அனைவருக்கும், எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொண்டு விடை பெறுகிறேன்.

***(4.12.1995 அன்று நடைபெற்ற சிட்கோ நிறுவனத்தின் புதிய திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை)***

# சத்துணவுப்பணி ஒரு சமுதாய நற்பணி

தமிழகத்தின் சரித்திரத்தில் மட்டுமின்றி, இந்தியச் சரித்திரத்திலேயே, தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ள நகரம், இந்த வேலூர் நகரம். சரித்திர சிறப்பு மிக்க, இந்தக் கோட்டை வெளி மைதானத்தில், நடைபெறுகின்ற எழுச்சி மிக்க, சத்துணவு அமைப்பாளர்களின் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

இந்தக் கோட்டையிலே நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், இன்று வரலாற்றில் சிறப்பு பெற்று விளங்குவதைப் போல; கோட்டை வெளி மைதானத்தில், இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும், இந்த மாபெரும் விழா, எதிர்கால வரலாற்றில், ஒரு நினைவுகூரத் தக்க, நிகழ்ச்சியாக உருவாகும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், அமைந்துள்ள இந்த அரசு, அனைத்துத் தரப்பு மக்களின், தேவைகளை அறிந்து செயல்படுவதோடு; அரசு ஊழியர்களின் பிரச்சினைகளையும், தாயுள்ளத்தோடு அணுகி, அவற்றிற்குத் தீர்வு கண்டு வருகிறது. இந்தப் பேருண்மையை விளக்கும் வகையில், இன்றைய நிகழ்ச்சி அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

இந்த மாநாட்டினை சிறப்பாக ஏற்பாடு செய்ததோடு, வேலூரில் எனக்கு நீங்கள் அளித்த, மாபெரும் வரவேற்பையும், அதன் பின்னணியில் அமைந்துள்ள, உங்களது அன்பையும் பாசத்தையும் எண்ணி, நான் உண்மையில் பெருமிதம் அடைகின்றேன். பேரறிஞர் பெருந்தகை அண்ணாவும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரும், எத்தகைய ஒரு சமதர்ம, சமத்துவ சமுதாயத்தை, படைக்க வேண்டும் என்று விரும்பினார்களோ; சட்ட மேதை பாபா சாஹேப், அண்ணல் டாக்டர் B.R. அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்புணர்ச்சி பெற்று; எத்தகையதொரு சமூக, பொருளாதார சுதந்திரத்தை அடைந்து; நல்வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தார்களோ; அத்தகைய ஒரு அருமையான சூழ்நிலையை, உருவாக்கித் தருவதில், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, கடந்த நான்கரை ஆண்டுகளாக, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றது. அண்ணல் டாக்டர் B.R. அம்பேத்கரின், நினைவு நாளான இன்று, அவரது

பெயரால் அமைந்துள்ள இந்த மாவட்டத்தில், மாபெரும் மக்கள் நலத் திட்டமாம், சத்துணவு திட்ட அமைப்பாளர்களின், மாநில மாநாடு நடைபெறுவது, சிறப்பிற்குரியதாகும். தாழ்த்தப்பட்ட மக்கள்; நலிவடைந்தோர்; ஏழை, எளிய மக்கள், ஆகியோரின் நலன் காக்க; நாங்கள் நிறைவேற்றி வரும், சமூக நலத் திட்டங்களையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும், இந்த நேரத்தில் நினைவு கூர்வது, பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இது மக்கள் நல அரசு; மகளிர் முன்னேற்ற அரசு; மக்களின் எண்ணங்களையும், தேவைகளையும் ஆராய்ந்து, "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து", நன்மைகளை வழங்குகின்ற, ஒரு அன்புச் சகோதரியின் அரசு.

ஒரு நாடு நலம் பெற வேண்டும் என்றால், அந்த நாட்டின் மனித வளத்தை, நாம் மேம்படுத்தியாக வேண்டும்.

"தனி ஒருவனுக்கு உணவிலை எனில்,
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று, மகாகவி பாரதி முழங்கிய சங்க நாதத்தை, மதிய சத்துணவுத் திட்டம், என்ற மாபெரும் திட்டத்தின் மூலம், பரிட்சார்த்தமாக நடைமுறைப்படுத்திக் காட்டியவர், எனது அரசியல் ஆசான், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள். மனித வளத்தினால், நியாயமான பலன்கள் கிடைக்க வேண்டுமென்றால், மனித நேயத்தையும் வளர்த்தாக வேண்டும் என்பதையும், அவர் நடைமுறைப்படுத்திக் காட்டினார்.

மலர்ந்து பூத்துக் குலுங்க வேண்டிய, குழந்தை மலர்கள், பசியின் கொடுமையால், வாடி வதங்கக் கூடாது, என்ற சமுதாய நல்லெண்ணம்; வயிற்றுப் பசியால் அவர்கள் துன்புற்று, அறிவுப் பசியைத் தணித்துக் கொள்ளும், நல்ல வாய்ப்புகளை இழந்து விடக் கூடாது, என்ற மனித நேயக் கோட்பாடு; ஆகியவற்றின் தீர்க்கமான வெளிப்பாடு தான், ஆண்டொன்றுக்கு, 400 கோடி ரூபாய் செலவில், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, செயல்படுத்தி வரும், "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம்".

இந்தச் சத்துணவுத் திட்டம் என்றால், எனக்கு ஒரு தனிப்பட்ட ஈடுபாடு, ஏன் ஒரு Sentimental attachment- உண்டு. ஏனென்றால், எனது பொது வாழ்க்கைத் தொடக்கத்திற்கும், சத்துணவுத் திட்டத்திற்கும், நெருக்கமான தொடர்பு உண்டு.

1982-ஆம் ஆண்டில், நான் பொது வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தேன். அதே ஆண்டு, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், மதிய சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கினார்கள். எனது பொது வாழ்க்கையில், நான் வகித்த முதல் பதவி, சத்துணவுத் திட்ட உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் பதவியாகும். பின்னர் நான், கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆனேன்; நாடாளுமன்ற உறுப்பினர் ஆனேன்; சட்டமன்ற உறுப்பினராகி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகச் செயலாற்றினேன். இன்று கழகப் பொதுச் செயலாளராகவும், தமிழக முதலமைச்சராகவும், மக்கள் பணியாற்றி வந்தாலும்; எனது பொது வாழ்க்கையின், முதல் படியாக இருந்த, சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர் பதவியை, நான் என்றைக்குமே மறந்தது இல்லை. நான் கட்சியிலும், அரசாங்கத்திலும், எந்த ஒரு பதவியையும் வகிப்பதற்கு முன்பே; மக்கள் நலப் பணிகளில், என்னை முழுமையாக ஈடுபடுத்திட, வழி வகுத்த காரணத்தினால், சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழுவில் பணியாற்றியதை, நான் ஒரு பெருமிதத்துடன், இன்றும் நினைத்து மகிழ்வது உண்டு.

நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ள பணி, சாதாரண அரசுப் பணி மட்டும் அல்ல! அது ஒரு சமுதாய நற்பணி! வளரும் தலைமுறையினருக்கு, ஒரு தாயுணர்வுடன் அமுது படைத்து; அவர்கள் வயிரார உண்டு மகிழ்வதைக் கண்டு, மனநிறைவு அடையும், மனிதத் தன்மை மிக்க, மகத்தான பணி! அந்தச் சமுதாய உணர்வு சற்றும் குன்றாமல்; நீங்கள் தொடர்ந்து, ஒரு புதிய முனைப்புடன், உங்கள் பணிகளை, ஒரு தொண்டு உள்ளத்துடன் மேற்கொள்ள வேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த நான்கரை ஆண்டு காலக் கட்டத்தில், உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், அமைந்த இந்த அரசு, பெண்கள் முன்னேற்றத்திற்கென, கொள்கை ஒன்றையும்; குழந்தைகள் மற்றும் மகளிர் நலன் காக்க, 15 அம்சத் திட்டத்தையும்; பெண் சிசு வதையைத் தடுக்க, தொட்டில் குழந்தைத் திட்டத்தையும்; பெண் குழந்தைகளின் வாழ்வில், புதிய வசந்தத்தை ஏற்படுத்த, “பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தையும்” தீட்டி; முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

உடல் ஊனமுற்றோரின் நலன் காக்க, நாங்கள் ஒரு புதிய கொள்கையை அறிவித்தோம். அந்தக் கொள்கையைச் செயல்படுத்த,

ஊனமுற்றோர் நலத் துறை ஒன்றையும் ஏற்படுத்தினோம். சமுதாயக் கொடுமைகளிலிருந்து, மகளிரைக் காப்பாற்ற, மாநிலம் முழுவதும் இன்று, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், திறம்படச் செயல்பட்டு வருகின்றன. மாநில பெண்கள் நலக் குழுமமும்; முழுவதும் பெண்களாலேயே நடத்தப்படும், நியாய விலைக் கடைகளும்; இன்று இந்திய துணைக் கண்டத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன.

கருவுற்ற மகளிருக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை, எங்கள் ஆட்சிக் காலத்தில், 200 ரூபாயிலிருந்து, 300 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகையை, அதிகமானோருக்கு வழங்கியதோடு மட்டுமல்லாமல், ஓய்வூதியத் தொகையை இரண்டு மடங்காக்கி, மாதம் ஒன்றுக்கு, 100 ரூபாய் வழங்கும் திட்டத்தையும், அமல்படுத்தினோம்.

நலத் திட்டங்களின் பயன்கள், மக்களுக்கு சென்றடைய, முனைப்புடன் செயல்படுகின்ற, அரசுப் பணியாளர்களின் நலனை, ஒரு தாயுணர்வுடன், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, பாதுகாத்து வருகின்றது. இன்று தமிழக அரசில் பணியாற்றி வரும், 12.23 லட்சம் பணியாளர்களில், 22.8 சதவீதத்தினர், அதாவது 2.7 லட்சம் பேர், சத்துணவுத் திட்டத்தில், பணி புரிந்து வருகின்றார்கள் என்பதிலிருந்து, இத்திட்டத்தில் நாங்கள் செலுத்தி வரும் அக்கறை, தெளிவாகும் என்று கருதுகிறேன்.

கூட்டுறவுத் துறையில், நியாய விலைக் கடைகளில், தொகுப்பூதியம் பெற்று, பணியாற்றி வந்த பணியாளர்களில்; 5 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்த, 7500க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு, ஊதிய விகிதம் அதாவது Time Scale நிர்ணயம் செய்து, ஊதியம் வழங்கியுள்ளோம். பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த, அரசுப் பணியாளர்களுக்கு, பல புதிய சலுகைகள், உங்கள் அன்பு சகோதரியின் ஆட்சியில், வழங்கப்பட்டுள்ளன என்பதை, பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதம் ஒன்றுக்கு, 150 ரூபாய்க்கும் அதிகம், தொகுப்பூதியம் பெறும் சத்துணவு ஊழியர்களுக்கு, இன்று ஆண்டொன்றுக்கு, 20 ரூபாய் ஊதிய உயர்வும்; 150 ரூபாய்க்கும் குறைவாக, தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு, மாதம் 10 ரூபாயும்; கடந்த நாலரை ஆண்டு காலக் கட்டத்தில், 5 முறை வழங்கப்பட்டுள்ளன. மேலும், அரசு

ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம், போன்ற சலுகைகள் வழங்கப்பட்ட போதெல்லாம்; தொகுப்பூதியம் பெறுகின்ற சத்துணவுப் பணியாளர்களுக்கும், அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாதம் ஒன்றுக்கு, 500 ரூபாய் தொகுப்பூதியம் பெறுகின்றவர்களுக்கு, 1994 மற்றும் 1995 ஆகிய இரண்டு ஆண்டுகளில், ஆண்டொன்றுக்கு 40 ரூபாய் வீதம், மொத்தம் 80 ரூபாயும்; 500 ரூபாய்க்கும் குறைவாக, தொகுப்பூதியம் பெறுகின்றவர்களுக்கு, ஆண்டொன்றுக்கு 25 ரூபாய் வீதம், மொத்தம் 50 ரூபாயும் வழங்கி மகிழ்ந்துள்ளோம்.

சத்துணவுத் திட்டத்தினை, ஒரு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன், சமுதாய நற்பணியாக மேற்கொண்டு வரும், சத்துணவு மற்றும், குழந்தை நல அமைப்பாளர்களது மனம் குளிர; சில புதிய அறிவிப்புகளை, இங்கே வெளியிடுவதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தொகுப்பு ஊதியம் பெற்று வரும், சத்துணவு அமைப்பாளர்கள், தங்களுக்கு ஊதிய விகிதம் அளித்து; ஒவ்வொரு ஆண்டும் ஊதிய உயர்வு, அதாவது, Annual increment பெறும் முறையை, நடைமுறைப்படுத்த வேண்டும் என்று, பல காலமாக கோரி வருகிறார்கள். அந்த கோரிக்கை இன்று என்னால், முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 13 ஆண்டுகளாக, தொகுப்பூதியம் மட்டுமே பெற்று வந்த, சத்துணவு அமைப்பாளர்களுக்கும்; மற்றும் குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கும்; வரும் புத்தாண்டு முதல், ஊதிய விகிதத்தில், அதாவது, Time Scale - Å, ஊதியம் வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 200 ரூபாயிலிருந்து தொடங்கி, 400 ரூபாயில் முடியும், ஒரு புதிய ஊதிய விகிதத்தில்; சத்துணவு அமைப்பாளர்களுக்கு, ஊதியம் நிர்ணயம் செய்யப்படும். இந்தப் புதிய ஊதிய விகிதம், நடைமுறைப்படுத்தப்படும் போது; சத்துணவு அமைப்பாளர்களுக்கு, 40 ரூபாயிலிருந்து, 110 ரூபாய் வரை, உடனடியாக, கூடுதல் ஊதியம் கிடைக்கும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிவிப்பினால் அரசுக்கு, 8 கோடி ரூபாயிலிருந்து, 9 கோடி ரூபாய் வரை, கூடுதல் செலவினம் ஏற்படும் என்றாலும்; ஒரு லட்சம்

சத்துணவு அமைப்பாளர்கள், இதனால் பயன் பெறுவார்கள், என்பதை எண்ணும் போது; இந்தக் கூடுதல் நிதிச் சுமை, எங்களுக்கு நிச்சயமாக, ஒரு பாரமாகத் தெரியவில்லை.

தற்போது, சத்துணவு வழங்கப்படும் ஒவ்வொருவருக்கும், காய்கறி, மற்றும் இதர பொருட்களை வாங்குவதற்காக, 13 காசுகள் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.

சத்துணவில் கூடுதலாக காய்கறிகளையும், கீரைகளையும் சேர்க்க வேண்டும் என்பதற்காக; காய்கறி மற்றும் இதர பொருட்களுக்கான செலவினத் தொகை, நபர் ஒன்றுக்கு 13 காசிலிருந்து, 18 காசாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் ஒவ்வொரு ஆண்டுக்கும், 15 கோடி ரூபாய் அளவில், கூடுதல் செலவினம், அரசுக்கு ஏற்பட்டாலும்; லட்சக்கணக்கான குழந்தைகளின், ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு, இது வழி வகுக்கும், என்பதை எண்ணிப் பார்க்கும் போது, என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

எல்லாச் சத்துணவு மையங்களுக்கும், சொந்தக் கட்டிடங்களை ஏற்படுத்தித் தருவதில், எங்கள் அரசு, ஒரு புதிய முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. சத்துணவு மையங்களுக்கு, புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கென, தனியே, 5 கோடி ரூபாய் நிதி, ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும்; இதற்கான அரசாணை, விரைவில் வழங்கப்படும் என்பதையும்; மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பாதுகாக்கப்பட்ட குடிநீரும், முழுமையான சுகாதார வசதிகளும், எல்லா சத்துணவு மையங்களுக்கும், வழங்க வேண்டும் என்பதே, எங்களது குறிக்கோள். எனவே, எல்லாச் சத்துணவு மையங்களுக்கும், படிப்படியாக இந்த வசதிகள், ஒரு நான்காண்டு காலகட்டத்தில், ஏற்படுத்தித் தர; ஒரு சிறப்புத் திட்டத்தை, அரசு விரைவில் செயல்படுத்தும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982-ஆம் ஆண்டு, சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்படும் போது, அதன் செலவினம், ஆண்டுக்கு 100 கோடி ரூபாய் மட்டுமே. 10 வருடங்களுக்குப் பின்பு, 1992-ஆம் ஆண்டு, எங்கள் ஆட்சிக் காலத்தில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டை நாங்கள், 200 கோடி ரூபாயாக உயர்த்தினோம். சத்துணவு திட்ட விரிவாக்கத்தின்

விளைவாக, இந்தச் செலவினம் கடந்த நான்கு ஆண்டுகளில், இரண்டு மடங்காகியுள்ளது அதாவது 400 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்ற, கர்ப்பிணிப் பெண்கள், கூடுதலாக ஊட்டச் சத்து பெறவும்; கர்ப்ப காலத்தில் ஏற்படும், ஊதியக் குறைவைச் சமாளிக்கவும்; மாதம் ஒன்றுக்கு, 75 ரூபாய் வீதம், 4 மாதங்களுக்கு, 300 ரூபாய் வழங்கி வருகின்றோம். இந்த ஊட்டச் சத்து, நிதி உதவி திட்டத்தின் கீழ், 2 லட்சம் கர்ப்பிணிப் பெண்கள், தற்போது பயன் பெற்று வருகின்றார்கள். ஆனால், வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்ற, ஏழைக் கர்ப்பிணிப் பெண்களுக்கு, சில நேரங்களில், சரியான உணவு கூட கிடைக்காத சூழ்நிலைகள், இருந்து வருவதால்; இனி அந்த குறையைப் போக்க, 2 லட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கும், இன்று முதல், சத்துணவு வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காக, சமுதாய நல நோக்குடன் பாடுபட்ட, அண்ணல் **B.R.** அம்பேத்கர் அவர்களின், நினைவு நாளையொட்டி, அரசு நிதி உதவி பெறும், கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும், சத்துணவு வழங்கும் திட்டம், இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த, 4 கோடியே 12 லட்சம் ரூபாய், தமிழக அரசுக்கு கூடுதலாக செலவாகும் என்றாலும்; எனது அன்பிற்குரிய சகோதரிகளின் நல்வாழ்விற்கும், உடல் நலத்திற்கும், இது வழி வகுக்கும் என்பதை எண்ணி, பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காவல் துறையில், காவலர்களாக பணி நியமனம் பெற, குறைந்த பட்ச உயர அளவு, 168 சென்டி மீட்டர், என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால்; பல நேரங்களில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு, பிரச்சினைகள் ஏற்பட்டு, அவர்கள் அதிக அளவில், காவல் துறையில் பணி பெறுகின்ற வாய்ப்பினை, இழக்க வேண்டி உள்ளது என்பது, எனக்குத் தெரிய வந்துள்ளது. இந்தக் குறையைப் போக்கிடவும்; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள், அதிக அளவில் காவல் துறையில், நியமனம் பெற வழி வகுக்கவும்; காவல் நியமன விதிகளில், தக்க மாறுதல்கள் செய்யப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு, இந்த குறைந்த பட்ச உயரத்தின் அளவு, 168 சென்டி மீட்டர் என்பதை, 3 சென்டி மீட்டருக்கு குறைத்து, 165 சென்டி மீட்டர், என நிர்ணயம் செய்யப்படும் என்பதையும்; இனி 165 சென்டி மீட்டர் அதாவது ஐந்தரை அடி உயரம் இருந்தாலேயே, அவர்கள் காவல் துறையில் பணி புரிய, வழி வகை செய்யப்படும் என்பதையும்; டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களின், நினைவு நாளான இன்று, இந்த வேலூர் கோட்டையிலிருந்து அறிவிப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நிச்சயமாக இந்த அறிவிப்பு, சமூக நீதியை நிலை நாட்ட, உதவிகரமாக விளங்கும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

சத்துணவு அமைப்பாளர்கள் மாநில மாநாட்டினை, இத்தனை பிரம்மாண்டமான முறையில், சீரோடும், சிறப்போடும் ஏற்பாடு செய்த, மாண்புமிகு சமூக நலம், கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர், புலவர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்களுக்கும்; அரசு அலுவலர்களுக்கும்; சத்துணவு அமைப்பாளர்களின் சங்கங்களுக்கும்; மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்து, இங்கு பெருந்திரளாகக் குழுமி உள்ள, சத்துணவு அமைப்பாளர் களுக்கும்; எனது இதயங்கனிந்த பாராட்டுதல்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும், உரித்தாக்கிக் கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வரும், ஊழியர்கள் அனைவரும், இதனை ஏதோ ஒரு பணி என்று கருதாமல், தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள, மாபெரும் சமுதாயப் பொறுப்பு, என்பதை உணர்ந்து; இதனை ஒரு சமூக நலப் பணியாகக் கருதி, பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சத்துணவுப் பணியாளர்களின் தேவைகளை, ஒரு தாயுணர்வுடன், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, நிறைவேற்றித் தர, என்றென்றும் தயாராக உள்ளது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய இந்த விழா, சத்துணவு திட்ட சரித்திரத்தில், ஒரு புதிய மைல் கல்லாக அமையும், என்று உறுதியாக நம்புகிறேன். நீங்கள் அனைவரும், எல்லா நலனும், எல்லா வளமும் பெற்று, பெருவாழ்வு வாழ வேண்டும் என்று, நிறைந்த மனதோடு, நெஞ்சார வாழ்த்தி விடை பெறுகிறேன்.

***(6.12.1995 அன்று வேலூரில் நடைபெற்ற தமிழ்நாடு சத்துணவுப் பணியாளர்கள் மாநில மாநாட்டில் ஆற்றிய உரை)***

# கொடிநாள் நிதி திரட்டுவதில் தமிழகம் என்றென்றும் முன்னணியில் நிற்கும்

நமது தாய்த் திருநாட்டைக் காத்திடும் தன்னலமற்ற பணியில் தங்களது இன்னுயிரைத் துச்சம் என மதித்து தியாக உணர்வோடு செயல்பட்டு வரும் முப்படை வீரர்களின் சீரியப் பணியை ஒரு நாட்டுப் பற்றுடன் நினைவுகூரும் நன்னாள் தான் டிசம்பர்த் திங்கள் ஏழாம் நாள். முப்படை வீரர்களுக்கும், முன்னாள் ராணுவ வீரர்களும், அவர்தம் குடும்பங்களுக்கும், நமது நன்றியை தெரிவிக்கும் வண்ணம் ஆண்டு தோறும் டிசம்பர்த் திங்கள் ஏழாம் நாளைக் கொடி நாளாக நாம் கொண்டாடி மகிழ்கின்றோம்.

நமது நாட்டின் எல்லைகளை எதிரிகளால் தொடக் கூட முடியாத வண்ணம், முப்படை வீரர்களும் வீராங்கனைகளும், கொடும் பனியிலும், கொட்டும் மழையிலும், சுட்டெரிக்கும் வெய்யிலிலும், சூரைக் காற்றிலும் அரும் பணியாற்றி வருகின்றார்கள். இந்தியா விடுதலை அடைந்த பின்பு, இந்திய நாட்டின்மீது அயல் நாட்டவர்களின் ஆக்கிரமிப்பு முயற்சிகளை முறியடித்த பெருமைக்குரியவர்களை மன நிறைவோடு நினைவுகூர்ந்து, நாம் சுதந்திரமாக இந்த மண்ணில் செயல்படுவதற்கு ஊன், உறக்கமின்றி பாடுபட்டு வரும் முப்படை வீரர்களுக்கு, நமது நெஞ்சார்ந்த நன்றியை இந்த நல்ல நாளில் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

படை வீரர்களின் பணி நம் தாயகத்தின் எல்லைகளைக் காத்து நிற்பதோடு மட்டும் நின்று விடுவது இல்லை; பல்வேறு சமயங்களில் இயற்கைச் சீற்றங்களால் ஏற்படுகின்ற இடர்பாடு களிலிருந்தும், இன்னல்களிலிருந்தும் மக்களைக் காக்கின்ற மாபெரும் சமுதாயப் பணியையும் நமது முப்படை வீரர்கள் ஆற்றி வருகின்றார்கள்.

நமக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் படை வீரர்களின் சேவையையும் அவர் தம் தியாகத்தையும் நினைவுகூர்வதோடு நமது கடமை நின்று விடுவது இல்லை. அவர்தம் நலத்திலும், ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களின் நலத்திலும் முன்னாள் ராணுவத்தினரின் குடும்பங்களின் நலத்திலும் நாம் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் அக்கறை செலுத்தியாக வேண்டும்.

ஜாதி, மத பேதமின்றி நாட்டிற்காக நன்மை செய்யும் நல்லவர்களை அரவணைத்து ஆதரிக்க வேண்டும் என்கின்ற கொள்கையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட எங்கள் அரசு கடந்த நாலரை ஆண்டு காலமாக முன்னாள் படை வீரர்களின் நலன் காக்கப் பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி முனைப்போடு செயல் படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு முன்னாள் படை வீரர்களின் மறுவாழ்வு மற்றும் புனரமைப்பிற்காக தமிழக அரசும் உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையின் கீழ் மேற்கொண்டு வருகின்ற பல்வேறு நலத் திட்டங்கள் இன்று மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாகப் பல்வேறு நிறுவனங்களின் பாராட்டுக்களையும் பெற்று உள்ளது. முன்னாள் படை வீரர்களின் குடும்பங்களின் நலன் காக்க நாம் மேற்கொள்ளும் திட்டங்களில் தமிழக மக்கள் எத்தனை ஆர்வத்தை காட்டி வருகிறார்கள் என்பதை ஒவ்வொரு ஆண்டும் கொடி நாள் வசூலில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களை மிஞ்சி இந்தியத் துணைக் கண்டத்தில் முதலிடம் வகித்து வருவது எடுத்துக் காட்டுகிறது என்று உறுதியாக நம்புகிறேன்.

கொடி நாள் நிதி திரட்டுவதில் முன்னணியில் இருப்பதால் அகில இந்திய அளவிலான முதல் பரிசினை நமது தமிழகம் தொடர்ந்து பெற்று வருவதை இங்கு நினைவுகூர்வதில் பெருமை அடைகிறேன்.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு”,

என்று வள்ளுவப் பெருந்தகையின் குரலுக்கேற்ப தமிழக மக்கள் உள்ளார்ந்த உணர்வுடன் முப்படை வீரர்களின் தியாகத்தையும் தன்னலமற்ற சேவையையும் எப்போதும் மிகுந்து பாராட்டி வருகிறார்கள் என்பதற்கு இந்த ஒரு நிகழ்ச்சி சான்றாகும். அந்த பாரம்பரியமும், கலாச்சாரமும் தமிழகத்தில் தொடர்ந்து நிலைபெற்று மேலும் ஒரு முனைப்பு அடைந்தது என்பதை உறுதியாக்கும் வண்ணம் கொடி நாள் நிதி திரட்டுவதில் தமிழகம் என்றென்றும் முன்னணியில் இருக்கும் என்பதை உறுதிப்படுத்தும் வண்ணம் தமிழக மக்கள் அனைவரும் தங்களால் இயன்ற நிதி உதவியை வழங்கிட வேண்டும் என்று உணர்ந்து அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கொடி நாள் அன்று திரட்டுகின்ற நன்கொடையும் நிதியும் போரில் வீர மரணம் அடைந்த குடும்பத் தலைவர்களை இழந்து வாடுகின்ற குடும்பங்களுக்கும் விழுப்புண்களைப் பெற்று ஊனமடைந்த படை வீரர்களுக்கும் நற்பணியாற்றி ஓய்வு பெற்ற படை வீரர்களின் புனர்வாழ்விற்கும் பயன்படுத்தப்படுகின்றன. முன்னாள் படை வீரர்கள் சுய தொழில் தொடங்கி வருவாயை ஈட்ட வழி வகுக்கவும், அவர் தம் பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குவதற்கும், திருமண உதவித் தொகை வழங்குவதற்கும், தொழில் பயிற்சி அளிப்பதற்கும் இந்தக் கொடி நாள் நிதி பயன்படுத்தப்படும்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு அதிக பட்சமாக வசூல் செய்யப்பட்ட கொடி நாள் நிதி மொத்தம் ஒரு கோடியே இருபது லட்சம் மட்டுமே ஆகும். ஆனால் எங்கள் அரசு இந்தப் பணியில் ஒரு ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன் செயல்படுத்தி 1992-93-ஆம் ஆண்டில் 1.75 கோடி ரூபாய் நிதியும், 1993-94-ஆம் ஆண்டில் 2.28 கோடி ரூபாய் நிதியும் கொடி நாள் நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக இன்று அகில இந்திய அளவில் Per Capita Contribution அதாவது, தனி நபர் நன்கொடை வீதம் என்ற அளவில் இன்று இந்தியாவில் முதலிடம் வகிக்கின்றது.

இரண்டாவது உலகப் போரில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள மூத்த முன்னாள் படை வீரர்களுக்கும், அப்போரில் உயிர் இழந்த படை வீரர்களின் ஆதரவற்ற மனைவியருக்கும் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதம் வாழ்நாள் முழுமைக்கும் ஓய்வூதியம் வழங்குகின்ற திட்டமொன்று உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 5906 பேருக்கு கிட்டதட்ட ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் இந்த மாதாந்திர ஓய்வு நிதி ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு திருக்கோயில் பாதுகாப்பு படை என்ற அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி 2000 முன்னாள் படை வீரர்கள் பணி புரிய நாங்கள் புதிய வாய்ப்பினை உருவாக்கித் தந்தோம். சீரிய சேவைக்காக மத்திய அரசிடம் வீர விருது மற்றும் பதக்கங்கள் பெற்றுள்ள தமிழ்நாட்டின் முன்னாள் படை வீரர்களுக்குப் பண முடிப்பு வழங்குவது என்று ஆணை பிறப்பித்து எங்கள் அரசு அதை செயல்படுத்தி வருகின்றது.

முன்னாள் படை வீரர்களின் குடும்பத்தினருக்குக் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு, குடியிருக்க வீடுகளில் இட ஒதுக்கீடு, மருத்துவ மனைகளில் புதிய சலுகைகள், தொழில் கூடங்களில் இட ஒதுக்கீடு மற்றும் வேலைவாய்ப்பில் சிறப்பு ஒதுக்கீடும் முன்னுரிமையும் வழங்கி அதை தீவிரமாகச் செயல்படுத்தி வருவது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு என்பதைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

போர்க்களத்தில் இறந்த படை வீரர்களின் வாரிசுகளுக்கு அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும் போது இறந்தால் எவ்வாறு கருணையின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்படுகிறதோ அதேபோல் அவர்களின் வாரிசுதாரர்களுக்கும் தமிழக அரசில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பதை நான் சென்ற ஆண்டு அறிவித்திருந்தேன். இந்த மாபெரும் சலுகை வழங்கி மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்குவது எங்கள் அரசு தான் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட கடமைப் பட்டுள்ளேன்.

நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு TIIC நிறுவனத்தின் மூலம் 323 முன்னாள் படை வீரர்களின் குடும்பங்களுக்கு தொழில் தொடங்க நிதி உதவிகளை வழங்கி உள்ளோம். 11.46 கோடி ரூபாய் இந்த வகையில் நிதி உதவி தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் படை வீரர்களுக்கான சுய தொழில் திட்டம் 2ன் கீழ் 1.35 கோடி ரூபாய் நிதி உதவி 437 பேருக்கும், முன்னாள் படை வீரர்களுக்கான தொழில் திட்டம் 3ன் கீழ் 94 லட்சம் ரூபாய் 478 பேருக்கு வழங்கி, முன்னாள் படை வீரர்களின் சுய வேலைவாய்ப்பில் ஒரு புதிய மைல் கல்லை எட்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழக மக்கள் தேசிய உணர்வோடு, தேசிய நீரோட்டத்தில் கலந்து நாட்டின் நலன் காக்கவும், நல்லோரின் நலனைக் காக்கவும் தொண்டு மனப்பான்மையோடும், தியாக உணர்வோடும் செயல்படுபவர்கள் என்பதை இந்தக் கொடி நாளில் மீண்டும் நிரூபிக்கும் வண்ணம் தமிழக மக்களாகிய நீங்கள் அனைவரும் உங்களால் இயன்ற அளவிற்கு நிதி உதவி வழங்க வேண்டுமென்று உங்கள் அன்புச் சகோதரி என்ற முறையிலும் தமிழக முதலமைச்சர் என்ற முறையிலும் கேட்டுக் கொள்கிறேன். எனது வேண்டு கோளுக்குச் செவி சாய்த்து எனது வேண்டுகோளை ஏற்று, தமிழக

மக்கள் தங்கள் நன்றி அறிதலை முன்னாள் படை வீரர்களுக்கு காட்டுவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

முப்படை வீரர்களுக்கும் முன்னாள் படை வீரர்களுக்கும் தமிழக அரசு எல்லா நல உதவிகளையும் தொடர்ந்து ஒரு புதிய முனைப்புடன் செயலாற்றும் என்று உறுதி தெரிவித்துக் கொள்கிறேன்.

***(7.12.1995 அன்று நிகழ்த்திய கொடிநாள் தொடர்பான தொலைக்காட்சி உரை)***

# சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற தீங்குகளையும், குற்றங்களையும் தடுக்க வேண்டும்

எல்லாத் துறைகளிலும், மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கும் மாநிலம் நமது தமிழ்நாடு. அதே உணர்வுடன் பெண்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திலும், சமுதாயக் கொடுமைகளிலிருந்து, பெண்களைக் காப்பாற்றும் பணியிலும் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு இன்று முன்னோடியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் தீமைகளை எப்படித் தடுப்பது என்பது குறித்தும் பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களுக்கான சட்டபூர்வமான தீர்வை அவர்களுக்கு ஏற்படுத்தித் தர அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், பெண்களின் சமூக உரிமைகளைப் பாதுகாத்து, சரிநிகர் சமானமாக அவர்கள் வாழ்வதற்கு, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நாம் விவாதித்து நல்ல முடிவுகளை மேற்கொள்வதற்காக இன்று இங்கே கூடியுள்ளோம்.

ஏட்டிலும், பாட்டிலும், தெய்வங்களாகக் கருதிப் புகழப்படும் பெண்கள் நாட்டிலும் வீட்டிலும், சமுதாயக் கொடுமைகளுக்கும், குற்றங்களுக்கும் ஆளாகி அவதிப்படுகிறார்கள் என்பதை, நான் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது அறிந்து கொண்டேன். பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களும், தீமைகளும், சில நேரங்களில் குற்றங்களாகவே கருதப்படாத மனப்பான்மையும், சூழ்நிலையும் நிலவி வந்ததைக் கண்டேன். மகளிருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற, தீங்குகளுக்கும் குற்றங்களுக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்தால்தான், இன்றைய சமுதாயத்தில் நாம் எதிர்பார்க்கும் ஒரு மறு மலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்பதை உணர்ந்து கொண்டேன். தமிழ்நாடுதான், அந்த வகையில் இந்தியத் துணைக் கண்டத்திற்கு, ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்க முடியும் என்று எண்ணினேன். அந்த எண்ணங்களின் பிரதிபலிப்பாக, கடந்த நான்கரை ஆண்டுக் காலமாக, எங்கள் அரசு ஒரு "மகளிர் நல அரசாக" பெண்கள் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொண்டு பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதில் ஒரு பெண் முதலமைச்சர் என்ற முறையில் நான் பெருமிதம் அடைகிறேன்.

எங்கள் அரசு பெண்களின் ஒட்டு மொத்த சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமூகத்தில் அவர்களுக்கு உரிய பங்கினையும், உரிமைகளையும் பெற்றுத் தந்திடவும் பெண்களுக்கு என ஒரு தனிக் கொள்கையை அறிவித்தது. காவல் மாவட்டந்தோறும், குறைந்தது ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற அளவில் தொடங்கி இன்று 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. எங்கள் அரசு, மாநிலப் பெண்கள் குழுமத்தை (State Womens Commission)-ஐயும் ஏற்படுத்தியது. பெண் சிசு வதையைத் தடுக்கத் தொட்டில் குழந்தைத் திட்டத்தையும், பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்குப் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தையும், பெண்கள் கல்வியை ஊக்குவிக்க, பல சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

ஆண்டாண்டுக் காலமாகவே பெண்களுக்குச் சமுதாயத்தில் கொடுமைகள் இழைக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்பட்டும் வருகின்றன. பெண்களின் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப் படாமலேயே இருந்து வந்ததோடு, எங்களுக்கு முன்பு ஆட்சி செய்தவர்கள் எவரும் இந்தப் பிரச்சினையை அணுகி தீர்வு காண முற்படவில்லை.

இந்தியா விடுதலை அடைந்த பின்பு, மகளிரின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டில் சிறிது முன்னேற்றம் தென் பட்டாலும், பெண்களுக்கு எதிரான கொடுமைகளும், குற்றங்களும் முற்றிலுமாக நின்றுவிட்டன என்ற ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படவில்லை.

பல நேரங்களில் பெண்களுக்கு அவர்கள் இல்லங்களிலும், கணவராலும், கணவரது வீட்டாராலும் இழைக்கப்படுகின்ற கொடுமைகளும், அநீதிகளும், குற்றங்களாகவே இந்தச் சமுதாயத்தால் கருதப்படாத ஒரு மனப்பான்மையும், குற்றங்களாக அங்கீகரிக்கப் படாத ஒரு சூழ்நிலையும் இருந்து வருகின்றது. நமது பாரம்பரிய மிக்க பண்பாட்டின் ஆணி வேரான குடும்பம் என்கின்ற அமைப்பு, அன்பு, பாசம் என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளதால், இந்த அமைப்பிற்குச் சற்றும் குந்தகம் ஏற்படாமல், பெண்களுக்கு இழைக்கப் படுகின்ற அநீதிகளையும், கொடுமைகளையும் களைந்து, குற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்கின்ற எண்ணத்துடனும், சட்டரீதியாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளைப் பெற்றுத் தரவும்,

அவர்களது பிரச்சினைகளை அந்தரங்கமாக மனம் விட்டு எடுத்துரைத்து ஆலோசனை பெற்றுத் தீர்வு காணவும் ஒரு அமைப்பை ஏற்படுத்தித் தந்தாக வேண்டும் என்று உறுதியாகக் கருதினேன். அந்த உறுதியின் வெளிப்பாடு தான் இன்று அனைவரின் பாராட்டுதல்களோடு செயல் பட்டு வரும் 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்'.

1992-ஆம் ஆண்டு, முதல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தைச் சென்னையில் நான் தொடங்கி வைத்தபோது, இந்த அமைப்பு சமுதாயத்தில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து, நல்ல விளைவுகளை உண்டாக்கும் என்று உறுதியாக நம்பினேன். நான் எதிர் பார்த்ததைப் போலவே, ஆரம்பிக்கப்பட்ட சில நாட்களிலேயே, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், பொதுமக்களிடையே குறிப்பாக மகளிரிடையே அமோகமான வரவேற்பைப் பெற்றது எனவே, இத்திட்டத்தை நான் விரிவுபடுத்தினேன். இன்று தமிழகத்தில் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, முதல் முதலாகத் தொடங்கிய பெருமையும், மற்ற மாநிலங்களுக்கு, ஏன் சில அயல் நாடுகளுக்குக் கூட இந்த விஷயத்தில் ஒரு முன்னோடியாக விளங்குகின்ற சிறப்பும் நிச்சயமாகத் தமிழ்நாட்டிற்கு, என்றென்றும் சரித்திரத்தில் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

இதுவரை, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 47,158 மனுக்களைப் பெண்களிடமிருந்து பெற்று அவர்களின் குறைகளைப் பெருமளவு தீர்த்துள்ளன. 1,268 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 14,883 மனுக்களில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டு, பெண்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அமைப்புகள் இல்லாமல் இருந்திருந்தால், இந்த அளவுக்குப் பெண்கள் துணிவுடன் முன் வந்து தங்களது பிரச்சினைகளை, ஆண் காவலர் களுடன் பகிர்ந்து கொண்டிருப்பார்களா என்றால், அது கேள்விக்குரிய ஒரு விஷயமே! பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட, தீமைகளையும், குற்றங்களையும் ஒரு குற்றமனப்பான்மை இன்றி, அந்தரங்கமாக எடுத்துரைத்து, தீர்வு காண ஒரு அமைப்பு இன்று இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதே அவர்களுக்கு ஒரு துணிவையும், Moral Support-ஐயும் தரும், என்பதில் ஐயமில்லை.

அதுமட்டுமின்றி, பெண்களுக்கு எதிராகக் கொடுமைகளைப் புரிகின்றவர்களும், தங்களது பாவச் செயல்களிலிருந்து இனி எளிதில் தப்பிவிட முடியாது என்ற உணர்வையும் சட்ட நடவடிக்கை களுக்கு ஆட்படுத்தப்படுவோம் என்ற பய உணர்வையும், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தி இருப்பது, நமது இறுதி இலக்கிற்குக் கிடைத்துள்ள முதல் வெற்றியாகும். எனவேதான், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் செயல்பாட்டை நேரிடையாகக் களப் பணிகளில் ஈடுபட்டுள்ள காவல் துறைப் பெண் ஆய்வாளர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ளவும், மகளிருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற குற்றங்களைக் களைவதற்காக, தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயல்பட்டு வருகின்ற, மாநிலப் பெண்கள் குழுமத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரின் சீரிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டறியவும் இந்தக் கூட்டத்திற்கு நான் ஏற்பாடு செய்தேன்.

மற்ற காவல் நிலயங்களைப் போல் அல்லாமல், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் பெண்களின் பிரத்யேகமான பிரச்சினைகளை எந்த வகைகளில் அணுகித் தீர்வு கண்டு சமுதாய மறுமலர்ச்சிக்கு வழி வகுக்கவேண்டும் என்பது குறித்தும் அரசின் இலட்சியங்களைச் செயல்படுத்த கொண்டு வரவேண்டிய, சட்டத் திருத்தங்கள் குறித்தும் விதிமுறை மாற்றங்கள் குறித்தும் உங்களது கருத்துக்களை இங்கே தெரிவிக்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று நாம் மேற் கொண்டுள்ள இந்த விவாதம் புதிய சிந்தனைகளுக்கும், நல்ல முடிவுகளுக்கும் வழி வகுக்கும் என்று நம்புகிறேன். இந்தப் புதிய சிந்தனைகள் தமிழக மகளிரின் விரைந்த முன்னேற்றத்திற்கும் நாம் கற்பனை செய்து கொண்டிருக்கும் ஒரு இலட்சிய சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கும் உறுதுணையாக விளங்கும் என்று நம்புகிறேன்.

பெண் காவலர்களின் பணி சற்று வித்தியாசமானது. மனு தாரர்களை, ஒரு சகோதர உணர்வுடன் நடத்தி, சட்டப் பூர்வமான நடவடிக்கையை எடுப்பதோடு அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், வழங்க வேண்டி உள்ளதால், பெண் காவலர் களுக்கு அளிக்கப்படும் பயிற்சி முறையில், சில மாறுதல்களைக்

கொண்டு வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு மட்டுமின்றி தீங்கிழைக்கப்பட்ட பெண்களுக்கு உள்ளத்தாலும் உடலாலும் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றி அவர்களின் நல் வாழ்விற்குத் தேவைப்படும் ஆலோசனைகளைத் தெரிவிக்கும் Counselling பணியையும் பெண் காவலர்கள், மேற்கொள்ள வேண்டி இருப்பதால், அதற்கான பயிற்சியையும் புதிய அணுகுமுறைகளையும் பெண் காவலர்களுக்கு நாம் அளிக்க வேண்டும். சிறந்த பயிற்சியும், புதிய அணுகுமுறைகளும் நமது பெண் காவலர்களின் பணியை மேலும் சிறப்படையச் செய்யும் என்பதோடு அதனால் இரட்டிப்புப் பலன் இந்தச் சமுதாயத்திற்கும், மகளிருக்கும் கிடைக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

எனவே, இது குறித்தும் உங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த மூன்றாண்டுகளில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் தாங்கள் பெற்ற அனுபவத்தையும் அரசின் எண்ணங்களைச் சீரிய முறையில் செயல்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் பெண் ஆய்வாளர்கள் எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"மாநிலப் பெண்கள் கமிஷன்" Stage Womens Commission தமிழக மக்களின் பிரச்சினைகளைப் புதிய கோணத்துடன் அணுகி, அவர்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களைத் தடுக்க மேற்கொண்டு வரும் நற்பணிக்கு எனது மனங்கனிந்த பாராட்டுதல்களை, முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். 'மாநிலப் பெண்கள் கமிஷனின் முதல் இடைநிலை அறிக்கை' இன்று வழங்கப்படுவதை அறிந்து, நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் மேற்கொண்டு வரும் பணிகளைப் பற்றியும் அவர்களிடமிருந்து அறிந்து கொள்வதில் ஆர்வமாக உள்ளேன்.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்ற நிகழ்வுகளை எப்படி படிப்படியாகக் குறைப்பது என்பது குறித்தும் அத்தகைய குற்ற நிகழ்வுகள் மீது வழக்குப் பதிவு செய்து விரைவில் புலன்

விசாரணையை முடித்து தண்டனை பெற்றுத் தருவது எப்படி என்பது குறித்தும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்குச் சென்றால், தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையைப் பெண்கள் மனதில் ஏற்படுத்துவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தை விபச்சாரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தவும், கையில் குழந்தைகளுடன், ஆதரவற்ற நிலையில் கணவனால் கைவிடப்படும் பெண்கள் அதாவது Deserted Women சமுதாயத்தில் எதிர் நோக்கும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், Dowry கொடுப்பதும் வாங்குவதும் ஒரு சமுதாயக் கேடு, ஒரு மாபெரும் பாவம் என்ற எண்ணத்தைச் சமுதாயத்தில் ஆழமாகப் பதிய வைக்கவும் நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும், மாநிலப் பெண்கள் கமிஷன் ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலப் பெண்கள் கமிஷனின் செயல்பாடுகள் சிறப்பாக அமைய அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் தமிழக அரசு வழங்க எப்போதும் தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களின் நல்வாழ்விற்கு வழி வகுக்க வேண்டிய, மாபெரும் சமுதாயப் பொறுப்பு நமக்கு உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டுள்ளேன். அந்த லட்சியப் பணியில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் பங்கினை ஆய்வு செய்து அவர்களது பணிக்கு ஒரு புதிய முனைப்பை ஏற்படுத்துவதோடு உங்கள் மேலான கருத்துக்களை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

***(12.12.1995 அன்று நடைபெற்ற அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் பணி குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை)***

# கலையம்சங்களுடன் கூடிய கட்டடச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் விளையாட்டு நகரம்

இந்திய விளையாட்டு வரைபடத்தில், ஏன்-- சர்வதேச விளையாட்டு வரைபடத்திலும், தமிழகத்திற்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தரும், வரலாற்றுச் சிறப்பு மிக்க, தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளையொட்டி; கவின்மிகு சென்னை மாநகரில், கலை அம்சங்களுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள, SAF Games Village ஐ-, விளையாட்டு நகரத்தைத் திறந்து வைத்து; தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான, புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் உட்பட, பல புதிய கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டி; உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகிறேன்.

தமிழகத்தில், நெடுங்காலமாகச் செயலற்று, முடங்கிக் கிடந்த பல துறைகளுக்கு, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, எங்கள் அரசு, ஒரு புதிய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுத்து; அந்தத் துறைகளின் விரைந்த வளர்ச்சிக்கும், வித்திட்டுள்ளது. அப்படி ஒதுக்கப்பட்டு, கவனிப்பாரற்று கிடந்த துறைகளில், விளையாட்டுத் துறையும் ஒன்று! கவனிப்பாரற்று இருந்த விளையாட்டுத் துறை, இன்று நமது அனைவரின் கவனத்தை ஈர்த்துள்ளதோடு; ஒரு புதிய எழுச்சியையும், ஏற்றத்தையும், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் பெற்றுள்ளது என்றால், அது மிகையாகாது.

தமிழ்நாட்டில், 'விளையாட்டை', விளையாட்டாகக் கருதுகின்ற காலம், இன்று மாறிவிட்டது. விளையாட்டுத் துறைக்கு, இன்று ஒரு புதிய பரிமாணம் கிடைத்துள்ளது. தமிழகத்தில், பல இடங்களில் கட்டப்பட்டு வரும், விளையாட்டு அரங்கங்களும்; விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் புதிய அமைப்புகளும்; இன்று மக்கள் மத்தியில், ஒரு விளையாட்டு உணர்வை Sports spirit-ஐ ஏற்படுத்தி உள்ளதை, எவரும் மறுக்க முடியாது. குறிப்பாக, வளரும் தலைமுறையினர் இடையே, விளையாட்டு உணர்வையும்; எதையும் sportive-ஆக எடுத்துக் கொள்ள வேண்டிய, பரந்த மனப் பான்மையையும்; வளர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, விளைாட்டுத் துறைக்கு, நாங்கள் புதிய பொலிவினைக் கொடுத் துள்ளோம்.

ஒரு காலத்தில் அரசிடமிருந்து, ஏதேனும் உதவி கிடைக்காதா என்று, விளையாட்டுத் திறன் படைத்த இளைஞர் கூட்டம், சுற்றி வந்த நிலை, இன்று முழுவதுமாக மாறி; எங்கள் ஆட்சிக் காலத்தில், அத்தகைய தகுதி படைத்த, இளைய தலைமுறையினரை, அரசே தேடிச் சென்று, உதவிகளை வழங்கும், வரவேற்கத் தக்க சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களது திறமைகளை வளர்க்க, நிதி கொடுப்பதில் ஆகட்டும்; அவர்கள் போட்டிகளில் பங்கு கொள்ள, பல்கலைத் திறமைகளை வளர்த்துக் கொள்ள, உதவிகள் அளிப்பதில் ஆகட்டும்; விளையாட்டை மேம்படுத்த, புதிய திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்துவதில் ஆகட்டும்; நாங்கள் ஒரு தனி உற்சாகத்துடனேயே, இதுவரை பணியாற்றி வந்துள்ளோம். விளையாட்டுத் துறைக்கு, ஒரு புதிய மறுமலர்ச்சியை உண்டாக்க, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் **Sports Development Authority of Tamil Nadu** என்ற ஒரு அமைப்பு, எங்கள் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. கடந்த நான்கரை ஆண்டு கால கட்டத்தில், 'விளையாட்டு உணர்வு', மக்கள் மத்தியில் மீண்டும், ஒரு புதிய மதிப்பையும், அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. புதிய விளையாட்டு அரங்கங்களும், புதிய அமைப்புகளும், இன்று உருவாகி உள்ளன. மாநில அளவிலும், தேசிய அளவிலும், நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில், வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும், நாங்கள் தேடிச் சென்று, பரிசுகளை வழங்கி, ஊக்குவித்து வருகின்றோம். தமிழக விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு, சிகரம் வைத்தது போல, நடைபெற உள்ள, ஏழாவது தெற்காசிய நாடுகள், கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள், உண்மையில் நமக்கு, மாபெரும் மகிழ்ச்சியைத் தரும் நிகழ்ச்சி ஆகும்.

ஒரு நாட்டின் தல்லை நகரத்தில் நடைபெற வேண்டிய, மாபெரும் விளையாட்டுப் போட்டிகள், இங்கே ஒரு மாநிலத்தின் தலை நகரத்தில், நடத்த முற்பட்ட போது, சர்வதேசத் தரத்தில் விளையாட்டு அரங்கங்களும், போட்டியாளர்கள் தங்குவதற்கு விடுதி வசதிகளும், சென்னையில் இல்லையே? எப்படி இந்த விளையாட்டுப் போட்டிகளை, நடத்த முடியும் என்று, சிலர் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். தமிழக மக்களின் பேராதரவு மட்டும், எங்களுக்கு துணையாக இருந்தால், இந்த உலகத்தில் எங்களால், எதையும் சாதிக்க முடியும் என்று, துணிவுடன் செயல்பட்டோம். நம்மிடம் இல்லாத, விளையாட்டு வசதிகளை உருவாக்கி, சென்னை மாநகரம் ஒரு மாபெரும் **Sports City**, என்பதை நிரூபிக்க வேண்டும், என்று உறுதி பூண்டோம். இன்று 240 கோடி ரூபாய்க்கும் அதிகமான

செலவில், பல புதிய விளையாட்டு அரங்கங்கள், சர்வதேசத் தரத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

டென்னிஸ் விளையாட்டரங்கம்; ஹாக்கி விளையாட்டரங்கம்; நீர் விளையாட்டு வளாகம்; விளையாட்டு உள்ளரங்கம்; கால்பந்து விளையாட்டரங்கம்; சர்வதேச தரத்தில் ஓடு தளம் என்று, சென்னை நகரின் பல பாகங்களில், புதிய விளையாட்டுச் சின்னங்கள், உருவாகி உள்ளன. **Our sole aim is to make Tamil Nadu the best destination for Sports in India and we have achieved our goal to a great extent.** சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை, எப்படிச் சென்னையில் நடத்த முடியும் என்று, நம்மை வெளி மாநிலத்தினர் கேட்கும் நிலையை, இன்று அடியோடு மாற்றியுள்ளோம்.

இந்தத் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெறுவதற்கு பெருமுயற்சிகளை மேற்கொண்டவர் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் திரு ஆ. சிவந்தி ஆதித்தன் அவர்கள். சென்னையில் இந்தப் போட்டிகள் நடைபெறுவதில் அவருக்கு பெரும் பங்கு உண்டு. எனவே திரு ஆ. சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விளையாட்டு நகரம் அமைக்கக் கடனுதவி வழங்கி ஒத்துழைப்பு நல்கிய ஹட்கோ நிறுவனத்திற்கும், அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு பட்நாகர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கைச் சூழல்கள், இயல்பாகப் பொருந்திய, சில அமைப்புகளுடன் நிர்மாணிக்கப்பட்ட, இந்த விளையாட்டு நகரத்தில், வெளிநாட்டவரும், மற்ற மாநிலத்தவரும், வந்து தங்கியிருந்து; தமிழகத்தைப் பற்றிய, இனிய நினைவுகளுடன், திரும்பிச் செல்வார்கள் என்பது உறுதி. எல்லா அடிப்படை வசதிகளுடன், கவினுற அமைக்கப்பட்ட, இந்த விளையாட்டு நகரம், சென்னை மாநகரத்தின், ஒரு முக்கியமான Land Mark-ஆக அமையும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

சென்னையில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்க, விடுதி வசதி மட்டுமே, செய்து தரப்பட்டுள்ளது. ஆனால் குடும்பத்துடன் தங்கி இருக்க, குடியிருப்பு வசதிகள் செய்து

தரப்படவில்லை. டெல்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, குடியிருப்பு வசதிகள், செய்து தரப்பட்டுள்ளதைப் போலவே; தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், எல்லா வசதிகளுடன் கூடிய, குடியிருப்புகளில் தங்கி வாழ்வதற்கு; குடியிருப்பு வசதிகள், செய்து தர வேண்டும் என்று, நாங்கள் முடிவு செய்தோம். எதைச் செய்தாலும், அதை நன்றாகச் செய்தாக வேண்டும்; அதையும் விரைந்து செய்தாக வேண்டும் என்பதே, எங்கள் குறிக்கோள்.

எனவேதான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை, நகரத்தின் மையப் பகுதியில், கட்டித் தருவது என்று தீர்மானித்தோம். தற்போது ராஜாஜி ஹால் அமைந்துள்ள பகுதிக்கு, அருகில் உள்ள நிலப்பரப்பில், 40 கோடி ரூபாய் செலவில், இந்த வானுயர்ந்த, அடுக்கு மாடி குடியிருப்புக் கட்டிடங்களை, நிர்மாணிக்க முடிவு செய்தோம். அந்த சீரிய திட்டத்திற்கு, இன்று அடிக்கல் நாட்டியதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

"ஒரு குடும்பம் ஒரு வீடு", என்கின்ற எங்களது கொள்கையை, முனைப்புடன் செயல்படுத்தி வரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், இன்று ஒரு மாபெரும் இயக்கமாக, மாறி உள்ளது. 1991 ஆம் ஆண்டில், 100 கோடி ரூபாய் அளவில் மட்டுமே, வீட்டு வசதிகளை உருவாக்கித் தந்த, இந்த வாரியத்தின் நிதி ஒதுக்கீடு; ஆண்டு தோறும் படிப்படியாக, அதிகரித்து வந்து; இந்த நிதியாண்டில் மட்டும், 242 கோடி ரூபாய் அளவிற்கு, உயர்ந்துள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த நான்கரை ஆண்டு காலக் கட்டத்தில், இந்த வாரியத்தின், குடியிருப்பு வசதிகளுக்கான செலவினம், கிட்டத்தட்ட இரண்டரை மடங்காக அதிகரித்துள்ளது, நினைத்து மகிழத் தக்க ஒரு சாதனை ஆகும்.

சென்னை அம்பத்தூர் தொழிற் பேட்டைக்கு அருகே, 40 கோடி ரூபாய் செலவில், 160 ஹெக்டேர் நிலப்பரப்பில், உருவாக்கப்பட்டு வரும், 10,406 மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனைகள்; வீட்டு வசதி வரலாற்றில், ஒரு புதிய மைல் கல்லாக அமையும், என்பதில் சந்தேகம் இல்லை. ஆசியக் கண்டத்திலேயே, ஒரே இடத்தில் கட்டப்பட்ட, மிகப் பெரிய வீட்டு வசதி திட்டமாக Neighbourhood Scheme ஆக, இத் திட்டம் அமையப் போகிறது என்பது, உண்மையிலேயே நமக்கு, பெருமைத் தரக் கூடிய செய்தி ஆகும்.

ஆசிய வளாசசி வங்கி அதாவது, Asian Development Bank மூலம், 1,055 கோடி ரூபாய், நிதி உதவி பெற்று, புதிய வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்த, எங்கள் அரசு, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வைத்துள்ள நிலங்களுக்கு, Urban Land Tax, அதாவது, நகர்ப்புற நில வரி செலுத்த வேண்டியதில்லை, என்கின்ற ஒரு சலுகை, திரும்பப் பெறப்பட்டதால்; அந்த நிலங்களுக்கான நகர்ப்புற நில வரியை, வாரியம் கட்ட வேண்டிய அவசியம், ஏற்பட்டுள்ளதாகவும்; இதனால் வாரியத்திற்கு, பொருளாதார இழப்பு ஏற்பட்டு வருவதாகவும்; எனவே, இந்தச் சலுகையை, வாரியத்திற்கு மீண்டும் அளிக்க வேண்டும் என்று, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர், திரு என். பாலகங்கா கேட்டுக் கொண்டார்.

ஏழை எளிய மக்கள் நலன் பெற; குறைந்த விலையில், நிறைவான வீட்டு வசதியைப் பெற்றுத்தர, உறுதி பூண்டுள்ள எங்கள் அரசு; தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் உள்ள நிலங்களுக்கு, நகர்ப்புற நில வரி, அதாவது, Urban Land Tax-இலிருந்து, முழுமையாக விலக்கை, இன்று முதல் அளிக்கும் என்பதையும்; இந்தச் சலுகை, 1991-ஆம் ஆண்டிலிருந்தே, முன் தேதியிட்டு வழங்கப்படும் என்பதையும்; மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பணியாளர்கள், மற்றும் ஊழியர்களின் குழந்தைகள், பயன் பெறும் வண்ணம்; வாரியத்தின் சார்பில், ஒரு புதிய தொழில் நுட்பக் கல்லூரி, அதாவது Polytechnic ஒன்றை, நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை, தமிழக அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது. இவ்வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின், நலனைக் கருத்தில் கொண்டு; வாரியத்தின் சார்பில், ஒரு Polytechnic ஆரம்பிப்பதற்கு, விரைவில் அரசு தரப்பிலிருந்து, அனுமதி வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சீரிய விழாவினை, மிகக் குறுகிய காலத்தில், சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ள, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர், அன்புச் சகோதரர் திரு S. ரகுபதி; தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர், திரு என்.பாலகங்கா; மற்றும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும், எனது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள்; சென்னையில் உருவாக்கியுள்ள, ஒரு புதிய விளையாட்டு விழிப்புணர்ச்சி; தமிழகத்தை விளையாட்டுத் துறையில், என்றென்றும் முன்னணியில் நிறுத்தும், என்று உறுதியாக நம்புகிறேன். இந்த விளையாட்டு நகரம், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, விளையாட்டுத் துறையில் கொண்டுள்ள, ஆத்மார்ந்த ஈடுபாட்டின் நினைவுச் சின்னமாக, என்றென்றும் விளங்க வேண்டும் என்ற, எனது உள்ளக் கிடக்கையை எடுத்துரைத்து விடை பெறுகிறேன்.

*(13.12.1995 அன்று 'விளையாட்டு நகரம்' திறப்பு விழாவில் ஆற்றிய உரை)*

# தமிழகத்தின் ஜீவாதார உரிமைகளைக் காக்க ஓரணியில் ஒன்று சேர்வோம்!

தமிழகத்தின் உயிர் மூச்சுப் பிரச்சினையான, காவிரி நதி நீர்ப் பிரச்சனை குறித்தும்; காவிரி டெல்டா பகுதியில் 13.3 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில், பாசன நீர் இன்றி, வாடிக் கொண்டிருக்கும் நெற்பயிரைக் காப்பாற்றுவதற்கும்; 28.12.1995 அன்று, உச்ச நீதி மன்றத்தின் ஆணையைத் தொடர்ந்து, நாம் மேற்கொள்ள வேண்டிய, நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்க; இந்தக் அனைத்து கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டியுள்ளேன். இந்தக் கூட்டத்தில் பங்கு கொள்ள, வந்துள்ள உங்கள் அனைவரையும், நான் வரவேற்கின்றேன்.

காவிரி டெல்டா பகுதியில், 13.3 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில், பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரை, வாடிவிடாமல் பாதுகாப்பதற்கு, உச்ச நீதி மன்றத்தின் கருத்திற்கு இணங்க, 19.12.1995 அன்று, காவிரி நதி நீர் நடுவர் மன்றம் விசாரித்து, 11 TMC அடி காவிரி நீரை, கர்நாடக மாநிலம் உடனடியாக, தமிழகத்திற்கு வந்து சேரும் வண்ணம், திறந்து விட வேண்டும், என்று தீர்ப்பு வழங்கியது. இது நாள் வரை, அந்த ஆணை அமல்படுத்தப்படாததால், உச்ச நீதிமன்றத்தில், அந்தத் தீர்ப்பை அமல்நடத்த, நாம் தாக்கல் செய்த மனுவினை விசாரித்து; உச்ச நீதிமன்றம், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், இரண்டு மாநிலங்களின் முதலமைச்சர்களையும்; காவிரிப் படுகையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும்; சட்ட மன்றக் கட்சித் தலைவர்களையும்; சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களையும் அழைத்து; கூட்டம் நடத்தி, இன்னும் இரண்டு நாட்களில், காவிரி நதி நீர் நடுவர் மன்றம், 19.12.1995 அன்று, வழங்கிய தீர்ப்பினை செயல்படுத்த, தண்ணீர் திறந்து விட, தேவையான தீர்வை; ஒருமித்த கருத்தை உருவாக்கியோ; அல்லது அவரே அத்தகைய முடிவை மேற்கொண்டோ; மேட்டூர் பாசனப் பகுதியிலுள்ள, நெற்பயிரைக் காப்பாற்ற வேண்டும், என்று ஆணை பிறப்பித்துள்ளது. அதைத் தொடர்ந்து, எழுந்துள்ள சூழ்நிலைகளை விவாதிப்பதற்கும்; இது குறித்து, உங்களுடைய மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்பதற்கும்; இந்தக் கூட்டம் இன்று கூட்டப்பட்டுள்ளது.

காவிரி நதி நீர் நடுவர் மன்றம், 25.6.1991 அன்று பிறப்பித்த, இடைக்கால நிவாரண ஆணையில்; கர்நாடக அரசு, பாசன ஆண்டு

ஒன்றுக்கு, 250 TMC அடி நீரை, மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு வந்து சேரும்படி, தனது நீர்த் தேக்கங்களிலிருந்து நீரை திறந்து விட வேண்டும் என்றும்; மாத வாரியாக நீரின் அளவையும் குறிப்பிட்டு; ஒவ்வொரு மாதத்தின் அளவை, 4 சம பங்குகளாக்கி, வாராந்திர அடிப்படையில், நீரை வழங்கி வர வேண்டும் என்றும்; ஒரு வாரத்தின் குறிப்பிட்ட அளவில், குறைபாடு ஏற்பட்டால், அதை அந்த மாதத்தின் இறுதி வாரத்தில், எப்படியேனும் ஈடுகட்ட வேண்டும் என்றும்; தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

அது மட்டுமின்றி, கர்நாடகாவில், 1972-ஆம் ஆண்டு, 6.83 லட்சம் ஏக்கராக இருந்த பாசனம், 1990-ஆம் ஆண்டு, 11.2 லட்சம் ஏக்கராக உயர்ந்திருந்ததை, அம்மாநிலத்தின் சார்பில் கொடுக்கப் பட்ட, புள்ளி விவரங்களின் அடிப்படையிலே கண்டறிந்து; கர்நாடக மாநிலம், தனது பாசனப் பரப்பை, விரிவு படுத்துவதை தடை செய்து, கர்நாடக மாநிலம், காவிரி படுகையில், தற்போது பாசனம் செய்து வரும், 11.2 லட்சம் ஏக்கருக்கு மேல், இந்த இடைக்காலத்தில், பாசன விரிவாக்கம் செய்யக் கூடாது, என்றும் ஆணையிட்டுள்ளது.

காவிரி நதி நீர் நடுவர் மன்றம், காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சனைக்கு, இறுதி தீர்ப்பு அளிக்கும் வரை, இந்த இடைக்கால ஆணை, 1991-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் முதல், அமுலுக்கு வந்தது. காவிரி நதி நீர் நடுவர் மன்றம், நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ், உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாக இருந்தும்; இரண்டு மாநிலங்களின் கருத்துக்களையும், முகாந்திரங்களையும், அவர்கள் அளித்த குறிப்புகளையும், புள்ளி விவரங்களையும் பெற்று; பின்பு வழக்கறிஞர்களின் விவாதங்களையும், கேட்டறிந்த பின்பு, இந்த இடைக்கால ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும்; கர்நாடக மாநிலம், இந்த இடைக்கால ஆணையை, ஏற்றுக் கொள்ள மறுத்த போது, 22.7.1991 அன்று, அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, அது குறித்து நாம் விவாதித்தோம்.

தமிழகத்தின் உயிர் மூச்சுப் பிரச்சனையான, காவிரி நதி நீர் பிரச்சனையில், அனைத்துக் கட்சிகளும் அளித்த ஆதரவும்; அவர்கள் வழங்கிய நல்ல கருத்துக்கள், மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையிலும்; அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் குழு ஒன்றுக்கு, நான் தலைமையேற்று, டெல்லிக்குச் சென்று; மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து; நமது தரப்பு நியாயங்களை

விவாதித்த பின்னர் தான், இந்த 1991-ஆம் ஆண்டின், இடைக்கால ஆணையை, மத்திய அரசு, தனது அரசிதழில், 19.12.1991-ஆம் தேதியன்று பிரசுரித்தது.

பின்னர், 1993-ஆம் ஆண்டு, இதே போன்றதொரு, இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்ட போது, நான் உண்ணாவிரதம் மேற்கொண்டேன். அதைத் தொடர்ந்து, காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின், இடைக்கால ஆணையை, அமல்படுத்துவதைக் கண்காணிக்க, ஒரு கண்காணிப்புக் குழுவும், அதாவது, Monitoring Committee-யும்; செயலாக்கும் குழுவும், அதாவது, Implementation Committee-யும் அமைக்கப்படும் என்று, மத்திய அரசு ஒப்புக் கொண்டது. ஆனால், அந்தக் குழுக்கள், இன்று வரை அமைக்கப்படவில்லை.

கடந்த 4 ஆண்டுகளாக, தமிழகத்திற்குரிய காவிரி நீரை, இடைக்கால ஆணைப்படி, கர்நாடக மாநிலம், காவிரியில் திறந்து விடா விட்டாலும்; இயற்கை அன்னையின் பூரண அருள், நமக்குக் கிடைத்திருந்த காரணத்தினால், நமது வேளாண்மை பாதிக்கப்பட வில்லை. மேலும், புதிய வேளாண்மை உத்திகளை, நாம் கடைபிடித்து, நமது இலக்கான, 100 லட்சம் டன், உணவு பொருள் உற்பத்தியை, எட்டிப் பிடித்தோம். ஆனால் இந்த ஆண்டு, தென் மேற்குப் பருவ காலத்தில், நமக்கு கிடைக்க வேண்டிய காவிரி நீரை, கர்நாடக மாநிலம் திறந்து விடாத காரணத்தினாலும்; நமது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, வட கிழக்குப் பருவ மழை, பொய்த்து விட்ட காரணத்தினாலும்; காவிரி டெல்டா பகுதியில், 13.3 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில், பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர், பாசன வசதியின்றி, வாடி விடுகின்ற ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில், நமக்கு கிடைக்க வேண்டிய நீரின் அளவைவிட, கர்நாடக மாநிலம், நமக்கு வழங்கிய நீரின் அளவு, குறைவாக இருந்ததால், 1.8.1995 அன்று, உச்ச நீதிமன்றத்தில், இடைக்கால மனு, Interlocutory Application, ஒன்றைத் தாக்கல் செய்தோம்.

அதில் நாம் கேட்ட கோரிக்கைகள் இரண்டு. (1) நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி, மாதா மாதம், கர்நாடக மாநிலத்திலிருந்து, தமிழகத்திற்கு வந்து சேர வேண்டிய காவிரி நீரை, விடுதலின்றித் திறந்து விட வேண்டும். (2) தமிழகத்திற்குரிய

பாசன நீரை, முழுமையாக வழங்கிய பின்னரே, கர்நாடக மாநிலம், தனது நீர்த்தேக்கங்களில், நீரைத் தேக்கி வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

இந்த ஆண்டு, இடைக்கால ஆணைப்படி, நமக்குக் கிடைக்கப் பெறாத, நீரின் அளவுக் குறைவைச் சுட்டிக் காட்டி; கர்நாடக மாநிலம் தொடர்ந்து, நடுவர் மன்ற ஆணையை, புறக்கணித்து வருவதையும் எடுத்துரைத்து; நடப்பு ஆண்டிற்கான, எல்லாப் புள்ளி விவரங்களையும் அளித்து; ஏற்கனவே, 14.3.1995 அன்று, தாக்கல் செய்திருந்த தாவா மனுவுடன், அவற்றை இணைத்துக் கொள்ளுமாறு, 1.10.1995 அன்று, தமிழக அரசு, மேலும் ஒரு மனுவைத் தாக்கல் செய்தது; அதை உச்ச நீதிமன்றமும் அனுமதித்தது. அதன்படி, அந்த தாவா மனுவில் சேர்த்து, முழுமை பெறச் செய்தது. இந்த முயற்சிகளினால், நமக்குத் தேவையான நிவாரணம் கிடைக்காததாலும்; காவிரி நதி நீர் நடுவர் மன்றத்திற்கு, தனது ஆணையைச் செயல்படுத்துகின்ற அதிகாரம், power to execute இல்லை என்று, சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்ததாலும்; தற்போது காவிரி டெல்டா பகுதியில், பாசன வசதி இன்றி, வாடும் நெற்பயிரைக் காப்பாற்றுவதற்குத் தேவையான, குறைந்த பட்ச நீரான, 30 TMC அடி நீரையாவது, உடனடியாகத் திறந்து விட வேண்டும் என்று கோரி; Emergent Petition, அதாவது அவசர மனு ஒன்று, 11.12.1995 அன்று, தமிழக அரசின் சார்பில், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

உச்ச நீதிமன்றம், தமிழகத்தின் படுகைப் பகுதியில் நிலவி வருகின்ற, பாசன நீர்ப் பிரச்சனை குறித்து, தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து; இது குறித்து, காவிரி நதி நீர் நடுவர் மன்றம், இரு தரப்பினரையும் விசாரித்து; தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும் என்று, 14.12.1995 அன்று ஆணையிட்டது. உச்ச நீதிமன்றத்தின் கருத்திற்கிணங்க, நடுவர் மன்றம், இரு தரப்பிலிருந்தும், நிபுணர்களின் புள்ளி விவரங்களைப் பெற்று, அவற்றை ஆராய்ந்தது. நமது மாநிலம், முழு விவரங்களையும் தயங்காமல் அளித்தது.

ஆனால் கர்நாடக மாநிலம், அவர்கள் பாசன வசதிக்கு, பயன்படுத்துகின்ற நீரின் அளவையும், அங்குள்ள பயிரின் நிலைகளையும், நடுவர் மன்றத்திற்குக் கொடுக்கத் தவறியது. கர்நாடக மாநிலத்தில், தென் மேற்குப் பருவ மழையின் தொடக்கத்தில்,

வறண்ட நிலையில், நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது என்றும்; எனவே இந்த ஆண்டை, வறட்சி ஆண்டாக கருத வேண்டும் என்றும்; உண்மைக்குப் புறம்பாக, கர்நாடக மாநிலம் முன் வைத்த வாதத்தை, நடுவர் மன்றம் ஏற்க இயலாது, என்று கருத்து தெரிவித்துள்ளது.

கர்நாடக மாநிலம் ஒட்டு மொத்தத்தில், பகுதி அளவு தண்ணீரை, அதாவது Pro rata basis-ல் மட்டுமே, வழங்க வேண்டும் என்ற வாதத்தையும், நடுவர் மன்றம் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. நம்மைப் பொறுத்த வரையில், எந்த விகிதாசாரத்தில், நீரைப் பங்கீடு செய்துவது என்பதை, கர்நாடக அரசே, தன்னிச்சையாகத் தீர்மானிக்கக் கூடாது என்றும்; அதற்குரிய அதிகாரம், நடுவர் மன்றத்திற்கு மட்டும்தான், உண்டு என்றும் வாதாடினோம். எனவே, காவிரி நதி நீர் நடுவர் மன்றம், நமது கருத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு, கர்நாடக அரசின் வாதத்தைத் தள்ளுப்படி செய்தது. இருப்பினும், கர்நாடக மாநிலம் கொடுத்த, இந்த ஆண்டு நீர் வரத்து, புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே கூட; அவர்கள், தமிழ் நாட்டிற்கு உரிய நீரின் அளவில், 28 TMC அடி நீரை, குறைவாக கொடுத்துள்ளனர் என்றும்; அந்தக் குறைபாட்டை ஈடு செய்ய, கர்நாடக மாநிலத்தின் வாதத்தின்படியே, Pro rata basis-ன் அடிப்படையில், 17 TMC அடி நீரைக் கழித்துக் கொண்டாவது, 11 TMC அடி நீரை, அவர்கள் உடனடியாக, தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்றும்; 19.12.1995 அன்று, நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கியது. அது மட்டுமின்றி, 1991-ஆம் ஆண்டின், நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி, மீதமுள்ள மாதங்களுக்குரிய நீரை, தமிழகத்திற்குக் குறைவின்றி, வழங்க வேண்டும் என்றும்; இந்தத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில், வட கிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டதால், மேட்டூரிலிருந்து திறந்து விடப்படும், தண்ணீரைக் கொண்டு மட்டுமே, பயிரிடப்பட்ட நெற்பயிரைப் பாதுகாத்து, அறுவடைக்குக் கொண்டு வர இயலாது, என்பதை உணர்ந்தவுடன்; கர்நாடக மாநிலம், தன்னுடைய நீர்த் தேக்கங்களில், போதுமான அளவு நீரை வைத்துள்ளது, என்பதைச் சுட்டிக் காட்டி; 30 TMC அடி நீரை, உடனடியாகத் திறந்து விடுமாறு, நான் 7.12.1995 அன்றே, கர்நாடக மாநில முதலமைச்சருக்கு, கடிதம் எழுதினேன். 11.12.1995 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழுதி; இதில் அவர் உடனடியாகத் தலையிட்டு, 30 TMC அடி தண்ணீரைத் திறந்து விட, கர்நாடக மாநில முதலமைச்சரை, அறிவுறுத்துமாறும் வற்புறுத்தினேன்.

பின்னர், 14.12.1995 அன்று, உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை அறிந்தவுடன், நான் டெல்லிக்குச் சென்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து; 30 TMC அடி நீரை, தமிழகத்திற்கு உடனடியாகக் கொடுக்கவில்லை என்றால்; கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் பெறுமானமுள்ள, விவசாய விளை பொருள்களின் உற்பத்தி, பாதிக்கப்படும் என்பதையும்; லட்சக் கணக்கான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும், பாதிக்கப்படுவார்கள் என்பதையும் எடுத்துரைத்து; அப்பகுதியில் வறட்சி ஏற்பட்டு, இலட்சக்கணக்கான மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும், என்ற நியாயமான அச்சத்தையும், எடுத்துரைத்தேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், நீரைத் திறந்து விட, ஆவன செய்வதாக என்னிடம் கூறினார்கள்.

உச்ச நீதி மன்றத்தின் கருத்துப்படி, கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களை, நான் 15.12.1995 அன்று, தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பேசுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள், பயனளிக்காமல் போயின. இதற்கிடையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், டெல்லியில் ஒரு கூட்டத்தைக் கூட்டினால் மட்டுமே, அதில் தான் கலந்து கொள்வதாக, மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள், கருத்து தெரிவித்ததாக, செய்தி வெளி வந்ததைத் தொடர்ந்து; 18.12.1995 அன்று, சென்னைக்கு வந்திருந்த, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம், அத்தகையதொரு கூட்டத்தை, உடனே மாண்புமிகு பாரதப் பிரதமர், கூட்ட வேண்டும் என்று, நானும் கேட்டுக் கொண்டேன்.

19.12.1995 அன்று, நடுவர் மன்ற தீர்ப்பு கிடைத்தவுடன், உடனடியாக 11 TMC அடி நீரையும்; டிசம்பர் மாதத்திற்குரிய 6.194 TMC அடி நீரையும்; 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய, 2.51 TMC அடி நீரையும் சேர்த்து; ஆக மொத்தம், 20 TMC அடி நீரை, தமிழகத்தின் நலனைக் கருத்தில் கொண்டு, உடனடியாக வழங்க வேண்டும் என்று, 20.12.1995 அன்றே, கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களுக்கு, மேலும் ஒரு கடிதம் எழுதினேன். கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களுக்கு, அனுப்பி வைத்த கடிதத்தின் நகலை, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, அனுப்பி வைத்து; நடுவர் மன்ற தீர்ப்பை, உடனடியாகச் செயல்படுத்த, கர்நாடக மாநில அரசை, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வற்புறுத்த வேண்டும், என்றும் கேட்டுக் கொண்டேன்.

தொடர்ந்து கர்நாடக மாநிலம், தனது நிலையில் எந்த மாற்றத்தையும், வெளிப்படுத்தாத காரணத்தினாலும்; காவிரி டெல்டா பகுதியில், பயிர்கள் மேலும் வாடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டதாலும்; நமக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதாலும்; தமிழகச் சட்டமன்ற கூட்டத்தை, 28.12.1995 அன்று கூட்டி, 20 TMC அடி நீரை, உடனடியாக கர்நாடகம் திறந்து விட வேண்டும், என்ற தீர்மானத்தை, ஒரு மனதாக நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

19.12.1995 அன்று, காவிரி நதி நீர் நடுவர் மன்றம் பிறப்பித்த தீர்ப்பை, உடனடியாக அமல்படுத்தக் கோரி, நாம் தாக்கல் செய்த மனுவை, 28.12.1995 அன்று, உச்ச நீதி மன்றத்தின் பென்ச் விசாரித்து, ஆணை வழங்கியுள்ளது. இடைக்கால நடுவர் மன்ற தீர்ப்பை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், இரண்டு மாநிலங்களின் முதலமைச்சர்களையும்; அந்த மாநிலங்களின் படுகைப் பகுதிகளின், நாடாளுமன்ற உறுப்பினர்களையும்; சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களையும்; சட்டமன்ற கட்சித் தலைவர்களையும் அழைத்து; கூட்டம் நடத்தி; இரண்டு நாட்களுக்குள், தீர்வு காண வேண்டும் என்றும்; பாசன நீரின்றி, வாடி வரும் பயிரைக் காப்பாற்ற, தண்ணீர் உடனடியாக விடுவதற்கு, ஒருமித்த கருத்தினை உருவாக்கியோ; அல்லது மாண்புமிகு பாரதப் பிரதமரே, ஒரு முடிவை எடுத்தோ; இதற்கான வழி வகை காண வேண்டும் என்றும், இதில் கூறப்பட்டுள்ளது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டுகின்ற கூட்டத்தில், கலந்து கொள்வதற்கு முன்பு, இந்தப் பிரச்சினை குறித்து, நாம் மேற்கொள்ள வேண்டிய முடிவுகள் குறித்தும்; எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்; உங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும், அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில், ஒருமைப்பாட்டு உணர்விற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக, தமிழகம் விளங்கி வருகின்றது. ஆனால், அதே நேரத்தில், இன்னொரு அண்டை மாநிலம், நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையை, சற்றும் மதிக்காமல்; தர்மத்தின் அடிப்படையிலே கூட, நமக்குப் பாசன நீரை, விட மறுத்திருப்பது, வேதனைக்குரிய விஷயமாகும். இரண்டு மாநிலங்களுக்கு இடையே, இது போன்ற பிரச்சினைகள் ஏற்படும் போது, நான் சட்டமன்றப் பேரவையில், நேற்று குறிப்பிட்டதைப்

போல, உடனடியாகத் தலையிட்டு, தீர்க்க வேண்டிய கட்டாயமும், அவசியமும், மத்திய அரசுக்கு உள்ளது.

தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படாமலும்; தமிழகத்தின் ஜீவாதார உரிமைகள், பறிக்கப்படாமலும்; நல்லதொரு முடிவை, மத்திய அரசு எடுக்க வேண்டும். அத்தகைய நல்ல முடிவைப் பெற, நாம் அனைவரும் ஓரணியில், ஒற்றுமையாக திரண்டு நிற்க வேண்டும் என்றும்; நீங்கள் அனைவ்ரும், உங்களது முழு ஒத்துழைப்பை, எனக்கும், தமிழக அரசுக்கும் நல்க வேண்டும் என்றும், கேட்டுக் கொள்கிறேன்.

இப்பிரச்சனை குறித்து, உங்களது மேலான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வழங்க வேண்டும், என்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

***(29.12.1995 அன்று நடைபெற்ற காவிரி நீர் தொடர்பான அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரை)***

# ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே எனது குறிக்கோள்

சமூக நீதியையும், சமத்துவ சமுதாயத்தையும், சகோதரத்து வத்தையும் ஒருங்கே உணர்த்துகின்ற, இந்த மாபெரும் கூட்டத்தில் பங்கேற்று, உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழ்நாட்டில் வாழும், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு, ஒரு தூண்டுகோலாக விளங்கிக் கொண்டிருக்கும் அரசு, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாப்பிற்கு ஒரு கேடயமாக, அரணாகச் செயல்பட்டு வரும் இயக்கம்; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு மேலாக, செயல்பட்டு வரும், உங்கள் அன்புச் சகோதரியின் முக்கிய குறிக்கோள்; ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது தான்!

எத்தகைய ஒரு உயர்ந்த வாழ்க்கையை, ஆதிதிராவிட மக்கள் வாழ வேண்டும் என்று, டாக்டர் அம்பேத்கர் கனவு கண்டாரோ; அத்தகைய வாழ்க்கையை, அவர்களுக்குப் பெற்றுத் தருவது தான், எங்களது ஒரே லட்சியம். 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தைப் பெரியார், 'பேரறிஞர் பெருந்தகை' அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் ஆகியோர், எங்களுக்கு வகுத்தளித்த லட்சியப் பாதையில், அந்தக் குறிக்கோளை அடைந்திட, நாளும் மக்கள் பணி ஆற்றி வருகின்றோம்.

பொது வாழ்க்கையில், எங்களை வழி நடத்திச் சென்ற, மாபெரும் தலைவர்கள், அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்காமல்; அடுத்த தலைமுறையைப் பற்றி மட்டுமே சிந்திக்க, எங்களுக்குச் சொல்லித் தந்து சென்றிருக்கிறார்கள். கொண்ட கொள்கையை நிறைவேற்ற, எத்தனை எதிர்ப்புகள்; எத்தனை இன்னல்கள்; எத்தனை சவால்கள்; எத்தனை சங்கடங்கள் வந்தாலும்; அவற்றை துணிவுடன் எதிர்கொள்ளும், மனத் துணிவையும், வெல்லுகின்ற ஆற்றலையும், லட்சிய உணர்வையும், நாங்கள் இயற்கையாகவே பெற்றுள்ளோம்.

இன்று தமிழகம் எல்லா துறைகளிலும், முன்னிலையில் விளங்கிக் கொண்டிருக்கிறது! தொழில் துறையிலும், விளையாட்டுத் துறையிலும், இன்று சர்வதேச வரைபடத்தில், நமக்கென்று தனி இடத்தைப் பெற்றுள்ளோம்! தமிழ்த் தாய்க்குச் சிறப்பு சேர்க்க, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, தஞ்சைத் தரணியில் நடத்தி, உலகத் தமிழர்களை ஒன்றுபடுத்தினோம். உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மேற்கொண்ட, சமூக நல, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், இன்று மத்திய அரசால் மட்டுமின்றி, மற்ற மாநில அரசுகளாலும், கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. எல்லா துறைகளிலும், ஒட்டு மொத்த வளர்ச்சியை, தமிழகம் இன்று கண்டு வருவதை, எவரும் மறுக்க முடியாது.

'மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்' காக்க, நாம் செயல்படுத்தி வரும், 15 அம்ச நலத் திட்டமும்; தொட்டில் குழந்தை திட்டமும்; பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமும்; இன்று இந்தியத் துணைக் கண்டத்தில், மற்ற மாநிலங்களுக்கு, முன்னோடித் திட்டங்களாக விளங்கி வருகின்றன.

20 அம்ச திட்ட, வளர்ச்சிப் பணிகளின் செயலாக்கத்தில், அகில இந்திய அளவில், கடந்த 3 ஆண்டுகளாக, முதலிடத்தைத் தக்க வைத்து வருகின்ற ஒரே அரசு, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தான். வீட்டு வசதித் துறையாக இருந்தாலும் சரி; போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் சரி; வேலைவாய்ப்புத் துறையாக இருந்தாலும் சரி; அந்த துறைகள், அகில இந்திய அளவில், பல்வேறு விருதுகளைப் பெற்று வருவது, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் தான். அந்த வகையில் நாங்கள், ஆதிதிராவிட மக்களின் பொருளாதார, மற்றும் சமூக மேம்பாட்டிற்காக, பல புதிய திட்டங்களை உருவாக்கினோம். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் கண்ட, புதிய உலகைப் படைக்க, நாங்கள் துணிவுடன் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தி, அம்மக்களை ஆற்றல் படைத்தவர்களாக, மாற்றிக் கொண்டு வருகின்றோம்.

ஆதி திராவிடப் பெருங்குடி மக்களின், பல்முனை மேம்பாட்டிற்கு, கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர், அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். மற்ற தலைவர்களுக்கு இல்லாத, ஒரு தனிச் சிறப்பு, டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு உண்டு. செல்வச் செழிப்பும், செல்வாக்கும், பரம்பரைப் பாரம்பரியமும் உள்ளவர்கள்தான், நாட்டை ஆளவும்,

சட்டங்களை இயற்றவும் முடியும், என்ற எண்ணத்தை; தனது வாழ்க்கையின் மூலம், தகர்த்தெறிந்து காட்டியவர், டாக்டர் அம்பேத்கர் அவர்கள். சமுதாயத்தின் அடித்தளத்திலே உதித்து; சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்து; அரசியல் நிர்ணய சட்டத்தைத் தயாரிக்கும், மகத்தான பணியில் ஈடுபட்டு; சமதர்ம, சமூக நீதித் தத்துவங்களை, வேரூன்றச் செய்ய உதவியவர், டாக்டர் அம்பேத்கர் அவர்கள். அவர் விட்டுச் சென்ற, அவரது லட்சியக் கனவுகளை நனவாக்க, அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணியினர், ஒரு பொது நல உணர்வோடு, செயல்பட்டு வருவதை அறிந்து, நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த முன்னணியின் செயல்வீரர்கள், தாங்கள் மேற்கொள்ளும் எல்லாப் பணிகளிலும், தொடர்ந்து வெற்றிகளைப் பெற்று, சிறப்புகளை அடைய, எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை, உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அண்ணல் அம்பேத்கர், ஒரு தனி மனிதர் அல்ல; ஒரு மாபெரும் இயக்கம்! அவரது லட்சியங்கள், ஒரு தனி மனிதரின் சிந்தனைகள் அல்ல; ஒரு சமுதாயத்தைப் பண்படுத்தி, வளம் பெறச் செய்யும் ஆயுதங்கள்! இருட்டினில் வாழும் இதயங்களை, வெளிச்சத்திற்குக் கொண்டு வர, வேள்வியை மேற்கொண்ட, அந்த மாமனிதரின் நினைவுகள்; என்றென்றும் சமுதாயத்தில் ஒரு தாக்கத்தை, உண்டாக்க வேண்டும் என்பதற்காகவே; தமிழக அரசின் சார்பில், அவரது திருவுருவச் சிலை ஒன்றை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, சென்னையில் நிறுவியது. 5 கோடி ரூபாய் மதிப்பில், அண்ணலுக்கு மணிமண்டபம் ஒன்றையும், சென்னையில் உருவாக்கி வருகிறது, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு! இத்தனை ஆண்டுகளாக, சென்னை மாநகருக்கு இல்லாத, இந்த இரண்டு சிறப்புகளையும், நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு ஏற்படுத்தி இருக்கிறோம், என்பதைச் சுட்டிக் காட்டுவதில், நான் பெருமிதம் அடைகிறேன்.

சமதர்மத்திற்கும், சமூக நீதிக்கும், தமிழகம், இந்திய துணைக் கண்டத்திற்கு, ஒரு வழிக் காட்டியாக, எப்போதும் விளங்கி வருகிறது. இன்றல்ல, நேற்றல்ல; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற மாபெரும் உண்மையை, உலகிற்கு உணர்த்தியவர்கள், நம் முன்னோர்கள். 'சாதி இரண்டொழிய வேறில்லை'

என்று முழங்கியவர், முதுபெரும் ஔவை தமிழ் மூதாட்டி. ஜாதி வேறுபாடுகளைக் களைந்து, இறைவனையே ஆட்கொண்டவர், இந்த பூமியில் அவதரித்த, கண்ணப்ப நாயனார். இறைவன் முன்பு, அனைவரும் சமம் என்று முழங்கியவர், நமது நாட்டில் பிறந்த ஸ்ரீராமானுஜர்.

"காக்கை, குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்,
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க நோக்க களியாட்டம்"

என்று, அஃறிணைப் பொருட்களையும், உயர்திணையோடு சேர்த்து; ஒரே ஜாதியாகக் கண்டவர், மகாகவி பாரதியார். சமுதாயத்தின் மூட நம்பிக்கைகளையும், கொடிய பழக்க வழக்கங்களையும், ஜாதி வேற்றுமைகளையும், உடைத்து எறியும் மாபெரும் வேள்விக்கு, தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர், வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் அவர்கள். 'ஏழைகளின் சிரிப்பிலே, இறைவனைக் காண்கிறேன்' என்று, பொது வாழ்க்கையின் புது அர்த்தத்தை நமக்குப் போதித்தவர், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். ஜாதி, மதம், பொருளாதார பேதம் ஆகியவற்றைக் கடந்து, நாம் அனைவரும் 'ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்', என்ற குடும்பப் பாச உணர்வை, ஊட்டி வளர்த்தவர், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள். "உனக்கொரு பங்கும், எனக்கொரு பங்கும் நிச்சயம் உண்டு உலகிலே" என்று, தனது பாடல்கள் வழியே, புரட்சித் தலைவர் காட்டிச் சென்ற, சமத்துவக் கொள்கைகள், இன்று உங்கள் அன்புச் சகோதரியின் அரசுக்கு, வழிகாட்டிகளாக விளங்கி வருகின்றன.

ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கை மேம்பாட்டில், நாங்கள் கொண்டுள்ள அதிதமான ஈடுபாட்டை, அத்துறை அவர்களின் நலனுக்கு, ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு, எடுத்துக் காட்டும் என்று நம்புகிறேன். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயல்பாட்டிற்கு, 1991-92-ல் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, 103 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் அந்த ஒதுக்கீடு, இன்று இரண்டு மடங்காகி, நடப்பாண்டில், 205 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆதி திராவிடர்

நலனில், உங்கள் அன்புச் சகோதரியின், அதிதமான ஈடுபாட்டை, இது விளக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

திட்டங்களைத் தீட்டுவதில் மட்டுமே, மகிழ்ச்சியை அடைகின்ற அரசு அல்ல, இந்த அரசு. மாறாக, தீட்டிய திட்டங்கள், முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு, பின்னர் மக்களுக்கு சென்றடைகின்றனவா என்பதை, விழிப்புடன் கண்காணித்து வரும், துடிப்புள்ள ஒரு அரசு.

நான் முதலமைச்சராகப் பதவியேற்ற பின்பு, ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் நலனுக்காக, 10 அம்ச சிறப்புத் திட்டத்தை அறிவித்தேன். அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு, நிதி உதவி; விவசாயக் குடும்பங்களுக்கு, பாசனக் கிணறுகள் அமைக்க நிதி உதவி; தொழில் தொடங்க நிதி உதவி; தொழில் கல்வி பெற்றோருக்கு வேலை வாய்ப்புகள்; இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்; concrete தளம் அமைந்த இலவச வீடுகள்; குடிநீர் வசதி; குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள்; 'ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ், மின் விளக்கு வசதி; ஆகியவற்றை இத்திட்டத்தின் கீழ், ஒரு முனைப்புடன் ஏற்படுத்தி வந்துள்ளோம்.

Our Government is firmly committed, both in letter and spirit, to the ultimate upliftment of the downtrodden and the suppressed.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், நாங்கள் மேற்கொண்ட நலப் பணிகளும், அவைகள் சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள, தாக்கங்களையும் சுட்டிக் காட்டுவது, பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

எங்களைப் பொருத்தவரையில், நமது திட்டங்களின் பயன்கள், மக்களுக்குச் சென்று அடைய, உதவுகின்ற சாதனங்களாக, நிர்வாக வரைமுறைகளும், கொடுக்கப்படும் இலக்குகளும், இருக்க வேண்டும்; நிச்சயமாக அவை முட்டுக்கட்டைகளாக அமையக் கூடாது. எங்கள் செயல்பாட்டிற்கு விதிமுறைகள், தடையாக மாறிய போதெல்லாம், அவற்றை நாங்கள் துணிவுடன் தகர்த்தோம். எனவே தான், இலக்குகளை எளிதாக அடைந்தோம்.

3.5 லட்சம் ஆதிதிராவிட குடும்பங்களுக்கு, நிதி உதவி வழங்க வேண்டும் என்பது இலக்கு; ஆனால் உதவி பெற்றவர்களின் எண்ணிக்கையோ, 3.9 லட்சம் குடும்பங்கள். 10,000 பாசனக் கிணறுகள் அமைப்பதற்கு, நிதி உதவி வழங்க ஆணை; ஆனால் நாங்கள் அமைத்ததோ, 12,000 பாசனக் கிணறுகள். 5000 பேருக்கு, தனி நபர் தொழில் துவங்க, நிதி உதவி வழங்கப்பட வேண்டும் என்பது இலக்கு; உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில், உதவி பெற்றதோ, 5,770 நபர்கள். ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதில், நாங்கள் புதிய முறைகளைக் கையாண்டோம். தடையாக இருந்த விதிமுறைகள், விலக்கி வைக்கப்பட்டன. இலக்கு என்னவோ, 4 லட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் மட்டுமே! ஆனால் நாங்கள், இதுவரை வழங்கி இருப்பதோ, 7 லட்சத்து 75 ஆயிரம், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்!

'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ், இரண்டு லட்சம் குடும்பங்களுக்கு, உதவி வழங்க திட்டம் தீட்டப்பட்டது; ஆனால் இன்றைய அளவில், எங்கள் ஆட்சிக் காலத்தில் மட்டும், இந்த வசதியைப் பெற்ற, ஆதிதிராவிட குடும்பங்களின் எண்ணிக்கையோ, இரண்டு லட்சத்து 5000 ஆகும்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு, Concrete தளம் அமைந்த, வீடுகளைக் கட்டித் தருவதில், உங்கள் அன்பு சகோதரியின் அரசு, புதிய சாதனையைப் படைத்துள்ளது. கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு, ஆகும் கூடுதல் செலவினத்தை, தமிழக அரசே மேற்கொள்ள, வழி வகை செய்தோம்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, 1981 முதல் 1991 வரை அதாவது பத்தாண்டு காலகட்டத்தில், 96,801 Concrete தள வீடுகள், கட்டி வழங்கப்பட்டுள்ளன. ஆனால் எங்கள் ஆட்சிக் காலத்தில், 1991 முதல் 1995 வரை, நான்காண்டுகளில் மட்டும், 1,34,132 Concrete தள வீடுகள், கட்டி முடிக்கப்பட்டு, ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு, இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. அது மட்டுமின்றி, இந்த ஆண்டு, வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு, ஒரு சிறப்பினமாக 70,187 concrete வீடுகள், 147 கோடி ரூபாய் மதிப்பில் கட்டும் பணிகள்,

துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஆதிதிராவிட மக்களுக்கு, Concrete வீடுகளைக் கட்டி வழங்கும் பணியில், எங்கள் அரசு, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன், செயல்பட்டு வருகிறது.

குடிநீர் வசதி; இணைப்புச் சாலை வசதி; மின் விளக்கு வசதி; இடுகாட்டு வசதி; இடுகாட்டுக்கு செல்லும் பாதை வசதி; ஆகிய அடிப்படை வசதிகளை, எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும், வழங்க வேண்டும் என்று, நான் ஆணை பிறப்பித்தேன். அதற்காக, 125 கோடி ரூபாயும், ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் இல்லை என்று கணக்கிடப்பட்ட, 2905 குடியிருப்புகளில், இதுவரை 2000 குடியிருப்புகளுக்கு, அனைத்து அடிப்படை வசதிகளும், செய்து தரப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள், மீதமுள்ள 905 குடியிருப்புகளுக்கும் இந்த வசதிகள் செய்து தரப்படும். தமிழகத்தில் உள்ள 31,000 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் அடிப்படை வசதிகள் கிடைத்து விடும். அடிப்படை வசதிகள் இல்லாத ஆதிதிராவிடர் குடியிருப்புகளே இல்லை என்ற, ஒரு உன்னதமான சூழ்நிலையை, நிச்சயமாக உருவாக்கிக் காட்டுவோம்.

சமீபத்தில், 28 உறுப்பினர்கள் அடங்கிய, மாநில அளவிலான, ஆதிதிராவிடர் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து; ஆதி திராவிடர் நலன் காக்க, ஒரு புதிய பாதையை அமைத்துள்ளது, உங்கள் அன்பு சகோதரியின் அரசு. 1.12.1995 அன்று, இந்த குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து வந்து, இதில் பங்கு கொண்ட, எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகள் வழங்கிய கருத்துக்கள், இன்று செயல்வடிவம் பெற்று வருகின்றன.

உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி, மாண்புமிகு திரு.சாமிதுரை அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட, 9 பேர் அடங்கிய, மாநில ஆதிதிராவிடர் நல கமிஷன்; இந்திய துணைக் கண்டத்தின், பல பாகங்களிலிருந்து, பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. இந்த குழு வழங்கும் பரிந்துரைகளை, எங்கள் அரசு, ஒரு புதிய முனைப்புடன் செயல்படுத்தும், என்று உறுதி கூறுகிறேன்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், பொருளாதார மேம்பாட்டோடு, கல்வி மேம்பாட்டையும் அடைய வேண்டும், என்ற லட்சிய உந்துதலில், நாங்கள் மேற்கொண்டு வரும் திட்டங்கள், இன்று புதிய விடியலுக்கு, வழி வகுத்து வருகின்றன. ஒரு புறம், ஆதிதிராவிடர்களுக்கான, சிறப்புப் பள்ளிகளின் எண்ணிக்கை, அதிகரித்துள்ளது; விடுதிகள் அதிகரித்துள்ளன; பயில்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மறு புறம், உயர்நிலைப் பள்ளிகளில், இறுதி வகுப்புத் தேர்ச்சி, 43 சதவிகிதத்திலிருந்து, 57-ஆக உயர்ந்துள்ளது; மேநிலைப் பள்ளி, இறுதி வகுப்புத் தேர்ச்சி, 38 சதவிகிதத்திலிருந்து, 58-ஆக உயர்ந்துள்ளது; உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியின், இன்னொரு புதிய மைல் கல் ஆகும்.

ஆதி திராவிடப் பெண்களின் கல்வி வளர்ச்சியில், ஒரு புதிய முன்னேற்றத்தை, ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக; 5 மாவட்டங்களில், 3-ஆம் வகுப்பிலிருந்து, 5-வது வகுப்பு வரை, தொடக்கக் கல்வி பயிலும், ஆதி திராவிடப் பெண் குழந்தைகளுக்கு; ஆண்டொன்றுக்கு 500 ரூபாய், நிதி உதவி வழங்கி; அவர்களின் தொடக்கக் கல்விக்கு, குந்தகம் ஏற்படாத வண்ணம், பாதுகாத்து வருகின்றோம். மேலும், ஆறாம் வகுப்பில், அடி எடுத்து வைக்கும், ஆதிதிராவிட மாணவிகளுக்கு, மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய், நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. 60,000 பெண் குழந்தைகள், பயன் அடையும் இத்திட்டம், தற்போது மேலும் 5 மாவட்டங்களுக்கு, விரிவுபடுத்தப் பட்டுள்ளது; இதற்கென, 6 கோடி ரூபாய், நிதி ஒதுக்கீடும் செய்யப் பட்டுள்ளது.

ஒரு புறம், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும்; மறு புறம், சமூக விழிப்புணர்வுத் திட்டங்களையும்; நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். நாங்கள் மேற்கொண்டு வரும் நல்ல முயற்சிகளுக்கு, சிலா் உதவிகரமாக இல்லாவிட்டாலும்; அரசியல் மனமாச்சரியங்களை முன்னிலைப்படுத்தி; இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சிகளையும் மிகைப்படுத்தி; அரசைக் குறை கூறி வருகின்றனா். போற்றலும், தூற்றலும், அத்தகையோர்களின் குற்றச்சாட்டுகளும், எங்களது பணி ஆர்வத்தை, சற்றும் குறைத்துவிடாது. இது வரலாறு காட்டும் உண்மை ஆகும்.

சமீபத்தில், நான் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திற்குச் சென்று, அப்பகுதியின் அரசியல் கட்சித் தலைவர்களையும், சமுதாயத் தலைவர்களையும், பொது மக்களையும், சந்தித்துப் பேசினேன். தேவையற்ற சந்தேகங்களைப், போக்கிவிட்டு வந்தேன். ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு, எங்கள் அரசு, என்றென்றும் ஓர் அரணாகவும், பாதுகாவலனாகவும் விளங்கும் என்பதை, இது உறுதிப்படுத்தி உள்ளது. ஆதிதிராவிட மக்களின், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியில், நாங்கள் தொய்வின்றி, தொடர்ந்து செயலாற்றுவோம். எங்கள் பாதையில், எத்தனை தடைகள் போடப்பட்டாலும், அவற்றை ஒரு சவாலாகக் கருதி; துணிவுடன் எதிர்கொண்டு; வெற்றி பெறுவோமே தவிர, ஒரு போதும் பின் வாங்க மாட்டோம்.

ஆதிதிராவிட மக்கள், காவல் துறைப் பணிக்கு, தேர்வு செய்யப்படும் போது, அவர்களது உயரம், ஒரு தடையாக இருந்து வந்தது. எனவே ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியின மக்களுக்கு, நிர்ணயிக்கப்பட்ட உயரமான, 168 சென்டி மீட்டர் அளவிலிருந்து, 3 சென்டி மீட்டர் அளவு, உயரத்தைக் குறைத்து; 165 சென்டி மீட்டர் உயரம் இருந்தாலே; அதாவது, ஐந்தரை அடி உயரம் இருந்தாலே போதும், என்ற புதிய சலுகையை, நான் சமீபத்தில் அறிவித்தேன். 10,000க்கும் மேற்பட்ட காவலர்கள், தேர்வு செய்யப்படும் போது, அதில் 1,800 பேருக்கும் அதிகமான, ஆதிதிராவிட மக்கள், இடம் பெறுவார்கள் என்பதை எண்ணி, என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

தமிழகத்தைச் சேர்ந்த, ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், இன்று எல்லாத் துறைகளிலும், வியக்கத் தக்க சாதனைகளைப், படைத்து வருகிறார்கள். Common wealth விளையாட்டுப் போட்டிகளில், நான்கு முறை பதக்கங்களைப் பெற்ற, பளு தூக்கும் வீரர், திரு. கருணாகரன் அவர்கள், அர்ஜுனா விருதையும் பெற்று, தமிழகத்திற்கு சிறப்பைத் தேடித் தந்திருக்கிறார். அதே போல, சர்வதேச அளவில் கேரம் விளையாட்டில், புகழ் பெற்று விளங்கும், திரு. மரியம் இருதயராஜ்; இமய மலைத் தொடர்ச்சியில் அமைந்துள்ள, மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரத்தில், 18,000 அடி வரை ஏறி, சாதனையைப் படைத்துள்ள இளைஞர், திரு. தேவா; Kungfu மற்றும் Karate போன்ற வீர விளையாட்டுக்களில், வல்லுநராக திகழ்ந்து கொண்டிருக்கும் திரு. நேசன் ஆகியோர், தமிழகத்தின் பெருமைக்குரிய மைந்தர்கள், என்பதில்

சந்தேகம் இல்லை. அவர்கள் அனைவருக்கும், எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை, உரித்தாக்கிக் கொள்கிறேன்.

சரியான, நியாயமான வாய்ப்புகள் கிடைத்தால், எந்தப் பிரிவைச் சார்ந்த மக்களும், வாழ்க்கையில் உயர்ந்து, வெற்றி பெறுவார்கள் என்பதை, இந்த சாதனையாளர்கள் நிரூபித்துள்ளார்கள். அவர்களது சாதனையைப் போற்றும் வண்ணம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ஒவ்வொருவருக்கும், 25,000 ரூபாய் வீதம், ஒரு லட்சம் ரூபாய் பணப் பரிசு, வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த, இளைய தலைமுறையினர், எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு, புதிய சாதனைகளைப் படைக்க வேண்டும், என்பதே எனது பேரவா. அவ்வாறு, அவர்கள் மேற்கொள்கின்ற எல்லா முயற்சிகளுக்கும், எங்கள் அரசு என்றென்றும், உறுதுணையாக இருக்கும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டை, இத்தனை சீரோடும் சிறப்போடும், ஏற்பாடு செய்த அன்புச் சகோதரர், திரு. M. மூர்த்தி அவர்கள், அடக்கமும், பண்பும் அமைந்த, துடிப்பான ஒரு இளைஞர். அடக்கம் இருக்கும் அதே நேரத்தில், அவரிடம் தெளிந்த மனத் துணிவையும், செயலாற்றலையும், ஒருங்கே நான் காண்கின்றேன். அவரோடு, தோளோடு தோள் நின்று, பணி புரியும், லட்சிய உணர்வு மிக்க, கூட்டத்தைக் காணும் போது, எனது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

நீங்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே, எனது பேரவா. ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், இந்த நாட்டின் மைந்தர்கள். அவர்கள் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகள், அனைத்தையும் பெற்று; சீரியதோர் வாழ்க்கையை மேற்கொள்ள; உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, புதிய உறுதியுடன், முனைப்புடன், தொடர்ந்து செயல்படும், என்பதை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

***(8.1.1996 அன்று நடைபெற்ற அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணியின் மாநில மாநாட்டில் ஆற்றிய உரை)***

# செயல்திறன் மிக்க திட்டங்களால் புதுப்பொலிவு பெற்றுள்ளது தர்மபுரி மாவட்டம்

கடந்த இரண்டு நாட்களாக பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களுக்குச் சென்று ஏற்கெனவே முடித்து வைக்கப்பட்ட திட்டங்களை துவக்கி வைத்தும் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வந்துள்ளேன். நேற்று அதாவது 11.1.1996 அன்று 16 இடங்களுக்குச் சென்று புதிய திட்டங்களைத் துவக்கி வைத்த பின்பு, மாலை பர்கூரில் நடைபெற்ற, எழுச்சி மிக்க ஒரு கூட்டத்தில் 17-வது நிகழ்ச்சியாக நான் கலந்து கொண்டு உரையாற்றினேன். இன்று காலையிலிருந்து இந்த விழாவிற்கு வரும் வரை 14 இடங்களுக்குச் சென்று இத்தகைய தொடக்க விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இப்போது 15-வது நிகழ்ச்சியாக இந்த விழாவில் கலந்து கொண்டுள்ளேன். ஆக மொத்தம் 32 இடங்களுக்கு இதுவரை சென்று திட்டங்களை தொடங்கி வைத்ததோடு, பர்கூரில், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திட்டங்களையும், இம்மாவட்டத்தின் இதர பகுதிகளுக்கான திட்டங்களையும் தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வந்துள்ளேன்.

இறுதிக் கட்டமாக, இங்கே போச்சம்பள்ளியில், 32வது நிகழ்ச்சியாக இந்த எழுச்சிமிகு விழாவில் கலந்து கொண்டு, பெருந்திரளாக குழுமியுள்ள உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தர்மபுரி மாவட்டம் விவசயத் துறையிலும் தொழில் துறையிலும் பல காலமாக பின் தங்கிய ஒரு மாவட்டமாக இருந்து வந்தது. இந்த நிலையை மாற்றி அமைத்து இம்மாவட்டத்தின் பொருளாதார மேம்பாடிற்கு வழி வகுக்க வேண்டும் என்று நான் திட்டமிட்டேன் எனது அவாவினை பூர்த்தி செய்யும் வகையில் கடந்த நான்கரை ஆண்டுகால கட்டத்தில், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் இம்மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

செயல் திறன் மிக்க இந்த அரசு நல்ல திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்தியதால் இந்த மாவட்டம் இன்று ஒரு புதிய பொலிவினைப் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

பிற்பட்ட மாவட்டமான அதுவும் குறிப்பாக மிகவும் பின்தங்கியுள்ள வளர்ச்சி அடையாத பர்கூர் சட்டமன்ற தொகுதியைத் தேர்ந்தெடுத்து நான் பொதுத் தேர்தலில் போட்டியிட்டதற்கு இப்பகுதியில் உள்ள பிற்பட்ட தன்மையை நீக்கி ஒரு நிரந்தர முன்னேற்றத்தை உருவாக்கிக் காட்ட வேண்டும் என்ற தணியாத உந்துதலே காரணம் ஆகும். கடந்த நான்கரை ஆண்டுகளுக்கும் மேலாக உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் தொழில்துறையில் தர்மபுரி மாவட்டம் ஒரு புதிய ஏற்றத்தைக் கண்டுள்ளது.

கடந்த நான்கரை ஆண்டுகால கட்டத்தில் 1,659 கோடி ரூபாய் மூலதனத்துடன் 7,235 தொழிற்சாலைகள் இந்த மாவட்டத்தில் உருவாகியுள்ளன என்பது ஒரு சாதாரண நிகழ்ச்சி அல்ல, மாறாக, இது ஒரு மாபெரும் சாதனை ஆகும்.

கல்லாமையும், இல்லாமையும் ஒரு நாட்டிலிருந்து துரத்தி அடிக்கப்பட்டால் தான் அந்த நாடு எல்லா வகையிலும் வளம் பெறும்; ஏற்றம் பெறும். எனவேதான், பிற்படுத்தப்பட்ட நிலையை மாற்றி அமைக்க, பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் அதே நோக்கில், இப்பகுதி வாழ் மக்கள், கல்வி அறிவைப் பெற்று, தங்கள் வாழ்க்கையில் மேன்மை அடைய, புதிய கல்வி நிலையங்களையும், கல்விக் கூடங்களையும் ஏற்படுத்த நான் நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சியோடு, தனி நபர் பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்துவதற்கு, எங்கள் ஆட்சிக் காலத்தில், அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதில், ஒரு புதிய முனைப்பை ஏற்படுத்தினோம். வேறு எந்த ஒரு காலகட்டத்திலும், மனுதாரர்களின் மனுக்கள், இத்தனை விரைவாக பரிசீலிக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் ஆயிரக்கணக்கானோர்க்கு வழங்கப்பட்டதில்லை. குறிப்பாக, வறுமை ஒழிப்புத் திட்டங்களை விரிவுபடுத்தி பல்லாயிரக் கணக்கானோருக்கு அரசு நலத்திட்ட உதவிகள் சென்றடைய வழி வகை செய்தோம். கடந்த இரண்டு நாட்களில் மட்டும் 2,670 பேருக்கு ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் கடனுதவிகளும், மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன. தனி நபர் வாழ்க்கை மேம்பாட்டிற்கு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு போல இதுவரை இத்தனை ஈடுபாட்டை எவரும் காட்டியதில்லை என்பது மட்டும் உறுதி.

இந்த நான்கரை ஆண்டுகால கட்டத்தில், இத்தொகுதியில் அதாவது பர்கூரில் ஒரு பொறியியல் கல்லூரியும், ஒரு மகளிர் கலைக் கல்லூரியும், ஒரு Polytechnic-க்கும் இம்மாவட்டத்தில் 11 புதிய கல்வி நிலையங்களும், 12 புதிய விடுதிகளும், அமைக்கப்பட்டுள்ளன என்பது நினைத்து நினைத்து மகிழத் தக்க மாபெரும் சாதனை ஆகும். இந்த உயர் கல்வி கட்டமைப்புகள், இம்மாவட்டத்தின் கல்வித் துறையில் ஏற்படுத்தியுள்ள மகத்தான தாக்கத்தை நிச்சயமாக எவரும் மறுக்க முடியாது.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், பர்கூரில் ஒன்பதே முக்கால் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் பொறியியல் கல்லூரியும் மத்தூர் மற்றும் போச்சம்பள்ளிக்கு இடையே 45 இலட்சம் மதிப்பில் அமைய உள்ள சீர்மிகு நற்பள்ளி, அதாவது School of excellence பர்கூரில் அமைக்கப்பட்டு வரும் Polytechnic மற்றும் மகளிர் கல்லூரிகள் ஆகியவையும் இப்பகுதி வாழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

இப்பகுதி வாழ் மக்கள் அனைத்து அடிப்படை வசதிகளைக் கொண்ட தொழிற் கூடங்களைப் பெற்று தொழில் முனைவோர்களாகவும், தொழில் அதிபர்களாகவும் வளர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு SIDCO மற்றும் TACID நிறுவனங்கள் புதிய தொழிற் பேட்டைகளை இம்மாவட்டத்தில் உருவாக்கி வருகின்றன. அதிலும் குறிப்பாக நேற்று நான் பர்கூரில் தொடங்கி வைத்த பெண்களுக்குன தொழிற்பேட்டை அப்பகுதி வாழ் மகளிரின் தொழிற் முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி, அவர்தம் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். பெண்கள் தங்கள் காலிலே, சுயமாக நிற்பதற்கும் சுயதொழிலை மேற்கொள்வதற்கும் மற்றவர்களோடு சமுதாயத்தில், சரிநிகர் சமானமாக வாழ்வதற்கும் இந்தப் புதிய கல்விக் கூடங்களும், தொழிற்கூடங்களும் வழி வகுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இன்று போச்சம்பள்ளி மற்றும் அதன் சுற்றுப்புறத்தைச் சேர்ந்த பகுதிகளில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களையும் புதிய திட்டங்களையும் இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் தொடங்கி

வைத்ததிலும், 150 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆக மொத்தம் இன்று 155.12 கோடி ரூபாய்க்கும், அதிகமான மதிப்பில் புதிய திட்டங்கள் இப்பகுதியின் மேம்பாட்டிற்காக செயல்படுத்தபட உள்ளன என்பதை அறியும் போது என் மனம் ஆனந்தம் அடைகிறது.

2 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள போச்சம்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை துவக்கி வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 24 குடியிருப்புகள் இத்திட்டத்தால் பயன் பெறுகின்றன. பாதுகாக்கப்பட்ட குடிநீரை ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் வழங்க வேண்டும் என்பதே நான் கண்ட கனவு ஆகும். ஒரு இலட்சிய உணர்வோடு மக்கள் பணி ஆற்றி வரும் நான், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணியை ஒரு புனிதக் கடமையாகவே மேற்கொண்டு வருகின்றேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள கிட்டத்தட்ட எல்லாப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. நீரில் Fluoride அளவை குறைப்பதிலும், கூடுதல் குடிநீர் வசதிகளை உருவாக்கித் தருவதிலும் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு எப்போதும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

போச்சம்பள்ளியில், இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடிக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் 3.12 இலட்சம் ரூபாய் மதிப்பில் மடத்தானூரில் 30,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஜம்புக் குட்டப்பட்டியில் 1.12 இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்பப் பள்ளிக் கட்டடம் போச்சம்பள்ளியில், இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் 10 தொகுப்பு வீடுகள், இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் தாதம்பட்டியில் 10 தொகுப்பு வீடுகள், ஜிங்கிள் சுதிரம் பட்டியில், 70,000 ரூபாய் செலவில், சத்துணவு கூட மையம், ஆகியவற்றையும் இன்று நான் திறந்து வைத்துள்ளேன்.

மத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி முழுமையான வளர்ச்சியைப் பெற வேண்டும் என்பதற்காகவே, டாமின் நிறுவனத்தின் சார்பில் 100

கோடி ரூபாய் மதிப்பில் Molybdenum Oxide தொழிற்சாலை, மிக விரைவில் இப்பகுதியில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கு இன்று நான் அடிக்கல் நாட்டியதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் தொழிற்சாலை பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், மறைமுக வேலைவாய்ப்பையும் வழங்கும். மேலும், இந்தத் தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு கிளைத் தொழில்களும், துணைத் தொழில்களும், இப்பகுதியில் உருவாகும் என்பதையும், அதனால் இப்பகுதியின் பொருளாதாரம், வளர்ச்சி பெறும் என்பதையும் எண்ண என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

போச்சம்பள்ளி பகுதியின் குடிநீர்க் குறையைத் தீர்த்து வைக்க இரண்டு புதிய குடிநீர்த் திட்டங்கள், விரைவில் செயல்படுத்தப்படும். 3 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில், 41 குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம், ஒரு குடிநீர்த் திட்டமும் 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 107 குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் மற்றொரு குடிநீர்த் திட்டமும், விரைவில் செயல்படுத்தப்படும் என்பதையும இந்த இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திட்டங்களை போர்க்கால அடிப்படையில் விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை வழங்கியுள்ளேன்.

அது மட்டுமின்றி TACID நிறுவனத்தின் சார்பில் போச்சம்பள்ளியில் 1,400 ஏக்கர் நிலப்பரப்பில் 41 ரூபாய் கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மாபெரும் தொழிற்பேட்டை Mega Industrial Estate ஒன்று விரைவில் உருவாக்கப்படும். போச்சம்பள்ளியில் SIDCO நிறுவனத்தின் சார்பில், மேலும் ஒரு தொழிற்பேட்டை 250 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், இரண்டு பெரிய தொழிற்பேட்டைகளும், போச்சம்பள்ளியில் செயல்படுத்தப் படுவது ஒரு சரித்திரச் சிறப்பு மிக்க நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை.

நேற்று மாலை பர்கூரில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில்

சிட்கோ நிறுவனத்தின் சார்பில் பெண்களுக்கென்றே பிரத்யேகமாக அமைக்கப்பட்ட தொழிற்பேட்டையைத் தொடங்கி வைத்தேன். அதுமட்டுமின்றி அந்தத் தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்கூடங்களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளையும், அதே விழா மேடையில் பல பெண்மணிகளுக்கும் வழங்கினேன் என்பதை மிக்க மிகழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பகுதி வாழ் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்த மாபெரும் முயற்சி ஒரு தூண்டுகோலாகவும், ஒரு முன்னோடித் திட்டமாகவும் அமையும் என்று உறுதியாக நம்புகிறேன்.

SIDCO நிறுவனத்தின் சார்பில், ஊத்தங்கரையில் 76 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய தொழிற்பேட்டை உருவாகவுள்ளது. இந்தத் தொழிற்பேட்டைகளுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

போச்சம்பள்ளி, முருக்கப்பட்டி, ஆகிய இடங்களில், 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 17 தொகுப்பு வீடுகள் புதுமோட்டூர்க் கிராமத்தில் ஒன்றரை இலட்சம் ரூபாய் மதிப்பில், சந்தைக் கட்டடம் ஆகியவற்றைக் கட்டுவதற்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இன்று 9 ஊராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த 349 பேருக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள், 23 இலட்சத்து 46,000 ரூபாய் மதிப்பில், இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன. பயனாளிகள் அனைவருக்கும், எனது கையினாலேயே உதவிகளை வழங்க வேண்டும் என்று நான் விரும்பினாலும் காலத்தின் அருமையைக் கருதி, 27 பேருக்கு மட்டும் நான் விழா மேடையில் உதவிகளை வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு இந்த உதவிகள் இன்றே, இதே இடத்தில், அதிகாரிகளால் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்றவர்கள் அவற்றை ஆதாரமாகக் கொண்டு தங்களின் சலியாத உழைப்பைக் கொடுப்பதில் எங்கள் அரசு மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது என்பதற்கு இம்மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகால கட்டத்தில் பல கோடி ரூபாய் மதிப்பில்

உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர்த் திட்டங்களே இமாலயச் சான்று ஆகும். அந்த அளவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், கைப் பம்புகள், விசைப் பம்புகள், குடிநீர்த் திட்டங்கள் ஆகியவை உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, இப்பகுதியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மேலும் பல புதிய திட்டங்களைத் தீட்டி, தொடர்ந்து முனைப்புடன் செயல்படுத்தும் என்று உறுதி கூறுகிறேன்.

இப்பகுதி வாழ் மக்களாகிய நீங்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற எனது உள்ளகிடக்கையை எடுத்துரைத்து விடைபெறுகிறேன்.

***(12.1.96 அன்று போச்சம்பள்ளியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)***

# காவிரி நதிநீர்த் தாவாவில், புதிய வழிகாட்டி விதிகளை ஏற்க இயலாது

தமிழகத்தின் நலனைக் கருத்தில் கொண்டு, சில முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளுவதற்கு, இங்கே நாம் குழுமியுள்ளோம் என்பதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், 6.2.1996 அன்று, தேசிய நீர் வளக் குழுமத்தின் கூட்டத்தினை, புது டில்லியில் கூட்டி யுள்ளார்கள். இந்தக் குழுமத்தின் உறுப்பினர் என்ற முறையில், நான் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தமிழகத்தின் சார்பில், கருத்துக்களைத் தெரிவிக்க உள்ளேன். அப்போது விவாதிக்கப்பட இருக்கின்ற பொருள்களின் மீது, தமிழக அரசின், உறுதியான நிலையை தெரிவிக்கவும்; சரியான அணுகுமுறையை மேற்கொள்ளவும்; உங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்கத் தான், இந்தக் கூட்டத்தை நாங்கள் கூட்டியுள்ளோம்.

6.2.1996 அன்று நடைபெறுகின்ற கூட்டத்தில், பல மாநிலங்கள் வழியே செல்லும், ஆறுகளின் நதி நீர்ப் பங்கீடு குறித்து, மத்திய அரசு தயாரித்துள்ள, கொள்கை குறிக்கோள்கள் அதாவது, National Policy Guidelines விவாதிக்கப்பட உள்ளன. இந்தக் குறிக் கோள்களின், முக்கியமான சில அம்சங்களை, நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பல மாநிலங்களின் வழியே ஓடும், ஆற்று நீரைப் பங்கீடு செய்வதற்கு, சில அடிப்படைகளை, மத்திய அரசு கோடிட்டுக் காட்டியுள்ளது.

முதலில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும், அந்த ஆற்றில் சேரும் நீர்வரத்து; அந்த மாநிலத்தில் பெய்து ஓடும் மழை நீர் அளவு; ஆகியவற்றைக் கணக்கில் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, ஒவ்வொரு மாநிலத்தின் வறண்ட பகுதிகளின், பாசன நீர்த் தேவை; மாநிலத்தில் நீர்ப் பாசன மேம்பாட்டு நிலை; சாகுபடிக்கு ஏற்ற பரப்பளவு; மேலும் மற்ற மாநிலங்களோடு அதன் ஒப்பீடு; வரும் எதிர்காலத்தின் தேவைகள்; குடிநீர்; நீர் மின் உற்பத்தி; இதர நீர் உபயோகத் தேவைகள் ஆகியவற்றையும்; மாநிலங்களின் பொதுவான, பொருளாதார முன்னேற்ற நிலையையும், கருத்தில் கொள்ள வேண்டும் என்றும்; நிலத்தடி நீர்; பாசன மேம்பாட்டின்

மூலம், ஏற்படும் நீர்ச் சிக்கனம்; நீர் உபயோக பயன்பாட்டு அதிகரிப்பு ஆகியவற்றையும்; மாநிலத்தின் பிற நீர் வள வாய்ப்புகளையும்; கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும், என்றும் கூறப்பட்டுள்ளது. இவை எல்லாம் 6-ம் தேதி நடைபெற உள்ள கூட்டத்திற்காக, இப்போது கிடைக்கப் பெற்றுள்ள குறிப்புகளில் காணப்படுகின்றன.

ஆனால், நம் நாட்டில் ஏற்கனவே, நிலை பெற்றுள்ள பாசனம்; அதற்கான காப்பு முறைகள்; உயர்ந்த உற்பத்தித் திறன் கொண்ட, படுகைப் பகுதிகளில், உபயோகிக்கும் நீரின் அளவு; போன்ற இதர அம்சங்களும், மரபுரிமைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இது நமது மாநிலத்தை, குறிப்பாக காவிரி பாசனத்தை, பெரிதும் பாதிக்கும்.

இது பற்றி ஏற்கனவே, தமிழக அரசுக்கு கிடைத்த கொள்கைக் குறிப்பை, நாங்கள் கவனத்தோடு பரிசீலனை செய்தோம். மத்திய நீர்க் குழுமம், அதாவது **Central Water Commission**, 17.5.1994 அன்று அனுப்பியுள்ள கடிதத்தில், தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு; தமிழக அரசு தனது பதிலை, 24.6.1994 அன்றே, மத்திய அரசுக்கு தெரிவித்துள்ளது. தமிழகத்தின் உரிமைகள், எந்த நிலையிலும் பாதிக்கப்படக் கூடாது; நமது ஜீவாதார உரிமைகள், மறுக்கப்பட கூடாது என்ற அடிப்படையில்தான்; நமது கருத்துக்களை, மத்திய அரசுக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், 1.1.1996ல் எனக்கு எழுதிய கடிதத்தில், இந்தக் கொள்கை குறிப்புகளைப் பற்றி, கோடிட்டுக் காட்டி; இந்த வழிகாட்டி விதிமுறைகளை, விவாதித்து முடிவு செய்ய, விரைவில் ஒரு கூட்டம் கூட்டப்படும், என்பதையும் தெரிவித்திருந்தார்கள். எனவே இந்த விஷயத்தை பற்றிய, தமிழக அரசின் சார்பில், நமது திண்ணமான கருத்துகளை, நான் 13.1.1996 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளேன். அந்தக் கடிதத்தின் நகலும், தமிழாக்கமும், உங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் கடிதத்தில், ஆலோசனைக்குரிய கொள்கைக் குறிக்கோள்கள், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின், பிரிவு 262ன் கீழ், உருவாக்கப்பட்ட நடுவர் மன்றத்தை, ஒருக்காலும் கட்டுப்படுத்தாது. மேலும், இது போன்ற **Guidelines**களை, சட்டமாக்குகின்ற அதிகாரமும், திறனும், நாடாளுமன்றத்திற்கும் இல்லை. அது மட்டுமின்றி, நிர்வாக முறையிலும், இத்தகைய **Guidelines**களை நடைமுறைப்படுத்த, மத்திய அரசுக்கு, சட்ட ரீதியான அதிகாரமும் இல்லை.

அவ்வாறு பிறப்பிக்கப்படும் குறிக்கோள்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தில், நீதித் துறைக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களில், முறையற்ற முறையில், தலையிடுவதாகக் கூட அமைந்து விடும். ஆகவே, அத்தகைய செயல், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு, புறம்பானதாகும் என்று, சட்ட வல்லுநர்களின் கருத்தையும், இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன். மேலும், இந்த வழிகாட்டி விதிமுறைகள், நீதி முறைக்கும்; நீதி முறைப்படி விசாரிக்கும் மன்றத்திற்கும்; அம்மன்றத்தின் நடவடிக்கைகளுக்கும்; குந்தகம் விளைவிக்கும். ஏற்கனவே, நடுவர் மன்றத்திற்கு விடப்பட்டு; விசாரணையில் உள்ள, காவிரி நதி நீர்த் தாவாவில்; இந்தப் புதிய Guidelinesகளை புகுத்த, சற்றும் இடமில்லை என்ற கருத்தையும், ஆணித்தரமாக வலியுறுத்தி உள்ளேன்.

தேசிய நீர் வளக் கொள்கை, பாசனத் தேவைகளுக்கு மட்டு மல்லாமல், ஒரு மாநிலத்தின் இதர நீர்த் தேவைகளையும், கருத்தில் கொண்டு; மற்ற நீர்த் தேவைகளுக்கும், அவற்றை எவ்வாறு, ஒருங்கிணைந்த முறையில் பயன்படுத்தலாம், என்று திட்டமிடுகிறது. மேலும், நடைமுறையில் உள்ள சட்டங்கள், ஒப்பந்தங்கள், அல்லது நடுவர் மன்ற தீர்ப்புகள், ஆகியவற்றின் அடிப்படையில்; நீர்வளத்தின் பயன் திறனை, எந்த அளவிற்கு அதிகரிக்கலாம், என்றும் ஆராய்கிறது. ஒப்பந்தங்கள் ஏற்படாத நிலையில், நடுவர் மன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் மட்டுமே, நீரைப் பங்கீடு செய்வது, அதிக பயன் தரும் என்பது தான், உண்மை நிலை. தேசிய நீர் வளக் கொள்கையில் கண்ட, ஒவ்வொரு கருத்துக்கும், வழிகாட்டி விதிமுறைகளை, அதாவது Guidelines-கள், வகுக்க வேண்டும் என்ற அவசியம், இல்லாதது மட்டுமின்றி, அவ்வாறு ஒவ்வொரு கொள்கைக்கும், வழிகாட்டி விதிமுறைகள் வகுப்பது, இயலாத காரியமும் ஆகும்.

அது மட்டுமின்றி, ஏற்கனவே நடைபெற்ற, தேசிய நீர் வளக் குழுக் கூட்டத்தில், நதி நீர்ப் பங்கீடு பற்றிய, வழிகாட்டி விதிமுறைகளை, தேசிய நீர் வளக் கொள்கையில், சேர்க்க வேண்டாம் என்று; அதாவது, National Water Policy-யில், Water sharing Guidelines-கள், எதுவும் சேர்க்க வேண்டாம் என்று, தெளிவாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த தேசிய நீர் வளக் குழுவின் கூட்டம், நடைபெற்ற போது, மறைந்த பாரதப் பிரதமர், அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், பன்மாநில நதிநீர்த் தாவாக்கள் சட்டத்தின் கீழ்; அதாவது, Inter-state Water Disputes Act-ன் கீழ்,

அமைக்கப்பட்ட பல்வேறு நடுவர் மன்றங்கள், பல வழக்குகளை ஆராய்ந்து; தங்களது தீர்ப்புகளை வழங்கியுள்ளன என்றும்; அந்தத் தீர்ப்புகள் எல்லாம், தற்போது மேற்கோள் ஆவணச் சட்டங்களாக, அதாவது case law-க்களாக அமைந்துள்ளன, என்றும் குறிப்பிட்டிருந்ததை; சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இத்தகைய Guidelinesகளை, தேசிய நீர் கொள்கையில், சேர்க்கக் கூடாது என்று; 1987-ஆம் ஆண்டில் நடைபெற்ற, தேசிய நீர்வள குழுமத்தின், இரண்டாவது கூட்டத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமர், கருத்துத் தெரிவித்து இருக்கிறார்.

ஒரு வேளை, இத்தகைய வழிகாட்டி விதிமுறைகள், அனைவராலும் ஒருமனதாக, ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கூட; அது கவைக்கு உதவாது. நிர்வாக முறையில், உருவாக்கப்பட்டிருந்தாலும் கூட; அது ஓரளவிற்கு மட்டுமே, பயனைத் தருமே தவிர, நிரந்தரமாகப் பயன் அளிக்காது. இத்தகைய நிர்வாக ரீதியான, கொள்கை வழிகாட்டிகள், சம்மந்தப்பட்ட மாநிலங்களை முழுமையாக, எந்த வகையிலும் கட்டுப்படுத்த இயலாது. மேலும், சம்மந்தப்பட்ட மாநிலங்கள், கொள்கை குறிக்கோள்களைச் செயல்படுத்த வேண்டும், என்ற கட்டாயம் இல்லாத போது, அவற்றைச் செயல்படுத்தாது. எனவே, இதனால் எந்த பயனும், எவருக்கும் கிடைக்காது என்பது தான், நடைமுறை உண்மை.

ஒவ்வொரு நதிநீர்ப் படுகையும், தனித் தன்மையைக் கொண்டது என்பதையும், நாம் மறந்து விடக் கூடாது. நதிநீர்ப் படுகையின் புள்ளி விவரங்கள்; ஏற்கனவே நிலை நாட்டப்பட்ட உரிமைகள்; மற்றும் அந்தப் படுகைக்கு உண்டான, நீர் உபயோக விதிமுறைகள் ஆகியவை; தனித் தன்மை படைத்தவை ஆகும். இது போன்ற பொதுவான, கொள்கை வழிகாட்டி விதிகள் மூலம், தனிப்பட்ட நதி நீர் பங்கீட்டு வழக்குகளைத், தீர்த்து வைக்க முடியாது. மாறாக, சில சமயங்களில் இவற்றால், பாதகமான எதிர் விளைவுகளும், ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தில், முறையாக வழக்கு நடைபெற்று வருகின்றது. இந்நிலையில், இத்தகைய கொள்கை வழிகாட்டி விதிகள், தேவையற்றவை, பயனற்றவை என்பதோடு; நீதி நிலைக்கும் முரணானவை என்பதே, நமது ஆணித்தரமான கருத்து என்று, திட்டவட்டமாக எடுத்துக் கூற வேண்டிய, கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

மாநிலங்களுக்கு இடையே ஆன, நதிநீர்ப் பங்கீட்டில், ஆண்டாண்டு காலமாக ஒரு மாநிலம், மரபுரிமையாக அனுபவித்து வரும் உரிமைகளை, இன்னொரு புதுத் தேவையைக் காரணம் காட்டி, தட்டிப் பறிக்கக் கூடாது; தட்டிப் பறிக்கவும் முடியாது.

சமநீர் பங்கீடு முறை, அதாவது, **Equitable distribution** என்ற கொள்கையின் அடிப்படையில், நீரைப் பங்கிட்டுக் கொள்ளலாம், என்று விவாதிக்கும் போது; ஏற்கனவே ஒரு மாநிலம், அனுபவித்து வரும் மரபுரிமைகளுக்கு, கண்டிப்பாக குந்தகம் ஏற்படாமல், பாதுகாத்தாக வேண்டும்.

மத்திய திட்டக் குழுவும், அதாவது **Union Planning Commission**-ம், இந்தக் கொள்கை வழிகாட்டி விதிகளை, பரிசீலனை செய்து; இதனை கடுமையாகச் சாடியிருக்கிறது. இக்கொள்கை வழிகாட்டி விதிகளை, நிறைவேற்ற வேண்டிய சட்ட அதிகாரம், மத்திய அரசுக்கு இல்லை. நடைமுறைக்கு ஒவ்வாத, இந்த வழிகாட்டி விதிகளை செயல்படுத்துவது, மிக சிரமமான காரியம்; குறிப்பாக, பகுதி மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள, வழிகாட்டி நெறிமுறைகளின்படி, நீர்ப் பங்கீட்டை மேற்கொண்டால், மேலும் பல புதிய சிக்கல்கள், உருவாகக் கூடும். தொன்று தொட்டு அனுபவ ரீதியாக, நாம் பெற்ற உயரிய நெறிகளின் அடிப்படையில், வந்துள்ள நீதிமன்ற தீர்ப்புகளுக்கும்; மரபுரிமைகளுக்கும்; இவ்வாறு நாம் நிர்ணயித்த புதிய வழிகாட்டி விதிமுறைகள், எந்த ஒரு காலத்திலும், ஒரு சரியான மாற்றாக, அதாவது **suitable substitute**-ஆக அமைய முடியாது. ஆகையால், இக்கொள்கை வழிகாட்டி விதிகளை, மறு பரிசீலனை செய்ய வேண்டியது, மிக இன்றியமையாதது என்று; மத்திய திட்டக் குழு, ஏற்கனவே, மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

இப்பொழுது வரையப்பட்ட வழிகாட்டி விதிகளை ஏற்க இயலாது என்றும், மத்திய திட்டக்குழு திட்டவட்டமாக கூறியுள்ளது.

ஒரு பொருளைப் பற்றி, ஒரே மாதிரியான கருத்தை, பலரும் தெரிவித்தால், அந்தக் கருத்து நிச்சயமாக, ஏற்புடைய, நியாயமான கருத்தாகத்தான், இருக்க முடியும். அந்த வகையில், புதிய விதிமுறைகளை ஏற்படுத்துவது, சரியானது அல்ல, என்ற நமது கூற்றையே, மத்திய திட்டக் குழுவும், தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ளது; நமது கருத்து சரியானதே; நியாயமானதே; என்பதை மேலும் உறுதிபடுத்தியுள்ளது.

தமிழகத்தின் நலன் காக்க, நாம் உறுதியான நிலையை, இதில் மேற்கொண்டு வந்துள்ளோம். நிச்சயமாக நமது நிலையில், எந்த மாற்றத்தையும் ஒப்புக் கொள்ள, நாம் தயாராக இல்லை. நாம் இதுவரை எடுத்துள்ள முடிவுகள், நியாயமான உணர்வின் அடிப்படையிலும்; சட்ட நுணுக்கங்களின் அடிப்படையிலும்; நிர்வாக நடைமுறைகளின் படியும்; மேற்கொள்ளப்பட்டவை என்பதை, மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். எங்கள் அரசு எடுக்கும், உறுதியான முடிவுகளுக்கு, நீங்கள் முழு ஆதரவு தருவீர்கள், என்று நம்புகிறேன்.

இந்தப் பொருள் குறித்து, இங்கே குழுமியுள்ள, அனைத்துக் கட்சித் தலைவர்களும்; சமுதாய நல இயக்கத் தலைவர்களும்; தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும், வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

***(3.2.1996 அன்று நடைபெற்ற காவிரி நீர் தொடர்பான அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆற்றிய உரை)***

# தமிழக மக்களுக்குப் பல வகைகளில் சேவை புரிந்தோரைத் தமிழகம் என்றும் மறக்காது

எந்த ஒரு நாடு, மாபெரும் மனிதர்களை வணங்குகின்றதோ; எந்த ஒரு சமுதாயம், நாட்டுக்கு உழைத்த நல்லவர்களைப் போற்றுகின்றதோ; அந்த நாடும், அந்தச் சமுதாயமும்தான், வளம் பெற்று உயர முடியும் என்பது, சரித்திரம் காட்டுகின்ற பேருண்மை ஆகும்.

சான்றோரையும், ஆன்றோரையும் மதிக்கின்ற தன்மை, இயற்கையாகவே தமிழக மக்களின் ரத்தத்தில் ஊறிய, ஒரு உன்னத குணமாக விளங்கி வருகின்றது. ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்களையும்; அறிவார்ந்த பெருமக்களையும்; நாட்டுக்கு உழைத்த நல்லவர்களையும்; சமுதாய உயர்வுக்குப் பாடுபட்ட தலைவர்ளையும் மதிப்பதில், தமிழக மக்களுக்கு ஈடு இணை, எவரும் இல்லை. நல்லோரின் கொள்கைகளையும், கோட்பாடு களையும் கடைபிடிப்பதில், இந்திய துணை கண்டத்திற்கே, வழி காட்டிகளாக விளங்குபவர்கள், தமிழக மக்கள்.

எனவேதான், தமிழக மக்களின் மனங்களிலே குடி கொண்டிருக்கும், பல்வேறு அரசியல் தலைவர்கள்; சமுதாயத் தலைவர்கள்; மற்றும் ஆன்மீகத் தலைவர்கள், ஆகியோருக்கு பெருமை சேர்க்க; உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அவர்களது திருவுருவச் சிலைகளை அமைத்து வருகின்றது; அவர்கள் வாழ்ந்த இடங்களில், புதிய நினைவகங்களை உருவாக்கி வருகிறது. இந்தப் பணியை, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், ஒரு புனிதப் பணியாகவே கருதி, செயல்படுத்தி வருகின்றேன்.

மாபெரும் மனிதர்களுடைய உண்மைச் சரித்திரங்கள், காலப் போக்கிலே மறைக்கப்பட்டும்; சில நேரங்களில் இருட்டடிப்பும் செய்யப்படுகின்றன. அவ்வாறு, நல்லவர்களின் வாழ்க்கை வரலாற்றை, மக்கள் மறந்து விடக் கூடாது என்பதிலும்; அந்த மாபெரும் தலைவர்களின் நினைவுகள், மக்களின் நெஞ்சங்களிலே, என்றென்றும் பசுமையாக, நிலைத்து நிற்க வேண்டும் என்பதிலும்; எங்கள் அரசு தீவிரமாக இருக்கிறது.

அந்தத் தலைவர்கள் விட்டுச் சென்ற, வாழ்க்கை நெறி முறைகளும்; கருத்துக்களும்; மக்கள் மனதிலே நிலைத்து நிற்க, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை, எங்கள் அரசு ஆரம்பத்தில் இருந்தே, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன், மேற்கொண்டு வந்துள்ளது.

மாபெரும் மக்களைப் பாராட்டி மகிழ்வதில், நிச்சயமாக எங்களிடம், குறுகிய அரசியல் கண்ணோட்டம் இல்லை. மாறாக, நாட்டு மக்கள் மனங்களில், இடம் பெற்றுள்ள எல்லா தலைவர்களுக்கும், ஜாதி, மத, கட்சி, அரசியல், ஏன் சித்தாந்த வேறுபாடுகள் கூட இன்றி, அவர்களுக்கு புகழ் அஞ்சலி செலுத்தும் வண்ணம், திருவுருவச் சிலைகளை அமைத்தும்; போக்குவரத்துக் கழகங்களை ஏற்படுத்தியும்; நினைவகங்களை உருவாக்கியும்; மக்களின் உணர்வுகளுக்கு, மதிப்பளித்து வருகின்றோம். வேறெந்த ஒரு ஆட்சிக் காலத்திலும், சமுதாய தலைவர்களும், தமிழ் மாநிலம் தழைக்க பாடுபட்டவர்களும், இந்த அளவிற்கு சிறப்பிக்கப் படவில்லை, என்பது மட்டும் உண்மை.

“மக்கள் தான் இறுதி எஜமானர்கள்”, என்கின்ற ஜனநாயகக் கோட்பாட்டில், தீவிர நம்பிக்கை வைத்து, செயலாற்றி வரும் அரசு, உங்கள் அன்பு சகோதரியின் அரசு. பெரியோரை மதிக்கும், திராவிடப் பாரம்பரியத்தின் மாண்பை, நல்லவர்களுக்கு புகழ் அஞ்சலி, செலுத்தி வருவதன் மூலம், நாங்கள் மேலும் உறுதிப்படுத்தி உள்ளோம்.

தனது புரட்சிகரமான சிந்தனைகளால், தமிழக மக்களுக்கு, சுய மரியாதை உணர்வையும், தன்மான உணர்வையும் ஊட்டி வளர்த்தவர், தந்தை பெரியார் அவர்கள். வைக்கம் போராட்டத்தின் மூலம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, கோயில்களின் கதவுகளைத் திறக்க வைத்தவர், அந்த வெண்தாடி வேந்தர். புரட்சிகரமான அவரது வெற்றியை, உலகம் அறிய வைக்க, கேரள மாநிலம் வைக்கத்தில், எங்கள் அரசின் சார்பில், 15 லட்சம் ரூபாய் செலவில், நினைவகம் ஒன்றை நாங்கள் அமைத்துள்ளோம்.

சென்னை, திருவல்லிக்கேணியில், மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தைக் கையகப்படுத்தி, அதை நினைவகமாக்கி சாதனை படைத்துள்ளது, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு.

தாயகத்தின் விடுதலைக்காக, தம்மையே ஈந்த வீரர்கள், மருது சகோதரர்கள். அவர்களின் நினைவாக, திருப்பத்தூரில், 6 லட்சம்

ரூபாய் செலவில், எங்கள் அரசு, நினைவகம் ஒன்றை அமைத்துள்ளது.

எங்கள் அரசு, கவியரசு கண்ணதாசனுக்கு, காரைக்குடியில் மணிமண்டபம் அமைத்ததோடு, அவரது திருவுருவச் சிலையையும் நிறுவியது. சென்னை தியாகராய நகரில், அவரது திருவுருவச் சிலையை, நானே திறந்து வைத்தேன்.

பண்பாட்டுப் பெருமையும், பாரம்பரியச் சிறப்பும் மிக்க இந்த மண்ணுக்கு, தமிழ்நாடு என்று பெயர் சூட்டக் கோரி, உண்ணாநோன்பிருந்து, உயிர்நீத்த தியாகி, சங்கரலிங்கனாருக்கும்; விடுதலைப் போராட்ட வீரர், செண்பகராமன் அவர்களுக்கும்; தீரன் சின்னமலை அவர்களுக்கும்; வீரன் அழகு முத்துக்கோன் அவர்களுக்கும்; தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களுக்கும்; எங்கள் அரசு, திருவுருவச் சிலைகளை அமைத்து வருகின்றது.

வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பெயரிலும்; வீரன் சுந்தரலிங்கப் பெருமகனாரின் பெயரிலும்; போக்குவரத்துக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

சர் பிட்டி தியாகராயர்; பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்; தேவர் திருமகன்; அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோருக்கும், நினைவகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தேசியமும், தெய்வீகமும், எனது இரு கண்கள், என முழங்கிய மாமனிதர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு, சென்னையில் நாங்கள் சிலை அமைத்தோம்.

சென்னையில், பாபா சாகிப் டாக்டர் **B.R.**அம்பேத்கர் அவர்களுக்கும்; சென்னை மாநகரின் முன்னாள் மேயர், பெரியவர் சிவராஜ் அவர்களுக்கும்; சிலைகளை நிறுவி, அவற்றை நானே திறந்து வைத்தேன்.

அந்த நற்பணிகளின் வரிசையிலே, இன்று, பேரரசர் பெரும்பிடுகு முத்தரையருக்கு, இங்கே திருவுருவச் சிலையை எழுப்பி உள்ளோம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை, முக்கூறாகப் பிரித்த போது, பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் நினைவாக; இந்த மாவட்டத்திற்கு, திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர்

மாவட்டம், என்று பெயர் சூட்டினோம். இப்பகுதி வாழ், முத்தரையர் இன மக்கள், இதனால் எத்தகையதொரு மகிழ்ச்சியை அடைந்தார்கள் என்பதை, நான் நன்கு அறிவேன்.

'முத்தரையர்' என்ற சொல்லுக்கு, சேர, சோழ, பாண்டிய நாடு, ஆகிய மூன்று தரைகளையும், ஒன்று சேர்த்து ஆண்டவர்கள் என்று, சில நூல்களில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி, முத்தரையர்கள், கொங்கு நாட்டையும் ஆண்டதாக, சில நூல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

சங்க காலத்தைச் சேர்ந்த, 'நாலடியார்' என்ற நூலில், 'பெரு முத்தரையர்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த "பெரு முத்தரையர்" என்ற சொற்றொடர், முத்தரையரைக் குறிப்பிடுவதாக, வரலாற்று நூலாசிரியர்கள் கருதுகின்றனர். திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நாடே, 'முத்தரையர் நாடு' என்று அழைக்கப் பட்டதாகவும்; இந்த முத்தரையர் நாட்டை, பெருமைமிகு மன்னர்கள் ஆண்டு வந்ததாகவும்; சில கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த முத்தரையர் மன்னர்களில், பேரரசர் இரண்டாம் பெரும்பிடுகு என்பவர், மாபெரும் மன்னராகத் திகழ்ந்ததாக, வரலாறு தெரிவிக்கின்றது. இந்த மன்னரின் அளப்பறிய வீரமும், தீரமும்; அவருக்கு, 'பெரும்பிடுகு' என்றும்; 'மார்பிடுகு' என்றும்; பட்டப் பெயர்களை பெற்றுத் தந்துள்ளதாகவும், கூறப்படுகிறது. 'பிடுகு' என்றால், இடி என்று பொருள். தன் வீரத்தால், தனது எதிரிகளுக்கு பேரிடியாக, சிம்ம சொப்பனமாக திகழ்ந்ததால், 'பெரும்பிடுகு' என்ற பட்டத்துடன், அவர் அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்திய தேசிய நீரோட்டத்தில் கலந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும்; தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும்; தங்களை முழுமையாக ஈடுபடுத்தி, பாடுபட்டுக்கொண்டு வரும், முத்தரையர் சமுதாய மக்களின், மனம் மகிழும் வண்ணம்; பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் பெயரை, இந்த மாவட்டத்திற்குச் சூட்டியதோடு, இன்று அவரது திருவுருவச் சிலையையும், திருச்சி மாநகரில், உங்கள் அன்புச் சகோதரி திறந்து வைத்துள்ளேன்.

பாரத நாட்டின், வேறு சில பகுதிகளில் வாழ்ந்த, பெரியவர்களின் வாழ்க்கைச் சம்பவங்கள், சரித்திரத்தில் மிகப்

பெரிய சாதனைகளாக, வர்ணிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த மண்ணின் மைந்தர்களாய் வாழ்ந்த, சான்றோர்கள், ஆன்றோர்களின் புகழ் மட்டும், ஏன் வெளிப்படாமல் மறைக்கப்பட வேண்டும்? தமிழக மக்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், பல வகைகளில் சேவை புரிந்தோரை, தமிழகம் என்றென்றும் மறக்காது என்பதோடு; எப்போதும் நன்றி பாராட்டும் என்பதையும், உலகிற்கு உணர்த்துவோம்.

தமிழகத்தின் இதயப் பகுதியில், விளங்கும் திருச்சிராப்பள்ளி, சில நேரங்களில், தமிழகத்தின் இதயத் துடிப்பாகவும், செயல்படுவது உண்டு! இப்பகுதியின் வளர்ச்சிக்காக, உங்கள் அன்பு சகோதரியின் அரசு, பல்வேறு நலத்திட்டங்களையும்; வளர்ச்சிப் பணிகளையும்; முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது. அரசின் நலத் திட்டங்கள், பொதுமக்களுக்கு விரைவாக சென்றடையவும்; மாவட்ட நிர்வாகத்தின் கவனம், எல்லாப் பகுதிகளுக்கும் கிட்டிடவும்; நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை, முக்கூறாகப் பிரித்தோம். புதியதாக உதயமாகியுள்ள, இந்த மாவட்டங்களின் முன்னேற்றத்திற்காக, எல்லா வளர்ச்சிப் பணிகளையும், புதிய முனைப்புடன் செயல்படுத்துவோம், என்று உறுதி கூறுகின்றேன்.

இப்பகுதி வாழ் பெருமக்கள், பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் பெயரை, புதிய மாவட்டத்திற்குச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை, என்னிடம் வைத்த போது; நான் அவர்களது கோரிக்கையை, மன மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன். அந்த கோரிக்கையை நிறைவேற்றியும் வைத்தேன். இனி காலப்போக்கில், சரித்திரத்தின் ஏடுகளிலே, இந்த மாமனிதரின் பெயர் மறைந்து விடும், என்று அஞ்ச வேண்டியதில்லை. மாறாக மாவட்டத்தின் பெயரோடு, அவரது பெயரும், புகழும், சாகாவரம் பெற்றுவிட்டன. நாளைய இளைய சமுதாயத்தினர், இந்த திருஉருவச் சிலையைக் கண்டு, மன்னர் பெரும்பிடுகு முத்தரையரின் சரித்திரத்தை, நிச்சயம் நினைவு கூர்வார்கள் என்பது உறுதி.

முத்தரையர் இனத்தைச் சேர்ந்த பெருமக்கள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், 23 பட்டப் பெயர்களுடன், வாழ்ந்து வருகின்றனர். இந்த சமுதாயத்தைச் சேர்ந்த அனைவரும், ஒன்றுபட்ட சமுதாயமாக, ஒரு பொதுப் பெயரின் கீழ் அழைக்கப்பட வேண்டும், என்ற கோரிக்கையை, இன்று என் முன்

வைத்துள்ளார்கள். மக்களின் கோரிக்கையை, உடனுக்குடன் நிறைவேற்றுவதில், உங்கள் அன்புச் சகோதரிக்கு, என்றுமே ஒரு மகிழ்ச்சி உண்டு. இதே உணர்வுடன், உங்கள் கோரிக்கையை, நான் முழு மனதுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதுவரை, 23 பட்டப் பெயர்களுடன், அழைக்கப்பட்ட பெருமக்கள் அனைவரும், "முத்தரையர்" என்கின்ற, ஒரு பொதுப் பெயரில், இனி அழைக்கப்படுவார்கள் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணைகள், விரைவில் வழங்கப்படும். 23 பிரிவுகளில் அடங்கும், முத்தரையர் சமுதாய மக்கள், இதுவரை அனுபவித்து வந்த, சலுகைகள் அனைத்தும், எவ்விதமான பாதிப்பும் இன்றி, தொடரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தரைய இன மக்களின் முன்னேற்றத்திற்காக அந்த சமுதாயத்தின் தலைவர்கள் இன்னும் சில கோரிக்கைகளை விடுத்தார்கள். அவற்றை எல்லாம் நான் கனிவுடன் பரிசீலித்து விரைவில் நல்ல முடிவுகளை அறிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய முத்தரைய இன தலைவர்கள் எல்லாம் எனக்கு பக்கபலமாக இருப்போம் என்று கூறினார்கள். அதற்கு என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, என்றுமே உங்கள் சமுதாயத்திற்கு நான் உறுதுணையாக இருப்பேன் என்பதையும் நான் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

'முத்தரையர்' சமுதாயப் பெருமக்கள், நல்லிணக்க உணர்வுடன், மற்ற சமுதாயத்தினருடன், சேர்ந்து வாழ்ந்து; தமிழகத்தின் ஏற்றத்திற்குத் தங்களது பங்கினை, தொடர்ந்து ஆற்றுவார்கள் என்று நம்புகிறேன். இந்த சமுதாய மக்களின் வாழ்விற்கும்; உயர்வுக்கும்; உங்கள் அன்பு சகோதரியின் அரசு, என்றென்றும் உறுதுணையாய் விளங்கும், என்று உறுதி கூறுகிறேன்.

இப்பகுதி வாழ் மக்களாகிய நீங்கள் அனைவரும், எல்லா வளங்களையும், நலன்களையும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும், என்று நிறைந்த மனதோடு வாழ்த்தி விடை பெறுகிறேன்.

***(7.2.1996 அன்று நடைபெற்ற பெரும்பிடுகு முத்தரையர் சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரை)***

# ரமலான் நோன்புக்காலம் ஆன்மீகப் பயிற்சிக்காலம்

புனித ரமலான் மாதத்தின், பெரும் பகுதி கழிந்து, இனிய நோன்புப் பெருநாளாம், ரம்ஜான் திருநாளை, எதிர்நோக்கி இருக்கக் கூடிய இந் நன்னாளில்;

நோன்பு திறக்கும் இந்த சிறப்பிற்குறிய Ifthar நிகழ்ச்சியில்; உங்கள் அனைவருடனும் கலந்து கொள்வதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

திருக்குர்ஆனில் கூறப்பட்டிருப்பது போல, நோன்பு நோற்பது என்பது, எல்லாச் சமுதாய மக்களுக்கும், ஏற்கனவே ஒரு விதியாக, பணிக்கப்பட்டிருந்தாலும்; நபிகள் நாயகம் ஸல்லல்லாவறு அலைஉறி வஸல்லம் அவர்கள், வகுத்து அளித்துள்ள நோன்பின் முறை, மிகச் சிறப்பானதாகும்.

ஆண்டில் ஒரு மாதம் முழுமையும், பகற் பொழுதில் உணவை உண்ணாமலும்; நீரைப் பருகாமலும்; எனது அன்பிற்குரிய இஸ்லாமியப் பெருமக்கள், நோற்கும் நோன்பு, தனித் தன்மை வாய்ந்தது என்பதை எண்ணி, நான் பெருமிதம் அடைகின்றேன்.

உண்ணாமல் இருப்பது மட்டுமே, நோன்பு அல்ல; நோன்பு கடைப்பிடிக்கும் காலத்தில், உள்ளத்தாலும்; உடலாலும்; எண்ணத்தாலும்; சொல்லாலும்; எவர் ஒருவருக்கும், தீங்கு இழைக்காமலும் இருப்பதே, நல்ல நோன்பு என்பதை, நபிகள் நாயகம் ஸல்லல்லாவறு அலைஉறி வஸல்லம் அவர்கள், சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ரமலான் மாதத்தில், இஸ்லாமியப் பெருமக்களால் கடைப்பிடிக்கப்படும் நோன்பு; ஆன்மாவையும், உடலையும் தூய்மைப் படுத்துகின்ற, ஒரு ஆன்மீகப் பயிற்சிக் காலமாக, அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

வறுமையின் உறுத்தலையும், பசியின் கொடுமையையும்; இல்லாதோர் அனுபவிக்கும் வேதனையையும்; மக்கள் அனைவரும் அறிந்துக் கொள்வதற்காகவே, இந்த நோன்பு கடைபிடிக்கப்படுகிறது.

மனித மனங்களைப் பண்படுத்தி; அதில் நற்பண்புகள் மலர்ந்திடவும்; மற்றவர்களிடம் இரக்கம், பரிவு, சகிப்புத் தன்மை, ஆகியவற்றை கடைபிடித்து; தெய்வீக குணங்களை அடைந்திடவும்; இந்த நோன்பு வழி வகுக்கின்றது.

இறைவனைச் சந்திக்கின்ற நேரத்தைப் போலவே, உள்ளார்ந்த உணர்வோடு, உண்ணா நோன்பைக் கடைபிடித்து; நோன்பைத் திறக்கின்ற இந்த நேரத்தையும், ஒரு இனிமையான நேரம், என்று சான்றோர்கள் குறிப்பிடுவார்கள்.

ஜாதி, சமய வேறுபாடுகள் இன்றி, எல்லா மக்களும், நல்லிணக்கத்துடனும்; ஒற்றுமை உணர்வுடனும்; ஒன்று கூடி வாழவும்; சிறுபான்மை மக்களின் வாழ்க்கை, முன்னேற்றம் அடையவும்; உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. எனவே தான், சிறுபான்மைச் சமுதாயத்தினர், நடத்தி வரும் கல்வி நிறுவனங்களுக்கு, சில பிரச்சினைகள் ஏற்பட்ட போது; அதை தீர்த்து வைத்து, அந்நிறுவனங்களின் சீரான வளர்ச்சிக்கு, எங்கள் அரசு துணை நின்று வருகின்றது.

பெரியவர், கண்ணியத்திற்குரிய, காயிதே மில்லத் அவர்களது திருப்பெயரை, ஒரு மாவட்டத்திற்குச் சூட்டி; அவரது பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை, எங்கள் அரசு, சென்னையிலும், மற்ற எல்லா மாவட்டத் தலைமை இடங்களிலும், சிறப்பாகக் கொண்டாடி வருவதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இஸ்லாமிய மார்க்கச் சான்றோர்களான, உலமாப் பெருமக்கள் இரண்டாயிரம் பேருக்கு, மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதம், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, ஓய்வூதியத்தை வழங்கி வருகிறது. எங்கள் ஆட்சிக் காலத்தில் தான், ஓய்வூதியத் தொகை, 250 ரூபாயிலிருந்து, 400 ரூபாயாக உயர்த்தப்பட்டது என்பதையும்; பயன் பெறுவோர்களின் எண்ணிக்கையும், 1200-லிருந்து 1778-ஆக உயர்ந் துள்ளது, என்பதையும் சுட்டிக் காட்டுவதில்; நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தியாவில் வேறு எந்த மாநிலமும், செயல் படுத்தாத இத்திட்டத்தை; உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

புனித ரமலான் நோன்பு திறக்க, காய்ச்சப்படும் கஞ்சிக்காக, எல்லா பள்ளி வாசல்களுக்கும், ஒவ்வொரு ஆண்டும், ரமலான்

மாதத்தில் நியாய விலையில் அரிசியை வழங்க; ஒட்டுமொத்தமாக நான் ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் நினைவு கூர விரும்புகிறேன்.

உருது மொழி பேசுகின்ற இஸ்லாமியப் பெருமக்கள்; நீண்ட நாட்களாக அம்மொழியின் வளர்ச்சிக்காக; Urdu Academy ஒன்றை ஏற்படுத்த வேண்டும், என்று வற்புறுத்தி வருகின்றார்கள்.

தற்போது சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெற்று வருவதால், உடனடியாக எந்த அறிவிப்பையும், என்னால் வெளியிட இயலவில்லை. இருப்பினும், அவர்களது உணர்வுகளை மதித்து, Urdu Academy ஏற்படுத்துவது தொடர்பான தமிழக அரசின் முடிவு, சட்டமன்றத்தில் எனது பதிலுரையின் போது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"வீடுகளில் சிறந்த வீடு
அனாதை நல்ல முறையில் பராமரிக்கப்படும் வீடுதான்"

என்று, நபிகள் நாயகம் கூறிய, நல்ல கருத்துக்களின் எடுத்துக் காட்டாக; தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வரும், அனாதை இல்லங்களில் உள்ள அங்கத்தினர்களுக்கு; வழங்கப் படும் நிதி உதவியை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையும் எனது கவனத்திற்கு வந்துள்ளது. இதற்கும் விரைவில் நல்ல முடிவு அறிவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புனித ரமலான் மாதத்தில், தங்களது கடமைகளைச், செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக்கும், இஸ்லாமியச் சகோதர சகோதரிகள் அனைவருக்கும், எனது இதயங்கனிந்த வாழ்த்துக்களைத், தெரிவித்துக் கொள்கிறேன். இஸ்லாமியப் பெருமக்களின் உள்ளார்ந்த ஒத்துழைப்பையும், நெஞ்சம் நிறைந்த ஆசியையும், உங்கள் அன்புச் சகோதரி என்ற முறையில், நான் எப்போதும் வேண்டுகிறேன்.

இஸ்லாமியப் பெருமக்கள், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று; வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று; நிறைந்த மனதோடு, நெஞ்சார வாழ்த்துகிறேன்.

***(15.2.1996 அன்று ரமலான் நோன்பு விழாவில் ஆற்றிய உரை)***

# தந்தை பெரியாரின் பெயரிலமைந்த சமூகநீதி விருதைப் பெற முழுத் தகுதி படைத்தவர் திரு கி. வீரமணி

கடந்த 5 ஆண்டுகளாக, தந்தை பெரியார் அவர்களின், பல்வேறு சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளை, செயல்படுத்தி வரும் எங்கள் அரசின் சார்பில்; 1995-ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் சமூக நீதி விருதினை, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், மதிப்பிற்குரிய சகோதரர் திரு கி. வீரமணி அவர்களுக்கு வழங்கி; உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில், நான் பெரு மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகிறேன்.

சமூக நீதிக் கொள்கைகளைச் செயல்படுத்துவதில், காலங்காலமாக இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு, தமிழ்நாடு ஒரு வழிகாட்டியாக; முன்னோடியாக இருந்து வந்துள்ளது. அன்று திராவிட இயக்கத்தின் முன்னோடிகள் வகுத்துத் தந்த, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற கொள்கை; உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக் காலத்தில் முழு பரிமாணத்தை அடைந்து, 69 சதவீத இட ஒதுக்கீட்டுச் சட்டமாக இன்று உருவெடுத்துள்ளது

சீரிய சமூக நீதிச் சிந்தனைகளுக்கு வழி வகுத்த, இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், இன்று ஆலவிருட்சமாக வளர்ந்து; உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில், ஒரு சட்டமாக; அதுவும் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் முழுப் பாதுகாப்பைப் பெற்ற ஒரு சட்டமாக; முழுமை அடைந்துள்ளது என்பதை எண்ணிப் பார்த்து, நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பொது வாழ்க்கையில் எங்களுக்குக் கலங்கரை விளக்கங்களாக நின்று, வழி நடத்திச் செல்லும் சான்றோர்கள்; இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தங்கள் உயிரினும் மேலான ஒரு கொள்கையாக கடைப்பிடித்து வந்தனர். அடித்தளத்து மக்கள்; நலிந்த பிரிவினர்; சமுயதாயத்தில் ஒதுக்கி வைக்கப் பட்டோர்; ஆகியோர் வாழ்க்கையில் மேன்மை அடைய; இந்த சமூக நீதிக் கொள்கை புரட்சிகரமான சமுதாய மாற்றத்திற்கு ஒரு தூண்டுகோலாகவும்; முற்போக்குச் சிந்தனைகளுக்கு ஒரு திறவு கோலாகவும் அமைந்திருந்தது.

அந்த உணர்வு சற்றும் குறையாமல் சமூக நீதியைக் கட்டிக் காக்கும் மகத்தான பணியில், இன்று நாங்கள் ஒரு மாபெரும் சாதனையை நிகழ்த்திக் காட்டியுள்ளோம்.

பெரியாரின் சமூக நீதிக் கொள்கைகளுக்கும்; பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் சமுதாய முன்னேற்றச் சிந்தனை களுக்கும்; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் மனித நேய எண்ணங்களுக்கும்; செயல் வடிவம் கொடுத்த மக்கள் நல அரசு, எங்கள் அரசு என்பதை, நாங்கள் நிரூபித்துக் காட்டி யுள்ளோம். தமிழகத்தின் சமூக நீதி வரலாற்றில் எங்கள் சாதனை ஒரு புதிய மைல் கல்லாக என்றென்றும் விளங்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

அந்த வகையில் முற்போக்குச் சிந்தனைகளுக்கு வழி வகுத்து; பெண் கல்வி வளர்ச்சிக்கு ஓங்கிக் குரல் கொடுத்த, தந்தை பெரியாரின் லட்சியங்களையும், கொள்கைகளையும் பரப்பி; சமுதாயப் பணி ஆற்றி வரும் ஒருவருக்கு, ஆண்டுதோறும் "தந்தை பெரியார் சமூக நீதி விருது" வழங்கி கௌரவிப்பது என எங்கள் அரசு முடிவு செய்தது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் கொள்கைகளை நாடெங்கும் பரப்பி; நல்ல சமுதாயப் பணிகளை நாளும் மேற்கொண்டு வரும், மக்கள் நலத் தொண்டர், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் அருமைச் சகோதரர் மதிப்பிற்குரிய திரு.கி.வீரமணி அவர்களுக்கு, இந்த விருதினை இன்று வழங்கியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தந்தை பெரியாரின் பெயரில் அமைந்த இந்த விருதினைப் பெற முழுத் தகுதி படைத்த ஒருவர் இன்று இருக்கிறார் என்றால்; அவர் நிச்சயமாக திரு.கி.வீரமணி அவர்களாகத்தான் இருக்க முடியும். தனது வாழ்நாளின் பெரும் பகுதியைத் தந்தை பெரியாருக்குத் தொண்டு செய்வதிலும்; அவர் தம் கொள்கைளைப் பரப்பி, சமுதாய நலப் பணிகளை மேற்கொள்வதிலும்; செலவிட்டு வருகிற திரு கி.வீரமணி அவர்களை விட, தகுதியானவர் வேறு எவர் இருக்க முடியும்? பெரியாரின் கொள்கைகளைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பரப்பி வருவதோடு; கல்வி நிலையங்களையும், மருத்துவமனைகளையும் ஏற்படுத்தி; அவற்றின் மூலம் மக்களுக்கு அயராத கல்வித் தொண்டையும், சமுதாயத்

தொண்டையும் ஆற்றி வரும் பெரியாரின் சீடர்; அவரது வழித் தோன்றல்; மதிப்பிற்குரிய திரு.கி.வீரமணி அவர்கள் நமது அனைவரின் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவர் ஆவார்.

தந்தை பெரியாரின் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளுக்கும்; சமூக நீதி காக்கும் லட்சியங்களுக்கும்; இன்று செயல் வடிவம் கொடுத்து, அல்லும் பகலும், அயராது பாடுபட்டு வரும் திரு.கி.வீரமணி அவர்களுக்கு, தமிழக அரசின் சார்பிலும்; எனது சொந்த சார்பிலும்; எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களையும், இதயம் கனிந்த பாராட்டுக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

திரு கி.வீரமணி அவர்கள் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டமும்; சட்டக் கல்வியில் பட்டமும் பெற்ற ஒரு சிறந்த கல்வியாளர். தந்தை பெரியார் அவர்கள் "விடுதலை" நாளிதழை நடத்தும் போது; திரு கி.வீரமணி அவர்கள் தந்தை பெரியாருக்கு உதவியாக உறுதுணையாக இருந்து செயல்பட்டு வந்துள்ளார். பின்னர் 1978-ம் ஆண்டு முதல் விடுதலை நாளிதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்று; ஒரு செய்தித் தாளின் லட்சிய ஆசிரியராகச் சீரிய முறையில் பணியாற்றி வருகின்றார்.

தனது மனதிற்குச் சரி என்று பட்ட கருத்தை அது எத்தனை கசப்பானதாக இருந்தாலும்; அதைத் துணிவுடன் தயக்கமின்றி வெளிப்படுத்தும் ஆற்றல் படைத்தவர் திரு கி. வீரமணி அவர்கள். அதே நேரத்தில் அடுத்தவர் மனம் சற்றும் புண்படாமல், தனது கருத்துக்களை எடுத்துரைக்கும் திறமையை யும்; உயரிய பண்பையும்; நான் அவரிடம் கண்டிருக்கிறேன்.

பெரியாரின் கொள்கைகளைச் செயல்படுத்துவதில் இம்மியளவும் அவர் விட்டுக் கொடுப்பதில்லை என்பதையும் நான் நன்கறிவேன். தந்தை பெரியார் அவர்கள் திராவிடர் கழகம், பொதுத் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று அன்று இட்ட கட்டளையை; இன்று வரை சிரமேற்கொண்டு செயல்படுத்தி வருவதிலும்; தந்தை பெரியாரின் அடியொற்றி, பெண் கல்வி வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துச் செயல்பட்டு வருவதிலும்; திரு கி.வீரமணி அவர்கள் உயர்ந்து நிற்கிறார். அவரது இலட்சியப் பிடிப்பும்; அர்ப்பணிப்பு உணர்வும்; போற்றிப் பாராட்டத்தக்கவை ஆகும்.

கடந்த 50 ஆண்டு காலமாக அவர் தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கும்; ஏன்- வெளி மாநிலங்களுக்கும்; அயல் நாடுகளுக்கும் பயணம் செய்து; தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்பி வருவதோடு; சமுதாய நற்பணிகளையும் மேற்கொண்டு வருகிறார். தஞ்சையில் இயங்கி வரும் பெரியார் மணியம்மை மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி; இந்தியாவிலேயே; ஏன் -உலகிலேயே; பெண்களுக்கென பிரத்தியேகமாக ஆரம்பிக்கப்பட்ட முதல் பொறியியற் கல்லூரி என்ற பெருமையை உடையது என்பது நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தி ஆகும்.

திரு கி. வீரமணி அவர்கள் அனைவரையும் கவரும் பேச்சாற்றலும்; கருத்துக்களை ஆணித்தரமாக வெளிப்படுத்தும் எழுத்தாற்றலும்; ஒருங்கே பெற்ற ஒரு சிந்தனையாளர். அவர் எழுதிய நூல்களும், கட்டுரைகளும் ஏராளம்.

69 சதவீத இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு நிரந்தரப் பாதுகாப்பைப் பெற்று தந்த சாதனைக்காக; பல்வேறு கட்சியினர் எனக்கு அளித்த பாராட்டு விழாவில் உரையாற்றும் போது; மதிப்பிற்குரிய சகோதரர் திரு.கி.வீரமணி அவர்கள் சமூக நீதி காக்கத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த தந்தை பெரியாரின் பெயரில் ஒரு விருதினை ஏற்படுத்தி; சமூக நீதி காக்கும் சமுதாயப் பணியை ஆற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவரது சீரிய ஆலோசனையை ஏற்று; அந்த விழா மேடையிலேயே தந்தை பெரியாரின் லட்சியப் பாதையில் சமுதாயப் பணி ஆற்றுவோருக்கு; ஆண்டுதோறும் “தந்தை பெரியார் சமூக நீதி விருது” தமிழக அரசால் வழங்கப்படும் என்று அறிவித்தேன்.

அன்று நிச்சயம் இந்த விருது தனக்கு வழங்கப்படும் என்று திரு கி.வீரமணி அவர்கள் எண்ணியிருக்கமாட்டார். ஏனெனில், அவர் விருதுகளுக்கும், விளம்பரத்திற்கும் அப்பாற்பட்டவர் என்பதே எனது கணிப்பு. விருதுகள் அவரைத் தேடி வந்தாலும் கூட; அதற்காக ஆசைப்படாத ஒரு தூய தொண்டுள்ளம் படைத்த உறுதியான மனிதர் அவர். எனவே தந்தை பெரியாரின் திருப்பெயரில் வழங்கப்படுகின்ற இந்த விருதினை; அவரது சீடரும்; அவரது வழித் தோன்றலுமான; சகோதரர் திரு.கி.வீரமணி அவர்களுக்கு வழங்கலாம் என்று நான் தெரிவித்த கருத்தை எனது அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள அனைத்து அமைச்சர்களும்

ஒருமனதாக வரவேற்று ஏற்றுக் கொண்டார்கள். இந்தச் சீரிய விருதினை மிகவும் தகுதி படைத்த ஒருவருக்கு வழங்கியதில்; நான் உண்மையில் பெருமிதம் அடைகிறேன்.

திரு கி. வீரமணி அவர்கள் மேலும் பல்வேறு சிறப்புகளையும்; புகழையும் பெற்று; நீடுழி வாழ வேண்டும் என்று நிறைந்த மனதோடு நெஞ்சார வாழ்த்துகிறேன்.

இந்த விழாவில் கலந்து கொண்ட நீங்கள் அனைவரும் எல்லா வளமும் நலமும் பெற்று; வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற எனது நெஞ்சத்து பேரவாவினைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

***(26.2.1996 அன்று நடைபெற்ற திரு கி. வீரமணி அவர்களுக்கு விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை)***

# "மனித வளத்தை உயர்த்த நாம் மேற்கொள்ளும் செலவினம் வளரும் தலைமுறையினரின் உயர்வுக்கான மூலதனம்"

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் நேரில் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

1970-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3-ஆம் நாளன்று தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமாக அதாவது Tamil Nadu Text Book Society ஆக ஒரு சிறிய அமைப்பாக தனது பணியைத் தொடங்கிய இந்த நிறுவனம், இன்று கல்வி வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு ஆலவிருட்சமாக வளர்ந்துள்ளது.

36 பாடநூல் தலைப்புகளில் மட்டும் பாட நூல்களை அச் சிட்ட நிறுவனம் இன்று 384 பாடநூல் தலைப்புகளில் புத்தகங் களை வெளியிட்டு வருகின்றது. 61 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பிரதிகளை மட்டுமே அச்சிட்டு, தனது பணியைத் துவக்கிய இந்த நிறுவனம் 26 கோடி ரூபாய் மதிப்புள்ள விற்பனைப் பிரதிகளையும், இலவச பாடநூல் திட்டத்தின் கீழ் 31 கோடி ரூபாய் மதிப்பில் இலவச பிரதிகளையும் அச்சிட்டு வழங்கி வருகிறத. ஒரு துடிப்புள்ள மக்கள் சேவை நிறுவனம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இருந்து வரும் நிறுவனம் இது என்பதற்கு இதை விடப் பெரிய சான்று அவசிய மில்லை என்று கருதுகிறேன்.

பாடநூல் தலைப்புகளின் எண்ணிக்கையும், அச்சிடும் பிரதிகளின் மதிப்பும் மட்டும் உயர்ந்துள்ளதால், இந்த நிறுவனம் உயர்ந்து விட்டதாக நான் கருதவில்லை. ஆனால் ஆண்டுக்கு ஆண்டு பாடநூல்களின் தரத்தை உயர்த்துவதிலும, இதர கல்விப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடு படுத்திக் கொள்வதிலும், காட்டி வரும் ஆர்வத்தால், இந்த நிறுவனம் உயர்ந்து நிற்பதாக நான் கருதுகிறேன்.

பாடநூல்களை அச்சிட்டு வழங்கும் ஒரு வணிக அமைப்பாக, ஒரு சிறிய கட்டத்திற்குள் அடைப்பட்டு விடாமல், தமிழக அரசின் மனித வள மேம்பாட்டுக் கொள்கைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் ஒரு தூண்டுகோலாக இந்த நிறுவனம் திகழ்ந்து வருகிறது.

ஒரு நிறுவனம் 25 ஆண்டுகள் செயல்பட்ட ஒரே காரணத்தால் கொண்டாடப்படும் விழா அல்ல இந்த வெள்ளி விழா. காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, கல்விப் பணியை கடமை உணர்வுடன் ஆற்றிய, ஒரு நிறுவனம் தனது சாதனைகளைப் பெருமிதத்துடன் நினைத்துப் பார்க்கும் ஒரு வெற்றி விழா. அதுவும் எங்கள் ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு சங்கமாக இருந்த இந்த அமைப்பு, 1993-ஆம் ஆண்டில் ஒரு கழகமாக அதாவது ஒரு Corporationஆக வளர்ந்து, உபரி நிதியைப் பல நற்பணிகளில் செலவிடும், நல்லதொரு அமைப்பாக மாறியுள்ளதை எண்ணி, நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஏனென்றால் வெற்று நாட்களை எண்ணி, மகிழ்ச்சி அடைபவர்கள் அல்ல நாங்கள்! வாழ் நாளில் நற்பணிகளை மேற் கொண்டு செயல்படும் நாள் எல்லாம் வெற்றி நாட்களாக கருதும் மனம் படைத்தவர்கள்.

மனித வள மேம்பாட்டிலும், மனித வள ஆற்றலைப் பெருக்குவதிலும், எங்கள் அரசு ஆரம்பத்திலிருந்தே ஒரு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றது. மனித வளத்தையும், மனித ஆற்றலையும் பெருக்குவதன் மூலம் தான் இந்த நாட்டிலிருந்து கல்லாமையையும், இல்லாமையையும் ஒரு சேர விரட்டி அடிக்க முடியும் என்பதை, நாங்கள் நன்கு உணர்ந்து செயல்பட்டு வரு கிறோம்.

மனித வளத்தை உயர்த்த நாம் மேற்கொள்ளும் செலவினம், வளரும் தலை முறையினரின் உயர்வுக்கான மூலதனம் என்பதை, எங்கள் அரசு செயல் படுத்தி வரும் பல்வேறுத் திட்டங்கள் மூலம் நிரூபித்துக் காட்டி உள்ளோம். "அனைவருக்கும் ஆரம்பக் கல்வி" என்பதை நாங்கள் கட்டாயம் ஆக்கியுள்ளோம். அதுமட்டுமின்றி, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, "ஆரம்பக் கல்வியை" கட்டாயமாக்கி, அதை அமல்படுத்த ஒரு சட்டத்தையும் இயற்றிய ஒரே அரசு எங்கள் அரசுதான்.

இரண்டாயிரம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளும் குறைந்தபட்ச ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற உன்னதமான சூழ்நிலையை நாங்கள் நிச்சயம் உருவாக்கிக் காட்டுவோம்.

குறிப்பாக பெண் கல்வி வளர்ச்சி இன்று புதியப் பரிமாணத்தைப் பெற்றுள்ளது. ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் 1.38 கோடி குழந்தைகளில், 61 இலட்சத்து 79 ஆயிரம் பேர் மாணவியர்களாக இருக்கிறார்கள். அதாவது, பள்ளிகளில் பயில்பவர்களில் கிட்டத்தட்ட 45 சதவிகிதம் பேர், பெண் குழந்தைகள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி ஆகும். இந்த நிலை மேலும் உயரும் போது ஏற்படும் சமுதாய மறுமலர்ச்சி, ஒரு சீரிய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்பது உறுதி.

கல்வி வளர்ச்சியில், பாட நூலின் பங்கு மிகவும் முக்கிய மானதாகும். ஏனென்றால் பாட நூல்களும், பாடத் திட்டங் களும், இளைய தலைமுறையினரின் மனங்களைப் பக்குவப்படுத்தி, நன்னெறிகளை அவர்கள் உள்ளத்தில் பதிய வைத்து, நல்வாழ்வியல் கோட்பாடுகளையும், தத்துவங்களையும் உணரச் செய்து எதிர்கால சவால்களுக்கு அவர்களைத் தயார் செய்யும் மாபெரும் சாதனங்களாக அமைந்துள்ளன. கற்றல் கற்பித்தல் இரண்டிற்கும் அடிப்படையாக விளங்குவது பாடநூல்.

இளம் இதயங்களைப் பண் படுத்தும் சக்தி வாய்ந்த ஒரு ஆயுதம் பாடநூல் என்பதில் ஐயமில்லை. எனவே தான் பாடநூல்களைத் தெரிவு செய்வதிலும், அவற்றை முறைப்படி அச்சிட்டு வழங்குவதிலும், எங்கள் அரசு ஒரு புதிய முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கைப்படி, 5 ஆண்டு களுக்கு ஒரு முறை, பாடத்திட்டத்தை அதவாது Syllabus-ஐ காலத்தின் தேவைகளுக்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும். அதன் அவசியத்தை உணர்ந்து, ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கான பாடத் திட்டங்களை மாற்றி அமைக்க, ஏற்பாடுகள் செய்த ஒரே அரசு, இந்த இந்தியத் துணைக் கண்டத்திலேயே, உங்கள் அன்புச் சகோதரியின் அரசுதான் என்பதை மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

University Grants Commission-ஙின் தலைவர் பேராசிரியர் Yashpal Sharma அவர்களின் தலைமையில் அமைந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், சுமையின்றிக் கற்றல் அதாவது, Learning without burden என்ற கொள்கையின் அடிப்படையிலும், பேராசிரியர் Davey அவர்களின் தலைமையின் அமைந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும் “குறைந்தபட்சக் கற்றல் இலக்குகள்” அதாவது (Minimum Levels of Learning) என்கின்ற புதிய கோட்பாடுகளை அமைத்து, அதன் அடிப்படையில் புதிய பாடத் திட்டங்களையும், பாட நூல்களையும் உருவாக்கி வருகின்றோம்.

அறிவியல் அணுகுமுறைகளைக் கையாண்டு, உடற்கல்வி மற்றும் உடல்நலக் கல்விகளுக்காக, தனித் தனியே பாட நூல்களை எங்கள் ஆட்சிக் காலத்தில் நாங்கள் வெளியிட்டுள்ளோம். இளம் நெஞ்சங்களில் அறிவியல் உணர்வை வளர்க்க, 10 தொகுதிகள் அடங்கிய “குழந்தைகள் அறிவியல் கலைக் களஞ்சியம்” ஒன்றை, இந்த நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது. மொழிச் சிறுபான்மை யினரின் நலனைக் கருத்தில் கொண்டு, கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது ஆகிய மொழிகளிலும் பாட நூல்களை, இந்த நிறுவனம் அச்சிட்டு வெளியிட்டு வருகிறது.

இந்தக் கழகம் பாட நூல்களைத் தயாரித்து வழங்குவதோடு, மாணவ, மாணவியர்களிடையே கல்வி ஆர்வத்தை மேலும் ஊக்குவிக்க, பல புதிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புக்கான அரசு பொதுத் தேர்வுகளில், தமிழ் பாடத்தில் முதல் மதிப்பெண் பெறுகின்ற மாணவ, மாணவியர்களுக்கு இந்தக் கழகம் தங்கப் பதக்கத்தை, இந்த ஆண்டு முதல் வழங்கி வருகின்றது.

தனது உபரி நிதியிலிருந்து, பள்ளிகளுக்குப் புதிய கட்டடங் களைக் கட்டித் தரும், மாபெரும் சமுதாயப் பணியையும் இந்த நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்தக் கழகத்தின் உபரி நிதியிலிருந்து, இதுவரை 4.28 கோடி ரூபாய் செலவில் 282 பள்ளிக் கட்டடங்கள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக் காலத்தில் மட்டும், இதுவரை 2 கோடி ரூபாய் செலவில் 122 பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என்பது எண்ணி மகிழத் தக்க ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

இன்று இந்தக் கழகத்தால், 100 கோடி ரூபாய் மதிப்பில், மேற்கொள்ளப்பட உள்ள புதிய திட்டங்களை முறைப்படி தொடங்கி வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தக் கல்வி ஆண்டு முதல், பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில், 80 சதவீதத்திற்கும் அதிக மதிப்பெண்களைப் பெறும், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு, கல்வி ஊக்கத் தொகையாக 3,000 ரூபாய் வழங்கும் புதியத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அதே போல, பிளஸ் 2 தேர்வில், அதாவது மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில், 80 சதவிகிதத்திற்கும் அதிகமான மதிப்பெண்களை பெறுகின்ற, கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு, 5,000 ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படும். மேலும் பிளஸ் 2 தேர்வில் மாநிலத்தின் முதல் 5 இடங்களைப் பெறுகின்ற, கழகப் பணியாளர்களின் குழந்தைகளின் மேல் படிப்பிற்கு ஆகின்ற செலவு முழுவதையும், இந்தக் கழகமே ஏற்றுக்கொள்ளும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த, 13 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய அறக்கட்டளை விரைவில் ஏற்படுத்தப்படும் என்பதை, மிக்க மிகழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரின் மருத்துவச் செலவிற்காக, ஒரு இலட்சம் ரூபாய் வரை மருத்துவ நிதியுதவி வழங்கும் புதிய திட்டம் ஒன்று விரைவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசு ஆணைகள், விரைவில் வழங்கப் படும்.

பாடநூல் கழகத்தின் வெள்ளி விழாவினையொட்டி, தமிழ் நாட்டிலுள்ள அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய பள்ளிக் கட்டடங்களைக் கட்டித்தருவதற்குத், தமிழக அரசு ஒரு கோடி ரூபாய் நிதியை, கழகத்திற்கு நன்கொடையாக அளிக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் புதிய கட்டடங்கள் "வெள்ளி விழாக் கட்டடங்கள்" என்று அழைக்கப்படும்.

தமிழ்நாட்டில் இக்கழகத்தின் வட்டார அலுவலகங்கள் 4 மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே எஞ்சியுள்ள தென் ஆர்க்காடு வள்ளலார், திருவண்ணாமலை சம்புவராயர், இராமநாதபுரம் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும், புதிய வட்டார அலுவலகங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டத் தலைநகரங்களில் எல்லாப் பாடநூல்களும் ஒரே இடத்தில் கிடைப்பதற்காக, கழகத்தின் சார்பில் "சிறப்பு விற்பனை நிலையங்கள்" 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் மாபெரும் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பணியாளர்கள் அனைவருக்கும் இந்த வெள்ளி விழா ஆண்டில், எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன். இந்தக் கழகத்தின் செயல்பாடுகள் சிறப்படைய, நீங்கள் அனைவரும் இலட்சிய உணர்வுடன் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கழகம் இந்திய துணைக் கண்டத்தின் மற்ற பாடநூல் நிறுவனங்களுக்கு எல்லாம், என்றென்றும் ஒரு முன்னோடியாகதத் திகழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

மேலும் கல்லூரிகளில் தமிழ் மீடியம் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு 25 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழில் பாடநூல்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வந்தன. கடந்த 25 ஆண்டுகளாக இந்த தமிழ் மீடியத்தில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கான Text Books தமிழில் அச்சிடப்படவில்லை. இனிமேல் கல்லூரிகளில் தமிழ் மீடியம் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இந்தப் பாட நூல் கழகம் தமிழிலேயே பாடநூல் களை அச்சிட்டு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை மிகவும் சிறப்பான முறையில் நிறைவேற்றுவதோடு, இந்த விழாவினைச் சீரோடும், சிறப்போடும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்த தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், அருமை

சகோதரர் திரு எப்.எம். ராஜரத்தினம் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(1.3.1996 அன்று நடைபெற்ற தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெள்ளி விழாவில் ஆற்றிய உரை)*

# கிராமக்கோயில் பூஜாரிகளின் நல்வாழ்வுக்கு அரசு அரணாக விளங்கும்

சீரோடும் சிறப்போடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, கிராமக் கோயில் பூஜாரிகளின் இரண்டாவது மாநில மாநாட்டினைத் தொடங்கி வைத்து, உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொன்றுதொட்டு திருக்கோயில்கள், அருங்கலைகளின் இருப்பிடங்களாகவும், நமது பண்பாட்டின் பலகணிகளாகவும், நல்லொழுக்கத்தையும், நன்னெறிகளையும் போதிக்கின்ற கல்விச் சாலைகளாகவும், விளங்கி வந்துள்ளன.

பாரம்பரியச் சிறப்புமிக்க, சீரிய தமிழ்க்கலாச்சாரமும், பண்பாடும், இங்கு ஓங்கு சீர் புகழோடு விளங்குவதற்கு ஆலயங்கள் ஆற்றிய பங்கை நிச்சயமாகக் குறைத்து மதிப்பிட முடியாது. ஆலயங்கள் சமுதாயத்தின் பொதுச் சொத்துக்களாகவும், சமூக, பொருளாதார வேறுபாடுகளால் பிரிவுபடாமல் அனைவரும் சமம் என்ற உணர்வை வளர்க்கும் புனிதத் தலங்களாகவும் திகழ்ந்து வருகின்றன.

எனவேதான் கோயில்களுக்குச் சென்று வருவதையும், இறைவழிபாட்டில் ஈடுபட்டு வருவதையும், மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஆன்மீகப் பயிற்சியாக நமது முன்னோர்கள் கருதி வந்தார்கள். நன்னெறிகளையும், நற்பண்புகளையும் வளர்த்து, மக்கள் மனங்களில் நியாய உணர்வுகள் மேலோங்கச் செய்கின்ற, நல்வழி காட்டும் நன்னெறிப் பாதைகளாகத் திருக்கோயில்கள் தமிழகத்தில் செயல்பட்டு வந்துள்ளன. திருக்கோயில்களைத் தங்கள் சமூக வாழ்க்கையின் தவிர்க்க முடியாத அங்கங்களாகத் தமிழகத்து மக்கள் ஆண்டாண்டு காலமாகக் கருதி வருகின்றார்கள் என்பதையும், நான் நன்கு அறிவேன்.

எனவேதான், நாங்கள் ஆட்சிக்கு வந்த உடன், எங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடியே, அனைத்து மக்களும் மகிழ்ச்சி அடையும் வண்ணம், சிதிலம் அடைந்து பாழடைந்து கிடந்த, பல்வேறு திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகளை, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டோம்.

எந்த ஒரு அரசு மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப தனது கொள்கைகளுக்கு வடிவம் கொடுத்து, காலத்திற்கேற்ப ஜனநாயக உணர்வுடன் செயல்பட்டு வருகின்றதோ, அந்த அரசுதான் உண்மையிலேயே, மக்கள் நல அரசாக விளங்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அந்த உணர்வின் அடிப்படையில் நாங்கள் திருக்கோயில்களின் புனரமைப்பை மேற்கொண்டபோது, சிலர் எங்களைத் திசை திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால், நாங்கள் எங்கள் கொள்கைகளில் உறுதியாக நின்றோம். தமிழகத்துப் பெருமக்களின் மனங்களை நான் நன்கு அறிந்து வைத்திருந்ததே அதற்குக் காரணம் மக்களின் எண்ணங்களுக்கு ஏற்ப நமது செயல்பாடுகள் அமையும் போது, இயற்கையாகவே மக்கள் சக்தியின் பேராதரவும், பேரன்பும் நமக்குப் பரிபூரணமாகக் கிடைத்து விடும் என்பதை எங்கள் ஆலயத் திருப்பணிகள், இந்த உலகத்திற்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன.

ஏராளமான சொத்துக்கள் இருந்தும், பல கோயில்கள் நிரந்தர வருமானமின்றி, பொருளாதாரச் சீரழிவில் சிக்கித் தவித்ததையும், பல ஆண்டு காலமாகப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாததால் புராதனக் கட்டடங்களும், கலை வடிவங்களும் சிதிலமாகி வருவதையும் அறிந்து இவற்றைத் தடுக்க, நாங்கள் ‘தமிழ்நாடு திருக்கோயில் நிருவாக வாரியம்’ ஒன்றை ஏற்படுத்தினோம்.

திருக்கோயில்களின் புனரமைப்பிற்கும், சீரிய பராமரிப்பிற்கும், தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்ட “தமிழ்நாடு முதலமைச்சரின் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி” ஒன்றை நான் ஏற்டுபத்தினேன். இந்த நிதியில் இன்று வரை வட்டித் தொகையுடன் சேர்த்து, 8 கோடியே 37 இலட்சம் ரூபாய் சேர்ந்துள்ளது என்பது மகிழ்ச்சித் தரக் கூடிய ஒரு செய்தியாகும்.

இந்த நிதிக்கு வாரி வழங்கிய நல்ல மனம் படைத்தவர்களுக்கு, இந்த நேரத்தில் என் இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் பல்வேறு திருக்கோயில்களின் புனரமைப்பிற்கும், மேம்பாட்டிற்கும் இந்த நிதியிலிருந்து இதுவரை 4 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது ஒரு மாபெரும் சாதனை ஆகும். 62 திருக்கோயில்களின் திருப்பணிக்கும்

கன்னியாகுமரி தேவஸ்வோம் வாரியத்தின் பணிகளுக்கும் இதுவரை 2 கோடியே 72 இலட்சம் ரூபாய், நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. ஒரு காலப் பூஜை திட்டத்தின் கீழ் 6,238 திருக் கோயில்கள் பயன்பெறும் வகையில், 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், தமிழகத்தில் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில், ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. தமிழக மக்களின் மனங்களில் கோயில்களைப் புனரமைக்க வேண்டும் என்று ஆழமாகப் பதித்திருந்த ஒரு ஆத்மார்த்த விருப்பத்திற்கு நாம் செயல் வடிவம் அமைத்துக் கொடுத்தோம் என்கிற மன நிறைவு எங்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

(கோயில்கள் பொது மக்களின் சொத்துக்கள் ஜாதி சமய வேறுபாடின்றி அனைவரும் கூடுகின்ற சமுதாய கூடங்கள், கல்விச்சாலைகள் என்கின்ற உணர்வோடு பார்க்கும் போது ஆலயத் திருப்பணி உண்மையிலேயே ஒரு உன்னத சமுதாயப் பணி என்பதில் சந்தேகம் இல்லை.)

நமது மாநிலத்தில் உள்ள பல திருக்கோயில்களைச் சீரமைத்தும், புனரமைத்தும், கும்பாபிஷேகங்களை நடத்தி வருவதும், மக்களின் உள்ள உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கிற ஒரு செயல் என்பது தான் உண்மை.

எங்கள் ஆட்சிக் காலத்தில் கலைப் பொக்கிஷங்களாக விளங்கும் தொன்மை மிகுந்த, 680 திருக்கோயில்களில் திருப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக, 1995-ஆம் ஆண்டில் மட்டும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுப் புதுப்பொலிவு பெற்ற திருக்கோயில்களின் எண்ணிக்கை 315 ஆகும். தற்போது 37 கோடி ரூபாய் செலவில், 702 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"ஒரு காலப் பூஜை"த் திட்டத்தின் கீழ், தலா 25,000 ரூபாயில் அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டு, 6,238 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்த 15 கோடியே 60 இலட்சம் ரூபாய், முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பெரிய திருக்கோயில்களுக்கு மட்டுமின்றி, கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய கோயில்களின் புனரமைப்பும், சீரமைப்பும் அவசியம் என்பதை நாங்கள் நன்கு உணர்ந்து உள்ளோம். அத்தகைய கிராமக் கோயில்களைப் பராமரித்து, அப்பகுதி வாழ் மக்களின் இறை உணர்வுக்குத் தூண்டு கோலாக விளங்கிவரும் கிராமக் கோயில் பூஜாரிகள் அனைவரும் நமது பாராட்டிற்கும் அன்பிற்கும் உரியவர்கள் ஆவார்கள்.

இதுவரை கவனிக்கப்படாமலேயே இருந்த, எத்தனையோ துறைகளை எடுத்து, அவற்றிற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, அவற்றிற்குப் புதிய பொலிவினை, ஏற்படுத்தித் தந்த அரசு, எங்கள் அரசு. அதே உணர்வுடன், கிராமக் கோயில்களின் திருப்பணியிலும், கிராமக் கோயில் பூஜாரிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திலும் ஒரு புதிய பொலிவினை ஏற்படுத்த எங்கள் அரசு உறுதி பூண்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள், கிராமக் கோயில்களின் பெருமைகளையும், பராம்பரியச் சிறப்பையும், கிராமத் தேவதைகளைத் தமிழக மக்கள் வழிபட்டு வருவதையும், சுட்டிக் காட்டினார்கள். கிராமக் கோயில்களைப் புனரமைக்கவும், கிராமக் கோயில் பூஜாரிகளின் நலன் காக்கவும், என் முன் வைக்கப்பட்ட பல கோரிக்கைகளை, இந்த இடத்திலேயே ஏற்றுக் கொண்டு, அவற்றிற் கான அறிவிப்புகளை இதே விழா மேடையில் வெளியிடுவதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1. கிராமக் கோயில் பூஜாரிகளாகச் செயல்பட்டு, முதுமையின் காரணமாக அந்தப் பணிகளை மேற்கொள்ள இயலாமல், ஓய்வு பெற்ற நிலையில் உள்ள பல பெரியவர்கள், வருமானம் ஏதுமின்றி, வறுமையில் வாடி வருகிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அத்தகைய பெருமக்களின் சேவையை நினைவு கூர்ந்து, அவர்களின் பொருளாதார உயர்வுக்கு வழி வகுக்க, அவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். "கிராமக் கோயில் பூஜாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்" கீழ் 20 ஆண்டு காலம் பூஜாரிகளாகச் செயல்பட்ட 60 வயதைக் கடந்த பூஜாரிகளுக்கு, 400 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டமாக, 1,500 பேருக்கு

ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. வயதான அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேத பாராயணம் செய்வோர் மற்றும் இசை கலைஞர்கள் ஆகியோருக்கு எங்கள் அரசு மாதமொன்றுக்கு 300 ரூபாய் ஓய்வூதியம் வழங்கி வருகின்றது. இந்த ஓய்வூதியத் தொகை 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வு 1.4.1996 முதல் அமல் செய்யப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. சிதிலமடைந்த பல திருக்கோயில்களில், புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு, வருவதைப் போலவே, கிராமக் கோயில்களிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமக் கோயில்கள் திருப்பணிகள் திட்டத்தின் கீழ், கிராமக் கோயில்களின் புனரமைப் பிற்காக, 5,000 ரூபாய் வரை நிதி உதவி வழங்கப்படும். தமிழகத்தில் அமைந்துள்ள கிராமக் கோயில்கள் அனைத்தும் பரவலான முறையில் பயன் பெறும் வண்ணம், ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் அந்த திருப்பணிகளுக்கென, ஒதுக்கீடு செய்து செலவிடப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. எங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும், ஒரு காலப் பூஜைத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட, 25,000 ரூபாய்க்கான அறக்கட்டளையிலிருந்து கிடைக்கும் மாதாந்திர வட்டித் தொகை, இந்து அறநிலைய ஆட்சித் துறை அலுவலர்கள் மூலமாக, பூஜாரிகளுக்குச் சென்றடைவதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தக் குறையைப் போக்கிட ஒரு காலப் பூஜைத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை, இனிமேல் அர்ச்சகர்களுக்கும், பூஜாரிகளுக்கும் நேரடியாக வழங்கப்படும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தகுந்த ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. வணிக அமைப்புகளுக்கான மின் கட்டண விகிதத்தின் அடிப்படையில் கிராமக் கோயில்களிடமிருந்து மின் கட்டணம்

வசூலிக்கப்படுவதாகவும், இதனால் கிராமக் கோயில்கள் பல பாதிக்கப்பட்டு உள்ளதெனவும் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கிராமக் கோயில்களுக்கு மின் கட்டணத்தில் என்னென்ன சலுகைகள் வழங்க முடியும் என்பதை ஆராய்ந்து, விரைவில் அதற்கான ஆணைகள் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. தற்போது கிராமக் கோயில்களில் பல்வேறு பூஜை முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. சரியான பயிற்சி இல்லாததால், பல கோயில்களில் பூஜை முறைகள் சரிவர மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டு வருவதையும் நான் நன்கு அறிவேன். எனவே, பூஜை முறைகள் குறித்த, முறைப்படியான பயிற்சிகள், கிராமக் கோயில் பூஜாரிகளுக்கும் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் திருச்சியில் துவக்கப்பட்ட வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம், கிராமக் கோயில் பூஜாரிகளுக்கும் முறைப்படி புத்தொளிப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கான பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு, பயிற்சி வகுப்புகள் விரைவில் துவக்கப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

7. கிராமக் கோயில் பூஜாரிகளுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையும் என் முன்பு வைக்கப் பட்டுள்ளது. தற்போது தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும், தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த பூஜாரி பெருமக்களுக்கு, முன்னுரிமையின் அடிப்படையில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரித்துக் கொள்கிறேன். இதர இனத்தைச் சேர்ந்த பூஜாரிகளுக்கும், கூட்டுறவுத் துறையின் மூலம் வீட்டு வசதி ஏற்படுத்தித் தரும் திட்டம் ஒன்று எங்கள் அரசால் விரைவில் செயல்படுத்தப்படும் என்ப தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. கிராமக் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் ஏற்படு கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுவற்கும், எங்கள் அரசு நிச்சயமாக உறுதுணையாக விளங்கும். கிராமக் கோயில் பூஜாரிகள், கிராமக் கோயில்களின் சொத்துக்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை

அகற்றுவதற்கும், அத்திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாப்ப தற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களை அணுகினால், முன்னுரி மையின் அடிப்படையில் அவர்களது குறைகளைத் தீர்த்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதற்கான ஆணைகளை எங்கள் அரசு வழங்கும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. கிராமக் கோயில் பூஜாரிகள் மரண மடைந்தால் அவர்களது குடும்பம் வறுமையில் வாடாமல் இருக்க நிவாரண உதவித்தொகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையும் என் முன்பு வைக்கப் பட்டுள்ளது. அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, இனி கிராமக் கோயில் பூஜாரிகள் மரணமடைய நேரும்போது அவர்களது குடும்பத்திற்கு 10,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்னும் சில கோரிக்கைகள் என் முன்பு வைக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் கனிவுடன், பரிவுடன் பரிசீலித்து தக்க முடிவுகளை விரைவில் அறிவிப்பேன் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமக் கோயில் பூஜாரிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், நல்வாழ்விற்கும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, உற்றத் துணையாக, அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு அரணாக, என்றென்றும் விளங்கும் என்று உறுதி கூறுகிறேன்.

இந்தச் சீரிய விழாவில் நல்ல இறை உணர்வையும், சமுதாய நல்லுணர்வையும் ஒன்றுபடுத்தி, ஒரு புதிய ஆன்மீக உணர்விற்கு வழிவகுத்த, காஞ்சிப் பெரியவர் ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் கலந்துகொண்டிருப்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. காஞ்சிப் பெரியவர் அவர்களுக்கும், காஞ்சி பால பெரியவர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிப் பெரியவர் அவர்கள் ஆசி வழங்குகின்றபோது, இது வரையில் இந்தச் சிறியவள் ஆட்சிக் காலத்தில் செய்த சில பணிகளைப் பாராட்டி பேசினார்கள். அதை என் வாழ்க்கையில் நான் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

எங்கள் அரசு தொடர்ந்து ஆலயத் திருப்பணிகளில் ஈடுபட்டு, ஆலயப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு உறுதுணையாகவும், பாதுகாப்பாகவும் விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அனைவரும் எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற நிறைந்த மனதோடு நெஞ்சார வாழ்த்தி விடைபெறுகிறேன்.

***(9.3.1996 அன்று நடைபெற்ற கிராமக் கோவில் பூஜாரிகள் பேரவையின் இரண்டாம் மாநில மாநாட்டில் ஆற்றிய உரை)***

சென்னை-2
அரசினர்

# இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட அனைவருக்கும் முன்னோடி வீரன் அழகு முத்துக்கோன்

ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீர உணர்வுடன் போராடித் தனது இன்னுயிரைத் தியாகம் செய்த, வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலையை இங்கே திறந்து வைத்து, அவரது திருப்பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகத்தையும் துவக்கி வைத்து, உங்கள் அனைவரையும் இந்தச் சரித்திரச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியில் ஒன்றாகக் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

பாரத நாடு, சிறப்பான ஒரு பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் உலகுக்கு அளித்த தொன்மையான சரித்திரம் படைத்த ஒரு நாடு. அதிலும், கல் தோன்றி மண் தோன்றா காலத்தே, முன் தோன்றிய மூத்த பெருங்குடியான், தமிழ்குடி மக்கள் வாழ்ந்த செந்தமிழ் நாடு. வீரம் விளைந்திட்ட நாடு. விவேகம் வளர்ந்திட்ட பூமி என்பதில் ஐயமில்லை.

அயலாரின் ஆதிக்கத்திற்கும் மக்களை மதிக்காத ஏகாதிபத்திய உணர்வுக்கும், எதிர்ப்புத் தெரிவித்து, விடுதலை உணர்வு பொங்க, தங்களது இன்னுயிரை ஈந்தவர்கள் தமிழகத்தின் சரித்திரத்தில் ஏராளம் உள்ளனர். ஆனால், சரித்திரத்தின் பக்கங்களில், அவர்களின் வீரத்திற்கும், தியாகத்திற்கும் உகந்த ஒரு இடம், கிடைக்காமல் போனதும் உண்டு. சரித்திரத்தில் தகுந்த இடம் மறுக்கப்பட்டவர்களும் உண்டு. இவ்வாறு வரலாற்றில் இருட்டடிப்புச் செய்யப்பட்ட வீரகுலத் தோன்றல்களை, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி, வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து பெருமைப்படுத்துவதிலும், அவர்தம் புகழை நிலை நிறுத்தச் செய்வதிலும், ஒரு தனி ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

எங்கள் அரசைப் பொறுத்த வரையில், மக்களின் ஆத்மார்ந்த உணர்வுகளை மதித்து, அதற்கு வடிவம் கொடுப்பதையே, தனது அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகக் கருதி செயல்பட்டு வருகின்றது. அந்த உணர்வுகளின் உந்துதலால்தான், நாட்டுப்

பற்றுடன் பாடுபட்ட நல்லவர்கள், வல்லவர்கள், வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோரின் நினைவாகத் திருவுருவச் சிலைகளையும், நினைவகங்களையும், நாங்கள் நிறுவி வருகின்றோம்.

தங்களது இனத்திற்குச் சிறப்புச் சேர்த்த தலைவர் என்று பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கருதுகின்ற, மாசற்ற தலைவர்களின் பெயர்களில் மாவட்டங்களையும், போக்குவரத்துக் கழகங்களையும் அமைத்து வருகின்றோம். இந்த ஐந்தாண்டு கால நல்லாட்சி, மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடக்கும். நல்லதொரு ஆட்சி என்பதை இத்தகைய நிகழ்ச்சிகள் நாட்டிற்கு உணர்த்தும் என்று உறுதியாக நம்புகிறேன்.

பாரத நாட்டில் நிலவிய ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி, நம்மை அடிமைப்படுத்த நினைத்த ஆங்கிலேயரின் ஏதேச்சாதிகாரத்திற்கும், ஆதிக்க உணர்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று, இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே கொதித்து எழுந்தவர்களில் முதன்மையானவர், மாவீரன் அழகு முத்துக்கோன். வாணிபம் செய்ய வந்த ஒரு நிறுவனம் கிழக்கிந்திய கம்பெனி நாடு பிடிக்கும், நயவஞ்சக வேலையில் ஈடுபட்ட போது, ஆங்கிலேயர்களின் அடக்குதலுக்கும் ஒடுக்குதலுக்கும், சற்றும் அஞ்சாமல் அவர்களது ஏகாதியபத்தியத்தை எதிர்த்துப் போராடி வெள்ளையரின் ஆதிக்க வெறி பிடித்த பீரங்கிக்குத் தன்மானமிக்க தனது இன்னுயிரைக் காணிக்கையாக ஈந்த ஒரு மாவீரன்தான், இந்த அழகு முத்துக்கோன்.

மதுரை முத்துகிருஷ்ணப்ப நாயக்கரின் திசை காவல் தளபதிகளில் ஒருவராக நெல்லைச் சீமையில், கரிசல் காட்டுப் பகுதியில் உள்ள காட்டாளங்குளத்தில் கோட்டை ஒன்றை அமைத்துத் தனது துணைவியார், அன்னபூரணி நாச்சியார் என்பவருடன் ஆட்சி செய்து வந்தவர். அழகு முத்துக்கோன் ஆவார். அவரது வரலாற்றையும் வீரத்தையும் காட்டாளங்குளம், பெத்தநாயக்கனூர் மற்றும் நடுக்காட்டூர் ஆகியப் பகுதிகளில் கிடைக்கப்பெற்ற வரலாற்றுச் சுவடுகளின் மூலம், நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

இன்றும் இப்பகுதியில் வீரன் அழகு முத்துக்கோன் பரம்பரையில் வந்தவர்களை “அரண்மனைச் சாமிகள்” என்று அழைக்கும் ஒரு

பழக்கம் இருந்து வருகிறது. ஆக, கோட்டை அமைத்து அதில் அரண்மனையையும் அமைத்து வெள்ளையர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய காரணத்தினால்தான் அந்த மாவீரனின் வழி வந்தவர்கள், "அரண்மனைச்சாமிகள்" என்று அழைக்கப்படுகின்றார்கள் என்றே பொருள் கொள்ள வேண்டி உள்ளது.

பெத்தநாயக்கனூர் அரண்மனையில், வீரன் அழகு முத்துக்கோன் முகாமிட்டிருந்த போது, கிழக்கிந்திய கம்பெனியின் Agent, Khan Sahib என்பவன் ஆங்கிலேயர்களின் படையுடன் சென்று, வஞ்சகமாக முற்றுகையிட்டான். ஆங்கிலேயருக்கு அடி பணியாமல் 247 வீரர்கள் மட்டுமே கொண்ட தனது சிறிய படையுடன், வீரன் அழகு முத்துக்கோன் எதிர்த்து நின்று வீரத்துடன் போர் புரிந்துள்ளார்.

இந்தப் போரின் இறுதியில், வீரன் அழகு முத்துக்கோன், ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டுப் பெத்தநாயக்கனூர் கோட்டைக்கு, 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நடுக்காட்டூர் சீமைக்கு, கொண்டு செல்லப்பட்டுள்ளார். தனது இன்னுயிரா அல்லது தாய்த் திருநாட்டின் தன்மானமா என்று ஆங்கிலேயர் விலை பேசிய போது, தாய்த் திருநாட்டின் தன்மானம்தான் பெரியது என்று முழங்கி, பணிந்து பதவி ஏற்று, வாழ்வதை விட, வீர மரணம் அடைவதே மாவீரனுக்கு அழகு என்பதை, உலகுக்கு நிரூபித்துக் காட்டி ஆங்கிலேயர்களின் இரக்கமற்ற பீரங்கிக் குண்டுகளுக்கு, தனது இன்னுயிரை ஈந்தார் அந்தத் தியாகச் செம்மல். வளர்ந்து வரும் தங்கள் ஆதிக்கத்திற்கு எங்கே வீரன் அழகு முத்துக்கோன் முற்றுப்புள்ளி வைத்து விடுவாரோ, என்று பயந்துதான் ஆங்கிலேயர்கள் நடுக்காட்டூர்ச் சீமையில் அவரது துணைத் தளபதிகள் 6 பேரோடு சேர்த்து, வீரன் அழகு முத்துக்கோனைக் கட்டி வைத்துச் சுட்டுக் கொன்று விட்டார்கள்.

வீரன் அழகு முத்துக்கோன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு, கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன்பாக, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து இந்திய சுதந்திரத்திற்காகப் போராடி உயிர் நீத்த தன்னலமற்ற ஒரு தியாகி.

அந்த வகையில், இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட வீரர்கள், வீராங்கனைகள் தியாகிகள் அனைவருக்கும் உணர்ச்சி

பூர்வமான ஒரு முன்னோடியாக வீரன் அழகு முத்துக்கோன் இருந்துள்ளார் என்றால், அதுமிகையாகாது. சென்னையில், மிக முக்கியமான பகுதியான எழும்பூரில் கம்பீரமாக எழுந்தருளியிருக்கும், வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலையும், புதுக்கோட்டை மாவட்டத்தில் வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின், திருப்பெயரைத் தாங்கி உலா வரும் பேருந்துகளும் வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் புகழையும், பெயரையும் என்றென்றும் மக்கள் மனதில், நிலை பெறச் செய்யும் என்பது உறுதி.

நாட்டின் தன்மானம் காக்க, தங்கள் உயிரைத் தியாகம் செய்த, நமது முன்னோர்களின் வரலாறு, இன்றைய தலைமுறையினருக்கும், நமது எதிர்காலச் சந்ததியினருக்கும், ஒரு வாழ்க்கைப் பாடமாக, சமுதாயப் படிப்பினையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இளைய தலைமுறையினர் இடையே நாட்டுப் பற்றை வளர்ப்பதற்கும் நன்னெறிகளைப் பரப்பவும் தியாக உணர்வை மேம்படுத்தவும், இத்தகைய சரித்திர நாயகர்களின் வாழ்க்கை வரலாறு, ஒரு தூண்டுகோலாக, கலங்கரை விளக்கமாக, விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில், சாதனை படைத்த ஒரு சரித்திர நாயகனின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்து, மக்கள் மனதில் அவரது பெயர். என்றென்றும் நிலைத்திருக்க வழி வகுத்துள்ளதை எண்ணி நான் மனநிறைவு அடைகின்றேன்.

புதுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும், வீரன் அழகு முத்துக்கோன் போக்குவரத்துக் கழகம், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும், பேருந்துகளை இயக்கும். இந்தப் புதிய போக்குவரத்துக் கழகத்தில், முதல் கட்டமாக 315 பேருந்துகள் இயக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரித்துக் கொள்கிறேன். இந்தப் போக்குவரத்துக் கழகம் சீரிய முறையில் மக்கள் பணி ஆற்ற எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட ஜாதியினருக்கோ அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்கோ என்று இல்லாமல் அனைத்துத் தரப்பு மக்களின் உள்ள உணர்வுகளைப் புரிந்து, அவர்களின்

உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து, வாழ்ந்து மறைந்த மாபெரும் தலைவர்களை இந்த அரசு கௌரவப் படுத்தி, சரித்திரத்தில் அவர்களது சாதனைகளுக்கும் தியாகங்களுக்கும் உரிய இடத்தைப் பெற்றுத் தந்து கொண்டிருக்கிறது.

திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் இருந்த வீட்டை, நினைவகமாக ஆக்கினோம். கவியரசு கண்ணதாசனுக்குக் காரைக்குடியில் மணிமண்டபம் அமைத்தோம். சென்னையில் அவருக்குத் திருவுருவச் சிலை வைத்தோம். டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலையைச் சென்னையில் நிறுவியதோடு 5 கோடி ரூபாய் செலவில் வேறு எந்த மாநிலமும், செய்ய முன் வராத ஒரு முயற்சியாக மணிமண்டபம் ஒன்றை அமைத்து வருகின்றோம்.

தீரன் சின்னமலை கவுண்டர் பெயரில் மாவட்டம் ஒன்றை அமைத்தோம். விரைவில் அந்தப் பெருமகனாரின் திருவுருவச் சிலை சென்னையில் திறந்து வைக்கப்பட உள்ளது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரில் போக்குவரத்துக் கழகம் ஒன்றை நிறுவ உள்ளோம். வீரன் சுந்தரலிங்கம் பெயரில், ஒரு போக்குவரத்துக் கழகம் இன்னும் ஒரு சில நாட்களில் துவக்கப்பட உள்ளது. சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெருமகனாரின் திருவுருவச் சிலையை நானே திறந்து வைத்தேன்.

திரு A.T. பன்னீர் செல்வம், திரு செண்பக ராமன், தமிழ்த்தென்றல் திரு.வி.க., தியாகி சங்கரலிங்கம் ஆகியோருக்கும் திருவுருவச் சிலைகள் விரைவில் சென்னையில் நிறுவப்பட உள்ளன. திரு கக்கன் அவர்களின் திருவுருவச் சிலை மதுரையில் நிறுவப்பட உள்ளது.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுக்க என்றென்றும் முன்னணியில் இருக்கும் என்று உறுதி அளிக்கின்றேன்.

தமிழ்ப் பண்பாடு மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த யாதவா இன மக்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் வசித்து வருகின்றார்கள். தமிழக பொருளாதார சமூக வளர்ச்சியில், அவர்களது பங்கை, நிச்சயமாக எவரும்

குறைத்து மதிப்பிட முடியாது. காலங் காலமாகத் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் இப்பிரிவு மக்கள், சீரிய முறையில் பங்கு கொண்டு வருகிறார்கள்.

இந்திய சுதந்திர வரலாற்றில் ஆரம்ப கால கட்டத்திலேயே மற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் ஒரு முன்னோடியாக விளங்கிய தங்களது குலத்தோன்றல் வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் புகழுக்கு, சிறப்புச் சேர்க்கப்படவில்லையே என்ற ஆதங்கம் அவர்கள் மனதில், நீண்ட நாட்களாக இருந்து வந்ததை நான் அறிவேன். அந்த மக்களின் ஆதங்கமும், மனக்குறையும், இன்று நீங்கி விட்டது என்பதை அறியும் போது உள்ளபடியே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்கே பேசிய திரு வே. கலைமணி அவர்கள் வீரன் அழகு முத்துக்கோன் அவர்கள் புகழுடன் வாழ்ந்திட்ட காட்டாளங்குளக் கோட்டையைச் சீரமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை என் முன் வைத்தார்கள். வீரன் அழகு முத்துக்கோன் வாழ்ந்த கோட்டை தமிழக அரசின் சார்பில், புனரமைத்துப் புதுப்பிக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரித்துக் கொள்கிறேன். அதுமட்டுமின்றி வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தக் கோட்டையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் சுற்றுலாத் தலமாக அமைக்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரித்துக் கொள்கிறேன்.

மேலும், யாதவ குல மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையும் என் முன் வைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் தற்போது செயல்பட்டு வருவதால், உடனே எந்த அறிவிப்பையும் என்னால் வெளியிட முடியவில்லை. இருப்பினும் அந்த ஆணையத்திற்கு இந்தக் கோரிக்கை அனுப்பி வைக்கப்படும் என்பதையும், உங்களது இந்தக் கோரிக்கையை நாங்கள் கனிவுடன் பரிசீலனை செய்வோம் என்பதையும் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாதவ இன மக்கள் தங்கள் பொருளாதார சமூக வாழ்க்கையில் மேம்பாடு அடைந்து எல்லா மக்களுடனும் தொடர்ந்து அமைதியாக, இணங்கி வாழவேண்டும் என்பதே, எனது பேரவா. அனைத்துத் தரப்பு

மக்களும் ஒன்றுபட்டு எந்தப் பாகுபாடும் இல்லாமல் ஒரு தாய் வயிற்று மக்களாக இணங்கி வாழ எங்கள் அரசு எல்லா வளர்ச்சித் திட்டங்களையும், ஒரு புதிய முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது என்பதையும் தொடர்ந்து செயல்படுத்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில் பங்கு கொண்ட நீங்கள் அனைவரும், எல்லா வளமும் எல்லா நலமும் பெற்று வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற, எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொண்டு விடைபெறுகிறேன்.

***(15.3.1996 அன்று நடைபெற்ற வீரன் அழகு முத்துக்கோன் திருவுருவச் சிலை திறப்பு விழா மற்றும் வீரன் அழகு முத்துக்கோன் போக்குவரத்துக் கழகத் தொடக்க விழாவில் ஆற்றிய உரை)***